தொல்காப்பியம்

உரைவளம்

பொருளதிகாரம்

புறத்திணையியல் பகுதி-1

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம்-
பொருளதிகாரம்

(உரைவளம்)

புறத்திணையியல்

பகுதி-1

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி. டி. டி. ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பியம்—உரைவளம்—வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு-25

Bibliographical Data

Title	:	Tolkappiyam—Purattinaiyiyal Part-I
Editor	:	A. SIVALINGANAR
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Chennai-600 113.
Publication No.	:	242
Language	:	Tamil
Date of Publication	:	August 1996
Edition	:	First
Paper Used	:	Tamil Nadu Creamwove (m) 16 kg.
Size of book	:	21 × 14 cms
Print in types used	:	10 point
No. of Copies	:	1200
No. of Pages	:	XII + 316
Price	:	Rs. 50/-
Printers	:	Chitra Printography, Chennai-600 014.
Subject	:	Compilation of the Commentaries on Tolkappiyam Purattinaiyiyal.

அணிந்துரை

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றிய மூத்த குடி''

என்பது தமிழ் இனத்தாரின் தொன்மை குறித்த சிந்தனை. இத்தொன்மை இனம், சிறப்புமிக்க இனமாகவும் திகழ்ந்தது என்பதற்குப் பெருஞ்சான்றாகத் திகழ்வது தொல்காப்பியம். எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டுமே பிறமொழிகள் இலக்கணம் கண்டிருக்க, அவற்றோடு வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்டது தொல்காப்பியம் ஒன்றேயாகும். இங்கு அக வாழ்வுக்கும், புற வாழ்வுக்கும் உள்ள ஒழுகலாறுகளைப் பொருளியலில் வரையறுத்து, அதற்கொப்பவே இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டுமெனப் பொருண்மை அடிப்படையில் பிரித்து எல்லை வகுத்து இலக்கணம் எழுதப்பட்டுள்ளது.

இன்று நமக்குக் கிட்டக்கூடிய தொல்பழங்கால இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியம் மட்டுமே. தமிழின் பெருமையினை உலகெலாம் பறை சாற்றும் வகையில் திகழும் இந்நூலின் சிறப்பைத் தெற்றெனப் புலப்படுத்தும் வகையில் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்களைக் கொண்டு தொல்காப்பியம் உரைவளம் திட்டப்பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டது. சிறப்புப் பாயிர உரை விளக்கத்துடன் எழுத்ததிகாரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும் அவர் எழுதிய விளக்க உரைகள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன.

பொருளதிகாரத்தில், அகத்திணையியல் 1991 இலும், கற்பியல் 1993இலும், பொருளியல் 1994இலும், களவியல்

1995இலும் வெளிவந்தன. இப்போது புறத்திணையியல், பகுதி-1. பகுதி-2 என இரு பகுதிகளாக வெளிவருகின்றது. உரைவளத் திட்டத்தின் 25ஆவது வெளியீடு இது.

இந்நூலில் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், பழம்பெரும் உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரது உரைகளையும், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களது உரையையும் தொகுத்து, அவற்றுடன் தம்முடைய உரையினையும் இணைத்துப் பதிப்பித்துள்ளமை, ஆய்வாளர் களுக்கும், கற்போருக்கும் தெளிவு தருவதாக உள்ளது. தொல் காப்பியத்தில் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்ற முனைவர் சி. இலக்குவனார் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் இணைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் மாண்புமிகு நிறுவனத் தலைவர் தமிழ் ஆட்சி மொழி பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் செயலாளர் வை. பழனிச் சாமி, இ. ஆ. ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலின் கையெழுத்துப்படியினைச் செம்மையான முறையில் மூல நூல்களோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தம் செய்த முனைவர் ந. அரண முறுவல் அவர்களுக்கும், நூலின் முற்பகுதியில் சுருக்க விளக்கம், சூத்திர நுவல் பொருள், நூலின் பிற்பகுதியில் சூத்திர முதற்குறிப்பு, சொல்லகராதி ஆகியவற்றை இணைக்க உதவிய செல்வி. ம. வெண்ணிலாவிற்கும், இந் நூலைக் கவினுற அச்சிட்டுத் தந்த சித்ரா அச்சகத்தாருக்கும் நன்றி.

இயக்குநர்.

சூத்திர நுவல் பொருள்

59. இது புறத்திணைக்கு இலக்கணம் கூறுகிறது.

60. இது வெட்சித் திணைக்கு இலக்கணம் கூதுகிறது.

61. இது வெட்சித் திணைக்குத் துறை கூறுகிறது.

62. இது வெட்சித் திணைக்குத் துறை கூறுகிறது:

63. இது வெட்சி வகையின் பிற துறைகளைக் கூறுகிறது.

64. இது வஞ்சித் திணைக்கு இலக்கணம் கூறுகிறது.

65. இது வஞ்சித் திணைக்குத் துறை கூறுகிறது.

66. இது உழிஞைத் திணைக்கு இலக்கணம் கூறுகிறது.

67. இது உழிஞைத் திணையை வரையறுத்துக் கூறுகிறது.

68. இது உழிஞைத் திணை வகைகளின் பெயரும் இயல்பும் கூறுகிறது.

69. இது உழிஞைத் திணைக்குத் துறை கூறுகிறது,

70. இது தும்பைத் திணைக்கு இலக்கணம் கூறுகிறது.

71. இது தும்பைத் திணையின் ஒரு சிறப்பு உணர்த்துகிறது.

72. இது தும்பைத் திணைக்குத் துறைவகையும் இயல்பும் கூறுகிறது.

சுருக்க விளக்கம்

அகத்—அகத்திணை இயல்

அகம்—அகநானூறு

ஆ. மொ. இல.—ஆங்கில மொழிபெயர்ப்பு இலக்குவனார்

இ-ன்—இதன் பொருள்

இல. வி—இலக்கண விளக்கம்

உ-ம்—உதாரணம்

கலி—கலித்தொகை

குறள்—திருக்குறள்

சிந்தா.
சிந்தாமணி } — சீவக. சிந்தாமணி

சிலப்.
சிலப்பதி. } — சிலப்பதிகாரம்

சிலப். உள்வரி—சிலப்பதிகாரம், ஊர் சூழ்வரி

சிலப். காட்சி—சிலப்பதிகாரம், காட்சிக் காதை

சிலப். கால்கோள்—சிலப்பதிகாரம், கால்கோட் காதை

சிவ.—சிவலிங்கனார்

சூ.—சூத்திரம்

செய்.—செய்யுள்

தொ.
தொல். } — தொல்காப்பியம்

தொல். சொல். கிளவி—தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்.

தொல். பொருள். புற.—தொல்காப்பியம், பொருளதிகாரம்,
புறத்திணை இயல்

பட்டிண.—பட்டினப்பாலை

பதிற்று—பதிற்றுப்பத்து

பி. இ. நூ.—பிற்கால இலக்கண நூல்கள்

பு. வெ.
பு. வெ. மா. } — புறப்பொருள் வெண்பா மாலை,

பு. வெ. உழிஞை—புறப்பொருள் வெண்பா மாலை,
உழிஞைப் படலம்

பு. வெ. தும்பை—புறப்பொருள் வெண்பா மாலை,
தும்பைப் படலம்

பு. வெ. வஞ்சி—புறப்பொருள் வெண்பா மாலை,
வஞ்சிப் படலம்

புறத்—புறத்திணை இயல்

புறம்.—புறநானூறு

பெரும்பாண்—பெரும்பாணாற்றுப்படை

வெண்பா. உழிஞை—புறப்பொருள் வெண்பா மாலை,
உழிஞைப் படலம்

வெண்பா. தும்பை—புறப்பொருள் வெண்பாமாலை.
தும்னபப் படலம்

வெண்பா நொச்சி—புறம்பொருள் வெண்பா மாலை,
நொச்சிப் படலம்

வெண்பா. பொது—புறம்பொருள் வெண்பா மாலை,
பொதுவியற் படலம்

வெண்பா. வஞ்சி—புறப்பொருள் வெண்பா மாலை,
வஞ்சிப் படலம்

வெண்பா. வெட்சி—புறப்பொருள் வெண்பா மாலை,
வெட்சிப் படலம்

வீர.—வீரசோழியம்

முத்தொள்.—முத்தொள்ளாயிரம்

மதுரை.—மதுரைக்காஞ்சி

மரபு.—மரபியல்

முல்லை.—முல்லைப்பாட்டு

தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்)

புறத்திணையியல்

59. *அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே (1)*

ஆங்கில மொழி பெயர்ப்பு : இலக்குவனார்

56. If we discuss in detail about 'puraththinai' grammar, expounded by those who are well-versed in 'Ahaththinai,' 'Vetci' is the 'puram' of 'Kurinji', it has fourteen divisions of dreadful nature.
(1)

பிற்கால இலக்கண நூல்கள் :

இலக்கண விளக்கம்—பொருளதிகாரம்—புறத்திணையியல்பு.

வெட்சி தானே குறிஞ்சியது புறனே.

இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், புறத்திணையியல் என்னும் பெயர்த்து. இது புறப்பொருள் உணர்த்துதலாற் பெற்ற பெயர்.

---

* சூத்திரத்தின்முன் உள்ள எண் பொருளதிகாரத் தொடர் எண்; பின் உள்ள எண் புறத்திணையியல் தொடர் எண்.

அஃது யாங்ஙனம் உணர்த்தினாரோ எனின், மேல் அகத்திணையாகிய எழுதிணையும் சாற்றி, அவற்றின் புறத்து நிகழ்வன எழுதிணை உணர்த்தினார் என்று கொள்க. அவை:-

மலையாகிய குறிஞ்சித்திணைப்புறம் நிரைகோடலும் நிரை மீட்டலும் என்னும் வேறுபாடு குறித்து வெட்சி எனவும் கரந்தை எனவும் இரண்டு குறி பெறுதலும்,

காடுறையுலகாகிய முல்லைப்புறம் மண்நசை வேட்கையால் எடுத்துச் செலவுபுரிந்த வேந்தன்மேல் அடல் குறித்துச் செலவு புரிதலான், அவ்விரு பெருவேந்தரும் ஒரு வினையாகிய செலவு புரிதலின் அது வஞ்சி என ஒரு குறி பெறுதலும்,

புனலுலகாகிய மருதத்துப்புறம் எயில் அழித்தலும் எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் இரண்டுகுறி பெறுதலும்,

மணலுலகாகிய நெய்தற்புறம் இருபெருவேந்தரும் பொருதலாகிய ஒரு தொழிலே புரிதலால் அது தும்பை என ஒரு குறி பெறுதலும்,

நடுநிலைத் திணையாகிய பாலைப்புறம் வேந்தரேயாயினும் ஏனையோராயினும் தமது மிகுதியாகிய வெற்றியைக் குறித்தலால் அது வாகை என ஒரு குறி பெறுதலும்,

பெருந்திணைப்புறம் நிலையாமையாகிய நோம்திறப் (துன்பியல்) பொருளே குறித்து வருதலின் காஞ்சி என ஒரு குறி பெறுதலும்,

கைக்கிளைப்புறம் செந்திறமாகிய (இன்பியல்) ஒரு பொருளே குறித்து வருதலின் பாடாண் என ஒரு குறி பெறுதலும் உணர்த்தியவாறு கண்டு கொள்க.

மேலை ஓத்தினுள்,

''புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.''[1]

(அகத்-58)

---

1. பொருள்: தலைவன் தலைவியரின் இயற்பெயர்கள் புறத்திணைப் பாடலில் பொருந்திவரின் அல்லது அகத் திணைப் பாடலில் கலந்து வருதல் இல்லை.

என அகத்திணைச் செய்யுள் இயற்பெயர் கூறப்பெறா தென்றமையானும், புறத்திணை மருங்கிற் பொருந்தும் என்றமை யானும் உலகியலோடு ஒத்துவரும் காமப்பொருளாகப் பாடாண் பாட்டின்கண் இன்பம் இயற்பெயர் சார்த்தி வரப்பெறும் என்று கொள்க.

''ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பமென
மூன்றுவகை நுதலிய துலகம் அவற்றுள்
அறமும் இன்பமும் அகலா தாகிப்
புறன்எனப் படுவது பொருள்குறித் தன்றே''

என்னும் பன்னிருபடலச் செய்யுளுள் புறப்பொருள் அறமும் இன்பமும் அகலாதாகி எனக் கூறினார்; அவர் கூறுதல் வாகைத் திணைக்கண் 'கட்டில் நீத்த பால்' முதலாகக் 'காமம் நீத்தபால்' ஈறாக அறங்கூறுதலில் அச்சார்பாகக் கூறியது மயங்கக் கூறுதலாம்.[2]

''ஆங்ஙனம் உரைப்பின் அவற்றது வகையால்
பாங்குறக் கிளந்தனர் என்ப அவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குவரு சிறப்பின் உழிஞை நொச்சி
முரண்மிகு சிறப்பின் தும்பையுள் ளிட்ட
மரனுடை மரபின் ஏழே ஏனை
அவர்கொள் மரபின் வாகையும் சிறந்த
பாடாண் பாட்டொடு பொதுவியல் என்ப.''

எனவும்,

''கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றாங்கு
அத்திணை யிரண்டும் அகத்திணைப் புறனே''

எனவும் புறப்பொருள் பன்னிரண்டு வகைப்படக் கூறில், அகமும் பன்னிரண்டாகி மாட்டேறு பெறுதல் வேண்டும்.[3] அகத்திணை

---

2. பன்னிரு படலம் புறத்திணையாவது அறமும் பொருளும் நீங்காமல் பொருள் குறித்து வருவது என்றது மயங்கக் கூறலாம். ஏன் எனின் தொல்காப்பியர் வாகைத்திணைச் சூத்திரத்தில் கட்டில் நீத்தபால் முதலாகக் காமம் நீத்த பால் ஈறாகக் கூறப்பட்டனவற்றுள் இன்பம் இன்றி அறமே கூறப்பட்டது. ஆதலின் பன்னிருபடலம் இன்பத்தையும் சேர்த்துக் கூறியது மயங்கக் கூறலாம்.

3. வெட்சிதானே குறிஞ்சியது புறனே என மாட்டேறு பெறுதல்போலக் கரந்தை தானே இன்னதன் புறன் என மாட்டேறு பெறுதல் வேண்டும். காஞ்சி நொச்சி முதலியவும் இப்படியே பெறுதல் வேண்டும். அவ்வாறு மாட்டேறு இல்லை.

ஏழாகிப் புறத்திணை பன்னிரண்டாகில், ''மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்'' (மரபு-112) என்னுந் தந்திர உத்திக்கும் பொருந்தாதாகி ''மிகைபடக் கூறல்'' ''தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்'' (மரபு 110) என்னும் குற்றமும் பயக்கும் என்க.[4] அன்றியும் பொருந்திணைப் புறனாகிய காஞ்சி நிலையாமை யாதலானும்,[5] பொதுவியல் என்பது,

''பல்அமர் செய்து படையுள் தப்பிய
நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின்
திறப்பட மொழிந்து தெரிய விரித்து
முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் உரித்தே''

எனத் தாமே கூறுகின்றாராதலின், மறத்திற்கு முதலாகிய வெட்சியின் எடுத்துக் கோடற்கண்ணும் கூறாமையானும்,[6] கைக்கிளையும் பெருந்திணையும் புறம் என்றாராயின் அகத்திணை ஏழ் என்னாது ஐந்து எனல் வேண்டுமாதலானும்.[7] பிரமம் முதலாகச் சொல்லப்பட்ட மணம் எட்டனுள்ளும் யாழோர் கூட்டமாகிய

---

4. மொழிந்த பொருளொடு ஒன்ற வைத்தல் என்பது சொன்ன ஒரு கருத்தொடு அதன் தொடர்புடைய பிறிது கருத்தைப் பொருந்த வைத்தலாம். அகம் ஏழு எனக் கூறி அதன்புறம் ஏழு என்னாமல் பன்னிரண்டு என்பது கூறியதோடு பொருந்த வையாததாய் முடியும். அன்றியும் மிகைபடக் கூறியதாகவும் ஆம். அன்றியும் முன்னோர் கூறியவற்றைக் கூறிவரும்போது தானே ஒன்றைக் கருதிக்கொண்டு பொருத்தம் இல்லாமல் அதைக் கூறியதாகவும் ஆம்.

5. காஞ்சி என்பது நிலையாமையைக் கூறுவது. அதுவே பெருந்திணைப் புறமாம். இது தொல்காப்பியர் கருத்து. அக்காஞ்சியைப் போர்க்குரிய வஞ்சிக்கு எதிரானது எனக் கூறுதல் பொருந்தாது.

6. பொதுவியல் என்பது எத்திணை வீரர்க்கும் பொதுவாக வருவது எனக் கூறிய பன்னிருபடல ஆசிரியர் அதை வெட்சித்திணையின் முன்னர்க் கூறியிருத்தல் வேண்டும். கூறாமையால் அதை ஒரு திணையாகக் கோடற்கில்லை.

7. பெருந்திணையும் கைக்கிளையும் புறம் ஆயின் அகம் ஏழு என்னாது ஐந்து எனல் வேண்டும். தொல்காப்பியர் அப்படிக் கூறவில்லை.

மணத்தை ஒழித்து ஏனைய ஏழும் புறப்பொருளாதல் வேண்டுதலானும்,[8] முனைவன் நூலிற்கும் கலி[9] முதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் பொருந்தாது என்க.

59. அகத்திணை மருங்கின்...... துறைத்தே

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், வெட்சித் திணைக்கு இடமும் துறையும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று. இதனானே[1] திணையும் துறையும் என்று வரும் புறப் பொருள் என்று கொள்க.

(இ-ள்) அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்—அகத்திணையிடத்து மயக்கம் கெட உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் வகைபடக் கூறின்.

அகத்திணை மருங்கின் மயக்கம் கெட உணர்தலாவது, மேல் ஓதிய இலக்கணத்தால் மயக்கம் கெட உணர்தல்.

வெட்சி தானே குறிஞ்சியது புறனே—வெட்சி என்னும் திணை குறிஞ்சி என்னும் திணைக்குப் புறனாம்.

வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயது எவ்வாறெனின், நிரை கோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயின் பிறநாட்டு ஆன்நிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும், அதற்கு அது புறனாயிற்று என்க. சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்.

உட்குவரத் தோன்றும் ஈர் ஏழ் துறைத்தே—வெட்சித்துறை உட்கு வரத் தோன்றும் பதினான்கு துறையை உடைத்து.

துறை பதினான்கும் வருகின்ற சூத்திரத்துள் காட்டுதும்.

(1)

---

8. பிரமம் பிரசாபத்தியம் முதலியன புறத்திணையின் பாற்படும்.

9. கலி—கலித்தொகை.

1. வெட்சி எனத் திணையும் ஈரேழ் துறைத்து எனத் துறையும் கூறியதனான் எல்லாத் திணைக்கும் இப்படியே கொள்வதனால்.

நச்சினார்க்கினியர்

56. அகத்திணை மருங்கி...... துறைத்தே.

இவ்வோத்து முற்கூறிய அகத்திணை ஏழற்கும் புறமாகிய புறத்திணையிலக்கணம் உணர்த்தினமையிற் புறத்திணையிய லென்னும் பெயர்த்தாயிற்று. புறமாகிய திணையெனப் பண்புத் தொகையாம். அதனை, 'முற்படக் கிளந்த'[1] என்புழிப் பிற்படக் கிளந்தனவும் உளவெனத் தோற்றுவாய்[2] செய்துபோந்து அவற்றது[3] இலக்கணங்களும் பெயரும் முறையுந் தொகையும் வருகின்ற சூத்திரங்களால் 'திறப்படக் கிளப்பின்' எனக் கூறலின் மேலதனோடு[4] இயைபுடைத்தாயிற்று.

இச்சூத்திரம் முற்கூறிய குறிஞ்சித்திணைக்குப் புறன் வெட்சித்திணை என்பதூஉம் அது தான் இப்பகுதித்தென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:- அகத்திணை மருங்கின் அரில் தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்— அகத்திணை யென்னும் பொருட்கட் பிணக்கற அறிந்தோர் கூறிய புறத்திணையது இலக்கணத்தைக் கூறுபட ஆராய்ந்து கூறின், வெட்சி தானே குறிஞ்சியது புறனே—வெட்சியெனப்பட்ட புறத் திணை குறிஞ்சி யெனப்பட்ட அகத்திணைக்குப் புறனாம், உட்கு வரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே—அது தான் அஞ்சுதகத் தோன்றும் பதினான்கு துறையினையுடைத்து என்றவாறு.

அகத்திணைக்கண் முதல் கரு வுரிப்பொருள் கூறிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பனவற்றிற்கு வெட்சி வஞ்சி உழிஞை யென்பன அவ்வவ்விலக்கணங்களோடு ஒருபுடை யொப்புமை பற்றிச் சார்புடையவாதலும், நிலமில்லாத பாலை

---

1. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—அகத்திணையியல்,
2. புறத்திணையியலில் புறத்திணை ஏழ் எனக் கூறவில்லை யாயினும் அகத்திணையியல் முதற்சூத்திரத்தில் அகத் திணை ஏழனையும் 'முற்படக்கிளந்த எழுதிணை' எனக் கூறினமையின் பிற்படக் கிளக்கப்படும் ஏழ்திணையுண்டு என்பது பெறப்படத் தொடக்கம் செய்தமையால் இவ்வாறு கூறினார்.
3. அவற்றது—புறத்திணை ஏழினது.
4. மேலதனோடு—அகத்திணையியலோடு.

பெருந்திணை கைக்கிளை யென்பனவற்றிற்கு வாகையும் காஞ்சியும் பாடாண்டினையும் பெற்ற இலக்கணத்தோடு ஒரு புடையொப்புமையுற்றிச் சார்புடைய வாதலும் கூறுதற்கு 'அறிப வுணர்ந்தோர்' என்றார். ஒன்று ஒன்றற்குச் சார்பாமாறு அவ்வச் சூத்திரங்களுட் கூறுதும். ''தானே'' யென்றார் புறத்திணை பலவற்றுள் ஒன்றை வாங்குதலின்,[1] பாடாண்டினை யொழிந்தன வற்றிற்கும் இஃதொக்கும்.[2]

களவொழுக்கமும் கங்குற்காலமும் காவலர் கடுகினுந் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறனென்றார். வெட்சித் திணை யாவது களவின்கண் நிரைகொள்ளும் ஒழுக்கம்; இதற்கு அப்பூச் சூடுதலும் உரித்தென்று கொள்க. வேற்றுப்புலத்து வாழும் பார்ப்பார் முதலியோர் அஞ்சி அரண் சேர்வதோர் உபாய மாதலின் 'உட்குவரத் தோன்றும்' என்றார்.

மக்களும் மாவும் முதலியன சென்று நீருண்ணுந் துறை போலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்கு தலாகு மார்க்கமாதலின் 'துறை' யென்றார்[3]; எல்லா வழியு மென்பதனை 'எல்லாத்துறையுங் காவல் போற்றினார்' என்ப வாகலின். எனவே, திணையுந் துறையுங் கொண்டாராயிற்று. அகத்திணைக்குத் துறையுட் பகுதிகளெல்லாம் விரித்துக்கூறிப் பின்னும் பன்முறையாற் பரந்து பட்டு வரம் பிகந்தனவற்றையுந் தொகுத்துத் துறைப்படுத்துக் கிளவி கூறுக என்றற்குச் செய்யுளிய லுள் (313) துறையென்பது உறுப்பாகக் கூறினார். புறத் திணைக்கு அங்ஙனம் பரந்துபட விரித்தோதாது தொகுத்து

---

1. வாங்குதல் — பிரித்தல். வெட்சிதானே என வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்னும் துறைகளினின்றும் தனித்துப் பிரித்தது காண்க.

2. வஞ்சிதானே உழிஞைதானே தும்பைதானே வாகை தானே காஞ்சிதானே என்றமைபோலப் பாடாண்தானே எனப் பிரிக்காமல் 'பாடாண் பகுதி' என்றமையால் இவ்வாறு எழுதினார்.

3. திணை என்பது ஆறு போல்வது. பலவான நீருண் துறை கள் தன்னைச் சார ஒழுகும் ஆறுபோலத் திணை என்பதும் பல துறைகளும் சார்ந்து நடக்க முடிவு பெறுவதாகும்.

இலக்கணஞ் செய்தாராயினும் அவையும்[5] அவ்வாறே பலபொருட் பகுதியும் உடையவென்பது உணர்த்துதற்குத் துறையெனப் பெயராகக்[6] கொடுத்தார். இதனானே அகப்பொருட் பகுதி பலவாயினும் ஒரு செய்யுளுட் பலபொருள் விராஅய் வரினும் ஒரு துறையாயினாற் போலப் புறத்திணைக்கும் அவ்வப்பொருட் பகுதியும் ஒரு துறையாதலும் ஒரு செய்யுளுட் பலதுறை ஒழுங்குவந்தும் ஒரு துறைப்படுதலுங் கொள்க.[7]

இன்னும் இதனானே அகத்திணைக்கு உரியனவெல்லாம் புறத்திணைக்குங் கொள்க.

(1)

நாவலர் சோமசுந்தர பாரதியார்

சூத்திரம்—1

அகத்திணை............துறைத்தே.

கருத்து :- இது, குறிஞ்சிக்குப் புறனாவது வெட்சி யென்பதையும், அதன் துறைவகை இனைத்து இத்துணைத்து என்பதையும் கூறுகிறது.

பொருள் :- அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்- முற்கூறிய அகவொழுக்கம் பற்றிய இயல் வகை முறைகளைப் பிழையற நன்கறிந்தோர்; புறத்திணை இலக்கணந் திறப்படக் கிளப்பின்—புற ஒழுக்க இயல் வகை முறைகளைத் தெளிவுபட வகுத்துரைப்பின்; வெட்சி தானே குறிஞ்சியது புறனே—வெட்சித் திணை குறிஞ்சியெனும் அகத்திணைக்குப் புறனாகும்; உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே— அவ்வெட்சித்திணை அச்சம் விளைக்கும் தோற்றமுடைய பதினான்கு துறைவகை கொள்ளும்.

---

5. அவையும்—புறத்திணைகளும்.
6. பெயராகக் கொடுத்தலாவது துடிநிலை படையியங்கரவம் முதலியவாகக் கூறுதல்.
7. ஒரு செய்யுளில் ஒரு துறைப் பொருள் வரினும் அத்துறைப் பெயரால் அச்செய்யுள் வழங்கப்படும். ஒரு செய்யுளில் பல துறைப் பொருள்கள் விரவி வந்தாலும் அவற்றுள் சமயத்துக்கேற்ற சிறந்த ஒரு துறைப் பெயரால் அச்செய்யுள் வழங்கப்படும் என்பது கருத்து.

குறிப்பு :- இதில், ஏகார மூன்றனுள், முதலது, வெட்சியைப் புறத்திணை ஏழில் பிறவற்றினின்றும் பிரித்து விலக்குதலால், பிரிநிலையாம்; பின்னிரண்டும் தேற்றம்; அசையுமாம். 'அரில்தப உணர்ந்தோர்......... கிளப்பின்' என்ற எச்சக்குறிப்பால், அகத்திணைகளினியல்பை ஐயந்திரிபுகெட அறிந்தார்க்கன்றி, மற்றவர்க்கு அத்திணைகளொடு தனித்தனி யியைபுடைய புறத்திணைகளினியல் திறம்படக்கிளத்தல் கூடாமை சுட்டப்பட்டது. எனவே, புறத்திணைகளெல்லாம் முறையே ஒவ்வோர் அகத்திணைக் கியைபுடையவாதலும், அதனால் அகத்திற் போலவே புறத்திலும் திணை ஏழா யமைதலும் மரபென்பதும் வலியுறுத்தப்பட்டது.

இனி, வெட்சி குறிஞ்சிக்குப் புறனாமாறு:- காதல் கண்ணிய அனைத்தக வொழுக்கங்களுக்கும் குறிஞ்சி முதலாதல் போல, 'அமர்கொள்மரபின்' புறத்திணைகளெல்லாம் வெட்சியைக் கொண்டு துவங்குதலானும், குறிஞ்சியும், வெட்சியும் ஒருங்கே களவில் நிகழ்வ வாதலானும். ஒழுக்க முறையால் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று. இனி, நிரை மேயும் மலைச்சார்பு களவிற் கூடும் குறிஞ்சிக்கும் களவில் ஆதந்தோம்பும் வெட்சிக்கும் சிறந்துரியதாகலும் நள்ளிரா இவ்விரொழுக்கங்களுக்கும் ஏற்புடைத்தாகலும், இடத்தானும் காலத்தானும் இவற்றிடை ஒரு புடையியைபுடைமை எய்துவித்தலானும் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயமையும்.

இன்னும், மக்களின் அக ஒழுக்கம் ஏழாதல் போல, அவற்றிற்கு இயலியையுடைய அவர்தம் புறவொழுக்கமும் எழுதிணையென வகைபெற வைப்பதே பழைய மரபாதலின் அகத்திணையியல்வகைகளை நன்கறிந்தார்க் கன்றி, புறத்திணைகளும் அவற்றின் துறைமுறைகளும் இனிது விளங்கா எனற்கு, 'அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர் புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்' என்றிப் புறத்திணை முதற் சூத்திரத் துவக்கத்திற் கூறப்பட்டது. எனவே, இவ்வாறு அகத்திணை ஏழொடு புறத்திணை யேழும் யாப்புற வுடையதாகக் கொள்ளுவதே அடிப்பட்ட தமிழ்மரபெனத் தெளிய வைப்பதால், அத்தொடர்பு தொலைத்துப் புறத்திணைகள் பன்னிரண்டென்னும் பிற்காலக் கொள்கை பழவழக்கொடு முரணு மிழுக்காதல் தேறப்படும்.

வெட்சியின் துறைகள், 'வேந்து விடு முனைஞ'ரால் 'மறனுடை மரபில்' நிகழ்தலின், போர் பயிலாத நிரை காக்கும்

ஆயரும் அயலாரும் அஞ்சுதல் இயல்பாம். ஆதலான், வெட்சித் துறைகள் 'உட்குவரத் தோன்றும்' எனப்பட்டன.

(1)

சிவலிங்கனார்

புறத்திணையியல் என்பது புறவொழுக்கம் பற்றிய இயல்பு களைக் கூறும் பகுதி என்னும் பொருளுடையதாகும். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் இன்பம் பற்றிய நடை முறை யொழுக்கங்கள் அகத்திணை எனப்படலின் அறமும் பொருளும் பற்றிய நடைமுறையொழுக்கங்கள் புறத்திணை எனப் பட்டன. இன்பம் பற்றிய ஒழுக்கங்கள் தொடர்புடையாரின் உள்ளங்களிலேயே பிறர்க்குப் புலனாகாமல் நிறுத்தப்படுவன. அலரும் உடன்போக்கும் ஊரினாலும் கண்டோராலும் அறியப் படுதலின் அவை அகமாமோ எனின், அலர் தூற்றுவார் வெளிப் படையாக யாவரும் கேட்பத் தூற்றாமல் ஒருவர் செவியில் ஒரு வராக மறைவில் தூற்றுவதாலும், உடன்போக்கில் கண்டவரும் உடன்போக்கு நிகழ்ச்சியைப் பிறர் அறியக் கொண்டு கூறுத லின்மையானும் அவைகளும் அகமேயாம். அறச் செய்திகளும் பொருள் தொடர்பான பல செய்திகளும் யாவர்க்கும் வெளிப்படை யாகவே அமைதலின் அவை புறமாயின.

அறச் செயல்களும் பொருட் செயல்களும் பல நிகழ்ச்சிகளின் முடிவில் அறியப்படுவன அல்ல-அதாவது தொடர்பாக அமைவன அல்ல. அதனால் எல்லைக்குட்பட்டனவாகும். அறத்தை நிறுத்துதற் காரணமாகவோ பொருளீட்டுதற் காரணமாகவோ அரசன் மேற்கொள்ளும் போர் நிகழ்ச்சியே பல நிகழ்ச்சிகளின் முடிவைக்கொண்டதாகும். அதனால் ஆசிரியர் போர் நிகழ்ச்சியை வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை என ஐந்து பிரிவுகளிலும் அறம் பொருள்களைப் பாடாண் பிரிவிலும் அவற்றின் நிலை யாமையைக் காஞ்சிப் பிரிவிலும் கூறினார்.

இனி அகத்திணையியலில்,

> கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை யென்ப

எனக்கூறிப் பின்னர் அவ்வெழுதிணைகளுக்கும் தனித்தனி விளக்கம் கூறியது போலப் புறத்திணையியல் தொடக்கத்தில்,

> வெட்சி முதலாக் காஞ்சி யிறுவாய்ப்
> பிற்படக் கிளந்த எழுதிணை யென்ப

என்று கூறியிருத்தல் வேண்டும். அவ்வாறு கூறாமல் வெட்சி முதலிய ஏழுதிணைகளை விளக்கிச் சென்றது கொண்டு உடம் பொடு புணர்த்தல் என்னும் உத்தி வகையால் கூறினார் எனக் கொள்ளல் வேண்டும்.

அகத்திணை ஏழ் என்றதற்கேற்பப் புறத்திணையும் ஏழ் எனக் கொண்டனர் முன்னோர். ஆசிரியரும்அவ்வாறே கூறினார். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் அகத்திணை களுக்கு வெட்சி வஞ்சி உழிஞை தும்பை பாலை என்பன புறத் திணைகளாம் என்றார்.

ஆநிரை கவரும் வெட்சியாரைப் பொருது ஆநிரை மீட்பவர் செயல்கள் சிலவற்றைக் கரந்தை (புறத்-5) என்றும், மதிலகத்து வீழ்ந்தோன் செயலை அகத்தோன் வீழ்ந்த நொச்சி என்றும் ஆசிரியர் கூறியதைக் கண்ட பிற்காலத்தார் வெட்சித்திணையை வெட்சித்திணை கரந்தைத்திணை என இரண்டாகவும் உழிஞைத் திணையை உழிஞைத்திணை நொச்சித்திணை என இரண்டாக வும் கொண்டனர். அதனால் வஞ்சித் திணையும் இரண்டாகக் கொண்டு எதிர்க்கும் செயலைக் காஞ்சித்திணை எனப் பிரித்தனர். நிலையாமையைக் குறிக்கும் காஞ்சித்திணையை வஞ்சிக்கு எதிர்த் திணையாகத் தாஅன் நாட்டித் தனாது நிறுத்தல் என்னும் உத்திக்கு ஏற்பக் கொண்டனர். தாக்குதலும் எதிர்த்தலுமாகிய இரண்டு செயல்களையும் தனித் தனித் திணைகளாகக் கொண்டு வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி உழிஞை நொச்சி தும்பை வாகை பாடாண் கைக்கிளை பெருந்திணை என வகைப்படுத்தி யாவற்றுக்கும் பொதுவாக ஓரியல் பொதுவியல் என ஒன்று சேர்த்துப் புறத்திணை பன்னிரண்டு என்றனர். ஆசிரியர் அகத் திணையில் கூறிய கைக்கிளை பெருந்திணைகளைப் புறத்திணை யிற் கூறினர் இவர்.

''அகத்திணை..............துறைத்தே''

இச்சூத்திரம் அகத்திணையை நன்குணர்ந்தோரே புறத் திணையை உணரமுடியும் என்றும் புறத்திணையின் முதல்திணை வெட்சித் திணை என்பதும் அது பதினான்கு துறைகளையுடை யது என்பதும் கூறுகின்றது.

(இதன் பொருள்) அகத்திணைப் பகுதிகளைப் பிணக்கற உணர்ந்த அறிஞர் புறத்திணைப் பகுதிகளை நன்றாகக் கூறத் தொடங்கின் வெட்சித்திணை என்பது குறிஞ்சித் திணையின் புறம் என்பர், அது அச்சம் கொளத் தோன்றும் பதினான்கு துறைகளை யுடைய தாம் என்றவாறு என்பர் என்பதும் அது என்பதும் வருவிக்

கப்பட்டன. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர் புறத்திணை மருங்கின் திறப்படக் கிளப்பின் என்பதை வஞ்சி முதலிய வற்றுக்கும் கொள்க.

உரையாசிரியர் மூவர் கருத்துகளையும் கொண்டு குறிஞ்சிக்கு வெட்சி புறனாயாவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

குறிஞ்சித் திணைக்கு நிலம் மலையாவது போல ஆநிரை கோடற்குச் சிறந்தது மலையாவதாலும், யாமம் புணர்தலாகிய களவுக்குச் சிறத்தல் போல ஆநிரை கவர்தற்கும் சிறத்தலாலும் நிலம் பொழுது எனும் முதற்பொருள் காரணமாக வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று. ஆநிரை கவரச் செல்வோர் சூடும் பூவாகிய வெட்சி குறிஞ்சி நிலப் பூவாதலின் கருப்பொருள் காரணமாகவும் குறிஞ்சிக்குப் புறன் வெட்சியாயிற்று. மறைவிற் புணர்தலும் மறைவில் ஆநிரைகளைக் கவர்தலும் களவு எனப்படுதலின் ஒழுக்கங் காரணமாக அதாவது உரிப் பொருள் காரணமாகக் குறிஞ்சிப் புறன் வெட்சியாயிற்று.

இனி, குறிஞ்சியை முதலாகக் கொண்டு அகத்திணைகள் நிகழ்வதுபோல அக்காலத்து ஆநிரை கவர்தலை அதாவது வெட்சித் திணையைத் தொடக்கமாகக் கொண்டு போர் நிகழ்ச்சிகள் வஞ்சி முதலியனவாக நிகழ்தலின் தலைமை காரணமாகக் குறிஞ்சிப் புறன் வெட்சியாயிற்று

இனிப் பிறவாறும் புறனாயவாறு கூறலாம். களவில் ஆநிரை கோடல் அறமன்றாயினும், அரசன் போர் மேற் செல்லுமுன் ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் பிறரும் யாங்கள் போர் தொடங்குவோமாதலின் (அதற்குத் தகுதியில்லாத நீங்கள்) நுங்கட்குப் பாதுகாவலான இடம் சேர்க எனப் பறையறைவித்துப் பின்னர்ப் புகலிடம் சேரப் பெறாத ஆக்களைக் களவிற் கொண்டு வருதலின் அறத்தாற்றின் வழியே இக்களவு நிகழ்வதாதலின், களவுப் புணர்ச்சி நன்றன்றாயினும், ஒன்றித் தோன்றும் பாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் தம்முள் எதிர்ப்பட்டுப் புணர்தலின் அறிஞரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிஞ்சித் திணைக்கு வெட்சித்திணை புறனாயிற்று, பாலது ஆணையிற் புணர்ச்சி நிகழ்தல் போல வேந்தன் ஆணையின் வீரர் ஆநிரை கவர்வர் என்றும் கொள்க.

இயற்கைப் புணர்ச்சி முன்னர்க் காட்சி ஐயம் தெளிவு குறிப்பறிதல் நிகழ்தல் போல ஆநிரை கவர்தற்கு முன்னர் அரசன் வேற்றரசனின் படைபலம் காணலும் தன் படை பொரவல்லதோ என ஐயுற்றுப் பின் வல்லதே எனத் தெளிதலும் பகைவர் நாட்டிற்

படை எடுக்கலாம் என்பதற்கான அறிகுறிகளைத் தன் ஒற்றர் மூலம் குறிப்பால் அறிதலும் நிகழ்ந்த பின்னரே ஆநிரை கவரத் தன் வீரரை ஏவுவன் ஆதலினால் குறிஞ்சிக்குப் புறன் வெட்சியாயிற்று.

இடையூறின்றி இயற்கைப் புணர்ச்சி நிகழ்தலின் இடந்தலைப்பாடு முதலிய காரணங்களால் நிகழும் புணர்ச்சிகளுக்குத் தலைவன் முயறல்போல ஆநிரை கவர்ந்த வென்றிச் சிறப்பான் வஞ்சி முதலிய போர் நிகழ்ச்சிகளுக்கு அரசன் முயலுதலினாலும் குறிஞ்சிக்கு வெட்சி புறனாயிற்று.

60. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும். (2)

ஆ. மொ: இல.

57. Carrying off the cows of enemy land in secret and protecting them by army heads sent by king is of 'Vetci.'

(2)

பி. இ. நூ.

இல. வி. புற. 4

....
உட்குவரப் பொருபோர் உறுமுறை தொடங்கிய
வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பலும் அந்நிரை மீட்டலும்
என்றிரு பாற்றே அஃதென மொழிப.

இளம்பூரணர்

60. வேந்துவிடு முனைஞர்———மேவற்று ஆகும்.

இது வெட்சித் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வேந்து விடு முனைஞர் வேற்றுப் புலக் களவின் ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்-வேந்தனால் விடப்பட்ட முனை ஊரகத்துள்ளார் வேற்று நாட்டின்கண் களவினானே ஆவைக் கொண்டு பெயர்ந்து பாதுகாக்கும் மேவலை உடைத்து.

ஓம்புதலாவது, மீளாமல் காத்தல். புறப்பொருட் பாகுபாடாகிய பொருளினும் அறத்தினும் பொருள் தேடுதற்குரிய நால்வகை வருணத்தாரினும் சிறப்புடையார் அரசராதலானும்,

அவர்க்கு மாற்றரசர்பால் திறைகொண்ட பொருள் மிகவும் சிறந்ததாகலானும், அப்பொருள் எய்துங்கால் அவரைப் போரில் வென்று கோடல் வேண்டுதலானும், போர்க்கு முந்துற நிரை கோடல் சிறந்ததாகலானும், இப்பொருள் முன் கூறப்பட்டது.

பன்னிரு படலத்துள் ''தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று, அன்ன இருவகைத்தே வெட்சி'' என இரண்டு கூறுபடக் கூறினாராயினும், முன்வருகின்ற வஞ்சி, உழிஞை, தும்பை முதலாயின எடுத்துச் செலவு, எயில் காத்தல், போர் செய்தல் என்பன அரசர்மேல் இயன்று வருதலின் வேந்துறு தொழில் ஒழித்து, தன்னுறு தொழில் எனத் தன் நாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆன்நிரை கோடலின் இவர் அரசரது ஆணையை நீங்கினாராவார். ஆதலால், அவர் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம். அதனால், பன்னிருபடலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது[1] என்னை?

''ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்''

(தொல். மரபு-100)

எனவும்,

''சிதைவெனப் படும் அவை வசையற நாடின்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்

---

1. பின்வரும் வஞ்சி உழிஞை தும்பைத் திணைகள் யாவும் அரசர் செயலாகவே வருதலின் வெட்சித் திணையில் மட்டும் அரசர் ஆணையின்றி வீரர்தம் செயலாகவே ஆநிரை கவர்வர் என்பது மிகைபடக்கூறலாகும். அதுவே அரசர் ஆணையின்றி வீரர் தாமே செய்தலின் குற்றமுமாகும். பன்னிருபடலத்தின் பன்னிரு படலங்களையும் தொல்காப்பியனார் முதல் பன்னிருவர் செய்தனர் என்பர். அப்படியாயின் தன்னுறு தொழிலைத் தொல்காப்பியனாரே கூறினார் எனின் மிகைபடக் கூறின குற்றம் அவர்பால் தங்கும். அதனால் பன்னிரு படலத்தின் வெட்சிப்படலம் அவர் செய்ததன்று.

பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்டோர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனங்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்றுவிரி வாகும்.''

(தொல். மரபு-110)

எனவும் கூறிய ஆசிரியர் தாமே மாறுகொளக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில கூறல், மயங்கக் கூறல், தன்னானொரு பொருள் கருதிக் கூறல் என்னும் குற்றம் பயப்பக் கூறினாரென வருமாகலான்.[2]

நச்சினார்க்கினியர்

51. வேந்துவிடு............றாகும்.

இது வெட்சியெனக் கூறிய புறத்திணைக்குப் பொது இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள் :- வேந்து விடு முனைஞர்—வேந்தனால் விடப்பட்டு முனைப்புலங் காத்திருந்த தண்டத்தலைவர், வேற்றுப் புலக்களவின்—பகை நிலத்தே சென்று களவினாலே, ஆதந் தோம்பல் மேவற்றாகும்—ஆநிரையைக் கொண்டு போந்து பாது காத்தலைப் பொருந்துதலையுடைத்தாகும் வெட்சித்திணை என்றவாறு.

கனவு நிகழ்கின்ற குறிஞ்சிப்பொருளாகிய கந்தருவமணம் வேதவிதியானே இல்லறமாயினாற்போல, இருபெரு வேந்தர்

---

2. தொல்காப்பியத்தில் வெட்சித்திணை அரசர் ஆணைவழி வீரர் ஆநிரை கொள்வர் எனக் கூறியவர் பன்னிரு படலத்தில் தன்னுறு தொழில் கூறியது மாறு கொளக் கூறலாம். தொல்காப்பியத்தில் தன்னுறு தொழிலைக் கூறாதது குன்றக்கூறலாம். தொல்காப்பியத்திற் கூறாததைப் பன்னிரு படலத்துட் கூறியது மிகைபடக் கூறலாம். அரசர் ஆணைவழி நடவாது வீரர்தாமே ஆநிரை கொள்வது பொருளில கூறலாம். ஒன்றிற் கூறி ஒன்றிற் கூறாதது மயங்கக் கூறலாம். தன்னுறு தொழில் ஒன்றுண்டு எனத் தானே கூறியது தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறலாம்.

பொருவது கருதியக்கால் ஒருவர் ஒருவர் நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்குசெய்யத் தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றல் வேண்டிப் போதருகவெனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினால் தாமே கொண்டுவந்து பாதுகாத்தலுந் தீதெனப்படாது அறமே யாம் என்றற்கு 'ஆதந்தோம்பல்' என்றார். அது,

> ''ஆவு மானியற் பார்ப்பன மக்களும்
> பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
> தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரு
> மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
> வறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்.''[1]
>
> (புறம்-9)

எனச் சான்றோர் கூறியவாற்றானுணர்க. மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தற்கு மறத்துறையினும் அறமே நிகழும் என்றற்கு 'மேவற்றாகும்'[2] என்றார். அகநாட்டன்றிப் புறஞ் சிறைப்பாடியில் ஆநிரை காக்குங் காவலரைக் கொன்றே நிரை கொள்ள வேண்டுதலின் ஊர் கொலையுங் கூறினார்.[3] வேந்துவிடு வினைஞர் என்னாது முனைஞர் என்றதனானே, முனைப்புலங் காத்திருந்தோர் தாமே சென்று நிரைகோடலுங், குறுநிலமன்னர் நிரைகோடலும் ஏனைமறவர் முதலியோர் நிரைகோடலுமாகிய

---

1. மறத்தினும் அறத்தாறு சொல்லும் கொள்கை. அதாவது ஓரரசன் பகை நாட்டிற் படையெடுக்குமுன் தன்னாட்டில் பகையரசர் ஒற்றரால் உணர்ந்து கொள்ளும்படி அவர் நாட்டு ஆவும், பார்ப்பன மாக்களும் பெண்டிரும் நோயாளரும் புதல்வர்ப் பெறாதோரும் ஆகியவர்களை விளித்து ''நும் நாட்டில் எம் அம்பு விரைவாக விடுவேம் (போர் தொடங்குவேம்) ஆதலின் நீங்கள் நுமக்குப் பாதுகாவலான இடம் சேர்மின்'' எனப் பறையறைந்து தெரிவிப்பது.

2. மேவல்+து=மேவற்று=பொருந்துதல் வல்லதாகும்.

3. அடுத்துவரும் சூத்திரத்து ஊர் கொலை கூறப்பட்டது ஏன் எனின் என்பதற்கு இது விளக்கம்.

வேத்தியல்[4] அல்லாத பொதுவியலுங்[5] கொள்க. முன்னர் (56) வெட்சி குறிஞ்சிக்குப் புறனெனக் களவு கூறிய அதனானே, அகத்திற்கு ஏனைத்திணைக் கண்ணும்[6] களவு நிகழ்ந்தாற்போலப் புறத்திணை யேழற்கும் களவு நிகழுங்கொ லென்று ஐயுற்ற மாணாக்கற்கு வெட்சிக்கே களவு உள்ளதென்று துணிவுறுத்தற்கு மீட்டுங் 'களவின்' என்று இத்திணைக்கே களவு உளதாக வரைந்தோதினார். 'வேந்து விடு முனைஞர்' என்றமையான் இரு பெருவேந்தருந் தண்டத்தலைவரை ஏவி விடுவரென்றும், 'ஆதந்தோம்பும்' என்றதனாற் களவின்கட் கொண்ட ஆவினை மீட்டுத் தந்தோம்பு மென்றும் பொருள் கூறுமாறு சூத்திரஞ் செய்தாராகலின் இருபெரு வேந்தர் தண்டத்தலைவரும் அவரேவலான் நிரை கோடற்கும் மீட்டற்கும் உரியராயினார்; ஆகவே இருவர்க்குங் கோடற்றொழில் உளதாயிற்றாதலின்; அடித்துக் கோடலும் மீட்டுக் கோடலும் வெட்சியாயின.

ஆயின், 'மீட்டல் கரந்தை' என்பரால் எனின், அதனையும் இச்சூத்திரத்தானும் வருகின்ற சூத்திரத்தானும் வெட்சியென்றே ஆசிரியர் கொண்டார். மீட்டலை வெட்சிக்கரந்தை என்பாரும் உளர். மீட்டலைக் கரந்தையென்பார்க்கு[7] அது திணையாயிற் குறிஞ்சிக்குப் புறனாகாமை உணர்க.

'களவின்' என்பதற்குக் களவினானெனவுங் களவின்கணெனவும் இரு பொருட்டாகக் கூறுதல் உய்த்துக் கொண்டுணர்தல்

---

4. வேத்தியல் (வேந்து+இயல்) வேந்தன் ஆணை வழியியல்வது—இது சிறப்புடையது.

5. பொதுவியல்—அரசன் ஆணையின்றி வீரராலேயே யியல்வது—இது சிறந்ததன்று.

6. ஏனைத்திணை—முல்லை முதலிய நிலங்கள். முல்லை முதலிய திணை (நிலங்)களிலும் களவு (புணர்ச்சி) நிகழ்தல் போல வஞ்சி முதலிய திணைகளில் ஆநிரை கவர்தல் (களவு) நிகழாது என்றற்கு வெட்சிதானே குறிஞ்சியது புறனே (1) என்றதனாலேயே ஆநிரையைக் களவிற் கவர்தல் என்பது பெறப்படவும் இச்சூத்திரத்தும் மீட்டும் 'களவின்' என்ற சொல்லைப் பெய்தார் ஆசிரியர்.

7. கரந்தை யென்பார்க்கு—கரந்தைத் திணை எனத் தனித்திணை கூறுவார்க்கு.

(665) என்னும் உத்தியாம். புறப் பொருட்குரிய அறனும் பொருளுங் கூறத்தொடங்கி ஈண்டு அறத்தாற் பொருளீட்டு மாறுங் கூறினார்.[8]

(2)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம்: 2.

வேந்து விடு......மேவற் றாகும்.

கருத்து:- இது வெட்சித்திணையின் இயல் விளக்குகிறது.

பொருள்: வேந்துவிடு முனைஞர்—மன்னரா லேவப் பெற்ற படை மறவர்; களவின் வேற்றுப்புல ஆதந்தோம்பல்—கரவால் பிறர் நிலத்து நிரை கவர்ந்து போந்து புரந்தருதலை; மேவற்றா கும்—(அவ்வெட்சி) விரும்பும் தன்மைத்தாம்.

குறிப்பு:- கொண்ட பொருட் குறிப்பால் அவாய் நிலையாய் 'அவ் வெட்சி' யென்பது கொள்ளப்பட்டது.

இனி, 'வெட்சி' மறனுடை மரபில் அவர் துவக்கும் ஒழுக்க மாதலின், போர் விரும்பும் மன்ன ரேவலால் அது நிகழ்தற்பாற்று. பிற நாட்டொடு போர் தொடங்குதல் இறைமை முறையாய் மன்னர் பாலதே யாதலால். இப்போர்த் தொடக்கத்திணை அவராணை வழித்தாதல் ஒருதலை. அன்றியும், அது போர்க்குறி யாதலால், மன்னரேவினும், பொருந ரல்லாப் பிறர் மேற் கொள்ளற் பாற்றன்று. பிறர் நிரைகவர்தல் போர்த்தொடக்கம் குறியாமல் திருட்டாய்க் கருதப் பெறுமாகலின், இத்திணைக்கு மன்னர் பிறரை விலக்கித் தம் படைமறவரையே ஏவற்பாலர். மேலும் முனைஞரும் மன்ன ரேவலின்றித் தாம் விரும்பியாங்குப் போர் தொடங்கல் கூடாதாகலின், போர்த் தொடக்கமாம் ஆகோளும் வேந்தராணையில் வழி அவர்க்கொவ்வாத் தவறாகும். இத்தமிழ்ப் பேரறம் விளக்கவேண்டி, ஆனிரை கொள்ள 'வேந்து விடலும் அவ்வாறு விடப்படுவார்' 'முனைஞரே' யாதலும்

---

8. இச்சூத்திரத்தில் அறவழிப் போர் தொடங்க எண்ணிய அரசன் ஏவலின் வழி வீரர் பகை நாடு சென்று ஆநிரை கவர்தலின் அறமும் கவர்ந்த ஆநிரைகள் எனும் பொருள் வருவாயும் கூறப்பட்டன. இதனால் பொதுவாகவே புறத்திணையியலில் அறமும் பொருளும் கூறப்பட்டன என்னல் வேண்டும்.

வெட்சித் திணைக்கின்றியமையாமைசுட்டி 'வேந்துவிடு முனைஞர்' எனக் கூறப்பட்டது.

இன்னும், கவர விரும்பும் பிறநாட்டு நிரையும் போர் நிகழாக் காலத்து மன்னறக் காவல் துன்னித் தந்நிலத் துய்க்கப் பெற்றுழிக் கவரப்படுதல் முறை திறம்பி அறமழிப்பதாமாகலின், போர் துவக்குவோர் தமதல்லாப்பகை நிலத்தில் நிரைகவரற்பால ரெனற்கு 'வேற்றுப் புல'த்து என விளக்கப்பட்டது. போராகாமல் போர்க் குறியறிவிப்பாய் நிரைகொள்ளலே இத்திணை யாதலால் பகைப் படையின் எதிர்ப்பும் போரும் வேண்டாது பகைவர் நிலத்து அவரறியாமல் கரவில் கைப்பற்றும் முயற்சியே வெட்சி யும், வெளிப்படையாய்ப் பகைவரை அறைகூவி நிரைகவர்தல் தும்பைப்பாற் கொண்டியுமாமென்பது தோன்றக் 'களவின்' எனக் கூறப்பட்டது. நிரைகவரக் கருதிச் சென்றோர் எதிர்பாராத காவலர் எதிர்ப்பிற் கிடைந்து நிரை கவராதேனும் கவர்ந்தாங்கே மீட்க விட்டேனும் வாளா மீளல் ஆகோள் வெட்சியாகா தென்ப தையும் மீட்க விடாமல் கவர்ந்து கொணர்ந்த நிரையைத் தம்மை ஏவிய வேந்தர் பால் ஊறின்றி யுய்ப்பது முனைஞர் கடனாதலை யும் தெளிக்கவேண்டி 'ஆதந்தோம்பல் மேவற்றாகும்' என விளக்கப்பட்டது. இக்கருத்தானே, 'ஓம்புதலாவது மீளாமல் காத்தல்' எனவும், 'போர்க்கு முந்துற நிரை கோடல் சிறந்த' தெனவும், இச்சூத்திரத்தின் கீழ் உரைக் குறிப்பாய் இளம்பூரணர் கூறுதலும் காண்க. இம்மாற்றருஞ் சால்புடை மரபுகள் போற்றாத பிற்காலத்தில், நிரை மீட்கும் முயற்சியை வெட்சியிலடக்காமல் கரந்தையென வேறு திணையாக்கியும், இவ்வெட்சியை வேந்தன் மேற்றாய் நிறுத்தாமல் 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழி லென்று அன்ன விருவகைத்' தாக்கியும், தந்நாட்டை விலக்காமல் யாண்டும் பிறர் நிரை கவர்தல் வெட்சியாம் போலவும், முறை பிறழத் துறைகளைக் கூட்டியும் மாற்றியும், முந்துற நிரை கவர்ந்து அமரறிவித்துப் பின் பொருவதே போரறமென்பதை மறந்து போர்த் துவக்கத்தில் நிகழும் 'கொடிநிலை—கொற்றவை நிலை—வெறியாட்டு' அன்ன கடவுட்பராவு நிலைகளை வெட்சிக் கண் போர்த் துறைகளாக எடுத்து நிறுத்தியும், இன்னும் பல்லாற் றானும் பின்னூல்களில் மரபிறந்த மாறுபாடுகள் மலிவவாயின. பன்னிரு படலத்துள் 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென் றன்ன விருவகைத்தே வெட்சி' எனவும், அதைப் பின்பற்றி 'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும் சென்றிகன் முனை ஆதந்தன்று' என வெண்பா மாலையிலும் வெட்சியை இரு கூறுபடக் கூறினாராயினும், முன் வருகின்ற வஞ்சி, உழிஞை,

தும்பை, முதலாயின (படை எடுத்துச் செலவு, எயில் காத்தல், போர் செய்தல் என்பன) அரசர் மேலாய் இயன்று வருதலின், வேந்துறு தொழிலொழித்துத் தன்னுறு தொழிலெனத் தந்நாட்டும் பிறர்நாட்டும் களவில் ஆனிரை கோடலின், இவர் அரசரது ஆணையை நீக்கினா ராவர்; ஆதலால் அவர் அவ்வாறு கூறல் மிகைப்படக் கூறலாம்' என இளம்பூரணரும் பிழைப்பட்ட பிற்காலக் கொள்கைகளைக் கடிதல் காண்பாம்.

இனி, முடிவேந்த ரல்லார் சிலரைப் புகழ்ந்து வரும் வெட்சிப் பாடாண் புறப்பாட்டுக்களைக் காட்டி அவை மன்னர் பணிப்பின்றி ஆகோள் தன்னுறு தொழிலாய்க் கொள்வதற்கு மேற்கோள் என்பாருளர். அப்பாட்டுக்கள் குறுநில மன்னரைப் பற்றியவை. 'மன்பெறு மரபின் ஏனோ'ராகிய குறுமன்னருக்கு 'வேந்துவினை யியற்கை வேந்தனின் ஒரீஇய (அவ்) வேனோர் மருங்கினும் எய்திடனுடைத்து' எனத் தொல்காப்பியரே கூறுகிறார். எனவே, இன்னோரைப் பாராட்டும் வெட்சிப்பாடாண் புறப்பாட்டுக்கள் ஒரு வகையாய் மன்னராவார்க்கு உறுதொழிலே கூறுவனவாம்; வேந்தன் பணிப்பின்றியும் மக்களில் யாரும் தன்னுறு தொழிலாக நிரைகவரும் தவறுக்கு இப்பாட்டுக்கள் மேற்கோளாகாமை வெளிப்படை.

(2)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் வெட்சித் திணையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) தம் வேந்தனால் ஏவப்பட்ட முனைப்புலத்துள்ள காவல்வீரர் பகைப்புலத்து ஆநிரைகளைக் களவினால் கவர்ந்து வந்து ஓம்புதலைப் பொருந்துவதாகும் வெட்சித்திணை என்ற வாறு.

முனை என்பது நாட்டின் எல்லையில் வேற்றுவேந்தர் படைவரவை முன்னறிந்து தடுத்துக் காக்கும் படைத்தலைவர் தங்கும் இடம். அது முனையூர் என்றும் முனைப்புலம் என்றும் வழங்கப்படும். அவ்விடத்துப் படைத்தலைவர்-வீரர் முனைஞர் எனப்படுவர்.

வேற்று வேந்தன் நாட்டெல்லையிலும் முனைப்புலம் உண்டு ஆதலின் அம்முனைஞர் அறியாமல் வேந்துவிடு முனைஞர் சென்று ஆநிரை தருதலின் 'களவின் ஆதந்து' என்றார். எனவே வேற்று வேந்தர் முனைஞர் அறியாமற் செல்லுதலே களவு எனப்பட்டது

என்க. ஆநிரை கவர்ந்து மீளும்போது வேற்றுவேந்தரின் முனைஞர் அறிந்து தடுத்தலும் அப்போது போர் நிகழ்தலும் அங்கு ஊர் கொலை முதலிய நிகழ்தலும் உண்டு.

உரையாசிரியர் யாவரும் வெட்சித்திணையானது மன்னுறு தொழில் தன்னுறு தொழில் என இருவகைப்படும் என்ற பிற் காலத்தார் கருத்தை ஒரே முகமாக மறுத்தமை சிறப்புக்குரியதே. என்றாலும் வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புல ஆநிரை கவர்ந்து வரும்போது வேற்றுப்புல முனைஞர் தடுக்கும் செயல் அர சாணையை அப்போது எதிர்நோக்கியிருந்து செய்தல் கூடாமை யின் தம் செயலாகவே ஆநிரைமீட்பர் எனின் அச்செயல் தன்னுறு செயலாகும் என்னலாம். நிரைகவர்தலும் அதனை மீட்டலும் ஆகிய இரண்டும் வெட்சி என்றற்கேற்ப நிரைகவர்தல் மன்னுறு செயலாகவும் மீட்டல் தன்னுறு செயலாகவும் கொள்ளலாம். நச்சினார்க்கினியர் 'களவின்' என்பதைக் களவினால் எனப் பொருள் கொண்டு களவினால் ஆதந்து ஒப்பலை ஆநிரை கவரும் வெட்சியார் செயலாகவும், களவின் கண் எனப் பொருள் கொண்டு களவின் கண் கவர்ந்த ஆநிரையை மீட்டுத்தந்து ஓம்பல் என்பதைக் கரந்தையார் செயலாகவும் உய்த்துக் கொண்டுணர் தலால் கூறியதும் தன்னுறு தொழிலை அவர் வெட்சியில் அடக்கிக் கூறியதும் பொருத்தமே.

வேந்து என்றது வேந்தனின் ஆணையை. அயல்புலம் என் னாது வேற்றுப்புலம் என்றமையால் அது பகைப்புலம் என்பது பெற்றாம். களவின் என்றமையால் வேற்றுப் புலத்து முனைஞர் அறியாது சேறலும் வேற்றுப்புல ஆநிரைகளுக்குரியார் அறியாது கவர்தலும் பெற்றாம். 'ஆதந்து' என்றதால் ஆநிரை கவர்ந்து வருதலின் எளிமை புலப்படும். ஓம்பல் என்றதால் வேற்றுப் புலத்தார் ஆநிரைகளுக்கும் துயர்தராது காக்கும் இரக்கங்கூறி மறத்தினும் அறமே நிகழும் என்பதும் புலப்படும். மேவவற்று என்பது மேவற்று என வந்து பொருந்துதலை வன்மையாக உடையது என்னும் பொருளுடையதாயிற்று. அதனால் இப்படி வருவதே வெட்சித்திணையாம் என்றவாறாயிற்று.

மேவல்+து=மேவற்று என்றாயிற்றெனினும் ஆம். மேவலை யுடையதாயிற்று என்பது பொருள்.

61. படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்

முற்றின் ஆகிய புறத்துஇறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின்று உய்த்தல் நுவல்வழித்[1] தோற்றம்
தந்துநிரை பாதீடு உண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்.

(3)

ஆ. மொ: இல.

58. The noise of the army movement, seeking good omen at the way side, marching in to the enemy land without being seen by their spies, getting information from their spies, lying in wait outside the herd after having rewarded the spies, massacre of the villagers surrounded by them, lifting the cows, fighting the enemies who chase them, leading the herd without hinderance appearance amidst appreciation, deliverance of booty, division of booty, feast and distribution of gifts—these are said to be the fourteen divisions of 'Vetci.'

(3)

பி. இ. நூ:

புறப்பொருள் வெண்பாமாலை.

வெட்சி வெட்சியரவம் விரிச்சி செலவு
வேயே புறத்திறை ஊர்கொலை ஆகோள்
பூசல் மாற்றே புகழ்சுரத் துய்த்தல்
தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு
உண்டாட் டுயர்கொடை புலனறி சிறப்பே
பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை நிலையே வெறியாட் டுளப்பட
எட்டிரண் டேனை நான்கொடு தொகைஇ
வெட்சியும் வெட்சித் துறையும் ஆகும்.

வீரசோழியம். 99

ஒருப்பாடு நற்சொற் செலவொற் றுரைப்புப்
புகல் பொருதல்

1. பாடம் : நுவலுவழித்

விருப்பா நிரைகொண் டவரைத் தடுத்தல்
நெறி செலுத்தல்
செருப்பாடு கைப்படை காத்தூர் புகல்திறன் கூறிடுதல்
பருப்பாடு பாலாற் களித்தல் வெட் சித்திறம்
பான்மொழியே.

இல. வி. புறத். 5

மண்டவர்க் கிவர்ந்தோன் மருவலர் நிரையினைத்
தண்டத் தலைவரைத் தருகெனப் பணித்தல்
பணிதலைக் கோடல் படையியங் கரவம்
தணியலர் எழுந்தோர் சமரவாய்ப் பறீஇயர்
விரிச்சி யோர்த்தல் வேண்டா வீரம்
வரிச்சிலை மறவர் வழியிடைச் சேறல்
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட் டுயர்கொடை
புலனறி சிறப்பொடு பிள்ளை வழக்கே
பெருந்துடி வழக்கொடு அருந்திறற் கலையமர்
கொற்றவை நிலையொடு வெறியாட் டுளப்பட
தெருண்டுமுன் வகுத்த கவர்ந்தனர் கோடல்
இரண்டுதலை யிட்ட முந்நான்கு துறைத்தே.

இளம்பூரணர்

61. படையியங்கு அரவம்..............வகையிற்று ஆகும்.

இது வெட்சித் துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) படையியங்கு அரவம் முதலாகக் கொடை ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு துறையை உடைத்து வெட்சித்திணை.

வெட்சியென்பது அதிகாரத்தான் வந்தது. படை இயங்கு அரவம் - (நிரைகோடல் கருதிப்) படையெழும் அரவம்.

உதாரணம்

''நெடிபடு கானத்து நின்வேல் மறவர்
அடிபடுத் தாரதர் செல்வான்—துடிபடுத்து
வெட்சி மலைய[1] விரவார் மணிநிரைக்
கட்சியுள் காரி யெழும்''

(வெண்பா-வெட்சி-3)

1. துடிபடுத்தி வெட்சிமலைய என்பதால் அரவமாயிற்று.

பாக்கத்து விரிச்சி — (குறித்த பொருளின் பயன் அறிதற்குப்) பாக்கத்துக்கண் நற்சொல் ஆய்தல்.

உதாரணம்

''எழுவணி சீறூர் இருள்மாலை முன்றில்
குழுவினங் கைகூப்பி நிற்பத்—தொழுவில்
குடக்கள்ளுக் கொண்டுவா[2] என்றாள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும்''

(வெண்பா-வெட்சி-4)

புரைகெடப் போகிய செலவு—பக்கம் கெடப் போகிய செலவு.

பக்கங் கெடுதலாவது, மாற்றரசர் பக்கத்நாராகித் தம்மாட்டு ஒற்றொடு நிற்பார் அறியாமல் போதல். பக்கத்திலுள்ளாரைப்[3] பக்கம் என்றார்.

உதாரணம்

''கூற்றினத்து அன்னார் கொடுவில் இடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படர்ந்து—ஏற்றினம்
நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர்''[4]

(வெண்பா-வெட்சி-5)

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே—மாற்றரசர் பக்கத்துள் ளார் அறியாதவகை ஒற்றரால் ஆகிய ஒற்றுதலும்.

ஒற்று என்பது எவ்விடத்தும் வேண்டுமாயினும், ஆதிவிளக் காக[5] இவ்வோத்தின் முதற்கண் வைத்தாரென்று கொள்க.

உதாரணம்

''நிலையும் நிரையும் நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி—இலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர்''

(வெண்பா-வெட்சி-6)

---

2. இருள்மாலையில் குழுவினம் கைகூப்பி நிற்பக் 'குடக்கள்ளுக் கொண்டுவா' என யாரோ கூறிய ஒலி நற்சொல் ஆயிற்று.

3. பக்கத்துள்ளாராகிய மாற்றரசர் ஒற்றரை.

4. இப்பாடலில் ஒற்றர் நீங்கிய குறிப்பு இல்லை.

5. ஆதிவிளக்கு-முதல் நிலைத்தீவகம்.

வேய் புறம் முற்றின் ஆகிய புறத்து இறை—(அவ்வாறு வேய்க்கப்பட்ட இடத்தின் புறத்தினைச் சூழ்தலான் ஆகிய புறத்திருக்கை.

'வேய்' என்பது ஆகுபெயராய் அவ்விடத்தின்மேல் நின்றது.

உதாரணம்

''உய்ந்தொழிவார் ஈங்கில்லை ஊழிக்கண் தீயேபோல்
முந்தமருள் ஏற்றார் முரண்முருங்கத்—தந்தமின்
ஒற்றினான் ஒற்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினார் போகாமற் சூழ்ந்து''

(வெண்பா-வெட்சி-7)

முற்றிய ஊர் கொலை—(அவ்வாறு) சூழப்பட்ட ஊரை அழித்தல்.

உதாரணம்

''இகலே துணையா எரிதவழச் சீறிப்
புகலே அரிதென்னார் புக்குப்—பகலே
தொலைவில்லார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவில்லார் கொண்டார் குறும்பு''

(வெண்பா-வெட்சி-8)

ஆ கோள் - (ஆண்டுளதாகிய) நிரையைக் கோடல்.

உதாரணம்

''கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும்—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை''

(வெண்பா-வெட்சி-9)

பூசல் மாற்று—(அவ்வாறு கொண்ட நிரையை மீட்டற்கு வந்தார் பொரும்) பூசல் மாற்றிப் பெயர்தல்.

உதாரணம்

''சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குண்ணிய—தாழ்ந்த

குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார் எய்த
புலவுக் கணைவழிபோய்ப் புள்''[6]

(வெண்பா-வெட்சி-10)

நோய் இன்று உய்த்தல்—(அவ்வாறு கொண்ட நிரையை) வருந்தாமல் உய்த்தல்.

உதாரணம்

''செருப்பிடைச் சிறுபரல் அன்னன் கணைக்கால்
அவ்வயிற்று அகன்ற மார்பிற் பைங்கண்
குச்சின் நிரைத்தன்ன குரூஉமயிர் மோவாய்
செவியிறந்து தாழ்தருங் கவுளன் வில்லோ
டியார்கொலோ அளியன் தானே தேரின்
ஊர்பெரிது இகந்தன்றும் இலனே அரணெனக்
காடுகைக் கொண்டன்றும் இலனே காலைப்
புல்லார் இனநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென எண்ணிச்
சிலையின் மாற்றி யோனே அவைதாம்
மிகப்பல வாயினும் என்னாம் எனைத்தும்
வெண்கோள் தோன்றாக் குழிசியொடு
நாளுறை மத்தொலி கேளா தோனே''[7]

(புறம்-257)

நுவல்வழித் தோற்றம்—தமர் கவன்று[8] (சொல்லியவ)ழித் தோன்றுதல்.

---

6. புள் கணை வழிபோய் வீழ்ந்தார் விடக்கு(தசை) உணிய வீழ்ந்த என்க.

7. செருப்பிடைச் சிறுபரலன்னன்...கவுளன் யார்கொல்? அவன் தன் ஊரைத் தாண்டியறியாதவன், காட்டை அரணாகக் கொள்ளாதவன். அவ்வளவு இளமையுடைய அவன் பகைவர் ஆநிரை செல்லும் வழிபார்த்து நடத்தி எதிர்த்த கரந்தையாரை வில்லால் மாற்றினான் என்ற அளவில் உதாரணமாகக் கொள்க.

8. நுவல்வழி என்பதற்குக் கவன்றுழி என்பதைவிட வீரச் போரில் வென்று ஆநிரையுடன் வருவர் என்று சொல்லும் வழி என்பதே நன்று.

உதாரணம்

''நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்
புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று
நிரையொடு வரூஉம் என்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே''

(புறம்-262)

தந்துநிறை—(கொள்ளப்பட்ட நிரையைத்) தம் ஊரகத்துக் கொணர்ந்து நிறுத்தல்.

உதாரணம்

''தண்டா விருப்பினள் தன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று—கண்டாள்
அணிநிறை வாள்முறுவல் அம்மா எயிற்றி
மணிநிரை மல்கிய மன்று''[9]

(வெண்பா-வெட்சி-13)

பாதீடு - (அந்நிரையைக்) கூறிடுதல்.

உதாரணம்

''ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்—வின்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை''

(வெண்பா-வெட்சி-14)

உண்ட ஆட்டு[10]—(நிரைபகுத்த மறவர்) களிப்பினால் அயரும் விளையாட்டு.

உதாரணம்

''இளிகொண்ட தீஞ்சொல் இளமா எயிற்றி
களிகொண்ட நோக்கம் கவற்றத்—தெளிகொண்ட

---

9. எயிற்றி நிரைமல்கியமன்று கண்டாள் என்க.

10. உண்ட ஆட்டு—உண்டகளிப்பால் ஆடும் ஆட்டம். உண்ட இளைப்பு என்பது போல் கொள்க.

வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றார்வேல்
செங்கண் மறவர் சினம்' '[11]

(வெண்பா-வெட்சி-15)

கொடை — (பகுத்த நிரையை வேண்டி இரப்பார்க்குக்) கொடுத்தல்.

உதாரணம்

''இளமா எயிற்றி இவைகாண் நின்ஐயர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர்சீர் வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன.

முருந்தேர் இளநகை காணாய்நின் ஐயர்
கரந்தை அலறக் கவர்ந்த நிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்திரி கானவன்
புள்வாய்ப்பச் சொல்கணி முன்றில் நிறைந்தன.

கயமலர் உன்கணாய் காணாய்நின் ஐயர்
அயலூர் அலற எறிந்தநல் ஆக்கள்
நயனின் மொழியர் நரைமுதிர் தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன.''

(சிலப்—வேட்டுவவரி)

(3)

நச்சினார்க்கினியர்

58. படையியங் கரவம்......வகையிற்றாகும்.

இது முன் ஈரேழாமென்ற துறை இருவகைப்பட்டு இருபத்தெட்டாமென்கின்றது.

இதன் பொருள்:- படை இயங்கு அரவம்—நிரைகோடற்கு எழுந்த படை பாடிப்புறத்துப் பொருந்தும் அரவமும், நிரை மீட்டற்கு எழுந்த படை விரைந்து செல்லும் அரவமும்:

உதாரணம்

''வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றா—ரெவ்வாயு

---

11. செங்கண்மறவர் வேற்றார் மேல் கொண்ட சினம் எயிற்றியின் நோக்கம் கவற்ற விளிவதுவோ எனக் கொள்க.

மார்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியோடு புக்கு.''[1]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 752)

''அடியதி ராப்பின ராபெயர்த்தற் கண்ணா
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வலம்''[2]

(ஷை 763)

இவை கண்டோர் கூற்று.

பாக்கத்து விரிச்சி—நிரைகோடற்கு எழுந்தோர் போந்து விட்ட பாக்கத்துக் கங்குலில் நல்வாய்ப்புட் கேட்டலும், நிரை மீட்டற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறம் போந்தோர் கூறிய வற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும்:

உதாரணம்

''திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோ னின்றுரைத்த நற்சொ—னிரையன்றி
யெல்லைநீர் வைய மிறையோர்க் களிக்குமால்
வல்லைநீர் சென்மின் வழி.''[3]

(ஷை 756)

---

1. வீரர் செந்நிற வெட்சிப் பூச்சூடிச் செல்வதால் செவ் வானம் தரையிற் படர்வது போல் செல்கின்றார். செல்லும்போது எழும் துடியொலியோடு மறவர் கழல் ஒலியும் பகைவர் நாட்டெவ்விடத்தும் கேட்பதாக. இது வெட்சி.

2. கடியமறவர், அடியதிரும்படி வெட்சியார் பின் சென்று அவர் கவர்ந்த ஆநிரைகளை மீட்கச் சென்றார். ஆநிரை களை மீட்காமல் திரும்பார்; வெட்சி வீரர்களின் துடி கொட்டுமவர் துடிவென்றியாதாகும்?—இது கரந்தை.

3. நரை முதியோன் சொன்ன நற் சொல்லானது நம் வேந்தற்கு ஆநிரையே யன்றி இவ்வுலகத்தையே யளிக்கும்; ஆதலின் வீரர்களே வழியே விரைந்து சென்மின்—இது வெட்சி. நல்வாய்ப்புள்—நல்வாய்ச் சொல்.

''வந்தநீர் காண்மினென் றாபெயர்ப்போர் மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்பு—ளுய்ந்த
நிரையளவைத் தன்றியு நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதா மண்.''[4]

இவை விரிச்சியை வியந்தன.

புடைகெடப் போகிய செலவே—நிரைகோடற்கு எழுந்தோர் ஆண்டு நின்று மீண்டுபோய்ப் பற்றார் புலத்து ஒற்றர் உணராமற் பிற்றைஞான்று சேறலும், நிரை மீட்டற்கு எழுந்தோர் ஆண்டு ஒற்றப்படாமற் சேறலும்;

உதாரணம்

''பிறர்புல மென்னார் தமர்புல மென்னார்
விறல்வெய்யோர் வீங்கிருட்கட் சென்றார்—நிறையுங்
கடாஅஞ் செருக்குங் கடுங்களி யானைப்
படாஅ முகம்படுத் தாங்கு.''[5]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 757)

''கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
யெங்கு மறவ ரிரைத்தெழுந்தார்—தங்கிளைக்கண்
மன்றுகாண் வேட்கை மடிசுரப்ப வேதோன்றுங்
கன்றுகாண் மெய்குளிர்ப்பீர் கண்டு.''[6]

(ஷை 764)

இவை கண்டோர் கூற்று.

---

4. பைந்தொடி மகளிர் ஆபெயர்ப்போரிடம் 'ஆமீட்க வந்த நீவிர் வெல்க' எனச் சொன்ன விரிச்சியானது ஆநிரை மீட்கு மளவேயன்றிக் கொள்ளும் மண்ணும் நீர்சூழ் இடமான அளவை (கடலளவை) யுடையதாம்—இது கரந்தை. பறவாப்புள்—விரிச்சி. பாயாவேங்கை போல் கொள்க.

5. விறல் விரும்பும் வீரர், யானைக்கு முகபடாம் அணிந்து தம்புலம் பிறர் புலம் என்று பாராமல் மிக்க இரவில் சென்றார் என்பதால் இது வெட்சி.

6. கன்றுகளே! கங்கையாறு பரந்து செல்வதுபோல் கரந்தை வீரர் கவர்த்த வழியெங்கும் பரவிச் சென்றார்; அதனால் ஆநிரைகள் மீட்கப்பட்டு அவை தம் மன்றத்துக் கன்றுகளைக் காணும் வேட்கையால் மடிசுரக்குமாறு தோன்றும்; அவற்றைக் காணுங்கள்—இது கரந்தை.

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே-நிரைகோடற்கு எழுந்தோர் பகைப்புலத்து ஒற்றர் உணராமற் சென்று ஒற்றி அவ்வொற்று வகையான் அவர் உணர்த்திய குறளைச் சொல்லும் நிரைமீட்டற்கு எழுந்தோர் அங்ஙனம் ஒற்றிய ஒற்று வகையான் வந்து ஓதிய குறளைச் சொல்லும்:-

உதாரணம்

''ஒருவ ரொருவ ருணராமற் சென்றாங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
நோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு.''[7]

''நெடுநிலையா யத்து நிரைசுவ டொற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்—நெடிது
மனக்குரிய காதல் வயவேந்த னென்று
நினக்குரிய வாக நிரை.''[8]

இவை கண்டோர் கூற்று.

வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை—நிரைகோடற்கு எழுந்தோர் வேயுரைத்தோரிடத்துச் செய்யுஞ் சிறப்புக்கள் முடிந்த பின்னர் உளதாகிய நிரைப்புறத்து ஒடுங்கிய[9] இருக்கைப் பகுதியும், நிரைமீட்டற்கு எழுந்தோர் தமது நிரைப்புறத்துச் சென்று விரைவொழிந்து இருக்கின்ற இருக்கையும்:

உதாரணம்

''கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசென் மள்ளர் பதிந்தா—ரரந்தை

---

7. தம் ஒற்றர் ஒருவரை ஒருவர் அறியாமல் பகைப்புலம் சென்று ஒற்றிவந்து ஒத்தவாறு கூறியமையால் வீரர் வில்லொடு நோக்கும் அம்புகளை ஆய்ந்துகொண்டு போர்க்குப்போக இசைந்தனர்—இது வெட்சி.

8. தொழுவங்களிலிருந்து கவரப்பட்டுச் சென்ற ஆநிரைகளின் சுவடு கண்டு அவையுள்ள இடம் கூறிய ஒற்றனே! வயவேந்தனின் ஆநிரைகள் நினக்கே யுரியனவாகுக.—கரந்தை.

9. நிரைப்புறத்துத்தங்கிய.

விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
யெரிந்தவியும் போலுமிவ் வூர்.''[10]

இது கண்டோர் கூற்று.

''இருநில மருங்கி னெப்பிறப் பாயினு
மருவின் மாலையோ வினிதே யிரவி
ணாகோண் மள்ளரு மருள்வரக் கானத்து
நாம்புறத் திறுத்தென மாகத் தாந்தங்
கன்றுகுரல் கேட்டன போல
நின்றுசெவி யோர்த்தன சென்றுபடு நிரையே.''[11]

(தகடூர் யாத்திரை : புறத்திரட்டு-765)

இது மறவர் கூற்று.

முற்றிய ஊர்கொலை—நிரைகோடற்கு எழுந்தோர் அவர் புறஞ்சேரியை வளைத்துக்கொண்டு ஆண்டு நின்ற நிரை காவலரைக் கொன்று பகையறுத்தலும், நிரைமீட்டற்கு எழுந் தோர் அவ்வூரை விட்டுச் சிற்றூரைக் காத்துக்கோறலும்:

உதாரணம்

''அரவூர் மதியிற் கரிதூர விம
விரவூ ரெரிகொளீஇக் கொன்று—நிரைநின்ற
பல்லான் றெழுவும் பகற்காண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெறாஅர் கொதித்து.''[12]

---

10. மள்ளர் காட்டுத்தீப்போலப் பரந்துசென்று ஒடுங்கினர்; இனி இவ்வூர் அரந்தை விரிந்து அவியுமாறுபோல எரி பரந்து அடங்கும் போலும்.

11. உலகில் எப்பிறப்புவரினும் மருவுதல் இனிய இம்மாலைப் பொழுது எமக்கு இனிதாகும். ஏன் எனின் இரவில் ஆநிரை மீட்கும் வீரரும் நாமும் அருள்வரும்படியாகப் புறத்தே இருந்தேமாக எமது இருப்பை வெட்சியாரால் கவரப்பட்ட ஆநிரைகள் எம் குரலைத் தம் கன்று குரலாகக் கேட்டனபோலக் கூர்ந்து செவிகளால் அறிந்தன. —இது கரந்தை.

12. போர் கண்டோராகிய வெட்சி வீரர் தம்மைக் கொதித்துக் கொல்வார் இல்லாமல் அரவுபரவிய மதியம் போலப் புகைபரவ இரவிலே ஊரை எரி கொளுத்தி எதிர்த்தாரைக் கொன்று ஆநிரை நின்ற தொழுவங் களையும் பகற்காலத்தில் காணப்படும் காலி இடங் களாகக் கண்டனர். —இது வெட்சி.

"சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்றாண்
டிகலுழந்த வல்வில் விளையோர்புண் டீரத்
துகளெழுங்கொல் பல்லான் றொழு."[13]

இவை கண்டோர் கூற்று.

ஆகோள்—நிரைகோடற்கு எழுந்தோர் எதிர்விலக்குவோர் இலராக நிரையகப்படுத்தி மீட்டலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் தமது நிரையை அற்றமின்றி[14] மீட்டலும்:

உதாரணம்

"கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தா
னெடுவரை நீள்வேய் நரலு—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை."

(பு.வெ. 1, 9)

"கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர்க் கருதார் குழாஅந்
துரந்து நிரைமீட்ட தோள்."[15]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 767)

இவை கண்டோர் கூற்று.

---

13. சிற்றூரில் கவர்ந்து சென்ற ஆநிரைப் புறமாக அம்பு கொண்டு நின்ற வெட்சி வீரர் நிலத்தில் வீழ்ந்தார்; இப்படிக் கொன்று மாறுபாடுவிட்ட கரந்தை வீரரின் புண்கள் ஆறும்படி இனி அந்நிரைகள் வருகையினால் அவற்றின் தொழுவங்களில் துகள் எழுமோ! —இது கரந்தை.

14. அற்றமின்றி—மறைவின்றி.

15. வெட்சி வீரராகிய பகைவரைத் துரந்து ஆநிரைகளை மீட்ட கரந்தை வீரரின் தோள்கள் கடலில் புகுந்து உலகை ஏந்தி வெளிப்பட்ட பன்றியின் (திருமாலின் வராக அவதாரம்) கொம்பைக் காட்டிலும் வலிமிகக் கொண்டனவாம்.—இது கரந்தை.

'தொடலைக்கரந்தை' எனக் கரந்தை குடிமை கூறினார். தன்னுறுதொழிலான் நிரைமீட்டலின். இது பொதுவியற் கரந்தையிற் கூறுதும்.[16]

பூசல்மாற்று—நிரை கொண்டு போகின்றார் தம்பின்னே உளைத்தற் குரலோடு தொடர்ந்து சென்று ஆற்றிடைப் போர் செய்தோரை மீண்டு பூசலை மாற்றுதலும், நிரையை மீட்டுக் கொண்டு போகின்றோர் தம்பின்னர் வந்து போர் செய்தோரை மீண்டுநின்று பூசலை மாற்றுதலும்:

உதாரணம்

''ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படாத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றார்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் றாக்கினார்
வெம்பூசன் மாற்றி வில்.''[17]

''இரவூ ரெறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் வீழவு முட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
துவைக்குரற் குணர்ந்த வளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை யிழுக்காது தமர்பிண மிடறி
நிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கட னெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தன
னஞ்சுதக் கன்றாற் செஞ்சோற்று நிலையே.''

இவை கண்டோர் கூற்று.[18]

---

16. வெறியறி சிறப்பின் (5) என்னும் சூத்திரத்து 'அனைக்குறி மரபினது கரந்தை' என்பதிற் காண்க.

17. ஆநிரைகளைக் கவர்ந்து வைத்து அகன்றாராகிய வெட்சியார்களின் தம் போரை மாற்றி நிரைமீட்பார் செய்த போரைத் தடுத்து மாற்றிய விற்படைகள் யாவும் எதிர்த்துப் பொருத கரந்தை வீரர் யாவரும் அவியவே நாண் அடங்கித் தத்தம் ஒலியடங்கின.—இது வெட்சி.

18. இரவில் ஊரைத் தாக்கி ஆநிரையொடு சென்ற வெட்சி மறவர் தன்னால் தாக்கப்பட்டு வீழவும் அஞ்சாமல் கயிற்றால் இயக்கப்படும் பாவை போலத் தோன்றுமாறு வேலைத் திரித்து, சிங்கக் குரல் கேட்டு அடங்கும் குகைப்

வெட்சிமறவர் வீழ்ந்தமை கேட்டு விடாது பின்வந்தோன்பாடு கூறினமையிற் பூசன்மாற்றாயிற்று.

நோய் இன்று உய்த்தல்—நிரைகொண்டோர் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாங்கொண்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டு போதலும், மீட்டோரும் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன்மாற்றத் தாம் மீட்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டு போதலும்:

உதாரணம்

''புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான்—றன்மேற்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டு
நெடுவரை நீழ னிரை.''[19]

(பு.வெ. 1, 11)

''கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பினான்
மெல்ல நடவா விரையுநிரை—யொல்லெனத்
தெள்ளறற் கான்யாற்றுத் தீநீர் பருகவு
மள்ளர் நடவா வகை.''[20]

(பெரும் பொருள்: புறத்திரட்டு 768)

இவை கண்டோர் கூற்று.

புலிபோலத் தன் போர்க்குரல் கேட்ட வீரர் பின்னிட்டு ஓட நினைத்தினால் வழுக்காமல் தன் தமராகிய வீரர் பிணங்களை யிடறி நிலம் தெரியாதபடிக் கிடந்த வலிய தலைகளுக்கு நடுவே வெஞ்சிலை வீரனானவன் வீழ்ந்து கிடந்தான். அவன் வீரம் காணும்போது செஞ்சோற்றுக் கடன் என்பது அஞ்சத்தக்க தொன்றாம்.

19. வில் ஏந்திய கையும் கழலும் உடைய வெட்சி வீரன் தன் மேல் கரந்தை வீரர் மலையின் விழும் நீரைப் போலத் தாக்கவரக் கண்டும் ஆநிரைகள் புல் மேய்ந்து பொறுமையாக அசை போட்டுக் கூடிச் செல்வனவாக என்பான்.

20. தம்மைத் தம் கரந்தை வீரர் நடத்திச் செல்லவேண்டாமலேயே அமைதியாக ஒலிமிக்க சிற்றூரில் உள்ளதம் தொழுவங்களைக் காணும் விருப்பத்தோடு விரைந்து செல்லும் ஆநிரைகள் காட்டாற்றில் ஓடும் தெளிந்த சிறுநீரைப் பருகுவனவாக. —இது கரந்தை.

நுவலுழித் தோற்றம்—பாடி வீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைமீட்டோர் வரவும்:

உதாரணம்

''மொய்யண லானிரை முன்செல்லப் பின்செல்லு
மையணற் காளை மகிழ்துடி—கையணல்
வைத்த வெயிற்றியர் வாட்க ணிடனாட
வுய்த்தன் றுவகை யொருங்கு.''[21]

(பு. வெ. 1, 12)

''காட்டகஞ் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரையா
மீட்ட மகனை வினவுறா—னோட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழு
மென்னெதிர்ப் பட்டாயோ வென்று.''[22]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 769)

இவை கண்டோர் கூற்று.

தந்து நிறை—நிரைகொண்டோர் தாங்கொண்ட நிரையைத் தம் ஊர்ப்புறத்துத் தந்து நிறுத்தலும், நிரை மீட்டோர் தாம் மீட்ட நிரையினைத் தந்து நிறுத்தலும்:

உதாரணம்

''குளிறு குரன்முரசங் கொட்டின் வெரூஉங்
களிறொடுதேர் காண்டலு மாற்றா—நளிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் புறங்கான
மெல்லாம் பெறுக விடம்.''[23]

---

21. அலைதாடி ஆநிரைகள் முன் செல்ல அவற்றின் பின்னே செல்லும் கருந்தாடி வீரனின் துடியோசையானது எயிற்றியரின் இடக்கண் ஆட அவர்க்கு உவகையைச் செய்தது.—இது வெட்சி

22. தன் உயிரையும் போற்றாமல் காட்டிடம் சென்று மிக்க பால் சுரையுடைய ஆநிரைகளை மீட்ட மகனை நலம் கேளாமல் ஓடிச் சென்று தனக்கு எதிரே வரும் தன் புனிற்று ஆவினைத் தழுவி என்னிடம் வந்து விட்டாயோ என்று கூறி அழுவாள் இவளைக் காண்மின்—இது கரந்தை.

23. முரசு கொட்டினால் அஞ்சும் களிறு தேர்களைக் கண்டால் தாங்கமாட்டா; ஆதலினால் கவரப்பட்ட ஆநிரைகள் யாவும் தாம் மேய்தற்கு நம்மூர்ப் புறங்காடெல்லாம் இடமாகுக.—இது வெட்சி.

'கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாயந் தொகுமி—னெழுவொழித்தாற்
போமே யிவையிவற்றைப் போற்றுமின் புல்லொடுநீர்
தாமேய் புலம்போலத் தந்து.'[24]

இவை கண்டோர் கூற்று.

பாதீடு—ஈத்தலும் ஈதலும் போலப் பார்த்தலும் பாதலும் ஒன்றாதலிற் பாதீடாயிற்று: வேந்தனேவலால் தாங்கொண்ட நிரையைப் பகுத்துக்கோடலும், மீட்டோருந் தத்தநிரையைப் பகுத்துக்கோடலும், நிரையை இழந்தோர்க்குப் பகுத்துக் கொடுத்தலும்:

உதாரணம்

''ஒள்வாண் மலைந்தார்க்கு மொற்றாய்ந்
துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்—விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை.''

(பு வெ. 1, 14)

''யாமே பகுத்திடல் வேண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொ—லேமுற
வன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சேர்ந்து.''[25]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 770)

---

24. ஆநிரைகளைத் தொழுவில் கட்டுத்தறியும் பந்தரும் சிதையாமல் கட்டித் தொகுத்திடுங்கள்; எழுவினின்றும் நீக்கினால் இவை புல்மேயப் போம்; ஆதலின் புலத்தில் மேயுமாறு போல மிகுதியாகப் புல்லும் நீரும் கொடுத்துக் காப்பாற்றுங்கள்.—இது கரந்தை.

25. மீட்டுவந்த ஆநிரைகளை நாம் அவரவர்க்கும் பகுத்துக் கொடுத்தல் வேண்டுவதில்லை. கன்றுகள் அன்று தம்மை யீன்ற தாய்ப் பசுக்களைக் கண்டு கொள்வதைப் போலத் தாமே தமக்குரியவரை அறிந்து செல்லும்.—இது கரந்தை.

இவற்றுள் முன்னையது கண்டோர் கூற்று; ஏனையது மறவர் கூற்று.

உண்டாட்டு—நிரைகொண்டார் தாங்கொண்ட நிரையைப் பார்த்துத் தாங்கொண்ட மகிழ்ச்சியாற் சுற்றத்தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதலும், நிரைமீட்டார் வென்று நிரைமீட்ட கொற்றத்தான் உண்டாடுதலும்:

உதாரணம்

"நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவ விட்ட பைங்காற் பந்தர்ப்
புனறரு மிளமண னிறையப் பெய்ம்மி
னொன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வருஉ மென்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே."

(புறம்-262)

"பகைவர் கொண்ட படுமணி யாய
மீட்டிவட் டந்த வாட்டிறற் குரிசின்
முழவுத்துயின் மறந்த மூதூ ராங்கண்
விழவுத்தலைக் கொண்ட விளையாட் டாயத்
தூன்சுடு கொழும்புகைக் கருங்கொடி யும்பர்
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பல்கூட் டாரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவிற் காவிற் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியுஞ் சதுக்கமும் பந்தர் போகிய
வாடுறு நறவின் சாடி தோறுங்
கொள்வினை மாற்றாக் கொடையொடு
கள்விலை யாட்டியுங் கைதூ வாளே." 26

இவை கண்டோர் கூற்று.

---

26. பகைவர் கவர்ந்த ஆநிரைகளை மீட்டுவந்த கரந்தை வீரனின் மூதூரில் விழாவைக் கொண்ட விளையாட்டு மகளிர் ஊனைச் சுடும் புகையோடு மீன் சுடும் புகையும் விசும்பு வாய்த்தது; வாசனைப் பொருள் கலப்பதில் வல்லவர் கலந்த சந்தனத்தொடு நெய் பிழியும் நல்ல மணமும் சேர்ந்து நிலத்தில் பரவியது. பூவிலை மகளிர் இடந்தோறும் பரவினர்; சந்து சதுக்கங்களாகிய இடங்களில் கள்விலையாட்டியானவள் சாடியில் கள்ளைக் கொள்ளும் தொழிலை மாற்றாத கொடையொடு கையொழியாதவளானாள்.—இது கரந்தை.

கொடை—தாங்கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாது கொடுத்து மனமகிழ்தலும், நிரைமீட்டோர்க்கு வென்றி பொருட்டு விளைந்த கொடைப்பகுதியும்:

உதாரணம்

''இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன.''

(சிலப். வேட்டுவவரி)

''கொடைத்தொழி லெல்லாங் குறைவின்றிப் பண்டே
முடித்தன னென்றிருந்த மூத்தோள்—கொடைக்கு
வரம்பில னென்றே மருண்டா னிரைகோட்
கரந்தையங் கண்ணியாற் கண்டு.''[27]

இவை கண்டோர் கூற்று.

என ஈரேழ் வகையிற்றாகும்—என்று கூறப்பட்ட பதினான்கும் மீட்டுமொருகால் விதந்த இருகூற்றையுடைத்தாகும் வெட்சித் திணை என்றவாறு.

எனவே ஒன்று இரண்டாய் இருபத்தெட்டாயிற்று.

இனித் துறையென முற்கூறினமையின் இது காரியமாக[28] இதற்குக் காரணமாயினவெல்லாம் படையியங்கரவமெனவே படும். அவை இருபெரு வேந்தரும் போர் தொடங்குங்காற் பூக்கோளேவி[29] நிரைகோடல் குறித்தோன் படைத்தலைவரைத் தருகவென்றலும், அவர் வருதலும், அவர் வந்துழி இன்னது செய்கவென்றலும், அவர் வேந்தர்க்கு உரைத்தலும், அவர்

27. ஆநிரைகளை மீட்பதற்கு முன்னர்க் கொடைத் தொழிலைக் கொடுத்து முடித்துவிட்டான் என்று எண்ணி யிருந்த ஒரு முதியவன், ஆநிரைகளை மீட்டுவந்த அந்தக் கரந்தை மாலையுடைய வீரனைக் கண்டு இவன் கொடைக்கு வரம்பு இல்லாதவன் போலும் என மருண்டான்.

28. இது காரியமாக—படையியங்கரவம் முதலிய துறை நிகழ்ச்சி காரியமாக.

29. பூக்கோள் ஏவி—போர்ப்பூக்கொண்டு சூடுமாறு ஏவி.

படையைக் கூஉய் அறிவித்தலும், படைச்செருக்கும், அதனைக் கண்டோர் கூறலும், அவர் பகைப்புலக் கேட்டிற்கு இரங்கி வருந்தலும், நாட்கோடலும், அவர் கொற்றவைக்குப் பரவுக் கடன் பூண்டலும் பிறவுமாம். களவிற் செல்வோர்க்கும் அரவங் கூறினார், அவர் பாக்கத்தே தங்கி விரிச்சிபெற்றுப் போதலின். அவற்றுட் சில வருமாறு:-

''கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவில் வேலோன் மறுத்தோம்ப வேட்டா
னடிபுனை தோலி னரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை.''[30]

இது படைத்தலைவர் படையாளரைக் கூஉயினது.

''வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
றாள்வ லிளையவர் தாஞ்செல்லி—னாளைக்
கனைகுர னல்லாத்தன் கன்றுள்ளப் பாலா
னனைவது போலுநம் மூர்.''[31]

(பெரும் பொருள் விளக்கம் : புறத்திரட்டு-753)

இது படைச்செருக்கு:[32] கண்டோர் கூறியது.

''வந்த நிரையி னிருப்பு மணியுட
னெந்தலை நின்றலை யாந்தருது—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு.''[33]

(பெரும் பொருள் விளக்கம் : புறத்திரட்டு 754)

இது தெய்வத்திற்குப் பராஅயது.

---

30. வடித்த வேலுடைய அரசன் சிற்றூர் பசுக்களை எதிர்ப் பாரை மறுத்துக் கவர்ந்து பாதுகாத்தலை விரும்பினான்; ஆதலால் வீரர் யாவரும் காலில் செருப்பு அணிந்து அரண்மனை வாயிலில் திரள்க.—இது வெட்சி.

31. வேந்தன் ஏவலால் வாள்வீரர் செல்லின், நம்மூரானது மீளும் பசுக்கள் கனைக்கும் குரலால் தம் கன்றுகளை நினைக்கவே சொரியும் பாலாலேயே நனையும் போலும்.—இது கரந்தை.

32. படைச்செருக்கு—படைமிகுதியால் தோன்றும் செருக்கு.

33. கொற்றவையே! பசுக்களின் கழுத்துள்ள இரும்பு மணி களுடன் எம் தலைகளையும் நின்னிடத்துத் தருவேம். அவை கொண்டு முற்பட எம் வேந்தனின் செங்கோல் ஓங்குமாறு வெற்றியைக் கொடுப்பாயாக. — இரு சாரார்க்கும் பொருந்தும்.

பிறவும் வருவனவெல்லாம் இதனான் அடக்குக.

இனிப் பாக்கத்து விரிச்சிக்குக் காரணங்களாவன: பாக்கத்துச் சென்றுழி இருப்பு வகுத்தலும், பண்டத்தொடு வல்சி ஏற்றிச் சென்றோரை விடுத்தலும், விரிச்சி வேண்டாவென விலக்கிய வீரக்குறிப்பும் விரிச்சிக்கு வேண்டும் நெல்லும் மலரும் முதலியன தருதலும், பிற நிமித்தப் பகுதிகளும், அவை அறிந்தோர்க்குச் சிறப்புச் செய்தலும் பிறவுமாம்.

உதாரணம்

''நாளும் புள்ளுங் கேளா வூக்கமொ
டெங்கோ னேயின னாதலின் யாமத்துச்
செங்கால் வெட்சியுந் தினையுந் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுக ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
வெயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே.''[34]

(தகடூர் யாத்திரை : புறத்திரட்டு-755)

இது விரிச்சி விலக்கிய வீரக்குறிப்பு.

பிறவும் வந்துழிக் காண்க.

அரசன் ஏவலாற் போந்தோரும் விரிச்சி கேட்டார் இன்னதொன்று வினைவாய்க்குமென்று அறிதற்கு.

இனி வேய்க்குக் காரணங்களாவன வேய் கூறினார்க்குச் சிறப்புச் செய்தல் போல்வன.

உதாரணம்

''மாற்றருந் துப்பின் வயவேந்த னல்லனே
யேற்ற பெருஞ்சிறப் பின்றீதும்—வேற்றூரிற்

---

34. எம்மரசன் நாள் நலமும் புள் நலமும் கேளாத ஊக்கத்துடன் எம்மை ஆநிரை தருக என ஏவினான் ஆதலால், வெட்சிப்பூவும் தினையும் தூவி ஆட்டின் குருதி மன்றத்தின் துகளை அடக்கக் கேட்கும் விரிச்சியை ஆராய்ந்து கேட்டல் வேண்டுவதில்லை; இப்போதே சென்று பகைவர் நாட்டு ஆநிரைகளை நம் நாட்டின் மதிற்புறத்தே தருவேன். —இதுவும் இருவர்க்கும் பொருந்தும்.

புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்றொற்றி
நல்வே யுரைத்தார்க்கு நாம்''[35]

என வரும்.

இனி ஏனைய ஒன்று பலவாய்த் துறைப்பாற்படுவன வந்துழிக் காண்க.

இங்ஙனம் புறத்திணைக்குச் சிறுவரவிற்றாதலினன்றே 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' (53) என்று அகத்திற்குக் கூறியது[36] நிரைமீட்குங்கால் அறிந்தார் அறிந்தவாற்றானே விரைந்து சென்று மீட்பாராதலின் அரசனை உணர்த்தாதே மீட்டல் பெறுதும்: இவற்றிற்குந் துறைப்பகுதி கொள்க.

(3)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் : 3

படையியங் கரவம்......... வகையிற் றாகும்.

கருத்து :- இது, முதற் சூத்திர விருதியில் 'வெட்சிதானே உட்குவரத் தோன்றுமீரேழ் துறைத்தே' எனத் தொகுத்தோதிய துறைகளின் வகையும் பெயரும் விளக்குவதாகும்.

பொருள் :- படையியங் கரவம் — நிரைகவரப் படை நடக்கும் ஆர்ப்பு:

---

35. வயவேந்தன் நல்லவன்; ஆதலால் அவன் ஏவல் இல்லாமலே நாம் மாற்றார் ஊரில் புல்வேய்ந்த குடிசைகளையுடைய புறவிடத்தில் சென்று ஒற்றியிருந்து அறிந்து நல்ல வேய் உரைத்தவர்க்கு ஆநிரைகளை யீவோம்.

36. புலனெறி வழக்கு என்பது நாடக வழக்கும் உலக வழக்கும் கலந்து பாடப்படும் செய்யுள் வழக்கு. உலக வழக்கோடு மாறுபடவும் வருவது நாடக வழக்கு. அது அகத்திணைக்கே பெரிதும் வரும். புறத்திணைக்குச் சிறு வரவினது. அரசனே நிரைகளை அவரவர்க்கும் பகுப்பவன்; வீரர்தாமே பகுத்தல் என்பது உலக வழக்கன்று; நாடக வழக்காம்; அந்நாடக வழக்கும் சிறுபான்மை பாடப்படுதலுண்டு. அதனால்தான் அகத்திணைக்கே புலனெறி வழக்கம் கூறினார் ஆசிரியர் பிறதுறைகளிலும் சிறுபான்மை நாடக வழக்குச் செய்யுள் வருதலை அறிக.

வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியர்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றா—ரெவ்வாயு
மார்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு.

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 1236)

பாக்கத்து விரிச்சி—செல்லும் பக்கத்தே புள்வாய் நற்சொல்லின் குறிப்பறிதல். (விரிச்சி— புள்ளொலியால் நல்லதறிதல்)

மன்ன வன்னிரை வந்து கண்ணுறு
மின்ன நாளினாற் கோடு நாமெனச்
சொன்ன வாயுளே யொருவன் புட்குரன்
முன்னங் கூறினான் முழுது ணர்வினான்.

(சிந்தாமணி—415)

....
நல்வேய்தெரிகானவன் புள்வாய்ப்புச் சொன்னகணி

(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்)

வேற்றூர்க் கட்சியுட்காரி கடியகுரலிசைத்துக் காட்டும்
போலும்.........மறவன் கைவில் ஏந்தப்புள்ளும்
வழிபடரப்...........புல்லார் நிரைகருதிப் போகும்.

(வேட்டுவவரி-சிலப்பதிகாரம்)

புடைகெடப்போகிய செலவு—பக்கத்து இடமில்லையாம்படி படை பரந்து செல்லுதல்.

வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியர்
செவ்வானம் செல்வதுபோற் செல்கின்றார்-எவ்வாயும்
ஆர்க்குங் கழலொலி யாங்கட் பாடாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு.

(பெரும்பொருள் விளக்கம்; புறத்திரட்டு-1236)

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே—வேற்றுப்புலத்து இருதிறத்தும் ஒற்றறிய இடமில்லையாம்படி ஒற்றரால் அறிந்த உளவு;

ஒருவ ரொருவ ருணராமற் சென்றாங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு.

(பழம்பாட்டு)

தம் மொற்றர் இனி யறிய இடமில்லாதாயிற்று. அவர் முற்றும் ஒற்றி முடிந்ததனால் பிறர் ஒற்ற இடமில்லையாயிற்று. அவரறியாவாறு தம் மொற்றர் மறைவில் ஒற்றிய திறப் பாட்டினால்.

வேய்ப்புற முற்றின் ஆகிய புறத்திறை—உளவறிந்த சூழலை வளைத்து அற்றநோக்கி அடங்கியிருத்தல்.

கரந்தியல் காட்டுத்தீப் போலப் பெரிதும்
பரந்துசெல் மள்ளர் பதிந்தார்—அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந்தவியும் போலுமிவ் வூர்.

(பதிதல்—அமைதியாகத் தங்குதல் அரந்தை—துன்பம்)

முற்றிய வூர் கொலை—வளைந்துகொண்டு நிரை மீட்கப் பொருவாரைக் கோறல்; (ஊர்—மீட்கப் பொரும் ஊரவர்க்கு ஆகு பெயர்)

சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்றாண்
டிகலுழந்த வல்வில் விளையோர்புண் டீரத்
துகளெழுங்கொல் பல்லான் றொழு.

(பழம்பாட்டு)

ஆகோள்—ஆனிரை கொள்ளுதல்;

....

.........புல்லா ரினநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென எண்ணிச்
சிலையின் மாற்றி யோனே.

(புறம்-257)

ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்.

(புறம்-259)

எனும் புறப்பாட்டடிகளும் நிரை கொண்டோர் நிலையே கூறும்.

பூசல் மாற்று—நிரைகொண்டு மீள்வோர் மீட்போரால் நேரும் பூசலை விலக்குதல்;

ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படரத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றார்

தம்பூசல் மாற்றி நிரைகொள்வான் றாக்கினார்
வெம்பூசன் மாற்றிய வில்.

(பழம்பாட்டு)

போர் இன்றி நிரைகொள்வதே நோக்காதலின், போர் என்னாது பூசல் எனப்பட்டது. பூசல்—போரின்முன் நிகழும் ஆர்ப்பு. போராய் வளருமுன் அதனைத் தடுத்து விலக்கல் வெட்சியார் வினையாதலின், பூசல் மாற்றெனப்பட்டது.

நோயின் றுய்த்தல்—பற்றிய நிரை வருந்தாவாறு கொண்டு செலுத்தல்;

....
முல்லை வகுந்திற் போகிப் புல்லருந்திக்
கான்யாற்றுத் தெண்ணீர் பருகிக் காமுறக்
கன்றுபா லருந்துபு சென்றன மாதோ
...........கவைஇய நிரையே.

(ஆசிரியமாலை-புறத்திரட்டு-1242)

நுவல் வழித்தோற்றம்—தம்மவர் புகழும்படி நிரைகொண்டார் மீளும் பொலிவு;

....
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென் ஐக்கு
உழையோர், தன்னினும் பெருஞ்சா யலரே.

(புறம்-262. மதுரைப் பேராலவாயார்)

தந்து நிறை—கொண்ட நிரையைத் தம திடத்துக் கொணர்ந்து நிறுத்தல்;

கயமலர் உண்கண்ணாய் காணாய் நின்ஐயர்,
அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்
நயனின் மொழியின் நரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன

(வேட்டுவவரி-சிலப்பதிகாரம்)

குளிறுகுரன் முரசங் கோட்டின் வெரூஉங்
களிறொடுதேர் காண்டலு மாற்றா—நளிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் புறங்கான
மெல்லாம் பெறுக விடம்.

(பழம்பாட்டு)

பாதீடு—நிரை கொண்டோர் தம்முட் பங்கிடுதல்;

நேரார் புலத்து நிரையைக் கவர்ந்தெதிர்ந்த
போரார் மறவர் புறங்கண்டு—பாராளும்
வேந்தனைமுன் வாழ்த்தினார் வெட்சி முனைஞரவன்
ஈந்தபொருட் பாதீடுவா ரின்று.

(பாதிடுதல்—பங்கிடுதல்)

உண்டாட்டு—வெட்சியோர் வெற்றி மகிழ்ச்சியால் உண்டு களித்தல்;

முட்காற் காரை முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கந் தார
நிறுத்த வாயந் தலைச்சென் றுண்டு
பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
வெச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே......................

(புறம்-258)

(கந்தாரம்—ஒருவகை மது. தலைச்சென்று—முன்சென்று)

கொடை—வென்று கொண்டோர், துடியன், கணி, பாணர் முதலிய இரவலர்க்கு ஈந்துவத்தல்;

இளமா எயிற்றி! இவைகாண் நின்ஐயர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர் தம்முன்றில் நிறைந்தன

(வேட்டுவவரி-சிலப்பதிகாரம்)

......................புல்லணற் காளை
யொருமுறை யுண்ணா வளவைப் பெருநிரை
யூர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்கும்.

(புறம்-258)

என வந்த ஈரேழ் வகையற்றாகும்—என்று இவ்வாறு எண்ணப் பட்ட பதினான்கு வகைப்படும் (வெட்சித் துறைகள்).

குறிப்பு:- செலவே, வேயே, மாற்றே என்பனவற்றுள் ஏகாரம் அசைநிலை; எண் ணேகார மெனினும் அமையும். வெட்சித்திணை யென்பது மேற்சூத்திரத்தி னின்றும் அவாய் நிலை எழுவா யாயிற்று.

(3)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் இருவகை வெட்சியார்க்கும் பொதுவில் அமைந்த துறைகள் பதினான்கு கூறுகின்றது.

(இ-ள்) இருவகை வெட்சிகளும் படையியங்கு அரவம் முதல் உயர்கொடையீறாகவுள்ள பதினான்கு துறைகளை உடையன வாகும் என்றவாறு.

படையியங்கு அரவம் என்பது ஆநிரை கவரச் செல்லும் படையின் ஆயத்த ஆரவாரம் ஆம். செல்லுங்காலத்து எழும் ஆரவாரம் எனின் அது களவுக்கு ஏற்றதன்று. ஆனிரை மீட்போர்க் காயின் படை செல்லுங்காலத்து எழும் ஆரவாரமாம். வஞ்சியில் இயங்கு படையரவம் என்றதும் காண்க.

பாக்கம்—சிற்றூர். பாக்கத்து விரிச்சியாவது இருவகைப் படைகளும் செல்லுங்காலத்துத் தத்தம் நாட்டைச் சார்ந்த சிற்றூர் களில் காற்றுவாக்கில் வரும் நற்சொல்லைக் கேட்டு மகிழ்தல். இதனால் இருபெருவேந்தரின் காவலர் முனைப்புலங்களுக்கு இடையில் பல சிற்றூர்கள் உண்டென்பது பெற்றாம். படைச் செலவு கண்ட சிற்றூரார் 'வென்று வருக' என்பது போலும் சொற்களால் ஊக்கப்படுத்துதலும் விரிச்சியாகக் கொள்க.

புடைகெடப் போகிய செலவு என்பதற்குப் ''பக்கத்து இடம் இல்லையாம்படி படை பரந்து செல்லுதல்'' எனப் பாரதியார் கூறும் உரையினும், ''நிரைகோடற்கு எழுந்தோர் ஆண்டு நின்று மீண்டு போய்ப் பற்றார் புலத்து ஒற்றர் உணராமற் பிற்றை ஞான்று சேறலும்'' என்று நச்சினார்க்கினியர் கூறும் உரை யினும், ''மாற்றரசர் பக்கத்தாராகித் தம்மாட்டு ஒற்றொடு நிற்பார் அறியாமல் போதல்'' என இளம்பூரணர் கூறும் உரையே சிறக்கும். மீண்டு வந்து பிற்றை ஞான்று சேறல் என நச்சினார்க்கினியர் கூறுவது, படைஞர்க்கு ஓர் குறைபாடதலே யன்றி முன்னரே ஒற்றர் நிலையறியாராயினர் எனும் குறைபாடும் உண்டாம். அவர் ''நிரை மீட்டற்கு எழுந்தோர் ஆண்டு ஒற்றப் படாமற் சேறலும்'' எனக் கூறியவாறே நிரைகோடற்கு எழுந் தோர்க்கும் கூறுவதே பொருந்தும்.

வேய்ப்புறம்—ஒற்றர்களால் கூறப்பட்ட இடம். புறத்திறை என்பது ஒற்றர்களால் ஆனிரை கவர்தற்கு வாய்ப்பான இடம் இது என்று கூறப்பட்ட பகைப்புல இடத்தின்கண் படை சூழ்ந் திருத்தல் ஆகும். முற்றின் ஆகிய என்பதற்கு ''நிரைகோடற்கு எழுந்தோர் வேயுரைத்தோரிடத்துச் செய்யும் சிறப்புகள் முடிந்த

பின்னர்'' என்பர். களவிற் செல்வார் வேயுரைத்தார்க்குச் சிறப்புகள் செய்து ஆரவாரித்தல் சிறவாததலானும் பின்னர்ப் 'பாதீடு' என வருதலானும் அது பொருந்தாது என்க.

பாதீடு—பாத்து இடுதல். அதாவது பகுத்துக் கொடுத்தல். படைஞர்க்கும் ஒற்றுரைத்தார்க்கும் பிறர்க்கும் அவரவர் தகுதிக் கேற்ப ஒன்றும் பலவுமாக ஆநிரைகளைப் பகுத்துக் கொடுத்தல்.

கொடை என்பது அரசன் பாணர் முதலியோர்க்குக் கொடுத்தலும், பங்கு பெற்ற வீரரும் தத்தம் குடிமக்களாகிய கிணைவன் துடியன் முதலியோர்க்குக் கொடுத்தலும் ஆம்.

படையியங்கரவம் முதல் உயர்கொடையீறாகக் கூறப்பட்டன துறைப்பெயர்கள்.

62. மறங்கடைக் கூட்டிய குடிநிலை[1] சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.

(4)

ஆ. மொ: இல.

59. The beating of drum stimulates the bravery of the soldiers and the worship of goddess of victory (korravai) belong to 'Puram' in addition.

[4]

பி. இ. நூ:

இல. வி. புறத். 6

....
துடிநிலை கொற்றவை நிலை அவையிரண்டும்
..........................உரித்தே.

இளம்பூரணர்

62. மறங்கடைக் கூட்டிய............ புறனே.

இதுவும் அது.

[இ-ள்] மறம் கடை கூட்டிய குடி நிலை—மறத்தொழில் முடித்தலையுடைய குடியினது நிலைமையைக் கூறலும், சிறந்த கொற்றவை நிலையும்—சிறந்த கொற்றவையது நிலைமையைக்

1. பாடம் : குடிநிலை கொடிநிலை என்றிருத்தல் வேண்டும் என்பர் பாரதியார்.

கூறலும், அ திணை புறன்—குறிஞ்சித்திணைப் புறனாகிய வெட்சித் திணையாம்.

குடிநிலை என்றதனால் மைந்தர்க்கும் மகளிர்க்கும் பொது வாதல் அறிக.

உதாரணம்

''யானை தாக்கினு மாவுமேற் செலினும்
நீல்நிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூழ்மகன் மாறா மறப்பூண் வாட்கை
வலிகூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலித்போத் தன்ன புல்லணற் காளை
செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
இல்லக் கள்ளின் தோப்பிப் பருகி
மல்லல் மன்றத்து மழவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைவி வெறுழ்த்தோள் ஓச்சி வலன்வளையூப்
பகல்மகிழ் தூங்குந் தூங்கா இருக்கை
முளிதலை களித்தவர் உள்ளுங் காதலில்
தனக்குமுகந் தேந்திய பசும்பொன் மண்டை
இவற்கி தென்னா ததற்குமன் றிசினே
கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோள் இன்றென் றறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே.''[1]

---

1. புல்லணற் காளை கேளா மன்னர் கடிபுலம்புக்கு நாள் ஆ தந்து இல்லக் கள்ளின் தோப்பி பருகி, மன்றத்துத் தண்ணுமை சிலைப்பத் தனக்கு முன் ஏந்திய பசும் பொன் மண்டையை இது இவற்கு என்னாது தனக்கும் அன்று என்று கூறிப் பூக்கோள் நாள் இன்றாகும் என்று தண்ணுமை முழக்கும் ஒலியைப் பாண கேட்டாயோ என முடிக்க.

''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று முயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.''[2]

(புறம்-279)

இவற்றுள் ஆண்பால் பற்றி வந்ததனை இல்லாண்முல்லையெனவும், பெண்பால் பற்றி வந்ததனை மூதின் முல்லையெனவும் கூறுப.

'கொற்றவை நிலை' என்றதனானே, குறிஞ்சித்திணைக்கு முருகவேளேயன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெற்றாம். (4)

உதாரணம்

''ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை—மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண் முருங்கத் தான்முந் துறும்.''[3]

(வெண்பா-வெட்சி-20)

---

2. நேற்றைய முன்னாள் நிகழ்ந்த போரில் இவள் அண்ணன் யானை எறிந்து போர்க்களத்தே பட்டான். நேற்று நடந்த போரில் இவள் கணவன் பட்டான். இன்றைப் போர்க்கு வேறு மகன் இல்லையாகவும் தன் ஒரே மகனை வேல் கைக்கொடுத்து வெண்துகில் உடுத்தி தலைக்குடுமையைஎண்ணெய் தடவிச் சீவிப் போர்க்களம் நோக்கிச் செல்க என்று சொல்லி விடுவாளானாள். இவள் மூதில் மகள் என்பது தரும். இவள் சிந்தை கெடுக. இவள் துணிவு வலியதாம்.

3. மீளியாகிய வீரன் எதிரியின் அரண் அழிய ஆநிரை கொள்ளக் கருதுவானாயின் ஆளிக் கொடியும் கிளியும் மான் ஊர்தியும் பேய்ப்படையும் உடைய கொற்றவையானவள் பகைவர் வலிகெடத் தான் முற்பட்டுச் செல்வாள்.

நச்சினார்க்கினியர்

59. மறங்கடைக்...........புறனே.

இவையும் வெட்சித்திணையா மென்கின்றது.

இதன் பொருள் :- மறங்கடைக் கூட்டிய துடிநிலை—போர்க் களத்து மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய துடிநிலையும், சிறந்த கொற்றவை நிலையும்—அத்தொழிற்குச் சிறந்த கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமை கூறுதலும், அகத்திணைப்புறனே—அவ்விரு வகை வெட்சிக்கும் புறனடையாம் என்றவாறு.

> ''நித்திலஞ்செய் பட்டமு நெற்றித் திலதமு
> மொத்திலங்க மெய்பூசி யோர்ந்துடீஇத்—தத்தந்
> துடியரோ டூர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
> குடிநிரை பாராட்டக் கொண்டு.''[1]

இஃது இருவகை வெட்சிக்கும் பொது; நிரைகொண்டோர்க்கும் மீட்டோர்க்குந் துடிகொட்டிச் சேறலொத்தலின்.

> ''அருமைத் தலைத்தரு மானிரையு ளையை
> யெருமைப் பலிகோ ளியைந்தா—ளரசனும்
> வேந்தன்மேற் செல்வான் விறல்வஞ்சி சூடானென்
> றியாந்தன்மேற் சீறாம லின்று.''[2]

இதனானே[3] வருகின்ற வஞ்சித்திணைக்குங் கொற்றவை நிலை காரணமாயிற்று; தோற்றோர்க்குக் கொற்றம் வேண்டியும்

---

1. மறவர் ஆநிரைகளைக் குளிப்பாட்டி நெற்றிப்பட்டமும் பொட்டும் ஒத்துவிளங்க அவ்வவற்றுக்கேற்ற உடைகளைப் போர்த்து உடுத்தித் தத்தம் குடியிலுள்ளார் பாராட்டும் படியாகச் செலுத்திக் கொண்டு ஊர்ப்புறத்தே தத்தம் துடியரோடு சூழ்ந்தார்கள்.

2. கொற்றவை அருளாமையால் நம் அரசன் பகைவேந்தன் மேல் படையெடுத்துச் செல்ல வஞ்சி மாலை சூடானாயினான் என்று நாம் அவள் மேல் சீறாமலிருத்தற்பொருட்டு இன்று அவள் அரிதாகத் தன்னிடம் தந்த ஆநிரைகளுள் எருமையைப் பலியாகக் கொள்ள இசைந்தாள்.

3. கொற்றவை எருமைப் பலி கொள்ளும் இப்பாடலில் வஞ்சி சூடான் என வந்ததனானே.

வென்றோர்க்கும் மேற்செல்லுங்காற் கொற்றம் வேண்டியும் வழிபடுவராதலின்.

இனிக் கொற்றவைநிலைப் பகுதியுட் சில வருமாறு:

''நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையு நல்கும்யாங் காணேங்கொன்—மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் றலை.''[4]

இஃது உயிர்ப்பலி. இது பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது.

''ஆடிப்பண் பாடி யளவின்றிக் கொற்றவை
பாடினி பாடற் படுத்துவந்தா—ணாடிய
தோளுழலை யாடுவோன் றோளினுந் தூக்கமைத்த
தாளுழலை யாடுவேன் றான்''[5]

இது குருதிப்பலி இது பொதுவகையான் இருவகை வெட்சிக்கும் வஞ்சிக்கும் பொது.

(4)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம்—4

மறங்கடைக் கூட்டிய.........புறனே.

கருத்து :- இது மேற்கூறிய வெட்சி விளக்கத்திலமையாத போர்த்துவக்கக் குறியாகும் வெட்சிவகை வேறு சில கூறுகின்றது.

---

4. பலர் உடலிற் பாய்ந்து எச்சில் மிக்க பகைவர் வாளின் வாயைத் தீண்டாத தன் உடற்குருதியானது தன் உடம்பைச் சாய்ப்பத் தன் தலையை வாளால் வெட்டிக் கொற்றவையின் அடியிடத்து வீழ்த்தினான்; அதனால் அவ்வீரனுக்கு அவன் உயிரோடு கை வில்லும் கொடுக்கும் அக்கொற்றவை; அதனை யாம் காணமாட்டேமோ? காண்பேம்.

5. பாடினியானவள் கொற்றவைக்கு ஆடியும் பண்பாடியும் அளவில்லாமல் பாடல்களைச் சேர்த்து மகிழ்ந்தாள்— நாடியாராய்ந்த தோள் என்னும் உழலை மரங்கொண்டு களத்தில் கொன்றோன் தோளைக் காட்டிலும் உயர்வமைத்துக் கூறப்படும் என் தாளாகிய உழலை மரத்தைக் கொற்றவைக்கு வெட்டிப்பலியிடுவேன்.

பொருள் :- மறங்கடைக் கூட்டிய—மிடல் மலிவால் அடல் விருப்பின் விளைந்த; துடிநிலை—முரசு பராவுதலும்; சிறந்த கொற்றவை நிலையும்—போருக்குச் சிறப்புரிமையுடைய கொற்றவைக் கடவுளைப் பராவுதலும், அத்திணைப் புறன்—(ஆகிய இவ்வெட்சி வகைகளும்) மேல் குறித்த குறிஞ்சித் திணைக்குப் புறனாகும்.

குறிப்பு :- 'மறங்கடைக் கூட்டிய' என அடை கொடுக்கப் பட்டது; இதுவும் 'மறனுடைய மரபாம்' புறத்திணை யெனற்கு. இதன்மேல் நடத்தக் கடவது போரேயாதலானும், போர்த் தொடக்கமே வெட்சித் திணையாதலானும், ஆகோளைப் போலவே முரசு பரவுதலும், தொடங்கும் போரில் வெற்றி விளைக்கும்படி கொற்றவை பராவுதலும், போர்த் தொடக்க நிகழ்ச்சிகளாமாதலானும். பின்னைய விரண்டும் முன்னையது போலவே வெட்சித் திணையாய்க் குறிஞ்சிக்குப் புறனா யமையும் வெற்றி இதிற் கூறப் பெற்றது. அகரச்சுட்டு 'புறன்' என்னுங் குறிப்பால் வெட்சிக்கு அகமாக முதற் சூத்திரத்திற் குறித்த குறிஞ்சியையே குறிக்கும். அகரச் சுட்டு வெட்சித் திணையைக் குறிப்பதாகக் கொண்டு, துடிநிலையும் கொற்றவை நிலையும் வெட்சிக்குப் புறனாகும் என்பர் நச்சினார்க்கினியர். வெட்சியே புறனாதலானும் பொதுவியல் பாடாண் முதலியவற்றைப் புறப்புற மென வகுத்த வெண்பாமாலை முதலிய பின்னூலாரும், 'துடி நிலை' 'கொற்றவை நிலை'களைப் புறப்புறமென்னாது வெட்சி யின் துறைகளாய் அடக்கினராதலானும், இச்சூத்திரத்தின் அகரச்சுட்டு வெட்சிக்கு அகமாகிய குறிஞ்சியையே குறிப்பது தேற்றம்.

முதற் சூத்திரத்தில், வெட்சியைக் கரவில் நிரைகவர்தல் என விளக்கியதால் அதிலமையாமல் வெட்சியின்பாற்பட்டுப் போர்த் துவக்கத்தில் நிகழ்பவற்றுள் இவ்விருபராவுதலின் இன்றியமை யாமை பற்றி இவற்றை விதந்து கூறல் வேண்டப்பட்டது. முன் அகப்பகுதியில் உரிப் பொருள் ஐந்தில் புணர்வும் புணர்த நிமித்தமும் குறிஞ்சியென விளக்கிய பின், அவ்விலக்கணத்தில் அமையாத 'கலந்த பொழுதை'யுங் 'காட்சியை'யும் பிற சில வற்றையும் புணர்வே போல் குறிஞ்சிப்பாற் படுமெனக் குறித்து வேறு சூத்திரம் கூறினது போலவே அக்குறிஞ்சியின் புறமான வெட்சி யிலக்கணத்திலடங்காத துடிநிலை, கொற்றவை நிலை களும் போர்த்துவக்கமாம் வெட்சியின் பாற்படுமென்பதை இச் சூத்திரத்தால் விளங்க வைத்தார்.

போரற்றபோது முழக்காதிருந்த முரசையெடுக்குங் கால், பராவி யெடுப்பது பண்டை வழக்காமென்பதை,

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை...

(புறம்-50)

என்னும் மோசிகீரனார் புறப்பாட்டாலும்,

தூத்துகி லுடுத்துத் தொடியுடைத் தடக்கைக்
கோத்தொழி லிளையர் பூப்பலி கொடுத்துச்
செம்பொன் நெல்லின் செங்கதிர் சூட்டி
வெண்டுகி லிட்ட விசய முரசம்

என்ற பெருங்கதை, உஞ்சைக் காண்டத்து 39ஆவது காதை 21—24 வரிகளின் குறிப்பினானும் அறிக. போர் விரும்பியோர் முதலில் வெற்றி கருதிக் கொற்றவையைப் பராவுதல்,

வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி
சிலம்புங் கழலும் புலம்பஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
....
அமரிளங் குமரியு மருரிளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே

என்னும் சிலப்பதிகார வேட்டுவ வரி 60—64, 73—74 வரிகளிலும், மற்றும் பழஞ்செய்யுள்களிலும் பரக்கக் காணலாம்.

இனி, 'துடிநிலை' யென்னுமிடத்துக் 'குடிநிலை' என இளம் பூரணர் கொண்ட பாடத்தின் பொருத்தம் புலப்படவில்லை. 'ஆகோள்', 'கொற்றவை நிலை'களைப் போலக் 'குடிநிலை' போர்த் தொடக்கத்திற்கு இன்றியமையாததன்று.

இவ்வியலின் பின் 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்' துறைகளெனக் கூறப்படுவன மூன்று. அவற்றுள், முதலது கொடிநிலை (புறத்திணை சூ. 33) அஃதொழிந்த மற்றிரண்டும்

புறத்திணைத் துறைகளாக முன் வேறு சூத்திரங்களில் விளக்கப் பெற்றுள்ளன. அவற்றோடு அவ்வாறு புறத்திணை எதற்கும் துறையாக யாண்டும் விளக்கவோ சுட்டவோ பெறாத கொடி நிலையை வாளாகூட்டி ஒரு பரிசா யெண்ணுதல் அமைவுடைத் தன்று. புறத்துறைகளாக வேறு சூத்திரங்களில் விளக்கப்படும் இரண்டனொடு பின் சூத்திரத்தில் கொடிநிலை வாளா கூட்டிக் கூறப்பெறுதலால், அவையொப்பக் கொடிநிலையும் புறத்துறை யாம் பரிசு பிறிதிடத்தில் சுட்டப்பெறுதல் முறையாகும். அதனா லும், கொடியெடுப்பு போர்த் துவக்கத்தில் நிகழ்வதொன்றாத லானும், கொடி நிலையைக் கொற்றவை நிலையோடு வெட்சி வகையாய் இதில் தொல்காப்பியர் கூறினார் எனக் கொள்ளுதலே சிறக்கும். அக்கொடி நிலைப் பாடம், நாளடைவில் ஏடெழுதுவோ ரால் குடிநிலையாக மாறி இளம்பூரணர் கண்டிருத்தல் வேண்டும், அப்பாடம் சிறவாமையால் அதனைப் பொருள் பொருந்தப் போர்க்குரிய துடிநிலையாக்கி நச்சினார்க்கினியர் பாடங் கொண்டதாகக் கருதற்கு இடனுளது. அன்றியும், 'துடி' குறை சுட்டும் பாலைநிலப் பறையே யாதலானும், எல்லா நிலத்துக்கும் பொதுவான போர்ப்பெரு முரசுக்குப் பெயரன்றாதலானும், இங்குத் 'துடிநிலை'ப் பாடத்தினும் 'கொடிநிலைப்' பாடமே சிறப்புடைத்தாதல் மலையிலக்காம் ஆகவே, இளம்பூரணரின் 'குடிநிலை' நச்சினார்க்கினியரின் 'துடிநிலை' எனுமிரு பாடங் களையும் கொள்ளாது இதில் 'கொடி நிலையே' பாடமாகக் கொள்ளின், பின் 'கடவுள் வாழ்த்தொடு கண்ணியவரும்' எனத் தொகுத்த மூன்றனுள் மற்றவற்றோடு கொடிநிலையைக் கூட்டிச் கூறிய பெற்றி இனிது விளங்கும்.

போர்க்குமுன் கொடியெடுக்கும் மரபுண்மையை,

> புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங்
> காலைக்
> கொள்ளும் கொடியெடுத்துக் கொற்றவையும்
> கொடு மரமுன் செல்லும் போலும்

என்னும் சிலப்பதிகார வேட்டுவவரி அடிகளாலும் அறிக.

(4)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் வெட்சிக்கும் பிற திணைகளுக்கும் வருதற்குரிய குடிநிலை கொற்றவை நிலைகளைப் பொதுநிலையில் கூறு கின்றது. அடுத்த சூத்திரத்துத் துறைகள் பலவும் பொதுத்துறை களாய் அமைதல் காணலாம்.

(இ-ள்) வீர உணர்வை வெற்றியில் முடிவு பெறுமாறு தூண்டிய குடிநிலையும் வெற்றி குறித்து வழிபடுதற்குச் சிறந்த கொற்றவை நிலையும் வெட்சித்திணைக்குப் புறனடையாற் கொள்ளப்படுவனவாம்.

இயங்குபடையரவம் முதலியன வெட்சிக்கே சிறந்து துறைகளாதலினாலும் துடிநிலையும் கொற்றவை நிலையும் பிறதிணைகளிலும் வருதலினாலும் தனித்தனிச் சூத்திரங்களிற் கூறப்பட்டன. அதனால் இச்சூத்திரம் புறனடைச் சூத்திரமாம். குடிநிலை என்பதைத் துடிநிலை என நச்சினார்க்கினியரும் கொடிநிலை எனப் பாரதியாரும் பாடமாகக் கொண்டனர். குடிநிலை என்பது குடிமக்கள் நிலை எனப்படும். குடிமக்களாவார் தாம் ஒரு குடியினை அண்டி வாழ்பவர். பாணர், பறையர், கடம்பர், துடியர் என்பவர் வீரக்குடியினரால் போற்றப்படுபவர். அதனால் அவர்கள் குடிமக்கள் எனப்படுவர்.

> பாணன் பறையன் கடம்பன் துடியன் என்று
> இந்நான் கல்லது குடியும் இல்லை
>
> (புறம்)

என்பது பழம் பாடல். எனவே மறங்கடைக் கூட்டுபவர் அந்நால் வருமாதலின் அவரைக் குடிநிலை என ஒரு பெயரில் ஒரு துறையில் அடக்கினார் ஆசிரியர். எனவே துடிநிலை என ஒருவரை மட்டில் கொள்வதினும் யாவரையும் குறிக்கும் குடிநிலைப் பாடமே சிறக்கும் என்னலாம்.

'கொடிநிலை கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்' (27) எனப் பின்னர்க் கூறலின் கொடிநிலைப் பாடம் தேவையில்லை. தேவர் கொடியைப் போலவே அரசர் கொடியும் கடவுள் நிலையில் வைத்து வணங்கப்படும் வழக்கு இன்றும் உண்டன்றோ?

63. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்

தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்[1]
சீர்த்த[2] மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று[3] துறைத்தே.

(5)

ஆ. மொ: இல.

60. Kanthal, (gloriosa superba) the dance, inthe guise of 'Velan' who Knows the duties due to God; the songs of flowers, said to be 'Ponthai' 'Vembu' and 'Ar' worn by very great army (to be distinguished by the kings); the 'Valli' dance; the anklet dance of soldiers in appreciation of the valour of a young soldier; the ceremony in which the king who will never withdraw in the battle is connected with the 'unna' tree; the theme of 'Puvai' which sings the great glory of 'Mayon'; the defeat inflicted upon the enemy in the great battle; the recovery of the cows; the singing of the praise of the king; and taking vow on his behalf by virtue of his perseverance of the highest order-these belong to the theme of 'Karandhai'; the two varities of theme concerning youth—resisting the vanguard of the army and falling down in the battle after killing the enemy in the war of swords; congratulafing the young

---

பாடம் : 1. நடுகல்
2. சீர்த்தகு
3. மூவேழ்

joyfully with the beating of drums when he withstood the battle swords and came out successfully; and including the six stages for erecting a stone in honour of a hero which are the selection of the stone, the beginning ceremony of chiselling, the immersing of the stone in the water, erecting it engraving his name and fame on the stone and paying homage to the stone-these are twenty one said to be 'Puram'

(5)

பி. இ. நூ:

பு. வெ. மா. 2.

கதமலி கரந்தை கரந்தை யரவம்
அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல் போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே
பிள்ளை யாட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியல் மரபே மிகுகுடி நிலையென
அருங்கலை யுணர்ந்தோர் அவைபதின் மூன்றும்
கரந்தையும் கரந்தைத் துறையும் என்ப.

வீர. 100

ஓடாப் படையாண்மை உன்னம் நிரை மீட்டல்
மன்னர்வெற்றி
கோடாத் திறங்கூறல் தன்திறம் கூறுதல்
கொற்றப் பொற்றார்
சூடாப் பொலிகுதல் ஆரமர் ஒட்டல் துகளறுதல்
தேடாப் பொறித்தல் கரந்தைத் திறம் பற்றும்
தேர்ந்தறியே.

இல. வி. 6.

நிரைகோள் கேட்டுக் குரைகழல் அரசன்
விரைசெலல் மறவரை மீட்கெனப் பணித்தல்
படையியங் கரவம் பறவாப்புள் தெளிதல்
நடைவயின் சேறல் நன்குணர் உசாஅ
புறத்திறை அதனொடு திறப்படப் பொருதல்

புண்ணொடு வருதல் போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவு
பிள்ளை யாட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியல் மலிபொடு மிகுகுடி நிலையே
ஆபெயர்த்துத் தருதலொடு அருஞ்சமர் விலக்கல்
நலிவின் றுய்த்தல் நுண்ணுவழித் தோற்றம்
நிறைத்தல் பாதீடு உண்டாட்டுக் கொடையொடு
துடிநிலை கொற்றவை நிலை அவை யிரண்டும்
கூட்டுதல் உறுத்தல் மீட்டனர் கோடல்
எழுதலைப் பெய்த இருபதிற் றுடைத்தே.

இல. வி 21.

வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
துன்னருந் துப்பின் தொடுகழல் மன்னனை
உன்னம் சேர்த்திய உன்ன நிலையும்
....
களத்திடை வீழ்ந்தோர்க்குக் கல்கண் டெடுத்தலும்
கற்கோள் நிலையும் கல்நீர்ப் படுத்தலும்
மற்றவை நிறைந்த அத்துறைப் பகுதியும்
கல்நாட் டுறுதலும் கல்முறை பழிச்சலும்......

இளம்பூரணர்

63. வெறியறி சிறப்பின்......எழு மூன்று துறைத்தே.

வேலன் முதலாக வெட்சித்திணைக்குரிய துறை கூறினார்; இனி அதற்கு மாறாகிய கரந்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. அதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின் கண் நிகழ்வதாகலின், வெட்சிப் பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று.

(இ-ள்) வெறியாட்டயர்ந்த காந்தளும் என்பது முதலாகத் தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று துறையும் காட்சி முதலாக வாழ்த்தல் ஈறாகக் கல்லொடு புணர்த்துக் கூறும் துறையொடுங் கூடச் சொல்லப்பட்ட இருபத்தொரு துறைத்து.

வெறி அறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த காந்தளும்—வெறி ஆடுதலை அறியும் சிறப்பினை யுடைய வெவ்விய வாயினையுடைய வேலன் வெறியாடிய காந்தளும்.

காந்த ளென்பதனை மடலேறுதற்குப் பெயராகக் கூறுவா ருளராகலின், வெறியாட்டு அயர்ந்த காந்தளென்றார். அன்றியும், காந்தள் என்பது மடலேறுதலான் அத்துணை ஆற்றாளாகிய பெண்பால் மாட்டு நிகழும் வெறி 'காந்தள்' எனவும் பெயராம். இதனானே காமவேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் பக்க மாகிய வெறியும் அந்நிலத்துள்ளார் வென்றி வேண்டி ஆடும் வெறியும் கொள்ளப்படும்.[1] இவ்வெறி இந்நிலத்திற்குச் சிறந்தமை அறிக. இது[2] வெட்சிப் பின்னர் வைத்தார், பெரும் பான்மையும் குறிஞ்சி பற்றி நிகழுமாகலின்.

உதாரணம்

''வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா
ஐய நனிநீங்க ஆடினாள்—மையல்
அயன்மனைப் பெண்டிரோடு அன்னைசொல் அஞ்சி
வியன்மனையுள் ஆடும் வெறி.''[3]

(வெண்பா. இருபாற்பெருந்திணை 10)

இது காமவேட்கை தோற்றாமல் தலைமகள் தானே முருகு மேல் நிறீஇ ஆடியது. வென்றி வேண்டியாடுதற்குச் செய்யுள் சிலப்பதிகாரத்து வேட்டுவவரியுட் கண்டு கொள்க. இனி வேலன் தானே ஆடியதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க.

---

1. காந்தள் என்பது ஆடவன் மடலேறுதற்கும், மடலேறுத லாற்றாளாகிய தலைவி காம வேட்கையால் வெறியாடு தற்கும் பெயர். வென்றி வேண்டி ஊரினர் ஆடுதற்கும் பெயர். இங்குக் கூறப்பட்ட காந்தள் வெற்றி வேண்டி வேலன் ஆடும் வெறியாகிய காந்தளும் தலைவி காம வேட்கையால் வெளிப்போந்து ஆடும் காந்தளும் என்க.
2. இது—காந்தளை
3. தலைவியானவள் நெட்டுயிர்த்து வெற்பனாகிய தலை வன் அருளை நினைந்து அவன் வருவனோமாட்டானோ எனும் ஐயம் நீங்க அயல் மனைப் பெண்டிரும் அன்னை யும் சொல்லும் சொல்லுக்கு அஞ்சி மனைக்கண் வெறி யாடுவாள்.

உறுபகை வேந்து இடைதெரிதல் வேண்டி ஏந்து புகழ் போந்தை வேம்பு ஆர் என வரும் மாபெருந் தானையர் மலைந்த பூவும்—மிக்க பகை வேந்தன் வேறுபாடு தெரிதல் வேண்டி உயர்ந்த புகழையுடைய போந்தையெனவும் வேம்பெனவும் ஆரெனவும் தமிழ்நாட்டு நிலவேந்தர் சூடிய பூவும்.

உதாரணம்

''குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்—புடைதிகழுந்
தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரெதிரிற் போந்தையாம் பூ.[4]

(வெண்பா—பொது—1)

இது சேரன் பூ.

''தொடியணிதோள் ஆடவர் தும்பை புனையக்
கொடி யணிதேர் கூட்டணங்கும் போரின்—முடியணியும்
காத்தல் சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி
ஏத்தல் சால் வேம்பின் இணர்.''[5]

(வெண்பா. பொது. 2)

இது பாண்டியன் பூ.

''கொல்களிறு ஊர்வர் கொலைமலி வாள்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேலிளைஞர்—மல்குங்
கலங்கல் ஒலிபுனல் காவிரி நாடன்
அலங்கல் அமரழுவத் தார்.''[6]

(வெண்பா. பொது. 9)

இது சோழன் பூ.

நிரைகோள் கேட்டவழி நெடுநிலவேந்தரும் கதுமென எழுவ ராதலின், நிரை மீட்டலின்கண் பூப் புகழப்பட்டது.

வாடா வள்ளி— வாடுதல் இல்லாத வள்ளி.

---

4. வானவன் போர்எதிரின் தண்டுவளை சூடான்;போந்தை யாம் பூ புடைதிகழும் என்க.

5. நெடுவழுதி ஆடவர் தும்பை புனைய (தான்), வேம்பின் இணர் முடியணியும் என்க.

6. காவிரி நாடன் அழுவத்து (போரில்) ஆர் (ஆத்தி) அலங்கல் சூடவே வாள் மறவர் களிறு ஊர்வர்; இளைஞர் கழல் வீக்குவர் என்க.

'வள்ளி' என்பது ஒரு கூத்து; அஃது அந்நிலத்தின் நிகழ்தலின் 'வாடா வள்ளி'[7] என்றார். உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க.

வயவர் ஏத்திய ஓடா கழல்நிலை—வீரராற் புகழப்பட்ட கெடாத கழல்நிலை.

உதாரணம்

''வாள் அமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேளலார் நீக்கிய கிண்கிணிக்கால்—காளை
கலங்கழல் வாயில் கடுத்தீற்றி அற்றால்
பொலங்கழல் கான்மேல் புனைவு.''[8]

(வெண்பா-பொது-7)

ஓடா உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்—ஓடாத வெகுண்ட வேந்தரைச் சாத்திய உன்ன நிலையும்.

'உன்னம்' என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடுவருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும்[9] நிற்கும்.

உதாரணம்

''துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க—மன்னரும்
ஈடெலாந் தாங்கி இகலவிந்தார் நீயுநின்
கோடெலாம் உன்னங் குழை.''[10]

(வெண்பா-பொது-4)

பிறவும் நிமித்தமாகி வருவன வெல்லாவற்றிற்கும் இதுவே துறையாகக் கொள்க.

---

7. வாடாவள்ளி வாடும் வள்ளிக் கொடியின் வேறுபட்டது. கூத்து பாயாவேங்கை போல வெளிப்படை.

8. காளை கால் மேல் கழல் புனைவு அழல் வாயில் நச்சு தீற்றியது போலாம் என்க.

9. குழைந்தும்—தளிர்த்தும்

10. உன்னமே தொடு கழலான் துப்பு எதிர்ந்து வணங்கார் முரண் முருங்க இகல் அவிந்தார். நீயும் கோடு எலாம் குழைவாயாக என்க.

மாயோன்மேய மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ் பூவை நிலையும்—மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய கெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவை நிலையைக் கூறுதலும்.

பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப் புகழ்தல். நாடெல்லை காடாதலின், அக்காட்டிடைச் செல்வோர் அப்பூவையைக் கண்டு கூறுதல். உன்னம் கண்டு கூறினார் போல இதுவும் ஓர் வழக்கு.[11]

உதாரணம்

''பூவை விரியும் புதுமலரின் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்.''[12]

(வெண்பா—பாடாண்-4)

இஃது உரையன்றென்பார், மாயோன் முதலாகிய தேவர் களோடு உவமித்தலே பூவைநிலை யென்ப.

உதாரணம்

''இந்திரன் என்னின் இரண்டே கண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னின் பிறைஇல்லை—அந்தரத்தின்
கோழியான் என்னின் முகன்ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணரற் பாற்று.''[13]

(முத்தொள்ளாயிரம்)

வேறு கடவுளரை நோக்கி உவமித்து வருபவையெல்லாம் பூவை நிலையாகக் கொள்க. என்னை?

---

11. ஓர் வழக்கு—ஓர் உலகியல்.

12. பூங்கழலோய்! காளை நிறத்தொடு நேர் தருதலான் பூவையின் விரிந்துள்ள மலர்களைப்போல எம்மலர்கள் விழுமியன? யாம் உணரேம்; நீ கூறுக என்க.

13. கோதையை (சேரனை) இந்திரன் என்னின் கண் ஆயிரம் இல்லை இரண்டேயுள்ளன. சிவன் எனின் தலை யில் பிறை இல்லை. முருகன் எனின் ஆறுமுகம் இல்லை. ஆதலால் திருமாலே என்று உணர்தல் வேண்டும்.

''ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்விளையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியான் கண்மூன்று இரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்.''[14]

(முத்தொள்ளாயிரம்)

என முத்தொள்ளாயிரத்து வந்தவாறு காண்க. பிறவும் அன்ன. பூவை நிலையும் அந்நிலத்தின் தெய்வமாகிய கருப்பொருளாதலின், அதன்மேல் வந்தது.[15]

ஆர் அமர் ஓட்டலும்—அரிய அமரைப் போக்குதலும்.

உதாரணம்

''புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமும் மானமுந் தேசும்—ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து.''

(வெண்பா-கரந்தை-4)

ஆ பெயர்த்துத்தருதல் நிரை மீட்டல்.

உதாரணம்

''அழுங்கல்நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண்டு அற்றால்—செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கொண்டார்
நேரார்கைக் கொண்ட நிரை.''

(வெண்பா-கரந்தை-1)

எனவும்,

''ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயராது
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வில் மறவர் ஒடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் உள்ளம்

---

14. விடையூர்திச் சிவனும் சேரனும் ஆற்றலும் முயற்சியும் ஒத்திருப்பினும் மழுவுடைய சிவனுக்குக் கண் மூன்று; சேரனுக்குக் கண் இரண்டே. ஆதலின் ஒவ்வார் என்க.

25. பூவை நிலையும், பூவைப் பூவானது குறிஞ்சி நிலத்தின் தெய்வத்தன்மையோடு கூடிய கருப்பொருளாதலின் வெட்சித்திணையிற் கரந்தைமேல் வந்தது.

முருகுமெய்ப்பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங்கு ஒள்வாள் புனைகழ லோயே.''[16]

(புறம்-259)

எனவும் வரும்.

சீர் சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தலும்—சீர்மை பொருந்திய வேந்தனது மிகுதியை எடுத்துக் கூறலும்.

உதாரணம்

''அங்கையுள் நெல்லி அதன்பயம் ஆதலால்
கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த்—தங்கிச்
செயிர் வழங்கும் வாளமருள் சென்றடையார் வேல்வாய்
உயிர் வழங்கும் வாழ்க்கை உறும்.''[17]

(வெண்பா-கரந்தை-13)

இது மற்றுள்ள திணைக்கும் பொது.

தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்—தன் மாட்டுள்ள போர்வலி முயற்சியினாலே கொடுஞ்சொற்களைத் தன்னொடு புணர்த்திக் கூறுதலும்.

உதாரணம்

''ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவேம் யாமாக—நாளுங்

---

16. பொருள்: புனைகழலோய்! வெட்சி மறவர் தாம் கவர்ந்த பெருநிரை போகவும் அவற்றின் பின் தாம் போகாமல் இலை செறிந்த பெரிய காட்டில் மறைந்திருந்த மறை விடம் இதுகாண்; ஆதலின் அவரை வென்றல்லது ஆநிரை மீட்க மேற்செல்லாதே. (ஆவின் துள்ளலுக்குத் தெய்வம் ஏறிய புலைத்தியின் துள்ளல் உவமை)

17. கொங்கலர் தாரான் குடைக்கீழ்த் தங்கி அமருள் அடையார் வேல்வாய் உயிர்வழங்கும் வாழ்க்கையானது அகங்கை நெல்லிக்கனி போலத் தெளிவான பயனுடையது ஆதலின் பொருந்துவதாகும்.

கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்
பிழிமது உண்பார் பிறர்.''[18]

(வெண்பா-கரந்தை-11)

இது மற்றுள்ள திணைக்கும் பொது.

வரு தார் தாங்கல் வாள் வாய்த்துக் கவிழ்தல் என்று இரு வகைப்பட்ட பிள்ளை நிலையும்—மேல் வருகின்ற கொடிப்படையைத் தாங்கலும் வாள் வாய்த்தலாற் படுதலும் என இரண்டு வகைப்பட்ட பிள்ளை நிலையும்.

உதாரணம்

''பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாள்எறிந்து
கொள்ளைகொள் ஆயந் தலைக்கொண்டார்—எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றான் உளன்.''[19]

(வெண்பா-கரந்தை-7)

இது வருதார் தாங்கல்.

''உரைப்பின் அதுவியப்போ ஒன்னார்கைக் கொண்ட
நிரைப்பின் நெடுந்தகை சென்றான்—புரைப்பின்
றுளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கொளவே
களப்பட்டான் சென்றான் கரந்து.''[20]

(வெண்பா-கரந்தை-6)

இது வாள் வாய்த்துக் கவிழ்தல்.

வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும்—வாளான் மாறுபட்டு எழுந்தவனை மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டும்.

---

18. கழல் வெய்யோய்! யாம் ஆளமர் வெள்ளம்வரின் வாளொடு வைகுவேம்; பிறர் நாளும் பிழிமகிழ் (கள்) உண்பர் என்க.

19. பிணம் பிறங்க ஆள் எறிந்து கொள்ளை ஆயம் கொண்டாரை எள்ளிப் பொருது அழிந்தவர் மீளவும் தான் ஒருவன் மட்டும் மீளானாய் வரும் படையைத் தாங்க நின்றான் உளன் என்க.

20. ஒள்வாள் கொளக் களப்பட்டான் என்க.

உதாரணம்

''மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய எஃகங் குடர்மாலை—சூட்டியபின்
மாறு இரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேல்திரிய விம்முந் துடி.''[21]

(வெண்பா-கரந்தை-9)

காட்சி— (போர்க்களத்துப் பட்ட வீரரைக் கல்நிறுத்தற் பொருட்டுக் கற்) காண்டல்.

உதாரணம்

''மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப்—பகையணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல்.''

(வெண்பா-பொது-8)

கல்கோள்[22]- (அவ்வாறு காணப்பட்ட) கல்லைக் கைக் கோடல்.

உதாரணம்

''பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப—மேவார்
அழன்மறம் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல்.''

(வெண்பா-பொது-9)

நீர்ப்படை— (அக்கல்லை) நீர்ப்படுத்தல்.

உதாரணம்

''காடு கனற்றக் கதிரோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மைக் குளிர்கொள்ளப்—பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத்து உய்த்திட்டார் கல்.''

(வெண்பா-பொது-10)

நடுதல்— (அக்கல்லை) நடுதல்.

---

21. மறவர் மார்பு திறந்து கூட்டிய வேலுக்குக் குடர் மாலை சூட்டியபின் அதைக் கொண்டு ஆடுவோன் வேலைத் திரித்து ஆடவே துடி விம்மும் என்க.

22. கல் கோள் என்பது கால் கோள் என நின்றது என்பது இளம். கருத்து.

உதாரணம்

''மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்[23]
பீலி அணிந்து பெயர்பொறித்து—வேலமருள்
ஆண்டக நின்ற அமர்வெய்யோற்கு இஃதென்று
காண்டக நாட்டினார் கல்.''

(வெண்பா-பொது-12)

சீர் தகு மரபின் பெரும்படை—மிகவுந் தக்க மரபினையுடைய பெரும் படையினும்.[24]

அஃதாவது, நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ்செய்தல். அஃது இற்கொண்டு புகுதலென[25] உரைத்த துறை. [கோட்டம்-கோயில். படை—படைத்தல்]

உதாரணம்

''வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி அன்ன குரிசில்கல்—ஆட்கடிந்து
விற்கொண்ட வென்றி வியன்மறவர் எல்லாரும்
இற்கொண்டு புக்கார் இயைந்து.''[26]

வாழ்த்து— (அக்கல்லைப்) பழிச்சுதல்.

உதாரணம்

''அடும்புகழ் பாடி அழுதது ஆற்றாது
இடும்பையுள் வைகி இருந்த—கடும்பொடு
கைவண் குரிசில்கல் கைதொழுது செல்பாண
தெய்வமாய் நின்றான திசைக்கு.''[27]

(வெண்பா-பொது-13)

---

23. மட்டு உகுத்து—கள் சொரிந்து.
24. பெரும்படை—பெரிதாகப் படுத்தல்—அது கோயில் அமைத்தலை உணர்த்திற்று.
25. இற்கொண்டு புகுதல்—கோயிலிற் கொண்டு போய் வைத்தல்.
26. கோட்புலியன்ன குரிசில் கல்லை புகா (உணவு) ஊட்டி மணியியம்ப மறவர் எல்லோரும் இற்கொண்டு புக்கார் என்க.
27. பாண! பாடி ஆற்றாது இடும்பையுள் வைகியிருந்த கடும் பொடு (சுற்றமொடு) கைவல் குரிசில் தெய்வமாய் நின்றான் கல் தொழுது செல் என்க.

இவையெல்லாம் கரந்தைக்கு உரித்தாக ஓதப்பட்டனவேனும், ''ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிப'' (பொருளியல்—28) என்றதனான், மறத் துறை ஏழிற்கும்[28] கொள்ளப்படும். ஈண்டு ஓதப்பட்டஇருபத்தொரு துறையினும் நிரைமீட்டற் பொருண்மைத்தாகிக் கரந்தையென ஓதப்பட்டன ஏழாயின.[29] கரந்தையாயினவாறு என்னையெனின் வெறியாட்டும் வள்ளிக்கூத்தும் மலைசார்ந்த இடத்து வழங்கு தலின், வந்த நிலத்திற்கு உரிய பொருளாகி வந்தன. பூவை நிலையும் அந்நிலத்தைச் சார்ந்து வருவதோர் தெய்வமாதலின், அந்நிலத்தின் கருப்பொருளாகி வந்தது. கற்கோள்நிலை யாறும் உன்ன நிலையும் முடியுடைவேந்தர் சூடும் பூவும் கழல்நிலையும் ஏனையவற்றிற்கும்[30] பொதுவாகலான் எடுத்துக்கொண்டகண்ணே கூறுதல்[31] இலக்கணமாதலின் ஈண்டு[32] ஓதப்பட்டதென உணர்க. பன்னிரு படலத்துள் கரந்தைக்கண் புண்ணொடுவருதல் முதலாக வேறுபடச்[33] சில துறை கூறினாராகலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறையாகலின், அஃது இவர்க்கு மாறாகக்[34] கூறலும் மயங்கக் கூறலுமாம்.[35] ஏனையவும் இவ்வாறு மயங்கக் கூறலும் குன்றக் கூறலும் மிகைபடக் கூறலும் ஆயவாறு எடுத்துக்காட்டின் பெருகுமாதலான், உய்த்துணர்ந்து கண்டு கொள்க. இத்துணை யும் கூறப்பட்டது வெட்சித்திணை.[36]

(5)

---

28. ஏழ்—வெட்சி முதல் படாண் வரையுள்ள ஏழ்திணைகள்.

29. ஆரமர் ஓட்டல் முதல் பிள்ளையாட்டு வரையும் உள்ளன கரந்தைக்குரியன என்பதற்கேற்பப் பிள்ளையாட்டின் பின்னர் 'அனைக்குரி மரபின் கரந்தை' என்பதைக் கூட்டுதல் வேண்டும் நச். அவ்வாறே கூட்டுவர்.

30. ஏனையவற்றுக்கும்—வஞ்சி முதலியவற்றுக்கும்.

31. எடுத்துக் கொண்ட கண்ணே கூறுதல்—தொடக்கத்தில் கூறுதல்.

32. முதல் திணையாகிய வெட்சித் திணையில்.

33. வேறுபட— வெற்றிச் செயலுக்கு மாறுபட.

34. இவர்க்கு மாறாகக் கூறுதல்—கரந்தையார்க்குப் பொருந் தாததாகக் கூறுதல்.

35. மயங்கக் கூறுதல்— புண்ணொடுவருதல் வெற்றிக்கறி குறியா தோல்வியா என மயங்குமாறு கூறுதல்.

36. கரந்தையும் வெட்சியாதலின் வெட்சித்திணை என்றார்.

நச்சினார்க்கினியர்

60. வெறியறி சிறப்பின்.........துறைத்தே.

இது முன் இருபெரு வேந்தர்க்கும் போர் செயத் தொடங்குதற்குரிய பொதுநிலைமை கூறிய அதிகாரத்தானே புறத்திணைக்கெல்லாம் பொதுவாகிய வழுவேழும்[1] உணர்த்துதல் நுதலிற்று.

இவை வேத்தியலின் வழீஇத் தன்னுறு தொழிலாய் வருதலின் வழுவாயின. இவை அகத்திற்கும் புறத்திற்கும் உரியவாய் வருவனவும் புறத்திற்கெல்லாம் பொதுவாய் வருவனவுமாதலிற் பொதுவியலுமாயின.

இதன் பொருள்:- வெறி அறி சிறப்பின்—தெய்வத்திற்குச் செய்யுங் கடன்களை அறியுஞ் சிறப்பினையும், வெவ்வாய் வேலன்—உயிர்க்கொலை கூறலின் வெவ்வாயினையும் உடையனாகிய வேலன், வெறியாட்டு அயர்ந்த காந்தளும் தெய்வமேறியாடுதலைச் செய்த காந்தளும்:

செவ்வேள் வேலைத் தான் ஏந்தி நிற்றலின் 'வேலன்' என்றார். காந்தள் சூடி ஆடுதலிற் 'காந்தள்' என்றார். வேலனைக் கூறினமையிற் கணிகாரிகையும்[2] கொள்க. காந்தளையுடைமையானும், பனந்தோடுடைமையானும், மகளிரை வருத்துதலானும் 'வேலன் வெறியாட்டயர்ந்த' என்றதனானும், வேலன் ஆடுதலே பெரும்பான்மை; ஒழிந்தோர்[3] ஆடுதல் சிறுபான்மையென்றுணர்க.

உதாரணம்

''அமரகத்துத் தன்னை மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந் தாடுங்—குமரன்முன்
கார்க்காடு நாறுங் களனிழைத்துக் காரிகையா
ரேர்க்காடுங் காளை யிவன்.''[4]

---

1. வெட்சி முதல் பாடாண் இறுவாய் உள்ள ஏழுதிணைகளிலும் வேந்தன் ஆணையின்றி வீரர் தன்னுறு தொழிலால் நிகழ்த்துவனவற்றை வழு ஏழு என்றார்.
2. கணி காரிகை—முன் பின் விளைவைக் கணித்துக் கூறும் காரிகை. அவள் வேலனொடு ஆடுபவள்.
3. ஒழிந்தோர்—கணி காரிகையரை ஒழிந்த பிறர்.
4. குமரன் முன்னே கார்காலக் காடு போலக் களன் அமைத்துக் காரிகையார் ஆடும் அழகுக்கு ஏற்ப ஆடும் காளையாகிய இவன் போர்க்களத்துத் தன்னை மறந்து ஆடுதல் போலவே இவ்வெறிக் களத்தும் தமர் முன்னே ஆடுவானானான்.

இது சிறப்பறியா மகளிராடுதலிற் புறனாயிற்று.[5] வேலனாடுதல் அகத்திணைக்குச் சிறந்தது.

உதாரணம்

''அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதருங்
கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்ல
லிதுவென வறியா மறுவரற் பொழுதிற்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவ ளிவளென
முதுவாய்ப் பெண்டி ரதுவாய்க் கூறக்
களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநா
ளார நாற வருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி
னொளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவல ரறியாமைத்
தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
வின்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனெ னல்லனோ யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் மேலற் குலந்தமை கண்டே.''[6]

(அகம்-22)

'பனிவரை நிவந்த' என்னும் அகப்பாட்டும் அது.

---

5. சிறப்பு அறியா மகளிர்— முருகபூசை முறைகளை அறியாத மகளிர்.

6. கான்கெழுநாடன் (தலைவன்) மார்பு வருத்தியநோய் இதுவாம் என அறியாத காலத்தில் நெடுவேளைப் போற்ற நோய் தணிவாள் என முதுவாய்ப் பெண்டிர் அப்படிக்கூற, வெறியாடு களம் இழைத்துக் கண்ணி சூட்டி, நகர் எதிர் ஒலிக்கப் பாடிப் பலி கொடுத்துத் தினையைக் குருதியொடு தூவி முருகனை ஆற்றுப் படுத்த வெறியாடிய நடு இரவில், பூச்சூடி, களிறாகிய இரைவேட்டு ஒளித்து வரும் புலிபோல, நம்மை நயந்த உள்ளத்தோடே காவலர் அறியாமல் வந்து உயிர்

இவற்றுட்[7] சேயோன் கருப்பொருளாக மைவரையுலகத்துக் கூதிர்யாமம் பொழுதாகச் சிறப்பறியும் வேலன் ஆடுதலின், வெறியாடிய காந்தள் அகத்திற்கு வந்தது. இது[8] வேத்தியற் கூத்தன்றிக் கருங்கூத்தாதலின்[9] வழுவுமாய், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாதலிற் பொதுவியலுமாயிற்று. 'வேலன் றைஇய வெறியயர் களனும்' என்றாற் போலச் சிறப்பறியும் வேலன் தானே ஆடுதலுஞ் சிறுபான்மை புறத்திற்குங் கொள்க.[10]

மாவரும் புகழ் ஏந்தும் பெருந்தானையர்—மா முதலியனவற்றால் தமக்கு வரும் புகழைத் தாங்கும் மூவேந்தருடைய பெரும் படையாளர், உறு பகை வேந்திடை தெரிதல் வேண்டிப் போந்தை வேம்பே ஆர் என மலைந்த பூவும்—அப்புகழ்தான் உறும் பகையிடத்து இன்னவேந்தன் படையாளர் வென்றார் என்பதற்கு ஓர் அறிகுறி வேண்டிப் போந்தை வேம்பு ஆரென்று கூறிச் சூடின பூவும்:

இதன் கருத்து: ஏழகத்தகரும்[11] யானையும் நாயும் கோழியும் பூழும் வட்டும்[12] வல்லுஞ்[13] சொல்லும் முதலியவற்றால் தமக்கு வரும் வெற்றிப் புகழைத் தாம் எய்துதற்குத் தத்தம் வேந்தர் அறியாமற் படைத்தலைவர் தம்முள் மாறாய் வென்று ஆடுங்கால் இன்ன அரசன் படையாளர் வென்றாரென்றற்கு அவரவர் பூச்சூடி ஆடுவர் என்பதூஉம், அக்கூத்தும் வேத்தியற் கூத்தின் வழீஇயின கருங்கூத் தென்பதூஉம், அது தன்னுறு தொழிலென்பதூஉம் உணர்த்தியதாம். இதனை இங்ஙனந் தன்னுறு தொழிலாக்காமல் வேந்துறு தொழிலாக்கின் அது தும்பையாம். புகழ்ந்து

தளிர்ப்ப நம்மைப் புணருந்தோறும் காதலர்வரவே நோய் தணிந்ததை வேலன் வெறியாட்டுக்குத் தணிந்தமையாகக் கொண்டு சிரித்தேன் அல்லனோ?—தலைவி கூற்று.

7. இவற்றுள்—அணங்குடை, பனிவரை என்னும் பாடலுள்,
8. இது—காந்தட் கூத்து.
9. கருங்கூத்து—வீரர்தாமே யாடுங் கூத்து.
10. புறப்பாடலாகிய திருமுருகாற்றுப்படையில் வேலன் வெறியாடிய களம் 'வேலன் தைஇய வெறியயர் களன்' என்றது புறத்திற்குக் கூறியதாகக் கொள்க.
11. ஏழகத்தகர்—ஏழகமாகிய தகர். தகர்-ஆடு.
12. வட்டு—சூதாடு காய்.
13. வல்—சூதாடு கருவி, நாய், குதிரை முதலியன.

கூறிற்றெனிற் பாடாண்டிணையாம். ஆசிரியர் வெறிக் கூத்திற்கும் வள்ளிக்கூத்திற்கும் இடையே இதனை வைத்தது இக்கருத்தானே[14] யென்றுணர்க.

உதாரணம்

''ஏழக மேற்கொண் டிளையோ னிகல்வென்றான்
வேழ மிவனேற வேந்துளவோ—வேழுலகுந்
தாந்தயங்கு நாகந் தலைதயங்க வாடாமோ
போந்தையங் கண்ணி புனைந்து.''[15]

இது போந்தை மலைந்தாடியது.

''குறும்பூழ்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுத
லிறும்பூதென் றியாமாடல் வேண்டா—செறுங்கோன்
குலமதிக்கு மாறறியிற் கொற்றவன் வேம்பு
தலைமலையற் பாலதூஉ மன்று.''[16]

இது வேம்பு தலைமலைந்தாடியது.[17]

''ஆர்வேய்ந்த கோலத்தோ டாடுவர் பாடுவர்
போர்வேந்தர் பெற்றநாள் போன்றுவப்பர்—சீர்சால்
பறைகெழு வாரணப்போர் பண்டிகழ்ந்தோ ரின்று
சிறைகெழு வாரணப்போர் செய்து.''[18]

இஃது ஆர் மலைந்தாடியது.

---

14. தன்னுறு தொழில் என்ற கருத்தான்.

15. இளையோன் ஏழகத்தகர் மேல் ஏறிப் பகையை வென்றான்: இவன் யானை மீது ஏறின் எதிர்க்கும் அரசர் உளராவரோ? ஆகார்; அதனால் இவன் வெற்றி குறித்துநாம் பனம்பூச்சூடி உலகைத் தாங்கும் நாகத்தின் தலை நடுங்குமாறு ஆடுவோமாக.

16. குறும்பூழ்ப் போரில் கையெறிந்து வெற்றி பெறுதல் இறும்பூது இல்லை; ஆதலின் யாம் அது ஆடவேண்டா. வேந்தன் வேம்பு மாலையும் தலையில் சூடற்பாலதன்று.

17. உதாரணப்பாடலில் வேம்பு மலைந்தாடியதாக இல்லை.

18. போர்ப்பறை முழங்கும் யானைப் போரைப் பண்டு இகழ்ந்த வீரர் இன்று சிறகுள்ள வாரணமாகிய கோழிப் போரில் வென்று ஆத்திமாலை சூடிய கோலத்துடன் ஆடுவர்; பாடுவர்; வேந்தர் போர் பெற்ற நாள்போல் உவப்பர்.

இவை தன்னுறு தொழிலாயவாறு காண்க.

வாடா வள்ளி—வாடுங் கொடியல்லாத வள்ளிக் கூத்தும், அஃது இழிந்தோர் காணுங் கூத்து.[19]

உதாரணம்

''மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ணோற்றாள் பெரிது.''[20]

இது பெண்பாற்குப் பெருவரவிற்று. இதனைப் பிற் கூறினார். வெறியறி சிறப்பன்மையானும் ஆண்பாற்கும் பெண் பாற்கும் பொதுவாவதல்லது அகத்திணைக்கண் வந்து பொது வாகாமையும் பற்றி.

வயவர் ஏத்திய ஓடாக் கழனிலை உளப்பட—முன்பு கழல் கால் யாத்த வீரர் இளமைப் பருவத்தானொருவன் களத்திடை ஓடாது நின்றமைகண்டு அவனைப் புகழ்ந்து அவற்குக் கட்டிய கழனிலைக் கூத்து:[21]

ஓடாமையாற் கட்டின கழல்—ஏத்திய நிலையாற் கட்டின கழல்.

இது வள்ளிப்பின் வைத்தலின் இருபாலாரும் ஆடுதல் கொள்க. கொடி முதலியன அவனை வியந்து கொடுத்தல் அத் துறைப் பகுதியாம்.

உதாரணம்:

''மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின்
வாளாடு கூத்திவந் தாடினாள்—வாளாட்டின்

---

19. இழிந்தோர்—வேந்தரல்லாத பொதுமக்கள்.

20. மறவர் குழாத்திடை வள்ளிக்கூத்தை முருகனும் கண்டு களித்தான்; அதனால் பண்டு குறமகளாகிய வள்ளியின் கோலம் கொண்டு ஆடுதற்கு இப்பிறமகள் நோற்றாளா வாள்.

21. கழல் நிலைக்கூத்து—கழல் நிலை பற்றிக் கூறியாடும் கூத்து.

மண்ணாளு மன்னரே பெண்ணாவார் வண்மைக்குப்
பெண்ணாடின் யாதாம் பிற.''[22]

ஓடா உடல் வேந்து அடுக்கிய உன்னநிலையும்—பிறக்கடி யிடா உடன்ற வேந்தனை உன்னமரத்துடன் அடுக்கிக்[23] கூறப் பட்ட உன்ன நிலையும்.

என்றது, வேந்தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வென்றிகொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம் வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொதுளுக எனவும் பகைவேந்தற்கு ஆக்கம் உளதெனில் அக்கோடு படுவதாக எனவும் நிமித்தங்கோடலும், என விருவகைத் தெய்வத் தன்மை. அஃதுடைமையான் 'அடுக்கிய உன்ன நிலையும்' என்றார்.

உதாரணம்

''துயிலின் கூந்தற் றோளிணைப் பேதை
வெயினிழ லொழிய வெஞ்சுரம் படர்ந்து
செய்பொருட் டிறவீ ராகிய நும்வயி
னெனக்கொன்று மொழியின ளாகத் தனக்கே
யருநகை தோன்றிய வழுகுரற் கிளவியள்
கலுழ்கண் கரந்தன டானே யினியே
மன்னவற் பராஅய் முன்னியது முடித்தோ
ருன்னஞ் சிறக்கு மொள்வினை நினைஇத்
தலைசாய்த் திருந்த சிலைவலம் போற்றி
வேந்துவழக் கறுத்த கான
நீந்த லொல்லுமோ பூந்தொடி யொழிந்தே.''

இதனுள்,

---

22. போரில் மீளாமைக்காகச் சிறப்பித்துக் கொடுக்கப்பெற்ற கழலினையுடைய வீரனின் சிறப்புக் கூறியாடும் வாளாட் டத்தில் கண்ணாகிய வாள் ஆடும் கூத்தியும் வந்தாடி னாள். அவ்வாளாட்டத்தில் மண் ஆளும் வேந்தர் பெண் தன்மையராய் இரங்குவார்கள். வள்ளன்மை வேண்டிப் பெண் ஆடினால் அப்படிப் பெண்மையாவதன்றி வேறு யாதாகும்?

23. அடுக்கி—சார்த்தி.

"மன்னவற் பராஅய் முன்னியது முடித்தோ
ருன்னஞ் சிறக்கு மொள்வினை நினைஇ"

என்றது வேந்தனைப் பரவுக்கடனாக அடுக்கிய உன்னநிலை.[24]

"முன்னங் குழையவுங் கோடெலா மொய்தளிரீன்
றுன்னங் குழையொலித் தோங்குவாய்—மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து.[25]

இவை மறவர் செய்தலின் தன்னுறு தொழிலாம்.

"பொன்னன்ன பூவிற் சிறிய விலைப்புன்கா
லுன்னத் தகையனெங் கோ"[26]

என்பதும் அது.

இரண்டு நிலையாற்[27] பொதுவுமாயிற்று. மன்னவன் வெற்றியே கருதாது இங்ஙனம் இருநிலைமையுங் கருதுதலின் வழுவுமாயிற்று.

---

24. பேதையானவள், பொருளீட்டும் திறத்தராய நும்மிடமாக எனக்கும் ஒன்றும் கூறாமல் அழும் கண்ணை மறைத்தாள். இப்போது நீவிர் அவளைவிட்டுக் கானம் கடக்க முடியுமோ? எனத் தோழி பொருள் வயிற் பிரியக் கருதினானிடம் கூறியது இது, அகத்திணைப் பாடல். இதில் வீரர் மன்னவனை உன்ன மரத்தொடு சேர்த்துப் பரவி நினைத்தது முடிக்கும் அவ்வுன்ன மரம் சிறக்கும் ஒள்ளிய வெற்றிவினையை நினைந்து தலைசாய்த் திருக்கும் சிலை என்னும் மரத்தையும் வலமாகப் போற்றிக்கொண்டு அதனால் வேந்தரை அவ்வழி வருவதைப் போக்கிய காட்டிடம் என்றது உன்ன நிலைக்குரிய பகுதி.

25. உன்ன மரமே! பிற மன்னரைக் கொன்று களம் கொள்ளும் பகைவேந்தனை எம் மன்னன் வென்று அவன் போர்க் களத்தைக் கைக்கொள்வானாயின் எம் உள்ளக் குறிப்பு தளிர்க்கவும் நின் கிளைகள் எல்லாம் தளிர்கள் தழைப் பனவாக.

26. எம் அரசன் பொன் போலும் பூவினையும் சிறிய இலையையும் புல்லிய அடிமரத்தையும் உடைய உன்ன மரத்தின் தகுதியுடையவன். தகுதியாவது உன்னம் தழைக்கின் அரசன் சிறப்பதும் வாடின் தாழ்வதும் ஆம்.

27. இரண்டு நிலை—வெற்றியும் தோல்வியும் கருதும் நிலை.

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழ்ப் பூவைநிலையும் என்றது: மாயோன் விழுப்புகழ்—மாயனுடைய காத்தற் புகழையும், மேய பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழ்—ஏனோர்க்கும் உரியவாய் மேவிய பெரிய தலைமையிற் கெடாத படைத்தல் அழித்தலென்னும் புகழ்களையும், மன்பூவை நிலையும்-மன்னர் தொழிலுக்கு உவமையாகக் கூறும் பூவைநிலையும்:

என்றது ஒன்றனை ஒன்று போற் கூறுந் துறை. 'மன்' எனப் பொதுப்படக் கூறியவதனான் நெடுநில மன்னர்க்கும் குறுநில மன்னர் முதலியோர்க்குங் கொள்க. 'பெருஞ் சிறப்பு' என்ற தனாற் படைத்தலுங் காத்தலும் அழித்தலுமின்றி அவரவர் தாமாகக் கூறலும்[28] முருகன் இந்திரன் முதலியோராகக் கூறலுங் கொள்க.

உதாரணம்

''ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனுங்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனு
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனு
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளுங்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுநர் அடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலி
னாங்காங் கவரவ ரொத்தலின் யாங்கு
மரியவு முளவோ நினக்கே.''[29]

(புறம்-56)

என்பதன்கண் அங்ஙனம் உவமித்தவாறு காண்க.

---

28. அவரவர் தாமாகக் கூறல்—அரசரை மாயோனாகவே கூறல் முதலியன.

29. மணிமிடற்றுச் சிவனும் பனைக்கொடிப் பலராமனும் கருடக்கொடித் திருமாலும் மயிற்கொடியும் யானையூர்தியும் உடைய சேயோனாகிய முருகனும் ஆகிய நால்வ

"குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்—மரம்பெறாப்
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு."[30]

இது சோழனை மாயோனாகக் கூறிற்று.

"ஏற்றூர்தி யானு மிகல்வெம்போர் வானவனு
மாற்றலு மாள்வினையு மொத்தொன்றி னொவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயா
மாற்றல்சால் வானவன் கண்."[31]

இது சேரனை அரனாகக் கூறியது.

"இந்திர னென்னி னிரண்டேக ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லை—யந்தரத்துக்
கோழியா னென்னின் முகனொன்றே கோதையை
யாழியா னென்றுணரற் பாற்று."

இது சேரனைப் பல தேவராகக் கூறிற்று.

"கோவா மலையாரங் கோத்த......" (சிலப்-17-உள்வரி)

"முந்நீ ருள்புக்கு மூவாக்......" (சிலப்-17-உள் வரி)

"பொன்னிமையக் கோட்டுப் புலி..." (சிலப்-17-உள் வரி)

என்பனவும் அவை.

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
.... சிறுகுடி யோரே."

(கலி-52)

ருள்ளும் சீற்றத்தால் சிவனை யொத்தாய்; வலியால் பலராமனை ஒத்தாய்; புகழால் திருமாலை யொத்தாய்; நினைத்தது முடித்தலால் முருகனை ஒத்தாய். அதனால் நினக்கு அரியனவான செயல்களும் உளவோ?—இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர் பாடியது.

30. நீர்நாடனே! (சோழனே) நின் மார்பிற் கிடந்த மறுவானது நீ குருந்த மரத்தைப் பிளந்த காலத்தும் உண்டு; ஆனால் அன்று மறைத்து வைத்த விதத்தை எமக்குக் காட்டுவாயாக.

31. ஏறு ஊர்தியுடைய சிவனும் சேரனும் ஆற்றலாலும் தொழிலாலும் ஒத்தவரேயாவர். ஆனால் ஒருவகையில் ஒவ்வாதவராவர். எப்படியெனின் கணிச்சிப்படைச் சிவன் கண்கள் மூன்று; வானவன் கண் இரண்டேயாம்.

இஃது உரிப்பொருட் டலைவனை[32] முருகனாகக் கூறியது. இங்ஙனம் புறத்தும் அகத்தும் வருதலிற் பொதுவாயிற்று. இறப்ப உயர்ந்த தேவரை மக்கட்கு உவமையாகக் கூறலின் வழுவு மாயிற்று.

'தாவா' என்றதனானே அரசர் புகழைக் காட்டு வாழ்வோர்க் குக் கூறுதலும் அவரை அரசர் பெயராற் கூறுதலுங் கொள்க.

''வீங்குசெலற் பரிதி வெவ்வெயி லெறித்தலி
னாங்க ணோக்கா தாங்கு நீபோ
யரசுநுகம் பூண்ட பின்னர் நின்னிலை
முரசுடை வேந்தர் முகந்திரிந் தனரே
யஃதான்
றுவவுமதி நோக்குநர் போலப் பாணரொடு
வயிரியர் பொருநர்நின் பதிநோக் கினரே
யதனான்
அதளுங் கோடு முதலிய கூட்டுண்
டிகலி னிசைமேஎந் தோன்றிப்
பலவா கியநில நீபெறு நாளே.''[33]

இது முடியுங்குடையும் ஒழித்து அரசர்க்குரியன கூறி இழித்துக் கூறியும் புகழ்மிகுத்தது.

'பல்லிதழ் மென்மலர்' என்னும் அகப்பாட்டினுள்,

''அறனில் வேந்த னாளும்
வறனுறு குன்றம் பலவிலங் கினவே''

---

32. உரிப் பொருட்டலைவன்—அகப் பொருள் தலைவன்.

33. ஞாயிறு வெயில் எறித்தலின் அதைக் கண் நோக்காத வாறுபோல அரசு பாரம் பூண்ட பின்னர் உன்னை முரசுடைவேந்தர் நேர் நோக்காது முகம் திரிந்தனர். அதுவன்றி வயிரியர் பொருநர் பாணரொடு நிறைமதியை நோக்குவது போல் நின்நாடு நோக்கினர். அதனால் யானைத் தோலும் கொம்புகளும் வெற்றித் திறையாகக் கொள்ளையாகவுண்டு பகைவரொடு மாறுபடுதலின் புகழ் மிகத்தோன்றிப் பகைவர் நிலங்களைப் பெறும் நாள்கள் அடிக்கடிப் பலவாகுக.— இது யாரை யார் பாடியது என்பது புலப்படவில்லை.

எனக் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயராற் கூறினார்.[34]

ஆர் அமர் ஓட்டலும்—குறுநில மன்னருங் காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காண்டலும்:

உதாரணம்

''பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம்
வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே
வேந்துடன் றெறிந்த வேலே யென்னை
சாந்தா ரகல முளங்கழிந் தன்றே
யுளங்கிழி சுடர்ப்படை யேந்திநம் பெருவிற
லோச்சினன் றுரந்த காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே.''[35]

(புறம்-308)

இது சீறூர் மன்னன் வேந்தனைப் புறங்கண்டது.

''கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றி
னாட்செருக் கனந்தர்த் துஞ்சு வோனே
யவனெம் மிறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
னிரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்

---

34. அறனில்லாத காட்டுத்தலைவன் ஆளும் வற்றிய தன்மையுற்ற குன்றம் பல குறுக்கிட்டன. இதில் காட்டுத் தலைவனை 'வேந்தன்' என்ற நாட்டுத்தலைவன் பெயரால் குறிப்பிட்டது காண்க.

35. பாணனே! சீறூர் மன்னனின் வேல் வேந்தனின் யானை முகத்ததாயிற்று; வேந்தன் எறிந்த வேலானது அச் சீறூர் மார்பிற் பாய்ந்து சென்றது; உரம் கிழித்துப் பாய்ந்து சென்ற வேலைப் பறித்து ஓச்சினபோது வேந்தனது பிடி நாணக் களிறுகளெல்லாம் புறங் கொடுத்து ஓடின.

டவதி லாள னென்னாது நீயுநின்
வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
செறுகவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே.''[36]

(புறம்-316)

இது மறவன் ஆரமரோட்டல் கூறியது.

இவை தன்னுறுதொழில் கூறியன.

ஆரமரோட்ட லென்பது பொதுப்படக் கூறவே வேந்தர்க்கு உதவியாகச் செல்வோரையுங் கொள்க. உ-ம்:-

''வெருக்குவிடை யன்ன வெருணோக்குக் கயந்தலைப்
புள்ளூன் றின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் வேட்டுவன் வீழ்துணை மகாஅர்
சிறியிலை யுடையின் சுரையிடை வாண்முள்
ளூக நுண்கோற் செறித்த வம்பின்
வலாஅர் வல்விற் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழுண் வெள்ளை பகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்த
ரிடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை

---

36. விறலீ! குப்பையைப் பெருக்காத முற்றத்தில் கள்ளை வாழ்த்தி அக்கள்ளுண்ட மயக்கத்தில் தூங்கும் இவன் எம் தலைவன்; இவன் பாணர் யாம்; இவன் நேற்று வந்த விருந்தைப் புரக்கத் தன் வாளைப் பணயமாக வைத்துச் சென்று அமர் ஓட்டி அதனால் வந்த பொருளால் புரந்தான்; இன்று என் யாழைப் பணயமாகக் கூறுகிறேன். இனி எமக்கு ஈய ஒன்றும் இல்லாதவன் என்று நினையாமல் நீயும் இடையணியுமாறும் யாம் மகிழுமாறும் பகை மன்னர் மிகுதியும் அழிவர் ஆதலின் இவன் தரும் உணவு உண்டு சிவந்த வாயுடன் வருவாய்.

வலம்படு தானை வேந்தற்
குலந்துழி யுலக்கு நெஞ்சறி துணையே.''[37]

(புறம்-324)

இது வேந்தற்குத் துணையாகச் செல்வோரைக் கூறியது.

''இணைப்படைத் தானை யரசோ டுறினுங்
கணைத்தொடை நாணுங் கடுந்துடி யார்ப்பி
னெருத்து வலிய வெறுழ்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
யுருத்த கடுஞ்சினத் தோடா மறவர்.''[38]

(கலி-15)

எனக் கலியகத்தும் வந்தது.

'வயங்குமணிபொருத' என்னும் அகப்பாட்டினுள்,

''சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்
ததர்கூட் டுண்ணு மணங்குடைப் பகழிக்
கொடுவி லாடவர்.''

(அகம்-167)

எனச் சாத்தெறிதலும் அது. இங்ஙனம் பொதுவாதலிற் பொதுவியலாயிற்று. வேந்தரொடு பொருதலின் வழுவுமாயிற்று.

ஆபெயர்த்துத் தருதலும்—வெட்சி மறவர் கொண்ட நிரையைக் குறுநில மன்னராயினுங் காட்டகத்து வாழும் மறவ ராயினும் மீட்டுத் தருதலும்:

---

37. நோக்கும் தலையும் ஊன் தின்ற வாயும் உடைய வேட்டு வனின் மக்கள் அம்பை வில்லில் சேர்த்துப் பருத்தி வேலி யின் கீழ் உள்ள எலியைக் குறிபார்க்கும் சிற்றூரில் குமிழ்க்காய் தின்ற ஆட்டின் பிழுக்கையுடைய பந்தரில் இடையன் கொளுத்திய தீயின் பக்கத்தே பாணரொடு இருக்கும் இந்நெடுந்தகை தன் வேந்தர்க்கு உற்றுழி யுதவும் நெஞ்சறியும் துணைவனுமாவான்.

38. துணையாக இணைந்த படைகளையுடைய அரசரோடு பகைவேந்தன் வரினும் இரலைமான் மருப்புப்போல் திரிந்த தாடியையும் கடிய சினத்தையும் உடைய பின்னி டாத மறவா

உதாரணம்

''ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ள
முருகு மேம்பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே.''[39]

(புறம்-259)

இது குறுநில மன்னர் நிரைமீட்டல் கண்டோர் கூறியது.

''வளரத் தொடினும் வவ்வுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சந் தலைஇ மனையோ
ளுளருங் கூந்த னோக்கிக் களரி
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபு கைதொழாஅக்
காணலென் கொல்லென வினவினை வரூஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத் துண்குவை யாயினு மிரவெழுந்
தெவ்வங் கொள்குவை யாயினு மிரண்டுங்
கையுள போலுங் கடிதண் மையவே
முன்னூர்ப் பூசலிற் றோன்றித் தன்னூர்
நெடுவெறி தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தந் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லா
னிரையொடு வந்த வுரைய னாகி

---

39. முருகன் ஏறிய (ஆவேசித்த) புலைமகள் துள்ளுவது போல் துள்ளும் குதிரைமீது அமர்ந்த ஒள்வாளுடைய கழல் கட்டிய வீரனே! நீ கவர்ந்த ஆநிரைகள் மீண்டு செல்லவும் நீ வெட்சியார் கவரவரின் எதிர்ப்பதற்காக மீளாமல் தங்கியிருந்து காட்டில் மறைந்திருக்கும் அவ் வெட்சி மறவரைக் காண்பாயாக; அவரை வென்றன்றி மீளாதே.

யுரிகளை யரவின் மானத் தானே
யரிதுசெ லுலகிற் சென்றன னுடம்பே
கானச் சிற்றியாற் றருங்கரைக் காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய விலக்கம் போல
வம்பொடு துளங்கி யாண்டொழிந் தன்றே
யுயரிசை வெறுப்பத் தோன்றிப் பெயரே
மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி
யிடம்பிறர் கொள்ளாச் சிறுநெறிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே.''[40]

(புறம்-260)

இதனுள், தன்னூரென்றலிற் குறுநிலமன்னன் நிரை மீட்டுப் பட்ட நிலையைப் பாணர் கையற்றுக் கூறியது.

இனிக் கண்டோரும் மறவரும் கூத்தரும் பாணரும் விறலி யருங் கூறினும், அவர்தாங் கையற்றுக் கூறினும், அத்துறைப் பாற்படும்.

''பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண்
ணிரும்பறை யிரவல சேறி யாயிற்
றொழாதனை கழித லோம்புமதி வழாஅது
வண்டுமேம் படூஉமிவ் வறநிலை யாறே
பல்லாத் திரணிறை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா மறவர் நீங்க நீங்கான்

---

40. ''முன்னூர்ப்... வந்த வுரையன்'' என்பது துறைக்குரிய தாகும். பாணனே! நம்வீரன் தன் ஊர்ப் புறத்தே வெட்சியார் போரிட்டுத் தன் ஊரில் கொண்ட ஆநிரையை அவ்வீரர் விட்ட அம்பு வெள்ளத்தைத் தன் துடியே தெப்பமாகக் கொண்டு கடந்து அவரைக் கொன்று பாம்பு வாயிலிருந்து மீண்ட திங்களைப்போல வெட்சி வீரரிடமிருந்து மீட்ட அவ்வாநிரையைக் கொண்டு புகழுடன் மீண்டவன் பாம்பு தோலுரித்து விட்டுச் சென்றதுபோல் தன் உடலைவிட்டு வானம் சென்றான்; அவன் உடம்பானது, காற்றால் அசைந்து சாய்ந்த கம்பம் போலச் சாய்ந்தது. அவன் பெயரானது பந்தர்க்கீழ் நடப்பட்ட கல் மேலதாயது.

வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே.''[41]

(புறம்-263)

இது கண்டோர் கையற்றுக் கூறியது.

ஏனைய வந்துழிக் காண்க.

'விசும்புற நிவந்த' என்னும் அகப்பாட்டும் அது.

இதனுள் 'மறவர் நாளா வுய்த்த' என வேந்துறு தொழில் அல்லாத வெட்சித்திணையும் பொதுவியற்கரந்தைக் கண்ணே கொள்க; இஃது ஏழற்கும் பொதுவாகலின்.

'தருதல்' என்ற மிகையானே நிரையல்லாத கோடலும் அத்துறைப்பாற்படும். 'வலஞ்சுரி மராஅத்து' என்னுங் களிற்றியானை நிரையுள்,

''கறையடி மடப்பிடி கானத் தவறக்
களிற்றுக்கன் றொழித்த வுவகையர் கலிசிறந்து
கருங்கான் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொளி வெண்ணா ரழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்
நறவுநொடை நல்லிற் புதவுமுதற் பிணிக்குங்
கல்லா விளையர் பெருமகன் புல்லி''[42]

என யானைக்கன்றைக் கவர்ந்தவாறு காண்க.

இதுவும் வேத்தியலின் வழீஇயினவாறு காண்க.

---

41. யானைக் காலடிபோல் தோன்றும் ஒரு கண்ணுடைய பறையுடைய இரவலனே! இவ்வழியில் உள்ள நடுகல்லைத் தொழாமல் போதலை ஒழிவாயாக; பல ஆநிரைகள் மீளவே கரந்தை வீரரும் மீண்டு நீங்கத் தான் மட்டில் பெயரானாகி எதிர்வீரரின் அம்புகள் மூழ்க பெருகிவரும் நீரைத் தடுக்கும் அணைபோலத் தடுத்து வீழ்ந்தவன் கல் அதுவாகும்.

42. பெண் யானையானது காட்டில் இருந்து வருந்துமாறு களிறுகளைக் கன்றுகளுடன் பிடித்து மகிழ்ந்தவராய் மராமரத்தின் கொம்பை ஒடித்து உரித்த நாரால் அவற்றைக் கட்டி மூதூரில் கள் விற்கும் வீட்டின் தூண்களிற் கட்டி வைக்கும் வீரர் பெருமகன் புல்லி என்பான்.

வேந்தன் சீர் சால் சிறப்பு எடுத்து உரைத்தலும்—வேந்தற்கு உரிய புகழ் அமைந்த தலைமைகளை ஒருவற்கு உரியவாக அவன்றன் படையாளரும் பிறருங் கூறலும் :

இதுவும் வழு: வேந்தர்க்குரிய புகழைப் பிறர்க்குக் கூறினமையின்.

"அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற விரவன் மாக்கள்
களிற்றொடு நெடுந்தேர் வேண்டினுங் கடல
வுப்பொய் சாகாட் டுமணர் காட்டக்
கழிமுரி குன்றத் தற்றே
யெள்ளமை வின்றவ னுள்ளிய பொருளே."[43]

(புறம்-313)

இது படையாளர் கூற்று.

இதற்கு முடியுடைவேந்தன் சிறப்பெடுத்துரைத்தலென்று கூறின், அது பொதுவியலிற் கூறலாகாதென்றுணர்க.

தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்—தன்னிடத்துளதாகிய போர்த்தொழிலின் முயற்சியாலே வஞ்சினங்களைத் தன்னொடு கூட்டிக் கூறலும் :

உதாரணம்

"தானால் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால்
யானை யெறித லிளிவரவால்—யானை

43. அரிய வழியிடையுள்ள தலைவனாகிய இவன், கொடுக்கக் கையில் யாதொரு பொருளும் இல்லாதவனாவான், ஆனால் இரவலர் நெடிய தேர் வேண்டும் என விரும்பினாலும் கொடுத்தற்குரியனவாகும் பல பொருள்கள். எப்படியெனில் உப்பு ஏற்றிச் செலுத்தும் வண்டி காட்டில் எளிதாகச் செல்ல முரித்துப்போடும் மரக் கிளைகளின் குன்றம் போல எளிதாகும். அதனால் அவன் கொடுக்க நினைத்த பொருள் எள்ளும்படியாக அமைதல் இல்லை.

யொருகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்''[44]

என வரும்.

''பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
யிருமருப் புறழு நெடுமா நெற்றின்
பைம்பய றுதிர்த்த கோதின் கோலணைக்
கன்றுடை மரையா துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே நாரரி
நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
துறைநனி கெழீஇக் கம்பு ளீனுந்
தண்ணடை பெறுதலு முரித்தே வைந்நுதி
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே.''[45]

(புறம்-297)

மடல் வன் போந்தைபோல் நிற்பலென[46] நெடுமொழி தன்னொடு புணர்த்தவாறு காண்க. சீறூர் புரவாகக் கொள்ளேன் தண்ணடை கொள்வேனெனத் தன்னுறு தொழில் கூறினான்.

இதுவும் பொது : புறம்.

---

44. என் எதிர் வரும் யானையோ விலங்கு; தனி வந்தாலும் பிற வீரனின் ஏவல் வரையறைக்குட்பட்டது. ஆதலின் இவ் யானையை எறிதல் இழிவாகும்; அன்றியும் இரண்டு கைகளுடைய யான் ஒரு கையுடைய யானையை எறி வேனோ?

45. கருக்கு மட்டைகள் செறிந்த பனை மரம்போல் வேல்கள் தைத்து நிற்கும் வீரர்க்கு இறையிலி நிலமாகச் சிற்றூர் களைக் கொள்ளுதலை விரும்பேம்; பன்னாடையால் வடிக்கப்பட்ட கள்ளை வாழ்த்தி நீர்த்துறை மிகுந்து கம்புள் எனும் நீர்வாழ் பறவை முட்டைகளை யீனும்படி யான மருத நிலம் பெறுதலும் உரியதாகும்.

46. நிற்பல் என நெடுமொழி தன்னொடு புணர்த்ததாகப் பாடலில் இல்லை. கண்டோர் கூற்றாகக் கொண்டால் அவர் நெடுமொழி புணர்த்தாராகக் கொள்ளலாம். அதுவும் சிறப்பப் பொருந்தவில்லை.

வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று இரு வகைப்பட்ட பிள்ளைநிலையும்—தன்மேல் வருங் கொடிப்படையினைத் தானே தாங்குதல் வாட்டொழிலிற் பொய்த்தலின்றி மாற்றோரைக் கொன்று தானும் வீழ்தலென இரண்டு கூறுபட்ட போரிற் சென்றறியாத மறமக்கள் தாமே செய்யுந் தறுகணாண்மையும்:

வேந்தன் குடிப்பிறந்தோரும் அவன் படைத்தலைவருமாகிய இளையர் செய்யினும் தன்னுறு தொழிலாதலிற் கரந்தையாம்; தும்பை யாகாதென்று உணர்க.

உதாரணம்

''ஏற்றெறிந்தார் தார்தாங்கி வெல்வருகென் றேவினாள்
கூற்றினுந் தாயே கொடியளே—போர்க்களிறு
காணா விளமையாற் கண்டிவனோ நின்றிலனேன்
மாணாருள் யார்பிழைப்பார் மற்று.''[47]

இது வருதார் தாங்கல்.

''ஆடும் பொழுதி னறுகயிற்றுப் பாவைபோல்
வீடுஞ் சிறுவன்றாய் மெய்ம்மகிழ்ந்தாள்—வீடுவோன்
வாள்வாயின் வீழ்ந்த மறவர்தந் தாயரே
கேளா வழுதார் கிடந்து.''[48]

இது வாள்வாய்த்துக் கவிழ்தல்.

'கெடுக சிந்தை கடிதிவ டுணிவே' என்னும் (279) புறப்பாட்டும் இதன் பாற்படும்.

இவை தன்னுறுதொழில். போரிற் சென்றறியாதவன் சேறலின் வழு.

---

47. போர்க்களிறு கண்டிராத இளையவனைப் பார்த்துத் தாயானவள் போரேற்றுப் படையெறிந்து வரும் தூசிப் படையைத் தடுத்து வென்று வருக என ஏவினாள்; இவள் கூற்றினும் கொடியள். அவனும் நில்லாமல் செல்வானாயின் பகைவருள் பிழைப்பார் யாவர்?

48. ஆடும்போது கயிறு அறுந்த பாவை விழுவதுபோல் போரில் வீழ்ந்த சிறுவனின் தாய் அவன் வீரம் கண்டு மெய்யுற மகிழ்ந்தாள்; அச்சிறுவனின் வாளின் வாயில் விழுந்த வீரரின் தாயரே தம் மக்கள் வீழ்ச்சியைக் கேட்டு அழுதனர்.

வாண்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடவற்கு அருளிய பிள்ளையாட்டும்-வாளாற் பொருது உயர்ந்த அரசிளங் குமரனை அந்நாட்டிலுள்ளார் கண்டு வந்து பறை தூங்கிசையாக ஒலிக்கும்படி அவற்கு அரசு கொடுத்த பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டாடிய ஆட்டும்:

இதுவும் நாட்டிலுள்ளார் கொடுத்தலின் தன்னுறு தொழிலாய் வழுவுமாயிற்று.

உதாரணம்

''வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை யொள்வாட் புதல்வற்கண்—டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர''[49]

எனவரும்.

இதனைப் பிள்ளைத் தன்மையினின்று பெயர்த்தலிற்[50] பிள்ளைப் பெயர்ச்சியு மென்ப.

அனைக்குரி மரபிற் கரந்தையும்—ஆரமரோட்டல் முதலிய ஏழு துறைக்கும் உரிய மரபினையுடைய கரந்தையும்:[51]

கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரை மீட்டோர் பூச்சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித்திணை போல ஒழுக்கமன்று.

'அந்தோ வெந்தை' என்னும் புறப்பாட்டினுள்,

''நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்டி
நிரையிவட் டந்து.''

(புறம்-261)

என்றவாறு காண்க.

---

49. மறமன்னனின் வாட்போர் செய்து வென்று மேம்பட்ட புதல்வனுக்கு அவன் வீரம் கண்டு அன்புற்றுப் பகைவர்க்கு வானநாடுவர கான நாடு கொடுத்தார்கள்.

50. பிள்ளைத் தன்மையினின்று பெயர்த்து வீர ஆண் மகன் எனக் கோடலின்.

51. தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல் என்னும் வரியின் பின் உள்ள இவ்வரியைப் பிள்ளையாட்டின் பின்னர்க் கூட்டினார் இவர். இளம் கருத்தும் இதுவே.

அது அன்றி—அக் கரந்தையே அன்றி.

காட்சி—கல்கெழு சுரத்திற் சென்று கற்காண்டலும் அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப் பின்னர்க் கற்காண்டலும்[52] என இருவகையாம் :

உதாரணம்

''தாழி கவிப்பத் தவஞ்செய்வர் மண்ணாக
வாழிய நோற்றனை மால்வரை—யாழிசூழ்
மண்டல மாற்றா மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனெ னின்மாட்டோர் கல்.''[53]

இது கல் ஆராய்கின்றார் காட்சி.

''ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை
யோங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீ
போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் றோன்றல்
வானேறு புரையுநின் றாணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்த
ரொடுங்கா வென்றியு நின்னொடு செலவே.''[54]
(புறம்—265)

இது 'கோவலர் படலைசூட்ட'' என்றலிற் கடவுளாகிய பின் கண்டது.

---

52. கற்காண்டல்—கல்லில் வெட்டிய உருவைக் கடவுளாகக் காணல்.

53. மால்வரையே! தாழி கவிக்குமாறு வயது முதிர்ந்து தவம் செய்வோர் எல்லாம் மண்ணாகிப் போகக் கடல்சூழ் உலகத்தைத் தன் வேந்தனிடத்திருந்து மாற்றாது காத்த புகழ்வீரனின் சீர்பொறிக்குமாறு நின்னிடத்துக் கல் ஆராய்ந்து கண்டேன்; நீ தவம் செய்தாய்; வாழிய.

54. கடிய குதிரைமேல் தோன்றும் வீரனே! கோவலர் வேங்கைப்பூவைப் பனம்பூவோடு சேர்த்து மாலையாகச் சூட்ட நீ கல் ஆயினாய் (கடவுளாயினாய்). எவ்வாறெனின் பரிசிலர்களின் நின்தாள் நிழல் வாழும் வாழ்க்கையாகிய செல்வமும், வேந்தர்களுக்கு நீ வழங்கும் அழியாத வெற்றியும் நின்னுடனேயே செல்லுமாறு கல்லாயினாய்.

''கல்லாயு மேறெதிர்ந்து காண்டற் கெளிவந்த
வல்லான் படலைக்கு வம்மினோ—வெல்புகழாற்
சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரிய மெல்லாந் தொட' '[55]

என்பதும் அது.

கால்கோள்—கல்லுறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் அவன் ஆண்டு வருவதற்குக் கால்கோடலும் என இருவகையாம்.

உதாரணம்

''வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ—வரையறை
வாராப் பெரும்புகழ் வல்வேல் விடலைக்கு
மோராற்றாற் செய்வ துடைத்து.''[56]

இது 'வரையறை செய்யிய வம்மோ' என ஒருவனைத் தெய்வமாக நிறுத்துதற்கு இடங் கொள்ளப்பட்டமையானும் அவ்விடத்துக் கால்கோடலானும் கால்கோள்.

''காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து காலகொண்மி
னாளை வரக்கடவ நாள்.''[57]

இது நட்டுக் கால்கொண்டது.

---

55. வெல் புகழாளனின் சீர் இயன்ற பாடலை யாம்பாட நீவிர் இசைக் கருவிகளை இயக்குதற்கு, எதிர்ந்த ஏறுகளை வென்று கல்லாயின பின்பும் நாம் காணுதற்கு எளிமையாகக் கல்லுருவில் வந்த வல்லாளனின் படலை (மாலை) சூட்டு விழாவுக்கு வம்மின்.

56. அளவுக்குட் படாத புகழுடைய வீரனுக்கு ஒருவாறு புகழை அளவு படுத்தவேண்டியுளதாதலின், மலைப் பாறைகளாகச் சூழ்ந்துள்ள இடத்தில் ஒரு பெரிய கல்லை அளவு கொண்டு நிறுத்த வீரர்காள்! வம்மின்.

57. நாளை வரக்கூடிய நல்ல நாளில் வானுலகு சென்ற வீரனுக்குக் காப்பு நூல் கட்டி, நீராட்டி, பூப்பலி செய்து புகை போட்டுக் கல்லைக் காணுங்கள்.

''இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லி னாட்பலி யூட்டி
நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்
றரவுரை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்க ணோக்கா திரவலர்க்
கருகா தீயும் வண்மை
யுரைசா னெடுந்தகை யோம்பு மூரே.''[58]

(புறம்—329)

இதன் கண்ணும் அது வந்தவாறு காண்க.

நீர்ப்படை—கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டியவழி நீராட்டுதலுமென இருவகையாம்.

உதாரணம்

''வாளமர் வீழ்ந்த மறவோன்கல் லீர்த்தொழுக்கிக்
கேளி ரடையக் கிளர்ந்தெழுந்து—நீள்விசும்பிற்
கார்ப்படுத்த வல்லேறு போலக் கழலோன்க
னீர்ப்படுத்தார் கண்ணீரி னின்று.''[59]

இது நீர்ப்படை.

''பல்லா பெயர்த்து நல்வழிப் படர்ந்தோன்
கல்சொரிந் தாட்டிய நீரே தொல்லை

---

58. நாளும் தன்னாற் புரக்கப்படுவார் துன்பம் பாராது அவ்விரவலர்க்குச் சுருங்காது நிறையக் கொடுக்கும் வண்மையால் புகழ் அமைந்த நெடுந்தகையானவன் காக்கும் ஊரானது, சிற்றூரில் கல்நாட்டி பலியூட்டி நீராட்டி நெய்யால் நறுமணம் புகைத்து மேகப் புகையுடன் அப்புகை பாவும் இருப்பிடங்களையுடையதாயினும் பாம்புகள் உறையும் புற்றுப் போலவும் வீரர் உறையும் ஊராகும்.

59. வீர உறவினர் கிளர்ந்து எழுந்து வாட்போரில் வீழ்ந்த மறவனுக்குக் கல்லை வெட்டி ஒழுங்குபடுத்தி வலிய ஏற்றை வானத்து மேகத்தில் முழுக்கியதுபோலத் தாம் கண்ணீரில் நின்று அக்கல்லை நீர்ப்படுத்தினார்.

வான்வழங்கு நீரினுந் தூய்தே யதனாற்
கண்ணீ ரருவியுங் கழீஇத்
தெண்ணீ ராடுமின் நீர்த்தமா மதுவே.''[60]

இது நாட்டி நீராட்டியது.

நடுதல்—கல்லினை நடுதலும், அக் கல்லின் கண் மறவனை நடுதலுமென இருவகையாம்:

உதாரணம்

''சீர்த்த துகளிற்றாய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்—போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் பெயர்பொறித்துக்
கன்னட்டார் கல்சூழ் கடத்து.''[61]

இது கல் நாட்டியது.

''கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலோய்—நாள்வாய்த்
திடைகொள லின்றி யெழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டு மகிழ்ந்து.''[62]

இது மறவனை நாட்டியது.

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை—அவன் செய்த புகழைத் தகும்படி பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புகளைப் படைத்தலுமென இருவகையாம்:

---

60. ஆநிரை பல கவர்ந்து மேலுலகம் சென்ற வீரனின் கல்லில் சொரிந்த நீரே மழை நீரினும் தூயதாம்; ஆதலின் கேளிரே! நீவிர் நும் கண்ணீராகிய அருவியையும் கழுவித் தெளிந்த நீரில் ஆடுவீராக.

61. குற்றமற்றதாகித் தெய்வச் சிறப்படையுமாறு நீர்ப் படுத்த வேண்டிப் போரில் வேந்தரை வென்ற வீரனுக்கு அவன் பெயர் பொறித்துக் காட்டில் கல் நட்டார்.

62. சிங்கம் போல் அரசர் குதிரைகளை எறிந்து வாட்போரில் வெற்றி கொண்டு வீழ்ந்த வீரனே! நல்ல நாள் வாய்த்துக் காலம் தாழ்த்தலின்றி நின்புகழ் எழுத்துள்ள நினக்கெடுத்த இக்கல்லில் மகிழ்ந்து நீ அமர்தல் வேண்டும்.

உதாரணம்

''கைவினை மாக்கள் கலுழக்க ணோக்கிழந்து
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்—மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது.''[63]

இது பெயர் முதலியன பொறித்தது.

''அன்றுகொ ளாபெயர்த் தாரமரில் வீழ்ந்தோன்கற்
கின்றுகொள் பல்லா னினமெல்லாங்—குன்றாமற்
செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ பீடம் வகுத்து.''[64]

இஃது அதற்குச் சிறப்புப் படைத்தது.

வாழ்த்தல்—கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலுமென இருவகையாம்:

(உ-ம்) ''ஆவாழ் குழக்கன்றுய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுக—லோவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் புலிபொறித்த
பொற்கோட் டிமயமே போன்று.''[65]

இது கல்வாழ்த்து.

'பெருங்களிற்றடியில்' என்னும் புறப்பாட்டில் 'தொழாதனை கழித லோம்புமதி' என வாழ்த்தியவாறு காண்க.

---

63. சிலை வடிக்கும் மாக்கள் எதிர் மறவர் பிணங்களை விளங்கச் செய்து அவர்தம் வாளிற்பட்டு வீழ்ந்த மறவனுக்குச் சூழ்ந்து எடுத்த கல்லின் மேல் செய்திறம் விளங்க அவனின் பிற பெயர் புகழ்களை மிகவும் பொறித் தலைச் செய்தார்.

64. அன்று ஆநிரைகளைக் கவர்ந்து போரில்பட்ட வீரனுக்கு எடுத்த கல்லுக்கு இன்று கொண்டுவந்த ஆநிரைகளைக் குறையாமல் கொடுங்கள். எதிரே பீடம் அமைத்து அதில் சிறப்பாகத் தீபம் வையுங்கள்.

65. ஆவுடன் வாழும் இளங்கன்றுகளை உய்வித்துப் போர்க் களத்து இறந்த நீ வேந்தன்புலி பொறித்த இமயமலை வாழ்வது போன்று வாழ, நின் நடுகல்லும் வாழ்வதாக.

என்றிரு மூன்றுவகையிற் கல்லொடு புணர— என்று முன்னர்க் கூறப்பட்ட அறுவகை இலக்கணத்தையுடைய கல்லொடு பின்னரும் அறுவகை இலக்கணத்தையுடைய கற்கூட, சொல்லப்பட்ட — இக்கூறப்பட்ட பொதுவியல்,[66] எழுமூன்று துறைத்து—இருபத்தொரு துறையினையுடைத்து என்றவாறு.

ஆரமரோட்டல் முதலிய எழுதுறைக்குரிய மரபினையுடைய கரந்தையும் அக்கரந்தையே யன்றி முற்கூறிய கல்லோடே பிற்கூறிய கல்லுங் கூடக் காந்தளும் பூவும் வள்ளியும் கழனிலையும் உன்னநிலையும் பூவை நிலையும் உளப்பட இச்சொல்லப்பட்ட பொதுவியல் இருபத்தொரு துறையினையுடைத்தெனக் கூட்டுக.[67]

மாயோனிறம் போலும் பூவைப் பூ நிறமென்று பொருவுதல் பூவைநிலையென்றால் ஏனையோர் நிறத்தொடு பொருந்தும் பூக்களையும் பொருவுதல் கூறல் வேண்டும்; ஆசிரியர் அவை கூறாமையின் அது புலனெறி வழக்கமன்மை யுணர்க.

இதனுட் கரந்தைப் பகுதி ஏழும் வேறு கூறினார், காட்டகத்து மறவர்க்குங் குறுநில மன்னர்க்கும் அரசன் படையாளர் தாமே செய்தற்கும் உரிமையின். கற்பகுதி வேத்தியற் புறத்திணைக்கும் பொதுவாகலின் வேறு கூறினார், ஏனைய அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகலின் வேறு கூறினார்.

இனித் 'துறை' யென்றதனால் ஒன்று பலவாம். கற் காணச் சேறலும் இடைப்புலத்துச் சொல்லுவனவும் கண்டுழி யிரங்குவனவும்[68] கையறுநிலையும் பாணர் கூத்தர் முதலியோர்க் குரைப்பனவும் அவர் தமக்கு உரைப்பனவும் போல்வன கற்காண்டலின் பகுதியாய் அடங்கும்; கால்கொள்ளுங் காலத்து மாலையும் மலரும் மதுவுஞ் சாந்தும் முதலியன கொடுத்தலும் அனையோற்கு இனையகல் தகுமென்றலும் தமர் பரிந்திரங்கலும் முதலியன கால்கோளின் பகுதியாய் அடங்கும்; நீர்ப்படுக்குங்காற் ஈர்த்துக் கொண்டொழுக்கலும்[69] ஏற்றிய சகடத்தினின்று இழிந்த

---

66. சொல்லப்பட்ட என்பதற்கு வினையாலணையும் பெயராகச் சொல்லப்பட்டனவாகிய பொதுவியல் என்றார்.

67. கரந்தை 7, கல் 6, காந்தள் 1, பூ 3, வள்ளி 1, கழனிலை 1, உன்னநிலை 1, பூவை நிலை 1, = 21.

68. இரங்குதலாவது வீரனின் வீரம் நினைந்து இரங்குதல்.

69. ஈர்த்துக்கொண்டு ஒழுக்கல்—கல்லைச் சகடத்தில் ஏற்றி இழுத்துச் செல்லுதல்.

வழி[70] ஆர்த்தலும் அவர் தாயங்[71] கூறலும் முதலியன நீர்ப்படையாய் அடங்கும்; நடுதற்கண் மடையும் மலரும் மதுவும் முதலியன கொடுத்துப் பீலித் தொடையலும் மாலையும் நாற்றிப் பல்லியம் இயம்ப விழவுச் செய்யுஞ் சிறப்பெல்லாம் நடுதலாய் அடங்கும்; பெயரும் பீடும் எழுதுங்காலும் இப்பகுதிகள் கொள்க; நாட்டப் படுங் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புக் களும் படைத்தல் பெரும்படைப்பகுதியாய் அடங்கும்; வாழ்த்தற் கண்ணும் 'இதுதான் நெடிதுவாழ்க' எனவும் 'இதன் கண்ணே அவனின்று நிலாவுக' எனவும் பிறவுங் கூறுவனவெல்லாம் வாழ்த்துதலாய் அடங்கும்; ஏனையவற்றிற்கும் இவ்வாறே துறைப்பகுதி கூறிக்கொள்க.

இனி 'பரலுடை மருங்கிற் பதுக்கை' என்னும் புறப் பாட்டினுள்,

''அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்.''

(புறம்-264)

எனக் கல்நாட்டுதல் பெரும்படைக்குப் பின்னாகக் கூறிற்றா லெனின், நீர்ப்படுத்த பின்னர்க் கற்படுத்துப் பெயர் பொறித்து நாட்டுதல் காட்டு நாட்டோர் முறைமையென்பது 'சீர்த்தகு சிறப்பின்' என்பதனாற் கொள்க.

''பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்''

என அகத்திற்கு வருதலிற் பொதுவியலாயிற்று.

இவை ஒரு செய்யுட்கண் ஒன்றும் பலவும் வருதலும் அகத்தின்கண் வருதலுஞ் சுட்டி யொருவர் பெயர் கோடலுங் கொள்ளாமையும் உடையவென்று உணர்க.

இப்பொதுவியலின் பின் வஞ்சி வைத்தார், வஞ்சிக்கண்ணும் பொதுவியல் வருவனவுள என்றற்கு. அது 'வேந்து வினை முடித்தனன்' என்னும் அகப்பாட்டினுட் சுட்டி யொருவர் கூறா வஞ்சி பொதுவியலால் வந்தவாறு காண்க.

(5)

70. இழிந்தவழி—இறக்கியவழி.

71. தாயம்—கற்கு உரிமை.

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் : 5

வெறியறி சிறப்பின்........... துறைத்தே.

கருத்து : நிரை கவரும் வெட்சிக்குரிய படையியங்கரவ முதலிய துறை பதினான்கு முன்கூறி, அஃதல்லாத 'கொடி நிலை', 'கொற்றவை நிலை' போன்ற போர்த் துவக்க வெட்சி வகையின் துறை இருபத்தொன்று இதில் விளக்கப்படுகின்றன.

(வெட்சி வகையுள் சிறந்த ஆகோளையும் அதன் துறை பதினான்கையும் முதல் மூன்று சூத்திரங்களில் விளக்கி, பிறகு போர்த் துவக்கத் திணையாகிய வெட்சியில் சிறந்து வரும் ஆகோளே யன்றிப் பொதுவாக வரும் கொற்றவை நிலை போன்ற வேறு வெட்சிவகை யுண்மை இதன்முன் சூத்திரத்தில் கூறப்பட்டது. அப்பிற வெட்சி வகைகளுக்குரிய துறைகளை இது சுட்டுகின்றது.)

பொருள் : (1) வெறி யறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட் டயர்த்த காந்தளும்—குறித்த போரில் கொற்றம் கருதிச் 'செறுமிகு சேயா'ன முருகனை முதலில் பரவி, அவனுக் குரிய களியாட்டில் குறியுணர்ந்து கூறும் சிறப்பினையுடைய விரும்பத்தகும் வாய்ப்புணர்த்தும் வேலன் ஆடும் காந்தளும்.

(இவ் வெட்சிக்கு நேரான குறிஞ்சித்திணையில் தன் களவை மறைத்துத் தனிமை யாற்றாது தளரும் தலைவியின் மெலிவு கண்ட தாயர் உண்மை யுணரவேண்டிக் குறிசொல்ல விரும்பி யழைக்கும் வேலனது வெறியாட்டு அகத்தைச் சார்ந்தது. அதனின் வேறாயது அக்குறிஞ்சிக்குப் புறனான வெட்சியில் வரும் துறையான வேலன் வெறியாட்டு என்பதை விளக்கவே இதுவெறியாட்டு என்னாது, வெறியாடும் வேலன் விரும்பிச் சூடும் பூவின் பேரால் காந்தளெனக் குறிக்கப்பட்டது. எனவே, வேலன் வெறியாட்டு குறிஞ்சிக்கும் வெட்சிக்கும் பொதுவாயினும், வெட்சித்துறை வெறியாட்டில் வேலன் காந்தள் சூடி ஆடுவன்; குறிஞ்சித் துறையில் வெறியாடும் வேலன் குறிஞ்சிப்பூச் சூடுதல் மரபு. இதனை மதுரைக் காஞ்சியில் புறத்தில் அகத்துறையாக,

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்னியம் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடி

எனவரும் அடிகளானு மறிக.

(2, 3, 4) உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டி யேந்து புகழ்ப் போந்தை, வேம்பே, ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்—மாறுகொண்ட இருவேந்தர் பெரும்படை மறவர் தம்மை மலைவின்றித் தமரும் பிறரும் எளிதில் அறியும் வண்ணம் அடையாளமாகச் சூடும் சேரரது பனை, பாண்டியரின் வேம்பு, சோழர்தம் ஆத்தி என முறையே புகழோங்கி வரூஉம் பூக்களின் பேராலாய துறை மூன்றும்.

இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்,
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ஆர் கண்ணிக் கரிகால் வளவன்

எனவரும் பொருநராற்றுப்படை அடிகளில் 'போந்தை' 'வேம்பு' 'ஆர்' எனும் அடையாளப்பூ மூன்றும் அமரில் சூடும் பரிசு குறிக்கப்படுதல் காண்க.

(5) வாடா வள்ளி—வாடுங்கொடி யல்லாத வள்ளி யென்னும் பெயருடைய கூத்தும்;

('வள்ளி' என்பது வாடும் ஒரு கொடிக்கும் ஆடும் ஒருவகைக் கூத்துக்கும் பொதுப் பெயராதலால், ஓடாப் பூட்கை, வாடா வஞ்சி என்பன போல, கொடியை நீக்கிக் கூத்தைச் சுட்டும் பொருட்டு இங்கு ''வாடா வள்ளி'' எனக் கூறப்பட்டது.)

முருகனைப் பரசி வேல னாடுவது காந்தள்; அக்கடவுளைப் பாடிப் பெண்டிர் ஆடும் கூத்து வள்ளி. இது, மகளிர் மக்கட்டலைவனைப் புகழ்ந்து பாடும் உலக்கைப் பாட்டாகிய வள்ளி போலாது, காந்தளைப் போலவே 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்.' இவ்வியலில் பின்வரும் 'கொடிநிலை காந்தள் வள்ளி என்ற.........கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' எனும் சூத்திரத்தானும் இவ்வியல்பு விளங்கும்.

பன்மர நீளிடைப் போகி, நன்னகர்
விண்தோய் மாடத்து விளங்குசுவர் உடுத்த

வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை

எனவரும் பெரும்பாணாற்றுப்படை அடிகளில் விண்ணுற வோங்கி விளங்கும் மதில் சூழ்ந்த மாடங்கள் நிறைந்த ஊர்களிலும் புற நாடுகளிலும் கடவுளைப் பரசிப் பெண்டிர் ஆடும் வள்ளிக் கூத்தின் வளப்பம் குறிக்கப்படுவதறிக.

(6) வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை—வென்றி மறவர் புகழும் புறங்கொடாவீறு குறிக்கப் பொருநர் காலில் அணியும் கழல் நிலையும்;

('கழல்' என்பது போர் வென்றிப் பெருமிதக் குறியாக மறம் பேணுந் திறலுடையார் காலில்பூணும் ஒரு அணி வகை. இதில் எண்ணும்மை தொக்கது.)

ஓடாத் தானை ஒண்தொழிற் கழற்கால்
செவ்வரை நாடன்.........

எனும் பெரும்பாணாற்றுப்படை அடிகளில், மறக்குறியாகத் தானை காலில் கழலணியும் பரிசு கூறப்படுதல் காண்க.

(7) ஓடா உடல் வேந்து உளப்பட அடுக்கிய உன்ன நிலையும்—பின்வாங்காது மலையும் வேந்தன் வெற்றியை உளத் தெண்ணி, சார்த்து வகையால் உன்ன மரத்தில் நிமித்தங் கொள்ளும் உன்ன நிலையும்;

('உடல் வேந்து' என்பது பொருபடை என்பது போன்ற தோர் வினைத்தொகை; உடலும் வேந்து என விரியும். உடலுதல்—சினந்து பொருதல்; பகைத்தலுமாம்.)

உன்னம்—சிற்றிலையும் பொற்பூவுமுள்ளதோர் மரவகை. பண்டைத் தமிழ் மறவர் போர்க்கெழுமுன் உன்னமரக் கோட்டில் மாலைகளை அடுக்கி நிமித்தங்கொள்ளுவது வழக்காறு. (இனி, குறிபார்ப்பவர் தம் மன்னற்கு ஆக்கம் எனின் அம்மரக்கோடு தழைவதும், கேடுளதேல் அழிவதும் ஆகிய ஒரு கடவுட் டன்மை யுண்டென்றும், அதனால் பொருநர் போருக்குமுன் அம்மரத்தைப் பரசிக் குறி கேட்பரென்றும், அவ்வாறு கேட்டலே உன்ன நிலை யென்றும் உரைப்பாருமுளர்.)

"முன்னங் குழையவும் கோடெலா மொய்தளிரின்
றுன்னங் குழையொலித் தோங்குவாய்—மன்னரைக்

கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்று களங் கொள்ளுமேல் வேந்து''

எனும் பழம்பாட்டு இவ்வுன்ன நிலைத் துறையை விளக்குதலறிக.

(8) மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பில் தாவா விழுப் புகழ்ப் பூவை நிலையும்—மாயோன் விரும்பும் நிலைத்த பெரிய சிறப்பினையுடைய கெடாத உயர்ந்த புகழினைக் குறிக்கும் காயாமலரால் நிமித்தங்கொள்ளும் பூவை நிலை யென்னும் துறையும்;

உன்ன மரக்கோட்டால் நிமித்தங் கொள்ளுவது போலத் தானைமறவர் காயம் பூவால் நிமித்தங்கொள்ளும் ஒரு பழவழக் குண்டு.

பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்

என்னும் வெண்பாமாலைப் பாட்டாலும் அது விளக்கமாகும்.

(பிற்காலத்தில், 'பூவைநிலை' சிறப்பாக மாயோனையும் பொது வகையில் பிற கடவுளரையும் ஒரு தலைமகனுக்கு ஒப்பிடும் துறையாகக் கருதப்பட்டு வருகிறது. இப்பொருளுக்கு,

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்

எனும் நக்கீரர் புறப்பாட்டை மேற்கோளாகக் கொள்ளுவர். இதில் பாண்டியன் நன்மாறனைக் கண்ணுதற் கடவுள், பலராமன், திருமால், செவ்வேள் என்னும் நான்கு கடவுளர்க்கும் ஒப்புக் காட்டிப் புகழ்வதால், இப்பாட்டு, பூவை நிலைத் துறைக்குச் சிறந்த பாட்டு எனக் கொள்ளப்படுகிறது. சிலப்பதி காரம் ஆய்ச்சியர் குரவையில் வரும் உள்வரி 3-உம் முறையே பாண்டியன், சோழன், சேரன் ஆகிய மூவேந்தரையும் தனித் தனியே திருமாலுக்கு ஒப்புக் கூறுதலால். அவையும் பூவை நிலையாம் என்பர்.)

9) ஆரமர் ஓட்டலும்—நிரை கவர்ந்த படை மறவரைக் கரந்தைப் பொருநர் வென்று புறம் கொடுத்தோடச் செய்தலும்;

ஈண்டும் உம்மை தொக்கது. (இதில் 'அமர்' என்பது அமர் புரிபவருக்கு ஆகுபெயர்; 'வட வாரியரொடு வண்டமிழ்

மயக்கத்து' எனும் காட்சிக் காதையடியினும், 'வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம், தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாம் என' என்னும் கால்கோட்காதையடியிலும்; 'தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானம்' எனவரும் குடபுலவியனார் புறப் பாட்டடியிலும், 'கொண்டிமிகைபடத் தண்டமிழ் செறித்து' எனும் கபிலரின் 7ஆம் பத்தின் 3ஆம் பாட்டு அடியிலும், 'தமிழ்' என்பது தமிழ்ப் படைக்கு ஆகுபெயராய் நிற்பதுபோல, ஈண்டு அமரென்பது தானைப் பொருநரைச் சுட்டுதல் வெளிப் படை.

ஆரமர் ஓட்டல் எனப் பொதுப்பட நிற்றலால், நிரை கொண்டார் மீட்கவரும் மறவரை ஓட்டுதலும், மீட்பவர் நிரை கவர்ந்தவரை வென்றோட்டலுமாகிய இரண்டனையும் இத் தொடர் குறிக்குமெனப் பிறர் உரை கூறினர். நிரை கொள்ளும் வெட்சி மறவர் மீட்போரை வென்றழிக்கும் பரிசெல்லாம் முன் வெட்சிவகை ஆகோளின் துறைகளுள் அடங்கக் கூறுதலானும், அதை விலக்கிக் கரந்தை முதலிய பிறவகை வெட்சித் துறைகளே இதிற் கூறவேண்டுதலானும் இதையடுத்த துறை கவரப்பட்ட நிரையை மீட்டுத் தருதலாதலின் கொண்டோரை வென்றன்றி ஆபெயர்த்துத் தருதல் கூடாமையானும், ஈண்டு ''ஆரமர் ஓட்டல்'' ஆகோள் மறவர் வென்றி குறியாது அவரை வென் றோட்டும் கரந்தைப் பொருநரையே குறிப்ப தொருதலை. அன்றியும், 'ஆரமரோட்டல்' முதல் 'நெடுமொழி தன்னொடு புணர்த்தல்' வரை குறிக்கப்படும் துறையனைத்தும் 'அனைக்குரி மரபினது கரந்தை' எனத் தெளிக்கப்படுதலானும் இது கரந்தைத் துறையே யாம்.)

(10) ஆபெயர்த்துத் தருதலும் — பகைவர் கவர்ந்த நிரையைக் காவலர் கரந்தை குடிப்பொருது மீட்டுத் தருதலும்;

(அமரோட்டலும் ஆபெயர்த்தலும் நிரைமீட்கும் கரந்தைப் பொருநர் வினையாதலானும், கவர்ந்த மறவரைவென்று ஓட்டினாலொழிய நிரை மீட்டல் கூடாமையானும் இவையிரண்டும் காரணகாரிய முறையில் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிகழும் பெற்றியவாகும்.)

> கரந்தை நீடிய வறிந்துமாறு செருவிற்
> பல்லான் இனநிரை தழீஇய வில்லோர்க்
> கொடுஞ்சிறைக் குரீஇப்பருந் தார்ப்பத்
> தடிந்துமாறு பெயர்த்தஇக் கருங்கை வாளே

எனவரும் ஔவையார் புறப்பாட்டும்,

..........................கன்றொரு
கறவைதந்து பகைவர் ஓட்டிய நெடுந்தகை

எனும் 264ஆம் புறப்பாட்டும், ஆரமரோட்டல் ஆபெயர்த்துத் தருதல் எனுமிரு துறைகளையும் ஒரு பரிசாய் ஒருங்கு கூறுதல் காண்க. ('வளரத் தூடியினும்' எனும் வடமோதங்கிழார் புறப் பாட்டிலும் இவ்விரு துறைகளும் ஒருங்கு வருதல் அறிக.)

(11) சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலும்—மீட்சி மறவர் தம்வேந்தர் பெருமையை மீக்கூறுதலும்.)

(இதுவும் கரந்தை வகையாதலால், மீட்போர் தம் வேந்தனை மீக்கூறுதலையே குறிப்பதாகும்.

''என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்; பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.''

(குறள்-771)

''பறைநிறை கொல்யானை பஞ்சவர்க்குப் பாங்காய்
முறைமுறையின் உய்யாதார் தேயம்—முறைமுறையின்
ஆன்போய் அறிவையர்போய் ஆடவர்போய் யாயீன்ற
ஈன்போய் உறையும் இடம்.''

(முத்தொள்ளாயிரத்திரட்டு செய் 9)

இவ்விரண்டு பாட்டுக்களிலும், மறவர் தம்வேந்தன் சிறப்புக் கூறுதல் காண்க.

(12) தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்-தத்தம் தலைமைத்தாம் முயற்சியின் திறல் குறித்துத் தற்புகழ்ந்து வஞ்சினம் கூறுதலும்;

(நெடுமொழி — தற்புகழ்ச்சி; தருக்கிய வஞ்சினமுமாம். 'மடங்கலிற் சினைஇ' எனும் பூதப்பாண்டியன் (71 ஆம்) புறப்பாட்டும், 'நகுதக்கனரே' எனும் நெடுஞ்செழியன் (புறம்-72) பாட்டும்; 'மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி' எனும் நலங்கிள்ளி (புறம்-73) பாட்டும், ஆக மூன்றிலும் வேந்தன் தற்புகழ்ந்து வஞ்சினம் கூறுதல் விளக்கப்படுகின்றது. இனி, 'கந்துமுனிந் துயிர்க்கும்' எனும் மூலங்கிழார் புறப்பாட்டில்,

........................வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பில்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடு மொழி.................

எனவரும் அடிகளில், பொருநர் போர்க்குமுன் ஊர்க்குள் நெடு மொழி கூறும் வழக்குண்மை சுட்டல் அறிக.)

(13) அனைக்குரி மரபினது கரந்தை, அன்றியும்-அத் தன்மைக்குரிய முறையால் வரும் நிரைமீட்சித் துறைவகை யெல்லாமும் கரந்தை வகையாகும், அல்லாமலும்;

(அனைத்துச் சொல் அத்தன்மைத்து எனப் பொருள் படுதல், 'அனைத்தாகப் புக்கியோய்' எனும் 78ஆம் கலிப்பாட்டில் வருதலலாறிக. அனைத்துக்கு என நிற்கற்பாலது அனைக்கு எனக் குறுகியது, செய்யுளிசை நோக்கி; மனத்துக்கு என்பது மனக்கு எனவும், போருளதனைத்தும் என்பது போருளதனையும் எனவும், கம்பர் பாட்டுக்களில் இசை நோக்கிக் குறுகி வருதலும் காண்க.

இனி, ஆரம ரோட்டல் முதல் கூறிய நான்கும் நிரை மீட்சிக்கே வுரியவாதலின், அவற்றைக் 'கரந்தை' என ஒருங்கு தொகுத்து, இதிற் கூறும் பிறவெட்சித் துறைகளினின்றும் வேறு பிரித்ததன் குறிப்பு 'அன்றியும்' எனுஞ் சொல்லிடைப்பெய்து விளக்கப்பட்டது. பின்னைய பிள்ளை நிலை இரண்டும் பிள்ளை யாட்டு ஒன்றும் ஆக மூன்றும் கரந்தையேயன்றி பிறவற்றிற்கும் ஏற்குமாதலின், அவை கரந்தைத் தொகுதியிற் கூட்டப்படாமல் வேறு பிரித்துக் கூறப்பட்டன. இதில் 'கரந்தை' என்பது தனித் துறையாகாமல் நிரைமீட்சித் துறை பலவற்றிற்குப் பொதுப் பெயராய்க் குறிக்கப்பட்டது. கரந்தை வெட்சித்திணை வகை யாய்ப் பல துறைகளைத் தன்னுள் அடக்கி நிற்பதல்லாமல் தனித்தொரு துறையாகாமையால், அதற்குத் தனித்து மேற் கோட் செய்யுள் கூறுமாறில்லை. வெட்சியொடு கரந்தையை மயங்கவைக்கும் நச்சினார்க்கினியரும், கரந்தை வெட்சித் திணையாகாது எனக் கூறுகின்றார்.

'கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரைமீட்டோர் பூச்சூடுதலாற் பேராதலின், வெட்சித்திணைபோல ஒழுக்கம் அன்று' என்பது இச்சூத்திரத்தின் கீழ் அவர் தரும் குறிப்பாகும். மேலும், கரந்தையை ஒரு தனித்துறையாய்க் கொள்ளின், இங்கு மொத்தம் எழுமூன்று துறைத்தே எனக் கூறியதற்கு மாறாகத் துறையெண் 22 ஆகும். அது கூடாமையால், இதில் கரந்தை யைத் தனித்துறையாய்க் கொள்ளாமல் நிரைமீட்சித் துறை களுக்குப் பொதுப் பெயராகவே கொள்ள வேண்டுமென்பது தேற்றம். எனவே இதனை ஒரு தனித்துறையாக்குதல் பொருந் தாமை வெளிப்படை.)

(14) வருதார் தாங்கல் — எதிர்த்துவரும் படையின் முன்னணியைத் தனித்து நின்று தடுத்தல்;

(தார் என்பது படையணியைக் குறிக்கும். இதுவும் கரந்தை வகையேயாம்.

''ஒன்னார் முன்னிலை முறுக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉம் என்னை''

எனும் 262ஆம் புறப்பாட்டில் இத்துறை விளக்கம் காண்க. இது எதிருன்றிப் பொரும் தும்பைத்திணைத் துறையாகாமல் வெட்சித் துறைக்குரியது என்பது 'பின்னின்று நிரையொடு வரூஉம்' எனும் குறிப்பால் தேறப்படும்.)

(15) வாள் வாய்த்துக் கவிழ்தல்—பகைவர் வாளால் பட்டு வீழ்தல்;

''ஆளும் குரிசில் உவகைக் களவென்னாம்
கேளின்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
ஆடினார் ஆர்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து''

எனும் பெரும் பொருள் விளக்கப் பழம்பாட்டில், வாட்போரில் வீழ்ந்தான் பெருமை கூறப்படுதல் காண்க.

என்று இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்—(வருதார் தாங்கல், வாள்வாய்த்துக் கவிழ்தல்) என இருதிறப்படச் சுட்டப் பட்ட பிள்ளை நிலைத் துறைகளும்;

(மேலே சிறப்பாகக் கரந்தை வகை நான்கு கூறி அவற்றைத் தொகுத்துப் பொதுவாகக் கரந்தையெனக் கூறியதுபோல, இங்குத் தார் தாங்கல், கவிழ்தல் எனும் இருவகைத் துறைகளும் 'பிள்ளைநிலை' என்பதன் வகைகளாம் என்பதை விளக்கி இவ் விரண்டின் பின் 'இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்' என்று அவற்றின் தொகையும் பொதுப்பெயரும் கூறப்பட்டன. அஃதன்றிப் பிள்ளைநிலை எனத் தனித்தொரு துறையின்மை யால், துறை எழுமூன்றில் இது தனித் தெண் பெறாது.)

(16) வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடவற்கருளிய பிள்ளையாட்டும்— (ஆகோளல்லாத வெட்சிப் போரில்) வாளால் பொருது வென்று வந்தவனை உவந்து முரசொலிக்க நாட்டை அவனுக்குப் பரிசிலாய் அளிக்கும் பிள்ளை யாட்டென்னும் துறையும்;

(தனக்கு வெற்றி தந்த வீரனை வேந்தன் நாடுதவிப் பாராட்டுதல் நன்றி மறவா மறக்கடனாகும். இதற்கு வாட் போரில் இறந்த மறவனுக்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டென்று இளம்பூரணர் உரை கூறுவர். இதில் 'எழுந்தோனை' என்றதனால் இறவாமை தெளியப்படும்; இறந் தானை எழுந்தோனென்பது மரபன்று. அன்றியும் போரில் இறந்தவர்க்குத் துறக்க நாடு அருளுபவர் அவனைக் கொன்ற பகைவராவரன்றி இறந்த பொருநனின் வேந்தன் ஆகான். புறந் தராது பொருதுகளத்துயிர் கொடுத்தவனைத் தமரும் பகைவரும் பாராட்டிப் பரிந்திரங்குவர். அவன் இறந்தமைக்கு மகிழ்வது நன் மக்களியல் பன்று. ஈண்டு 'மகிழ்ந்து நாடவர்க் கருளிய' பரிசு கூறுதலானும், அஃதுரையன்மை ஒருதலையாம்.

> ''வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
> புன்தலை யொள்வாட் புதல்வர்க்கண்—டன்புற்றுக்
> கான்கெழு நாடு கொடுத்தான் கருதார்க்கு
> வான்கெழு நாடு வர''

என வரும் பழம் பாட்டும் இளம்பூரணர் உரையை மறுத்துப் பகைவர் வானொடு பெற வென்று வந்தவர்க்குப் பரிசிலாய் மன்னன் மண்ணாடு கொடுக்கும் பரிசே குறிப்பதறிக.)

(16 முதல் 21) காட்சி—பொருது வீழ்ந்தார்க்கு நடுதற் பொருட்டுத் தக்கதோர் கல்லைத் தேர்ந்து காணல்; கால்கோள்—தேர்ந்து கண்ட கல்லைக் கொணர்தல்; நீர்ப்படை—விழாவொடு அக்கல்லைத் தூய நீரால் குளிப்பித்தல்; நடுதல்—பிறகு அதனை எடுத்து நடுதல்; சீர்த்தகு மரபிற் பெரும்படை—சிறந்த முறையில் நாட்டிய கல்லுக்கு மிக்க பலியுணவு படைத்தல், வாழ்த்தல்—அவ் வாறு கடவுளேற்றிப் பலியூட்டிய அக்கல்லைப் பழிச்சுதல்; என்று இரு மூன்று வகையில் கல்லொடு புணர—இவ்வாறு அறுதிறப் படும் நடுகல் துறைகளோடு சேர்ந்து;

(இதில் புணர்ந்து என்னும் எச்சம் புணர என நின்றது. அன்றி, நின்றாங்கே கொண்டு, சேர எனப்பொருள் கொள்ளினும் அமையும்.)

இவையாறும் 'நடுகல்' வகைகளாய் விழவொடு வரூஉம் துறைகளாதலின், இவற்றைக் கல்லொடு என ஒடுக்கொடுத்துப் பிரித்து, 'இரு மூன்று வகையிற் கல்லொடு புணர' என எண் வேறு கொடுத்துத் தொகுக்கப்பட்டன.

போரில் புகழொடு பட்டானைப் பாராட்டிக் கல்நட்டு விழவொடு பழிச்சுதல் பண்டைத் தமிழர் வழக்காகும். 'பெருங்களிற் றடியில்' எனத் தொடங்கும் புறப்பாட்டில் (263)

"...................................
தொழாதனை கழிதல் ஓம்புதி.........
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லை"

என வருவதால், அமரில் பட்ட பொருநர்க்குத் தமர் கல்நட்டு வழிபடும் பழைய மரபு விளங்கும்.

"பரலுடை மருங்கில் பதுக்கை சேர்த்தி
மரல்வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்"

எனும் 264ஆம் புறப்பாட்டிலும் இறந்த மறவனுக்குப் பெயர் பொறித்துக் கல்நாட்டும் பண்டை வழக்கம் குறிக்கப்படு கின்றது.

சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே—கூறப்பட்ட ஆகோள் அல்லாத வெட்சிவகைத் துறைகள் இருபத்தொன்று ஆகும்.

(இதில் ஏகாரம் அசை. துறை ஒவ்வொன்றனோடும் வரும் உம்மை எண்ணும்மை.)

(5)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் கரந்தைத்திணைத் துறைகள் கூறுவதாக இளம்பூரணரும், கரந்தையோடு வெட்சித் துறைகளைத் தன்னுறு தொழிலாகவும் அதனால் அவை வழுவாகவும் அமைக்கின்றன என நச்சினார்க்கினியரும், போர்த் துவக்க வெட்சி வகையின் துறை கூறுவதாகப் பாரதியாரும் கூறுவர். ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும் வேந்தன் சிறப்புரைத்தலும் நெடுமொழி புணர்த்தலும் ஆகிய நான்கும் அளவுக்குரி மரபின் கரந்தையென ஆசிரியரே கூறிவிட்டமையின் அந்நான்குமே கரந்தைக்குரியன ஆதலின் மற்றையன யாவும் எல்லாத் திணைக்கும் உரிய பொது வியல் பாற்படும். அந்நான்கிலும் ஆபெயர்த்துத் தருதல் தவிர மற்றையனவும் பொதுவியலிலேயே அடங்கும் என்னலாம். அதனால் இச்சூத்திரம் பொதுவியல் கூறுகின்றது என்க.

அன்றியும் திணைப் பொதுவியல் வேறு எங்கும் கூறாமையும் காண்க.

களவில் ஆநிரை கவரச் செல்வோர் வெறியாடிச் செல்வர் என்பது பொருந்தாது. ஏன் எனின் அது வேற்றுப்புல ஒற்றர்க்கு அறிய வந்து தடையாகும் ஆதலின். நிரைமீட்கச் செல்வோரும் உடன் எழுதலன்றி வெறியாடித் தெரிந்து செல்வர் என்பதும் பொருந்தாது. அவ்வாறே மகளிர் கூத்தாகிய வள்ளிக் கூத்துக்கும் கொள்க.

உன்னமரம் கண்டு நிமித்தமாகக் கூறுவோர் ஆநிரை கவர்தலும் மீட்டலும் ஆகிய போர் நிகழ்ச்சிகளைக் கண்டு கூறுவர் என்பதின்றிப் பொதுவாகக் கண்ட காலத்திலேயே கூறுவர் என்பதே அமைவுடையதாகும். ஆதலின் இதுவும் பிற திணைகளுக்குரியதாகும். வெட்சியார் இருவரின் வெற்றி தோல்விகளின் முடிவில் உன்னம் கண்டோர் கூறுதல் கொள்ள லாம். இதுவும் மற்றைத் திணைகளுக்கும் உரியதே என்க.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் பெரும்படை வாழ்த்து என்பனவும் எல்லாத் திணைக்கும் உரியனவே. இவை கல் நாட்டுதல் என ஒன்றாகக் கூறப்படும். இக்கல் நாட்டுதலானது தனி ஒரு வீரனின் வீரங்குறித்துச் செய்யப்படுவது. ஆதலின் போரின் முடிவில் செய்யப்படும்.

இருவகைப்பட்ட பிள்ளை நிலையும் பிள்ளையாட்டும் தனிவீரர் பற்றியன ஆதலின் திணைப் பொதுவியலில் அடங்கும்.

வெறியாட்டு என்பது வென்றி குறித்து வேலன் ஆடுவது வெட்சியார் கரந்தையார் இருவரும் போர் நிலையில் இருக்க. அவர் ஊரினர் அவர்தம் வென்றி குறித்து ஆடுவர் ஆதலின் இரண்டற்கும் அத்துறை உரியது என்னலாம். எனினும் போர் வென்றி குறித்தாடுதல் எல்லாத் திணைகளுக்கும் உரியதே. வேலன் ஆடும் வெறியாட்டை ஆசிரியர் காந்தள் எனப் பெயர் கொடுக்க வெண்பாமாலையுடையார் காந்தளாவது முருகனின் காந்தட்பூவைச் சூடுதலைச் சிறப்பிப்பது என்றார்.

> கருங்கடலுள் மாத்தடிந்தான்
> செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று
>
> (பு. வே. மா. 103)

என்பது அவர் கூறும் காந்தள் இலக்கணம். இதைப் பாடாண் படலத்தில் கூறினார். வெறியாட்டுக்கும் வள்ளிக் கூத்துக்கும் வேறுபாடில்லாமலே கூறியுள்ளார் அவர்.

வெறியாடலைப் பற்றி,

> வாலிழையோர் வினைமுடிய
> வேலனொடு வெறியாடின்று

எனக் கொளுக் கூறி விளக்கமாக

> காணில் அரனும் களிக்கும் கழல்மறவர்
> பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண்—வாணுதல்
> தான்முருகு மெய்ந்நிறீஇ தாமம் புறந்திளைப்ப
> வேன்முருகற் காடும் வெறி

எனவுரைத்தார். வள்ளி பற்றிக் கூறும்போது,

> பூண்முலையார் மனமுருக
> வேன்முருகற்கு வெறியாடின்று

எனக்கொளுக்கூறி விளக்கமாக,

> வேண்டுதியால் நீயும் விழைவ்வா விழுமிதே
> ஈண்டியம் விம்ம வினவளையார்—பூண்டயங்க
> சூலமொ டாடும் சுடர்ச்சடையான் காதலற்கு
> வேலனொ டாடும் வெறி

என்றுரைத்தார். அவர் வேலனொடு மகளிர் ஆடும் கூத்தே வெறியாட்டெனவும் வள்ளி யெனவும் படும் எனக் கருதினார் போலும். ஒரே வகையான கூத்தை இருபெயரால் குறிப்பிடுவது ஆய்வுக் குரியது. எனவே ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய திணைத் துறைகளைப் பிற்காலத்தார் தத்தமக் கேற்றவாறு ஒத்தும் வேறுபட்டும் கூறியுள்ளனர் என்னலாம். இப்படிப் பல மாறுபாடுகள் பிற்கால இலக்கண நூலாரிடத்து உள்ளன.

64. வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே.

(6)

ஆ. மொ. இல:

61. 'Vanji' is the 'Puram' of 'Mullai'

62. It is aimed at marching in advance to frighten and conquer the king who is greedy to have the land of others.

(6)

பி. இ. நூ:
இல. புறத். 7 தொல். சூத்திரமே.

இளம்பூரணர்

64. வஞ்சி தானே.........அடல்குறித் தன்றே.

இது, வஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சி முல்லையது புறன்—வஞ்சியாகிய புறத் திணை முல்லையாகிய அகத்திணைக்குப் புறனாம். எஞ்சா மண் நசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்று—அஃது ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தது.

ஒழியாத மண்ணை நச்சுதலாவது வேண்டிய அரசர்க்குக்[1] கொடாமை, ''அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர், புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்.'' (புறத்-1) என்பதனைக் கொணர்ந்து உரைத்துக் கொள்க. இவ்வுரை[2] இனி வருகின்ற திணைக்கும் ஒக்கும். அதற்கு இது புறனாகிய வாறு என்னையெனின், ''மாயோன் மேய காடுறையுலகமும்,'' (அகத்-5) கார்காலமும் முல்லைக்கு முதற்பொருளாதலானும், பகைவயிற் சேறலாகிய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டுதலானும், பருமரக்காடாகிய மலைசார்ந்த இடம் ஆகாமையானும் அதற்கு இது சிறந்ததென்க. அன்னதாகல் முல்லைப்பாட்டினுள்,

''கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப் புழைஅருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி''[3]

(முல்லை 24-28)

என்பதனானும் அறிக.

(6)

1. வேண்டிய அரசர்—தன்னை வேண்டித் தனக்கு வேண்டும் எனக்கேட்ட அரசர்.
2. இவ்வுரை—இவ்வாறு கொண்டு கூட்டும் உரை.
3. பொருள் காட்டாறு பொருந்திய அகன்ற முல்லை நிலத்தில் நெடுந்தொலைவில் மணக்கும் பிடவ மலரொடு பசிய புதர் செறிந்து துளையுடைய அருப்பம் (சிற்றரண்) சேர்த்துக் காட்டிடத்து முள்வேலியைக் காவலாக வளைத்துக் கடல்போற் பரந்த பாடி.

நச்சினார்க்கினியர்

61. வஞ்சி தானே.........புறனே.

இது தம்முள் மாறுபாடு கருதி வெட்சித்திணையை நிகழ்த்திய இருபெரு வேந்தருள் தோற்றா னொருவன் ஒருவன்மேற் செல்லும் வஞ்சித்திணை அகத்திணையுள் இன்னதற்குப் புறனா மென்கின்றது.

வஞ்சியென்றது ஒருவர் மேலொருவர் சேறலை. அதற்கு வஞ்சி சூடிச் சேறலும் உலகியல்.

இதன் பொருள் :- வஞ்சி தானே—வஞ்சியெனப்பட்ட புறத்திணை, முல்லையது புறனே—முல்லையெனப்பட்ட அகத்திணைக்குப் புறனாம் என்றவாறு.

ஏனை உழிஞை முதலியவற்றினின்று பிரித்தலின் ஏகாரம் பிரிநிலை. பாடாண்டிணைக்குப் பிரிதலின்மையிற் 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே' (80) என்ப. ஏனைய பிரித்துக் கூறுவர்.

முதலெனப்பட்ட காடுறையுலகமுங் கார்க்காலமும் அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும் அரசன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்து இருத்தலும் அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயி னிருத்தலுமாகிய உரிப்பொருளும் ஒப்பச்சேறலின், வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று.

வெஞ்சுடர் வெப்பம் நீங்கத் தண்பெயல்பெய்து நீரும் நிழலும் உணவும் பிறவும் உளவாகிய காட்டகத்துக் களிறு முதலியவற் றோடு சென்றிருத்தல் வேண்டுதலின், வஞ்சிக்கும் அம்முதல் கருவுரியும் வந்தனவாம். முல்லைப் பாட்டினுள்,

> ''கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
> சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
> வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
> விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
> படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி''[1]

என்பதனா னுணர்க.

(6)

62. எஞ்சா மண்ணசை.........தன்றே.

இது முல்லைக்குப் புறனென்ற வஞ்சித்திணை இன்ன பொருட்டென்கின்றது.

இதன் பொருள் :- எஞ்சா மண் நசை — இருபெரு வேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே, அஞ்சுதகத் தலைச்சென்று—ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதலுண்டாக அந்நாட்டிடத்தே சென்று, வேந்தனை வேந்தன் அடல் குறித்தன்—ஒரு வேந்தனை ஒரு வேந்தன் கொற்றங்கோடல் குறித்தல் மாத்திரைத்து வஞ்சித்திணை என்றவாறு.

ஒருவன் மண்ணசையான் மேற்சென்றால் அவனும் அம்மண்ணழியாமற் காத்தற்கு எதிரே வருதலின் இருவர்க்கும் மண்ணசையான் மேற்சேறல் உளதாகலின் அவ்விருவரும் வஞ்சி வேந்த ராவரென் றுணர்க. எதிர்சேறல் காஞ்சி என்பராலெனின், காஞ்சியென்பது எப்பொருட்கும் நிலையாமை கூறுதலிற் பெரிதும் ஆராய்ச்சிப்படும் பொதுவியற் பொருண்மைப் பெயராற்[1] கூற லாகாமை யுணர்க. ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதிகமான் இருந்ததாம். இங்ஙனம் இருவரும் வஞ்சிவேந்த ரெனவே மேற்கூறுந்துறை பதின்மூன்றும் இருவர்க்கும் ஒப்பக் கூறலாமென் றுணர்க.

(7)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் :6

வஞ்சி தானே.........புறனே.

கருத்து :- இது, வஞ்சிப்புறத்திணை முல்லை என்னும் அகத்திணைக்குப் புறனாம், என்கின்றது.

பொருள் :- வெளிப்படை.

குறிப்பு :- முதலேகாரம் பிரிநிலை, புறத்திணை ஏழனுள் வஞ்சியைப் பிரித்தலின், ஈற்றேகாரம் இசைநிறை; அசை எனினும் அமையும்.

---

1. காஞ்சி எல்லாத்திணைக்கும் உரிய பொதுவியல்புடைய பெயர். அதனால் எதிர்செலற்குரிய வஞ்சியின் எதிர்த் திணையாகக் கூறலாகாது.

(1) அகத்தில் தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் அல்லது வினைமேற் செல்வதுபோல, வஞ்சித் தலைவனும் தலைவியைப் பிரிந்து பகைமேற் செல்லுதலானும் (2) முல்லையிலும் வஞ்சியிலும் தலைவரைப் பிரிந்த தலைவியர் தனிமை தாங்காது வருந்திக் கற்பறம் பேணியிருப்பது பொது ஒழுக்கமாதலானும், (3) முல்லைத் தலைவர் தம் புலம்புறு தலைவியரைப் பிரிந்து செலவு மேற்கொள்வது மனையறம் பேணும் கடனிறுக்கும் பொருட்டாதல் போலவே, வஞ்சித் தலைவர் மேற்செலவும் ஆண்மையறம் பேணும் பொருட்டாதலானும், வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று.

(6)

சூத்திரம் : 7

எஞ்சா மண்ணசை.........தன்று.

கருத்து :- இது, முல்லைக்குப் புறன் என்ற வஞ்சித் திணையின் இயல்பை விளக்குகின்றது.

பொருள் :- எஞ்சா மண்ணசை வேந்தனை—தணியாத பிறர்மண் ஆசையுடைய ஒரு வேந்தனை; வேந்தன்— (அறமறமுடைய) பிறிதொரு மன்னன்; அஞ்சு தகத்தலைச் சென்று— அவன் வஞ்ச நெஞ்சம் அஞ்சுமாறு தானே (படையொடு) மேற்சென்று; அடல் குறித்தன்று - வென்றடக்குதலைச் சுட்டும் அளவிற்று வஞ்சித்திணை.

குறிப்பு :- இச்சூத்திரத்திற்கு முன்னுரைகாரர் வேறு வகையாய்ப் பொருள் கூறுவர். அவர் உரை வருமாறு: 'எஞ்சா மண்ணசை—இரு பெரு வேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே, அஞ்சுதகத் தலைச்சென்று—ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதல் உண்டாக அந்நாட்டிடத்தே சென்று, வேந்தனை வேந்தன் அடல் குறித்தன்று—ஒரு வேந்தனை ஒரு வேந்தன் கொற்றம் கோடல் குறித்தல் மாத்திரைத்து வஞ்சித் திணை என்றவாறு.

அதற்குமேல் அவர் தரும் சிறப்புரையாவது:- "ஒருவன் மண்ணசையானே மேற்சென்றால், அவனும் அம்மண்ணழியாமல் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணசையால் மேற்சேறல் உளதாகலின், அவ்விருவரும் வஞ்சி வேந்தர் ஆவர் என்றுணர்க."

இருவரை, சூத்திரச் சொல்லமைதிக்கு ஏற்காததோடு, வஞ்சியியல்பை இழிதகுபழிதரும் பிழையொழுக்கமாகவும் பண்ணுகிறது.

எஞ்சா மண்ணசை என்ற தொடர் அதை அடுத்து நிற்கும் வேந்தனை என்னும் இரண்டாம் வேற்றுமைச் சொல்லுக்கு நேரே அடையாயமைவது வெளிப்படை. அவ்வளவிற் கொள்ளாமல் அத் தொடரைப் பின் வரும் வேந்தன் என்னும் எழுவாய்ச் சொல் லுக்கும் ஏற்றி, அவன் படையெடுத்துச் செல்லுதற்குக் காரணமே மற்றவன் மண்ணிடத்து அவனுக்குள்ள வேட்கையாகுமென இவ் வுரைகாரர் விளக்குகின்றார், மன்னர் போர்கருதிப் படையெடுப் பதன் நோக்கமெல்லாம் பிறர்மண் கவரும் வேட்கைதான் எனும் கொள்கை நாகரிக உலகம் மதிக்கும் போரறமழித்துப் பழிக் கிடனாக்கும். தக்க காரணமின்றித் தவறற்ற மெலியாரின் நாட்டை வலியார் மண்வேட்கையாலே படையெடுத்துச் சென்று வென்று கவர்தலே வஞ்சித்திணை எனக் கூறுவது உயர்ந்த பழந் தமிழ் ஒழுக்கத்தைப் பழிக்கத் தகும் பிழையாக்கி முடிப்பதாகும். வலிச்செருக்கால் மெலியர் நாட்டைப் பறிப்பது உலகியலில் உண்டேனும், அதனை வெறுத்து விலக்குவதைவிட்டு வேத்தியல் அறமாக்கி வஞ்சி யொழுக்கமெனச் சிறப்பித்து ஒரு திணை வகை யாக்குவது, 'அறனறிந்து மூத்த அறிவுடைய' தொல்காப்பியர் நூற்பெருமைக் கிழுக்காகும். அஃது அவர் கருத்தன்மை அவர் சூத்திரச் சொல்லமைப்பே தெற்றெனத் தெளிக்கின்றது. இச் சூத்திரத்தில் 'எஞ்சா மண்ணசையாலிரு வேந்தர்' என்னாமல் 'எஞ்சா மண்ணசை வேந்தனை' என்றமைத்ததால் முன்னுரை காரர் பொருள் தொல்காப்பியர் கருத்தன்று என்பது தேற்ற மாகும்.

படையொடு பிறர்மேற் செல்லுதற்கு மண்ணசையே நோக்க மாயின் அது உயரொழுக்கமாகாமல் 'துன்பம் தவாஅது மேன் மேல்வரும்' இழுக்கமாகும். இனி, மண்வேட்கையால் தன் மெலிவு நோக்கியிருக்கும் பகைவனை வென்றடக்க முயலாமல் வாளாவிருப்பது ஆண்மையற மழிப்பதாகும். அதனால் தன் னாட்டின்மேல் தணியாத வேட்கையுடைய அறமற்ற அயல் மன்னன் வலிபெருக்கித் தன்மேல் வருமுன்னமே தக்க படை யொடு தான் சென்று அவனைப் பொருதடக்குவது அறிவும் அறனுமாகும். அது செய்யானை எஞ்சா மண்ணசையுடையான் வஞ்சத்தால் வலி மிகவளர்த்து வாய்த்தபோது வந்து தடிவனாகை யால், காலத்தே சென்று அத்தகைய ஆசையுடையானை வென் றடக்கி ஆண்மையற மாற்றுதல் போற்றத்தகும் ஒழுக்கமாகும். அவ்வொழுக்கமே பழந்தமிழர் கையாண்ட வஞ்சித்திணை.

அதனையே இச்சூத்திரம் விளக்குகிறது. இளம்பூரணரும் அதுவே தொல்காப்பியர் கருத்தாகக் கொண்டு இச்சூத்திரத்திற்கு 'ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை வேறொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தது' என்று நேரிய உரை கூறுகின்றார்.

இச்செம்பொருள் சூத்திரச் சொற்கிடையால் தெளிவாகவும் அதைக் கொள்ளாமல், 'எஞ்சா மண்ணசையைப் படையெடுத்துச் செல்லும் வஞ்சி வேந்தனுக்கு ஏற்றிக் கூறினது,' அறங்கருதா மறம் பேணி அயலார் மண்ணிலாசை வைத்துப் போர் மேற் கொள்ளுவதைப் போற்றத்தகும் மன்னர் ஒழுக்கமெனப் பேசும் ஒருசில வடநூற் கூற்றைப் பண்டைத் தமிழரின் இழுக்கறு போரற ஒழுக்கம் விளக்கும் இப்புறத்திணைச் சூத்திரக் கருத் தாகக் காட்ட முயலும் விருப்பின் விளைவாகும். இவ்விருப்புக் காரணமாக இடைக்கால உரைகாரர் படைத்துக் கூறும் குறிப் புரையில் ஒவ்வாத முரண்பாடுகள் மலிவதும் இயல்பாகும். 'அல்லதனை நல்லதெனச் சொல்ல வரும் அல்லல்களுக்கெல்லை யில்லை' என்பதன் உண்மையை இவர் சிறப்புரைச் செய்திகள் வலியுறுத்துகின்றன. தணியாத மண்ணசையால் மெலியார் நாட்டை வலியார் வௌவுவது மண்ணறமென்னும் ஆரியக் கொள் கையே வஞ்சித் திணையெனக் காட்டப் புகுந்து, அதை நாட்ட எழுதும் சிறப்புரையில் எழுகின்ற இடர்ப்பாடுகளைக் கருது கின்றிலர்.

1. முதலில், படையொடு செல்லும் வேந்தனை மெலியார் மண்ணில் எஞ்சாநசையால் வஞ்சி சூடினான் எனக் கூறி அவனைத் தவறுடையனாக்குங் குற்றம் மேலே குறிக்கப் பட்டது.

2. இனி, 'எஞ்சா மண்ணசை' எனும் தொடரை நின் றாங்கே அதை அடுத்த வேந்தனை எனும் செயப்படு பொரு ளாகிய இரண்டாம் வேற்றுமைச் சொல்லுக்காக்காமல், அதைத் தாண்டிப் பின்வரும் வேந்தன் எனும் எழுவாய்ச் சொல்லுக்கு அடையாக்கிப் பிறர் மண்ணாசையே போரற நோக்கம் எனும் ஆரியக் கொள்கையைப் புகுத்தலாயினர். எனின், மூலத்தில் எஞ்சா மண்ணசை வேந்தனை எனச் சொற்றொடர் நிற்பதால், மண்ணசையைப் படை எடுக்கப்படும் வேந்தனுக்கு அறவே யில்லாமல் விலக்குமாறில்லை. வலிதிற் றம் நாட்டை வௌவ வரும் பிற வேந்தனைத் தன் மண் காக்க அதற்குரியான் எதிர்ப் பது இயலறமாகவும், அவ்வாறு எதிர்க்கும் அவன் தற்காப்பு

முயற்சியும் மண்ணசை காரணமான வஞ்சியாகும் என இவ்வுரை காரர் தம் சிறப்புரையில் வற்புறுத்தினார். இதிலெழும் முரண் பாடுகளை அவர் கருதுகிலர். படையொடு வந்த பகை வேந்தனை எதிர்த்துத் தன் மண் காப்பது அறமென்று கூறும் இவரே அத்தற் காப்புப் போர் முயற்சியும் மண்ணசையால் மேற்சேரும் வஞ்சியாம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? தன்னாடு கவரவரும் பகைவனை எதிர்ப்பது அறக்கடனாகுமன்றி மண்ணாசைக் குற்ற மாகாதன்றே. பிறர்மண் வேட்கையைக் குற்றமெனக் கொள்ளா மல் மன்னருக்கு நல்லறமென்று சொல்லப் புகுவதால், இவ்வாறு வந்த பகைவனை எதிர்க்கும் தற்காப் பறப்போரையும் மண்ணசைப் போரென முறைமாறிக் கூற நேர்ந்தது.

3. மேலும் தன் நாடு கவர வந்தானைத் தற்காப்பின் பொருட்டுத் தகைப்பதை வஞ்சியெனக் கூறினதுமன்றி, மேற் சென்றானையும் எதிருன்றினானையும் ஒருசேர வஞ்சி தலைவ ராக்கினர். இது, 'வஞ்சி—மேற்செலவு' எனத் துணிந்த தமிழ் இலக்கணத்தையே தடுமாறச் செய்யுந் தவறாகும். வலிகருதி வந்த மாற்றானை எதிர்த்து மலைதல் வஞ்சியாகாமல் வேறு தும்பைத்திணையாகும் எனத் தொல்காப்பியர் தெளியக் கூறுவ தற்கு இவர் கொள்கை முழுதும் முரணாகும்.

தும்பை தானே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப.

இது தொல்காப்பியர் தரும் தும்பைத்திணை விளக்கம். எனவே, 'பிறர் நாட்டின் மேற் செல்லுதலே வஞ்சித்திணை யென்பதும், அப்படி வரும் மாற்றானை எதிர்சென்று மலைதலே தும்பைத்திணை யென்பதும் தமிழர் புறத்திணை மரபுகள்' என்று தொல்காப்பியர் ஐயமற விளக்கியுள்ளார். இத்தகைய போரறச் சிறப்பு முறையைப் போக்கிப் பொருந்தா ஆரிய முறைகளைப் புகுத்திப் புத்துரை கூற முயன்றதால் வந்த முரண்பாடுகள் இவை.

இன்னும், இத்தும்பை விளக்கம் வஞ்சியியல்பைத் தெளிவிப் பதற்கு ஒருவாறு உதவுகின்றது. மேற்செல்லும் வஞ்சி வேந்த னுக்கு வஞ்சித்திணைச் சூத்திரத்தில் அடை எதுவும் சுட்டப்பட வில்லை. அதற்கு மாறாக மண்ணசையுடைமை படையெடுக்கப் படும் வேந்தனுக்கு அடையாகக் குறிக்கப்பட்டது. அடுத்த தும்பைத்திணைச் சூத்திரத்தில் மேல் வந்த வேந்தன் படை எடுப்புக்கு மண்ணசை நோக்கம் சிறிதும் சுட்டப்படாததோடு,

படையெடுக்கப்படும் மண்ணசைவேந்தனைப் பொருதடக்கும் வலியுடைமை ஒன்றே தக்க காரணமெனவும் வலியுறுத்தப் படுகின்றது. மண்ணசையால் வந்த வேந்தன் என்னாது, வாளா 'வந்த வேந்தன்' என முன் கூறியதனோடமையாது, 'மைந்து பொருளாக வந்த வேந்தனை' என்று தும்பைச் சூத்திரம் தெளிப்பதினால், வஞ்சி வேந்தனின் பழுதற்ற போர் நோக்கம், பிறர் மண்ணசையன்று, ''அடுத்திருந்து மாணாது செய்வான் பகை, கொடுத்தும் கொளல் வேண்டு''தலின் மண்ணசையுடைய வேந்தன் ஒருவனைப் பொருதடக்கும் வலியேயாம் என்பது விளக்கமாகும். முன்னுரைகாரர் கூறுமாறு மேற்செலவுக்கு மண்ணசையைக் காரணமாக்குவது தொல்காப்பியர் கருத்தா மேல், வஞ்சிச் சூத்திரத்தில் மேற்செல்லும் வேந்தனுக்கு மண்ணசை கூறாததோடு, மீண்டும் தும்பைத்திணைச் சூத்திரத் திலும் அவனுக்கு மண்ணசை சுட்டாது' 'மைந்து பொருளாக' என வேறு ஒரு குறிப்புக் கூறியிராரன்றே. இவ்விரு சூத்திரங் களிலும் தொல்காப்பியர் மேற்செல்லும் வேந்தனுக்கு மண்ணசை நோக்கை விலக்கிப் படையெடுக்கப் படுபவனுக்கே அக்குற்ற முடைமை சுட்டியிருப்பதால், மண்ணசையை மன்னர் போரற நோக்கம் ஆக்குவதை மறுத்து வெறுக்கும் தமிழ் மரபே வலி யுறுகிறது.

(7)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் வஞ்சி முல்லைப்புறம் என்பதும் வஞ்சித்திணை யிலக்கணமும் கூறுகின்றது.

(இ-ள்) வஞ்சித்திணை முல்லைத்திணையின் புறமாகும். தன் நாட்டின் விரிவுக்குக் குறைதல் உள்ள மண்பரப்பைக் கொள்ளும் விருப்பத்தால் ஒரு வேந்தன் அக்குறைப் பரப்பினைத் தன்னாட்டகத்துக் கொண்டுள்ள வேந்தனை அஞ்சுமாறு அவ னிடம் சென்று அடுதலைக் குறித்தது வஞ்சித்திணையாம் என்ற வாறு. இது படையெடுத்துச் செல்வார்க்கு ஏற்றவுரை. இதற் கேற்ப எஞ்சு ஆம் மண் நசை வேந்தன் வேந்தனை அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்று என மாற்றுக. இனி படை யெடுத்து வரும் வேந்தனை எதிர்க்கும் வேந்தனுக்கு ஏற்பப் பொருள் கொள்ளுமாறு: தன் நாட்டின் விரிவுக்குக் குறைதல் உள்ள மண்பரப்பை நிறைவு செய்யும் விருப்பத்தால் தன்மேல் படையெடுத்து வந்த வேந்தனைப் பகைவேந்தன் அவன் அஞ்ச

அவன் மேற்சென்று அடுதலைக் குறித்தது வஞ்சித்திணை என்ற வாறு இதற்குச் சூத்திரம் கிடந்தாங்கே கொள்க.

அடுத்த சூத்திரத்து வரும் இயங்கு படையரவம் முதலிய துறைகள் இருதிற வேந்தர்க்கும் உரியன.

எஞ்சு ஆம் மண் எனக் கொள்க. எஞ்சுதல் என்பது விகுதி குறைந்து எஞ்சு என நின்றது. எஞ்சுஆம் + மண் = எஞ்சாமண் என மகரம் கெட்டு நின்றது. மண் நசை வேந்தன் என்பதற்கும் மண் நசை வேந்தனை என்பதற்கும் நசையால் என மூன்றன் உருபே விரிக்க. அடல் குறித்தலாவது வெல்லுதல் நோக்கம்.

''படையொடு பிறர்மேற் செல்லுதற்கு மண்ணாசையே நோக்கமாயின் அது உயர் ஒழுக்கம் ஆகாமல் துன்பம் தவாஅது மேன்மேல் வரும் இழுக்காகும்'' எனப் பாரதியார் கூறுவர். இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப அரசர் பிறர் மண் குறித்துப் போரிடுதல் அரச நெறியாதலின் உயர் ஒழுக்கம் அன்று என்பது பொருந்தாது. ஆதலின் தம் கொள்கைக்கேற்ப அவர்தரும் விளக்கங்களும் ஆய்வுக்குரியனவாகும்.

வஞ்சி முல்லைக்குப் புறனாயவாற்றுக்கு நச்சினார்க்கினியர் கூறும் காரணங்களே அமையும்.

முல்லைக்குக் காடுறையுலகமும் கார்காலமும் முதற்பொருள் கள். வஞ்சியார் படையெடுத்துச் செல்வதற்குப் பெரிய மரம் அடர்ந்த காட்டு மலையைக் கடந்து செல்வதினும் பரந்த நிலப் பகுதியாகிய காட்டிடம் சிறத்தலினாலும் அக்காடும் கார் காலத்துத் தளிர்விட்டுத் தழைத்துப் படைக்கு உதவியாக இருத்தலினாலும் நிலமும் பொழுதுமாகிய முதற்பொருளால் வஞ்சி முல்லைப்புறமாயிற்று. வஞ்சியார் முல்லைப் பூவும் சூடிச் செல்லுதலுடைமையால் கருப்பொருளாலும் புறனாம் தன்மை யதாயிற்று. பிரிவு காரணமாகத் தலைவனும் தலைவியும் ஆற்றி யிருப்பது போல வேந்தரும் தம் தலைவியரைப் பிரிந்து பாசறைக்கண் ஆற்றியிருத்தலும் அவர்தம் மனைவியர் ஆற்றி யிருத்தலும் உண்மையான் உரிப்பொருள் காரணமாகவும் வஞ்சி முல்லைப்புறமாயிற்று.

65. இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்

பொருள்இன்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே.

(7)

ஆ. மொ. இல:

63. The noise of the movement of the army; setting fire widely; the renown of being known (because of allies); the gifts being distributed to soldiers and poets; the victory of killing the soldiers on the border in secret; the eulogy after getting titles and rewards; the courage of deploying the army' disregarding the enemy; the renown of one who withstood the on-slaught of the enemy as a stone in the fast running mid-stream of a river; the distribution of rice in the shape of balls; the fame of the conqueror; defamation of the vanquished; the act of praising the valour of a king by sympathizing with the enemy's country for the inevitable destruction at his hands (which is called 'Korravallai') and the act of consoling and rewarding the soldiers who had fougnt and suffered (which is called 'thalinji') these total come to thirteen being very excellent.

(7)

பி. இ. நா.

பு. வெ. மா. 3

வாடா வஞ்சி வஞ்சி யரவம்
கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாள்நிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பின் கொற்ற வள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி

நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சிய்யே பெருஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி இருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையும் ஆகும்

வீர. 101.

அரவம் எடுத்தல் வயங்கியல் ஈகை விலங்கருமை
விரவு தனிச்சேவதம்வென்றி கூறல் வென்றார் விளக்கம்
நிரவும் வழிவொடு சோற்றுநிலை கொற்றவர் மெலிவும்
பரவு தழிஞ்சியென் றின்னவை வஞ்சியின் பாற்படுமே

இல. வி. 8

வாடா வஞ்சி மலைதறும் ஓடாப்
படையியங் கரவமும் குடைநாட் கோளும்
வாணாட் கோளும் பேணார் உட்கும்
கொற்றவை நிலையும் வெற்றிவேல் உழவர்
செய்தொழில் கூறிய மற்றதன் பகுதியும்
மறிதிரை யுலகம் வணங்கஎஃ குயர்த்திய
குரிசிலை வாழ்த்திய கொற்ற வஞ்சியும்
வேந்தனைப் புகழ்ந்து வேற்றுநாட் டழிபு
கூர்ந்தமைக் கிரங்கிய கொற்ற வள்ளையும்
பொரூமுறை பகையொடு பொருதவீ ரர்க்குப்
பெரிதருள் சுரந்த பேராண் வஞ்சியும்
அருந்திறை யளப்ப ஆறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்ந்த பக்கமும்
திண்ணிய வேந்தன் சிறப்புற் றோர்பெறும்
வண்மை கூறிய மாராய வஞ்சியும்
செறியலர் போர்க்களம் சென்றுதன் ஆண்மை
நெறியெடுத் தியம்பிய நெடுமொழி வஞ்சியும்
தொன்னெறி மரபின் வாட்குடித் தோன்றிய
முன்னவன் நிலைபுகல் முதுமொழி வஞ்சியும்
கூடலர் நாட்டுக் கொடிநெடு வியலூர்
ஊர்எரி யூட்டிய உழபுல வஞ்சியும்
குறுகலர் அருமுனை கொள்ளை சாற்றி
மறுகுறக் கவர்ந்த மழபுல வஞ்சியும்

நீடவும் குறுகவும் நிவப்பவும் தூக்கிப்
பாடிய பாணர்க்குப் பயந்தகொடை வஞ்சியும்
மடுத்த வேந்தற்கு வழங்குவ வழங்கிக்
குடிக்கருள் சுரந்த குறுவஞ்சி யானும்
மட்டூர் தெரியல் மறங்கெழு வேந்தன்
கட்டூர் வனகமை கட்டுரைத்த பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய ஒருதனி நிலையும்
அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்
கழிதறு கண்மைத் தழிஞ்சியும் அதாஅன்று
மதிக்குடை வேந்தன் மாற்றலர் வணங்கவும்
பதிப்பெயர் இல்லாப் பாசறை வஞ்சியும்
முன்னடை யாதார் வளங்கெழு நாட்டைப்
பின்னும்எரி யூட்டிய பெருவஞ்சி யானும்
இறையவன் வயவர்க்கு இருஞ்சோற் றமலை
பெருமுறை உதவிய பெருஞ்சோற்று நிலையும்
வெளிகெடப் பகைமுனை இறுத்த வேந்தன்
நளிவிறல் மிகுந்த நல்லிசை வஞ்சியும்
இறுத்தபின் நாடழிபு இரங்கிமறுத் துரைத்த
பக்கமும் எனமுறை தொக்கவை யைந்தும்
நல்லிசைப் புலவர் நாடினர் தெளிந்து
சொல்லிய வஞ்சித் துறையெனப் படுமே.

இளம்பூரணர்

65. இயங்குபடை அரவம்...துறைபதின் மூன்றே.

இது வஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இயங்குபடை அரவம் முதலாகத் தழிஞ்சியொடு கூடச் சொல்லப்பட்ட பதின்மூன்றும் வஞ்சித் துறையாம் என்றவாறு.

'பெருமை யானும்' என்பது முதலாக வந்த 'ஆன்' எல்லாம் இடைச் சொல்லாகி[1] வந்தன. இயங்குபடை அரவம் எரிபரந் தெடுத்தல் என்பதன்கண் உம்மை தொக்கு நின்றது.[2]

---

1. இடைச் சொல்லாகி—அசைநிலையிடைச் சொல்லாகி. பெருமையானும் என்பதைப் பெருமையும் எனக் கொள்க. இப்படியே பிறவற்றிலும் ஆன் நீக்கி உம்மையுடன் கொள்க.

2. இயங்குபடையரவமும் எரிபரந் தெடுத்தலும் என்க.

படை இயங்கு அரவம்—படை யெழும் அரவம்.

உதாரணம்

''சிறப்புடை மரபின் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒரு குடை
உருகெழு மதியின் நிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீஒல் லாயே
நுதிமுக மழுங்க மண்டி ஒன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே
போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வேம் அல்லேம் என்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்னது ஆகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம்பு அலைப்ப
வலமுறை வருவதும் உண்டென்று அலமந்து
நெஞ்சுநடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே.''[3]

(புறம்-31)

எரி பரந்தெடுத்தல் — (பகைவரது நாடு) எரி பரந்து கிளர்தல்.[4]

---

3. பொருள்: அரசே! பொருளும் இன்பமும் அறவழிப் படுதல்போல் பாண்டி சேரர் குடைகள் நின்குடை வழி வர அக்குடை உயர்ந்து விளங்கும்படி நல்ல புகழை விரும்பி நீ பாசறையினின்றும் போகாயாய் நின்றாய். நின் களிறுகள் மத மறம் அடங்கில. நின் வீரர் பகைவர் நாடு சேய என்னாது செல்கின்றனர். அதனால் வட புலத்து அரசர்கள் நீ கீழ்க் கடல் பின்னிடவும் மேல் கடல் நின் குதிரைக் குளம்பைக் கழுவவுமாகப் படையெடுத்து வருதலும் உண்டாம் என நெஞ்சு நடுங்கித் துஞ்சாக்கண் உடையராயினர்.—சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.

4. எரிபரந்து கிளருமாறு எரியூட்டல்.

உதாரணம்

''வினைமாட்சிய விரை புரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றப்
புலங்கெட இறுக்கும் வரம்பில் தானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
மயங்குவள்ளை மலர்ஆம்பல்
பனிப்பகன்றைக் கனிப்பாகல்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பனை பாழாக
ஏம நன்னாடு ஒள்எரி ஊட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே.''[5]

(புறம்-16)

வயங்கல் எய்திய பெருமையும்—விளக்கம் எய்திய பெருமையும்.

உதாரணம்

''இருங்கண் யானையொடு அருங்கலந் தெறுத்துப்
பணிந்துகுறை மொழிவ தல்லது பகைவர்
வணங்கார் ஆதல் யாவதோ மற்றே
உருமுடன்று சிலைத்தலின் விசும்பதிர்ந் தாங்கு
கண்ணதிர்பு முழங்குங் கடுங்குரல் முரசம்
கால்கிளர்ந் தன்ன ஊர்தி கான்முளை
எதிர்நிகழ்ந் தன்ன சிறையருஞ் சீற்றத்து
நளியிரும் பரப்பின் மாக்கடல் முந்நீர்

---

5. இதில் பெருந்தண்பணை (மருதநிலம்) பாழாக நாடு ஒள்எரியூட்டினை என்பது எரிபரந்தெடுத்தலாம்.

நீர்துனைந் தன்ன செலவின்
நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே.''[6]

(பதிற்றுப்பத்து)

கொடுத்தல் எய்திய கொடைமையும் — கொடுத்தலைப் பொருந்திய கொடைமையும்.

உதாரணம்

''பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறல்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே.''

(புறம்-12)

அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றமும்—பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக் கொன்ற கொற்றமும்.

உதாரணம்

''திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய

---

6. தானையோய்! நினக்குப் பகைவர் பணிந்து குறை மொழிவதல்லது வணங்காராதல் யாவதோ எனக் கூட்டுக.

அருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.''[7]

(புறம்-13)

மாராயம் பெற்ற நெடு மொழியும்—மாராயமாகிய உவகை[8] பெற்ற நெடிய மொழியும்.

உதாரணம்

''துடியெறியும் புலைய
எறிகோல் கொள்ளும் இழிசின
கால மாரியின் அம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை ஓடை அண்ணல் யானை
இலங்குவால் மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதல் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசில் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப அதனால்
வம்ப வேந்தன் தானை
இம்பர் நின்றுங் காண்டீரோ வரவே.''[9]

(புறம்-287)

பொருள் இன்று உய்த்த பேர் ஆண் பக்கமும்—பகைவரைப் பொருளாக மதியாது செலுத்தின பேர் ஆண் பக்கமும்.

---

7. பெருந்தகை! நீ அரும் சமம் ததைய நூறி விழுப்புண் பட்ட காரணத்தால் நின்னொடு எதிர்ந்தோர், நின் போரில் தோற்றோடிய மன்னர் நோயால் இறக்க அவர் உடலைப் போரில் இறவாக் குற்றம் போக்கப் பசும்புல் தரையில் கிடத்தி வாளால் பிளந்து அடக்கம் செய்தலைப் போலத் தாமும் செய்யப்படுதலைப் பிழைத்தனராய்ப் பட்டனர். அதனால் முரசம் முழங்க அவர் அமர் கடத்தல் யாங்கு நிகழ்வதாம் என முடிக்க.—அதியமானை ஔவையார் பாடியது.
8. மாராயம் என்பதற்கு உவகை எனப் பொருள் கொண்டார் இவர்.
9. புலைய! இழிசின! அம்பு தைப்பினும் வேல் பிறழினும் யானை மருப்பின் ஊன்றினும் ஓடாத பீடுடை வீரர்.

உதாரணம்

''ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடி விடுதும் நும்அரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.''[10]

(புறம்-9)

விசைவரு புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமையும்—விசை கொண்டு வரும் புனலைக் கற்சிறை[11] தாங்கினாற்போல ஒருவன் தாங்கிய பெருமையும்.

உதாரணம்

''வீடுணர்ந் தார்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம்—கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம்.''[12]

(வெண்பா-வஞ்சி-19)

எனவும்,

பொய்கை வாளை நெற்போரில் பிறழும்படியான மருத நிலங்களைத் தம் வீரத்துக்குப் பரிசாகப் பெறுவது என்ன சிறப்புடையதாம்? போரில் அவர்கள் இறந்துபடுவாராயின் சுவர்க்க உலகில் தேவப் பெண்டிர் மணத்தால் இன்பம் நுகர்வர். அதனால் இங்கிருந்து பகைவேந்தர் படை வரவைக் காண்மின்—இதில் தண்ணடை பெறுதல் என்றது மாராயம் பெறுதல் உவகை.

10. ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் நோக்கி எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என்று பறையறைந்து கூறுதல் பகை வேந்தரைப் பொருளாக மதியாமையால் என்க.—பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

11. கற்சிறை—கல் அணை.

12. 'கூடார் பெரும்படை...இரும்புலி' என்றது துறைக்குரியது. புலி சேர்ந்த இடமாகிய முதியாள் வயிறு வீடுணர்ந்தோர்க்கும் நினைத்தால் வியப்பாம் என முடிக்க.

''வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவன் ஆகித்
தன் இறந்து வாராமை விலக்கலின் பெருங்கடற்கு
ஆழி அனையன் மாதோ என்றும்
பாடிச் சென்றோர்க்கு அன்றியும் வாரிப்
புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே.''[13]

(புறம்-330)

எனவும் வரும்.

பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்—திரட்சி பொருந்தின பெருஞ்சோற்று நிலையும்.

உதாரணம்

''இணர்ததை ஞாழல் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத்து அன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலினர்ப் படுசினைக் குருகிறை கொள்ளும்
அல்குறு கானல் ஓங்குமணல் அடைகரை
தாழடம்பு மலைந்த புணரிவளை ஞரல
இலங்கு நீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்
தண்கடற் படப்பை மென்பா லனவும்
காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமித்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புல வைப்பும்
கால மன்றியுங் கரும்பறுத்து ஒழியாது
அரிகால் அவித்துப் பலபூ விழவில்

---

13. தன்னைப் பாடிச் சென்றோர்க்குக் கொடுத்தற்குப் போதாமையோடு வருவாயால் புரவு வரி கொடுத்தற்கும் விளைவாற்றல் இல்லாத சிற்றூரில் வழிவழிவந்த வள்ளன்மையுடைய இவ்வீரன் பகைவர் தானை நெருக்கி வர வாள் ஏந்திய வலத்தனாய்த் தான் ஒருவனே நின்று அத் தானை தன்னைக் கடந்து போகாதபடி விலக்குதலால் அவன் பெரிய கடற்கு அது கடத்தற்கரிய கரைபோல்வான்.

தேம்பாய் மருதம் முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்
முழவிமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயருஞ்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்
ஏனல் உழவர் வரகுமீது இட்ட
கான்மிகு குளவிய வன்புசேர் இருக்கை
மென்தினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபயம் மாறி
அரக்கத்து அன்ன நுண்மனற் கோடுகொண்டு
ஒண்ணுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்
பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவுங் காட்டவும் அரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கு மந்திரத்து
அருந்திறல் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறற் பிண்டங்
கருங்கண் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி
எறும்பு மூசா இறும்பூது மரபிற்
கருங்கண் காக்கையொடு பருந்திருந்து ஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகல் மறவர்
உருமுநிலன் அதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற்கு எறியும்
கடுஞ்சின வேந்துசேண் தழங்குகுரல் முரசே.''[14]

(பதிற்று. 30)

வென்றோர் விளக்கமும்— வென்றோர் மாட்டு உளதாகிய விளக்கமும்.

---

14. வேந்தே! கடற்பரப்பான நெய்தல் நில மக்களும் குன்றுகள் பொருந்திய புன்புல நில மக்களும், மருதநிலப் பகுதி மக்களும், முல்லை நிலத்தை அணிமையிற் கொண்ட குறிஞ்சி நிலமக்களும் காடும் காடு சார்ந்த நிலப்பகுதி மக்களும் அவற்றுள்ள வேந்தரும் குறுநில மன்னரும் தங்களுள் ஒன்றுகூடி அரண்கள் இருந்தும் காக்கும் வலியிலராய் நடுங்குமாறு நின்கடிய சினத்தைச் செலுத்திக் கடவுளை வழிபட பூசாரி ஏந்திய பலியைக் குருதியொடு கூடிய அதனைப் பேய் நடுங்க எறும்பும் மொய்க்காத அப்பலிச் சோற்றை நின்வீரர்க்கு உண்பித்தற் பொருட்டு நின்முரசம் அறையப்படும்—பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கவுதமனார் பாடியது.

''அறாஅ யாணர் அகன்கண் செறுவின்
அருவி ஆம்பல் நெய்தலொடு அரிந்து
செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பகடு உதிர்த்த மென்செந் நெல்லின்
அம்பண அளவை உறைகுவித் தாங்குக்
கடுந்தேன் உறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே
ஊரெரி கவர உருத்தெழுந்து உரைஇப்
போர்சுடு கமழ்புகை மாதிரம் மறைப்ப
மதில்வாய்த் தோன்றல் ஈயாது தம்பழி ஊக்குநர்
குண்டுகண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயில் தோட்டி வவ்விளை ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகழ்சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடா வைகற்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழுநர் கழுவுடலை மடங்கப்
பதிபாழ் ஆக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென
அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர்நுதல்
பெருங்களிற்று யானையொடு அருங்கலந் தராஅர்
மெய்பனி கூரா அணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் ஊழி
உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி
அறிந்தனை அருளாய் ஆயின்
யாரிவண் நெடுந்தகை வாழு மோரே.''[15]

(பதிற்று—71)

தோற்றார் தேய்வும்—தோற்றோர் தேய்வு கூறுதலும்.

---

15. இது பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழார் பாடியது. நெடுந்தகையே! மகளிர் அரிந்து கடாவிட்டுத் தொகுத்த நெற்குவியலில் அளக்கும் மரக்கால்களைச் செருகுவைத்தது போல் தோன்றும் தேன் குளவிகளையுடைய தேன் கூட்டினைக் கிளைத்த சிறு பிள்ளைகள் குளவிகளுக்கு அஞ்சியோடுதல் போல நிற்பகைவர் அஞ்சியோடினர். தம் குற்றத்தை யூக்கமுடன் செய்த நின் பகைவரது அரிய எயிற்காப்பகத்தைக் கைக்கொண்டாய்; கழுவுள் என்ற பெயருடைய ஆயர் தலைவன் பதி பாழாகு மாறு கடந்து வேறு புலம் செல்ல அங்குள்ள களிறுடன் கலன்கள் தராதவராய பகைவர் நின்னை அணங்குத் தெய்வம் என அஞ்சி நடுங்கிப் பரவுதலின் பலிகொண்டு திரும்பும் பேய் போல நீ பகைவரின் திறை கொண்டு பெயர்ந்தாய். நின் வாழ்நாளாகிய ஊழிக்காலம் வாழ்வதாக. அறிவுடையாரும் அறியாமையுடையாரும்ஆகியவரின் தகுதியறிந்து நீ அருளவில்லையாயின் இவ்வுலகில் வாழ்வார் யார்?

உதாரணம்

‘‘வான்மருப்பின் களிற்றியானை
மாமலையிற் கணங்கொண்டவர்
எடுத்தெறிந்த விறல்முரசம்
கார்மழையின் கடிதுமுழங்கச்
சாந்துபுலர்ந்த வியன்மார்பின்
தொடிசுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை எறுழ்த்தோள் புடையலங் கழற்கால்
பிறக்கடி ஒதுங்காப் பூட்கை ஒள்வாள்
ஒடிவில் தெவ்வர் எதிர்நின்று உரைஇ
இடுக திறையே புரவெதிர்ந் தோற்கென
அம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ
அனையை ஆகல் மாறே பகைவர்
கால்கிளர்ந்து அன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி
புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசைத்
தொலையாக் கற்பநின் தெம்முனை யானே.’’[16]

(பதிற்று-80)

குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளையும்—குறைவுறுதலைச் செய்யாதவென்றிச் சிறப்பினையுடைய கொற்றவள்ளையும்.

கொற்றவள்ளை—தோற்ற கொற்றவன் அளிக்கும் திறை· உதாரணம் வந்துழிக் காண்க.

அழிபடை[17] தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ—மாற்றார் விடு படைக்கலன் முதலியனவற்றைத் தம்மாட்டுத் தடுத்து உளன்

16. நிலவரைப்பில் நிறுத்திய புகழும் கெடாத கல்வியும் உடையாய்! உயர்ந்தோராகிய நின் வீரர் களிற்றுக் கூட்டம் உடையராய் முரசம் முழங்க, மார்பு, கை, தோள், கழற்கால், பூட்கை, வாள் ஆகியவற்றையுடைய பகைவர் முன்சென்று உலவி எம்மைக் காத்தலை மேற்கொண்ட எம் அரசனுக்குத் திறையிடுக எனக்கூறி நின் புகழைப் பரவும் அத்தகையையாதலால் நின் எல்லையின் கண் பகைவர் தேரில் கொடி நுடங்குவது யாவது? நுடங்காது. இது பெருஞ்சேரல் இரும் பொறையை அரிசில் கிழார் பாடியது.

17. அழிபடை—மிக்கபடை

அழிந்தோர்ப்[18] பேணித் தழுவிக் கோடலொடு தொகுத்து எண்ணின்.

உதாரணம்

''வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூது ஆங்காங்கு இசைப்ப
நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறுமிறை யாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்குஇரிந் தானைப் பெயர்புற நகுமே.''[19]

(புறம்-284)

இத்துணையும் கூறப்பட்டது வஞ்சி.

''உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி
அறிந்தனை அருளாய் ஆயின்
யாரிவண் நெடுந்தகை வாழு மோரே''[20]

(பதிற்று-71)

என்பதும் இதன்கண்[21] அடங்கும். இது முதுமொழி வஞ்சி.[22]

---

18. உளன் அழிந்தோர்—உளன் அழிதலாவது புண்பட்டுச் சோர்தல்.

19. தன் வேந்தனால் ஏவப்பட்ட தூதர் வந்து போர்க்கு விரைந்து வீரர் வருக என ஆங்காங்கே கூறவேஅதுகேட்டு நூலரி மாலையணிந்து காலால் நடந்துவந்த முதுகுடிப் பிறந்த வீரன் முன் ஒரு போரில் யானையின் கொம் பிடையில் வளைந்த தன் கூரிய வாளை வளைவு நீங்கத் திருத்தவே அதுகண்ட பகைவீரன் ஒருவன் அஞ்சி யோடினானாக அவன் முதுகுபுறம் கண்டு நகுவானா னான்—இச்செய்யுள் தழிஞ்சித் துறைக்கு இளம்பூரணர் கூறிய விளக்கத்துக்கு ஏற்ப இல்லை.

20. அறிவுடையோர் அறிவையும் அறிவிலார் அறியாமையை யும் ஆராய்ந்து அவர்க்குச் செயத்தக்கன நினைந்து செய்வகையும் அறிந்தனையாய் அருள்செய்யவில்லை யென்றால் நெடுந்தகையே! யார் இவ்வுலகில் வாழ்வார்?

21. தழிஞ்சியில் உரவரையும் மடவரையும் அருளுதலின் தழிஞ்சியாயிற்று.

22. இது முதுமொழி வஞ்சியுமாம் என்றிருப்பின் நன்று. முது மொழி வஞ்சியாவது முதுகுடியின் போர்த்திறங் கூறுவது.

கழி பெருஞ்சிறப்பின் பதின்மூன்று துறை—மிகப்பெருஞ் சிறப்பையுடைய பதின்மூன்று துறைத்தாம்.

வென்றோர் விளக்கம் முதலிய மூன்றும் ஒழிந்த ஏனைய வெல்லாம் இரு திறத்தினர்க்கும் பொதுவாக நிற்றலின் கழி பெருஞ்சிறப்பெனக் கூறினார். இன்னும் ''கழிபெருஞ்சிறப்பின்'' என்றமையின், பேரரசர் துணையாக வந்த குறுநில மன்னரும் தாமும் பொலிவெய்திப் பாசறைநிலை உரைத்தலும் பிறவும் கொள்க. இவை பற்றியன துணை வஞ்சி.[23] ''நீயே புறவின் அல்லல்'' (புறம்-46) ''வள்ளியோர்ப் படர்ந்து'' (புறம்-47) என்னும் புறப்பாட்டுக்களில் காண்க. பிறவும் அன்ன.

(7)

நச்சினார்க்கினியர்

63. இயங்கு படை.........மூன்றே

இது முற்கூறிய வஞ்சித்திணை பதின்மூன்று துறைத்தென் கின்றது.

இதன் பொருள் :- இயங்குபடை அரவம் — இயங்குகின்ற இருபடையெழுச்சியின் ஆர்ப்பரவமும்:

(உ-ம்) ''விண்ணசைஇச் செல்கின்ற வேலிளையா ரார்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்த—னெண்ண
மொருபாற் படர்தரக்கண் டொன்னார்த முள்ள
மிருபாற் படுவ தெவன்.''[1]

(பெரும் பொருள் விளக்கம் : புறத்திரட்டு-774)

---

23. பேரரசர்க்குத் துணையாகக் குறுநில மன்னர் முதலி யோர் சென்று பொருதலின் துணை வஞ்சியாயிற்று. துணை வஞ்சி என்றொரு துறை வெண்பா மாலையில் கூறப்படவில்லை.

1. வானுலகு விரும்பித் தொடர்ந்து வரும் வீரர் ஆர்ப்பரிக்க வேந்தர் மண்விரும்பிச் செல்லும் வாள்வேந்தனின் உள்ளம் மண்ணசையாகிய ஒரு பகுதியிற் செல்லப் பகைவர் உள்ளம் தம் உடலுக்கு மண்ணும் உயிருக்கு விண்ணுமாக இரு பகுதிப்படச் செல்வது ஏன்?

'சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்' என்னும் புறப் பாட்டும் அது.

''இரும்பூதாற் பெரிதே கொடித்தே ரண்ணல்
வடிமணி யணைத்த பணைமரு ணோன்றாட்
கடிமரத் தாற் களிறணைத்து
நெடுநீர் துறைகலங்க
மூழ்த்திறுத்த வியன்றானையொடு
புலங்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்
வாண்மதி லாக வேன்மிளை யுயர்த்து
வில்மிசை யுமிழ்ந்த வைம்முள் ளம்பிற்
செவ்வா யெஃகம் வளைஇய வகழிற்
காரிடி யுருமி னுரறுபு முரசிற்
கால்வழங் காரெயில் கருதிற்
போரெதிர் வேந்த ரொருஉப நின்னே.''[2]

(பதிற்று-33)

இப் பதிற்றுப்பத்தும் அது.

''போர்ப்படை யார்ப்பப் பொடியா யெழுமரோ
பார்ப்புர வெண்ணான்கொல் பார்வேந்த—னூர்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிய நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது.''[3]

---

2. களங்காய் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது—கொடித்தேர் அண்ணலே! பகைவர் காவல் மரத்தில் களிறைக் கட்டி வைத்து வரம்பில் வெள்ளமாகிய என்னுடைய தானையொடு வாள்மதிலாக வேற்படை காவற்காடாக நிற்ப, அம்புகள் முள்வேலியாகப் பிற படைக்கருவிகள் அகழியாகவும் முரசம் இடியாகவும் காலாட்படையாகிய அரணாகவும் உள்ள நின் படை பகைமேற் செல்லக்கருதினால் நின்னையும் நின் படையையும் கண்ட மாத்திரத்தே போர் எதிர்க்கும் வேந்தர் ஓடுவர்—இது பெரிதும் இரும்பூதாகும்.

3. ஊரிலே தங்காத தானை நிலம் நெளியும் படியாக நெடுந்தொலைவில் பகைவர்மேற் செல்லும்பொழுது படைஞர் ஆரவாரிக்கத் துகள் எங்கும் எழும்; துகள் தன் உலகை மூடுவதினின்றும் காத்தலை எண்ணான் போலும் அரசன்.

இஃது எதிர்செல்வோன் படையரவம்.

எரிபரந்து எடுத்தல்—இருவகைப்பட்ட படையாளரும் இரு வகைப் பகைப்புலத்துப் பரந்துசென்று எரியை எடுத்துச் சுடுதலும்:

இவ்விரண்டற்கும் உம்மை விரிக்க.[4]

(உ-ம்) ''வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
யெல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கஞ்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி றானை''

(புறம்-16)

எனவும்,

''களிறு கடைஇய தாட்
கழலுரீஇய திருந்தடிக்
கணைபொருது கவிவண்கையால்
கண்ணொளிர் வரூஉங் கவின்சாபத்து''

(புறம்-7)

என்னும் புறப்பாட்டினுள்,

''எல்லையு மிரவு மெண்ணாய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின்''

எனவும் வரும்.

இவை[5] கொற்றவள்ளைப் பொருண்மையவேனும் உட்பகுதி பலவுந் துறையாய் வருதலின் எரிபரந்தெடுத்தற்கும் உதாரண மாயின.

---

4. இயங்கு படையரவமும் எரிபரந்தெடுத்தலும் என விரிக்க.

5. மேல் இரண்டு உதாரணங்கள்: கொற்றவள்ளை என்பது அரசன் புகழ்கிளந்து பகைவர்நாடு அழிதற்கு இரங்குவது. இவ்விரண்டு பாடல்களும் அத்துறைப்படுவன. என்றா லும் ஒரு துறையில் பலதுறை வருவதுண்டாதலின் சுடுதீ விளக்கம், ஊர் சுடு விளக்கம் என வந்தன உள்துறை யான எரிபரந்தெடுத்தலுக்காம்.

வயங்க லெய்திய பெருமையானும்—ஒருவர், ஒருவர்மேற் செல்லுங்காற் பிறவேந்தர் தத்தந் தானையோடு அவர்க்குத் துணையாயவழி அவர் விளக்கமுற்ற பெருமையும்:

(உ-ம்) ''மேற்செல்லுங் காலைத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசினா—னாற்கடல்சூழ்
மண்மகிழுங் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் மேம்பட்டான் வேந்து''[6]

எனவரும். இஃது இருவர்க்கும் பொது.

கொடுத்தல் எய்திய கொடைமையானும்—மேற்செல்லும் வேந்தர் தத்தம் படையாளர்க்குப் படைக்கல முதலியன கொடுத்தலும் பரிசிலர்க்கு அளித்தலும் ஆகிய கொடுத்தலைப் பொருந்திய கொடைத் தொழிலும்:-

(உ-ம்) ''வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்
தேத்துநர்க் கீதுமென் றெண்ணுமோ—பாத்தி
யுடைக்கலி மான்றோ ருடனீந்தா னீந்த
படைக்கலத்திற் சாலப் பல''[7]

எனவரும்.

''சிறாஅஅர் துடியர் பாடுவன் மகாஅஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
யிரும்புட் பூச லோம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவெ
னெம்போற் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத் தன்றலை
மணிமருண் மாலை சூட்டி யவன்றலை
யொருகாழ் மாலை தான்மலைந் தனனே''[8]
(புறம்-291)

என்பதும் அது.

---

6. வேந்து துணைவந்த வேந்தர் தன்பக்கம் சார்ந்துவர செல்லும் தோற்றத்தால் விண்மீன்கள் சூழ வெண் மதியம் செல்லுதல் போல் மேம்பட்டான்.
7. வேந்தனால் ஏவப்பட்டுப் போர் செய்தற்குச் செல்பவன் தன்னை ஏத்துநர்க்கு மீண்டுவந்து கொடுப்போம் என்று எண்ணுவனோ? எண்ணான்; அதனால் உடனே குதிரை பூட்டப்பட்ட தேர்களைக் கொடுத்தான். அவனால் கொடுக்கப்பட்டன படைக்கலங்களை விட மிகப்பலவாம்.
8. சிறுவர்களே; துடி கொட்டுவோரே! பாடும் பாணரே! வெள்ளிய ஆடையுடைய மாயோனைக் குறுகி அவன்

அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்—எடுத்துச் சென்ற இருபெருவேந்தர் படையாளர் வரவறியாமல் இரவும் பகலும் பலகாலும் தாம் ஏறி அந்நாட்டைக் காவல்புரிந்தோரைக் கொன்ற கொற்றமும்:

(உ-ம்) ''நீணில வேந்தர் நாட்செல் விருப்பத்துத்
தோள்சுமந் திருத்த லாற்றா ராள்வினைக்
கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து
முனைப்புல மருங்கி னினைப்பருஞ் செய்வினை
வென்றியது முடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி யூங்குப்பெறுஞ் செருவே.''[9]

''யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
மழை தவழ்பு தலைஇய மதின்மர முருக்கி
நிரைகளி றொழுகிய நிரைய வெள்ளம்
பரந்தாடு கழங்கழி மன்மருங் கறுப்பக்
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
வழல்கவர் மருங்கி னுருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீரிவர்பு பரந்த நீரறு நிரைமுதற்
சிவந்த காந்தண் முதல்சிதை மூதிற்
புலவுவில் லுழவிற் புல்லாள் வழங்கும்

பட்ட புண்ணுக்காக இரங்குதலைத் தவிருங்கள்; யான் விளரிப்பண் பாடி நரிகளை நெருங்கவிடாமல் ஓட்டுவேன். நம் போலவே நம் அரசனும் இவனை நினைந்து துன்புறு வானாக. போரில் பயன்கருதாது சாதலை விரும்பும் இவ் வீரனுக்கு அரசன் தன் தலையிலணிந்த பல மணிகள் கலந்த மாலையைச் சூட்டி அவன் தலையில் உள்ள ஒரு வடமாலையைத் தான் அணிந்து சிறப்பித்தான்.

9. நீள்நில வேந்தர் தம் நாளைக் கழிக்கும் விருப்பத்தோடு தம் தோளைச் சுமந்திருத்தலை விரும்பாமல் ஆள்வினை யுடையராய்க் கொள்ளையிடும் உண்டியை வெறுத்துப் பகைவர் ஊர் முன்னிடத்தில் செய்யவேண்டிய காவலரை யழிக்கும் வினையைச் செய்து வெற்றி கொண்டனர்; அதனால் இனி ஊரில் போர் என்பது எங்குளது?

புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை யரம்பி
னறியா மையாண் மறந்துதுப் பெதிர்ந்தநின்
பகைவர் நாடுங் கண்டுவந் திசினே
கடலவுங் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல திகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்''[10]

(பதிற்று-15)

என்னும் பதிற்றுப்பத்தும் அழிவுகூறிய இடம் அப்பாற்படும்.

மாராயம் பெற்ற நெடுமொழியானும்—வேந்தனாற் சிறப் பெய்தியவதனால் தானேயாயினும் பிறரேயாயினுங் கூறும் மீக்கூற்றுச் சொல்லும்:

சிறப்பாவன :- ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம். முற்கூறியது[11] படை வேண்டியவாறு செய்க என்றது: இஃது[12] அப்படைக்கு ஒருவனைத் தலைவனாக்கி அவன் கூறியவே செய்க அப்படை என்று வரை யறை செய்தது.[13]

---

10. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ண னார் பாடியது. 'யாண்டு தலை......... வைப்பு' என்னும் பகுதி எரி பரந்தெடுத்தல். அடுத்தூர்ந்தட்ட கொற்றத் தின் பாற்படுவது 'வெண்பூ... நாடும் கண்டு வந்திசின்' என்னும் பகுதி. ''ஓராண்டு கழியும் வரை நினைத்த மாற்றார் இடங்களில் தங்கி மதிலும் காவல் மரமும் அழித்து வெள்ளம் போலும் நின்படை கழங்காடிப் பலன் இன்மை அறிந்து ஒடுங்கிய அரசரையும் அவர் படை களையும் எங்கும் எரிகொளுத்திய சீற்றத்துடன் அழிக்க, எரியின் புகை காற்றால் பரவி அழகழிந்த இடங் களில் வேளைக்கொடியும் சுரைக்கொடியும் தழைக்க, பீர்க்கங் கொடிபரந்த நீர்வற்றிய உழுசால்களில் காய்ந்த காந்தள் நிறைந்து வில்லேந்திய புல்லிய மறவர் உறை யும் பனையோலை வேய்ந்த பாழ்பட்ட ஊர்களையுடைய நின் மற மாண்பினை யறியாத எதிர்ந்த பகைவரின் பாழ் பட்ட நாடும் கண்டு வந்தேன்.

11. முற்கூறியது அடுத்தூர்ந்தட்ட கொற்றம்.

12. இஃது—மாராயம் பெற்ற நெடுமொழி.

13. படைவீரர் தம் தலைவன் வழியியங்க வேண்டுமேயன்றித் தம் போக்கில் இயங்கல் கூடாது என்பது கருத்து.

(உ-ம்) ''போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ—போர்க்கெல்லாந்
தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே
ரேனாதிப் பட்டத் திவன்.''[14]

இது பிறர் கூறிய நெடுமொழி.

''துடியெறியும் புலைய
வெறிகோல் கொள்ளு மிழிசின
கால மாரியி னம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை யோடை யண்ணல் யானை
யிலங்குவான் மருப்பி னுதிமடுத் தூன்றினு
மோடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளுந்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசின் மகளிர் மன்ற னன்று
முயர்நிலை யுலகத்து நுகர்ப வதனால்
வம்ப வேந்தன் றானை
யிம்பர் நின்றுங் காண்டிரோ வரவே.''

(புறம்-287)

இது தண்ணடை பெறுகின்றது. சிறிது சுவர்க்கம் பெறுதல் நன்று என்று நெடுமொழி கூறியது. போர்க்களம் புக்கு நெடுமொழி கூறலும் ஈண்டு அடங்கும்.

பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்—பகை வேந்தரை ஒரு பொருளாக மதியாது படையினைச் செலுத்தின பேராண்மை செய்யும் பகுதியும்:-

(உ-ம்) ''மெய்ம்மலி மனத்தி னம்மெதிர் நின்றோ
னடர்வினைப் பொலிந்த சுடர்விடு பாண்டிற்
கைபிகந் தமருந் தையணற் புரவித்

---

14. போர்க்கெல்லாம் தானே முதல்வனாகிய வேந்தனிடம் மோதிரம் சேர்தலுடன் ஏனாதி எனும் பட்டமும் உடைய இத்தானை கடல் போலும் போர்புரியும் புரவி, தேர் முதலிய பல படையாகிய கடலுக்குக் கருங்கடலுக்குக் கரைபோல்வான் ஆவான். எனவே கடல்கரை கடவாதது போல மறவர் இவன் ஆணை கடவார் என்க.

தளையவிழ் கண்ணி யிளையோன் சீறின்
விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்
தண்ணறுங் கடாஅ முமிழ்ந்த வெண்கோட்
டண்ணல் யானை யெறித லொன்றோ
மெய்ம்மலி யுவகைய னம்மருங்கு வருதல்
கடியமை கள்ளுண் கைவல் காட்சித்
துடிய னுண்க ணோக்கிச் சிறிய
கொலைமொழி மின்னுச்சிதர்ந் தனையதன்
வேறிரித் திட்டு நகுதலு நகுமே.''[15]

(தகடூர் யாத்திரை)

இஃது அதிகமானாற் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில் கிழார் கூறியது.

''பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
வமரி னிட்ட வருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
முரசு முழங்கு தானைநும் மரசு மோம்புமி
னொளிறேந்து மருப்பினுங் களிறும் போற்றுமி
னெனைநாட் டாங்குநும் போரே யனைநா
ளெறியா ரெறிதல் யாவண தெறிந்தோ
ரெதிர்சென் றெறிதலுஞ் செல்லா னதனா
லறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்த லோம்புமி னுதுக்கா
ணிலனளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
வெல்லிடைப் படர்தந் தோனே கல்லென

15. நம் எதிர் நின்றோனாகிய புரவியும் கண்ணியும் உடைய வீரன் சீறுவானாயின் மலைவீழ் அருவிபோல் மதம் ஒழுகும் யானையை எறிதல் ஒன்று மட்டுமா செய்தான். அவன் உவகையனாய் நம் பக்கம் வருவது ஏன் எனின், துடியன் கள் உண்ணுதலை நோக்கி மகிழ்ந்து தன் வேலைத் திரித்துப் பகைநோக்கிச் சிரித்தலும் செய்வான்.

வேந்தூர் யானைக் கல்லது
ஏந்துவன் போலான்ற னிலங்கிலை வேலே.''[16]
(புறம்-301)

இதுவுமது.

வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்—தன்படை நிலையாற்றாது பெயர்ந்த வழி விசையோடும் வரும் பெருநீரைக் கல்லணை தாங்கினாற் போலத் தன்மேல் வரும் படையினைத் தானே தடுத்த பெருமையும்:

(உ-ம்) ''கார்த்தரும் புல்லணற் கண்ணஞ்சாக் காளைதன்
றார்ப்பற்றி யேர்தரு தோணோக்கித்—தார்ப்பின்னர்
ஞாட்பினுள் யானைக் கணநோக்கி யானைப்பின்
றேர்க்குழா நோக்கித்தன் மாநோக்கிக்—கூர்த்த
கணைவரவு நோக்கித்தன் வேனோக்கிப் பின்னைக்
கிணைவனை நோக்கி நகும்.''[17]
(தகடூர் யாத்திரை : புறத்திரட்டு 881)

இது பொன்முடியார் ஆங்கவனைக் கண்டு கூறியது.

''வேந்துடைத் தானை முனைகெட நெரிதலி
னேந்துவாள் வலத்த னொருவனாகித்

---

16. பாசறையில் உள்ள பலவான வீரர்களே! நுங்கள் அரசரைக் காத்துக் கொள்ளுங்கள்; நும் களிறுகளைக் காமின்கள்; எவ்வளவு நாள் நும்போர் நடக்கும்! அவ்வளவு நாளும் தன்னை வேல்கொண்டு எறியாதாரைத் தான் எறிதல் ஏது? தன்னை எறிந்தோர் எதிரே சென்று தான் வேல் எறிதலும் செய்யான்; அவன் நினைத்ததை யார் அறிவார்? நாம் பலமுடையோம் என்று நினைத்து அவனை இகழாதீர். இதோ பாருங்கள்; அவன் தன் குதிரையின் வீரப்பண்பைப் பாராட்டிப் பகற்போதே தோன்றினான்; அவன் யானைக் கல்லது தன் வேலைப் பிறர்க்காக ஏந்தமாட்டான்.

17. கரிய தாடியுடைய காளையானவன் தன் தோள் நோக்கிப் போர்க் களத்து யானைக் கூட்டம் நோக்கி, தேர்க்கூட்டம் நோக்கி, தன்புரவி நோக்கி, கூரிய பகைவர் அம்பு வருதலை நோக்கி அதை எதிர்க்கத் தன் வேல்நோக்கிப் பின் தன்னை ஊக்குவிக்கும் கிணைப் பறை கொட்டுபவனை நோக்கி நகுவானானான்.

தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே''

(புறம்-330)

என்பதும் அது.

'வருகதில் வல்லே' என்னும் புறப்பாட்டும் அதன்பாற்படும்.

முன்னர் மாராயம் பெற்றவனே பின்னர் இரண்டு துறையும் நிகழ்த்துவான் என்றுணர்க.

பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்—வேந்தன் போர் தலைக்கொண்ட பிற்றைஞான்று போர்குறித்த படையாளருந் தானும் உடனுண்பான் போல்வதோர் முகமன் செய்தற்குப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தல் மேயின பெருஞ் சோற்றுநிலையும்:

(உ-ம்) ''இணர்ததை ஞாழற் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினை குருகிறை கொள்ளு
மல்குறு கனலோங் கிருமண லடைகரைத்
தாழடும்பு மலைந்த புணரிவளை ஞரல
விலங்குகதிர் முத்தமொடு வார்துகி ரெடுக்குந்
தண்கடற் படப்பை மென்பா லனவுந்
காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமா னூனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்குங்
குன்றுதலை மணந்த புன்புல வைப்புங்
கால மன்றியுங் கரும்பறுத் தொழியா
தரிகா லவித்துப் பல்பூ விழவிற்
றேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாய
முழவிமிழ் மூதூர் விழவுக்காணூஉப் பெயருஞ்

செழும்பல் வைப்பிற் பழனப் பாலு
மேன லுழவர் வரகுமீ திட்ட
காண்மிகு குளவிய வன்புசே ரிருக்கை
மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
யரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்
டொண்ணுதன் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்
பணைகெழு வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
கடலவுங் காட்டவு மரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கு மந்திரத்
தருந்தெறன் மரபிற் கடவுட் பேணிய
ருயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டங்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
யெறும்பு மூசா விறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
வோடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவ
ருருமுநில னதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியுங்
கடுஞ்சின வேந்தேநின் றழங்குரன் முரசே''

(பதிற்று-30)

எனவரும்.

'துறை'[18] யெனவே கள்ளும் பாகும் முதலியனவும் அப்பாற் படும்.

''வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பி
தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே.''

(புறம்-286)

---

18. கழிபெருஞ்சிறப்பிற்றுறை எனவே.

''உண்டியின் முந்தா துடனுண்பான் றண்டேறன்
மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி
மறவர் மறமிக் குயிர்நேர்ந்தார் மன்னர்க்
குறவிலர்க் கண்ணோடா தோர்ந்து''[19]

என்பன கொள்க.

வென்றோர் விளக்கமும்—அங்ஙனம் பிண்டமேய இருபெரு வேந்தருள் ஒருவரொருவர் மீகை கண்டு அஞ்சிக் கருமச் சூழ்ச்சியால் திறைகொடுப்ப அதனை வாங்கினார்க்கு உளதாகிய விளக்கத்தைக் கூறலும்:

(உ-ம்) ''அறாஅ யாண ரகன்கட் செறுவி
னருவி யாம்ப னெய்தலொ டரிந்து
செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பக டுதிர்த்த செழுஞ்செந் நெல்லி
னம்பண வளவை யுறைகுவித் தாங்குக்
கடுந்தேற் றுறுகிளை மொசிந்தன துஞ்சுஞ்
செழுங்கூடு கிளைத்த விளந்துணை மகாஅரி
னுலந்தனர் பெருமநின் னுடற்றி யோரே
யூரெரி கவர வுருத்தெழுந் துரைஇப்
போர்புசுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதில்வாய்த் தோன்ற லீயாது தம்பழீஇயூக்குநர்
குண்டுக ணகழிய குறுந்தாண் ஞாயி
லாரெயிற் றோட்டி வெளவினை யேற்றொடு
கன்றுடை யாயந் தரீஇப் புகல்சிறந்து
புலவுவி லிளைய ரங்கை விடுப்ப
மத்துக்கயி றாடா வைகற் பொழுது நினையூஉ
வான்பயம் வாழ்நர் கழுவுடலை மடங்கவப்
பதிபா ழாக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பொருந்திரு வற்றென
வருஞ்சமத் தருநிலை தாங்கிய புகர்நுதற்

---

19. தம் அரசன் பெருஞ்சோறுண்ணும்போது முன்னதாக உண்ணாமல் தம்மோடு உடன் உண்பானாய்ப் பின்னும் தண்ணிய கள்ளை நிறைத்து வழங்கி மறவர் உண்டு வழியும்போது அதனைப் பின்னர் உண்ணும் செயலுக்காகவோ வீரர், தம் அரசர்க்கு உறவிலராகிய பகைவரைக் கண்ணோடாது ஆய்ந்து கொன்று தம் உயிரை விட்டார்கள்?

பெருங்களிற் றியானையொ டருங்கலந் தராஅர்
மெய்பனி கூரா வணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு இபயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் னூழி
யுரவரு மடவரு மறிவுதெரிந் தெண்ணி
யறிந்தனை யருளா யாயின்
யாரிவ ணெடுந்தகை வாழு மோரே''

(பதிற்று-71)

எனவரும்.

''இருங்கண் யானையோ டருங்கலந் தெறுத்துப்
பணிந்துகுறை மொழித லல்லது பகைவர்
வணங்கா ராதல் யாவதோ மற்றே.''

(பதிற்று.)

இதுவும் அது.

இவை பதிற்றுப்பத்து.

தோற்றோர் தேய்வும்—அங்ஙனந் திறைகொடுத்தோரது குறைபாடு கூறுதலும்:

(உ-ம்) ''வாஅன்மருப்பிற் களிற்றியானைநிரை
மாமலையிற் கணங்கொண்டவ
ரெடுத்தெறிந்த விறன்முரசங்
கார்மழையிற் கடிதுமுழங்கச்
சாந்துபுலர்ந்த வியன்மார்பிற்
றொடிசுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை யெறுழ்த்தோட் புடையலங் கழற்காற்
பிறககடி யொதுங்காப் பூட்கை யொள்வா
ளொடிவி றெவ்வ ரெதிர்நின் றுரைஇ
யிடுக திறையே புரவெதிர்ந் தோர்க்கென
வம்புடை வலத்த ருயர்ந்தோர் பரவ
வனையை யாகன் மாறே பகைவர்
கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி
புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசை
தொலையாக் கற்பநின் றெம்முனை யானே''

(பதிற்று-80)

எனவரும்.

குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்—வேந்தனது குறையாத வெற்றிச்சிறப்பினாற் பகைவர் நாடழிதற் கிரங்கித் தோற்றோனை விளங்கக்கூறும் வள்ளைப்பாட்டும்:

வள்ளை — உடற்பாட்டு. கொற்றவள்ளை, தோற்ற கொற்றவன் கொடுக்குந் திறை என்று சொல்வாரும் உளர்.[20]

(உ-ம்) ''வேரறுகு பம்பிச் சுரைபரந்து வேளைபூத்
தூராறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமா
னகையிலைவேல் காய்த்தினார் நாடு.''[21]
(முத்தொள்ளாயிரம் : புறத்திரட்டு-798)

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ—அங்ஙனம் வென்றுந் தோற்றும் மீண்ட வேந்தர் தம் படையாளர் முன்பு போர் செய்துழிக் கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக் கொண்டழிந்தவர்களைத் தாஞ்சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியுந் தழுவிக்கோடலுடனே முற் கூறியவற்றைத் தொகுத்து:

படைதட் டழிவோர் என்று மாறுக. தழிச்சுதல்[22] தழிஞ்சியாயிற்று; 'பொருகணை தழிச்சிய புண்டீர் மார்பின்' என்றாற் போல.

(உ-ம்) ''தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்''[23]
(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு 793)

எனவரும்.

---

20. இளம்பூரணர்.
21. மொட்டவிழ்ந்த தாரும் மாலையும் உடைய முசிறியார் கோமானின் வேலைக் கோபித்தவர் நாடு அறுகுவேர் பரப்பிச் சுரைக்கொடி படர்ந்து வேளைப்பூப் பூத்து இன்னின்ன ஊர்கள் இவை என அறியலாகாதபடிக் கிடந்தன.
22. தழிச்சுதல்—தழுவுதல்.
23. புகழ்ந்த கீர்த்திப் பாசறை வேந்தனானவன், வாள் தழுவிய புண் உடைய மறவர் வீடுதோறும் சென்று அவர்க்குச் சிறப்பாகச் சொல்லிய ஆறுதல் மொழியே மருந்தாக அவ்வீரரின் வெவ்விய புண்கள் ஆறின.

''வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டிய பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
யிருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாட்டோட் கொத்த வன்கட் காளை
சுவன்மிசை யசைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைதரத் தாழ்துளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரு வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.''[24]

(நெடுநல்வாடை-176-188)

இதுவுமது.

கழிபெருஞ் சிறப்பின் துறை பதின் மூன்றே—மிகப் பெருஞ் சிறப்பினையுடையவாகிய துறை பதின்மூன்றாம் என்றவாறு.

வென்றோர் விளக்கம் முதலிய மூன்று மொழிந்தனவெல்லாம் இருவர்க்கும் பொதுவாய் வருமென்பது தோன்றக் 'கழி பெருஞ் சிறப்பு' என்றார்.

இனி 'இயங்குபடையரவம்' எனவே இயங்காத வின்ஞா ணொலி முதலியனவுங் கொள்க.

இத்திணைக்கும் பலபொருள் ஒருங்கு வந்து ஒரு துறைப் படுதலுங் கொள்க. அவை:- கொற்றவை நிலையும், குடை நாட்கோளும், வாணாட்கோளும், படையெழுச்சி கண்டோர் கூறுவனவும், பகைப்புலத்தார் இகழ்வும், இவை போல்வன பிறவும் இயங்குபடையரவமாய் அடங்கும்.

---

24. முன் செல்லும் வீரன் புண்பட்ட வீரரை முறை முறை காட்டக் கண்டு பிடியும் குதிரையும் சேற்றுத் துளி சிதறத் தன் வலப்பக்கம் வீழும் ஆடையினைச் சேர்த்தி அருகுவரும் காளையின் கழுத்துப் பக்கம் வைத்த கையனாய்ப் புண் பட்டோர்க்கு முகமன் கூறிக் குடை மழைத் துளியை மறைப்ப யாமத்தும் பள்ளி கொள்ளானாய் வீரரொடு சுற்றி வரும் வேந்தனது பாசறைத் தொழில்.

நிரைகோடற்கு ஏவிய அரசருள் நிரைகொண்டோர்க்கும் நிரைகொள்ளப்பட்டோர்க்கும் விரைந்து ஏகவேண்டுதலிற் குடைநாட்கோளும் வாணாட் கோளும் இன்றியமையாதன அன்மையின், ஈண்டுக் கூறாராயினார். அவை உழிஞைக்குக் கூறுப: அதற்கு இன்றியமையாமையின்.

இனி, துணைவந்த வேந்தருந் தாமும் பொலிவெய்திய 'பாசறை நிலை' கூறலும், அவர் வேற்றுப் புலத்திருத்தலின் ஆண்டு வாழ்வோர் பூசலிழைத்து இரிந்தோடப் புக்கிருந்த 'நல்லிசை வஞ்சி' முதலியனவும், 'வயங்கலெய்திய பெருமை'ப் பாற்படும்.

'துணைவேண்டாச் செருவென்றி' நாடக வழக்கு; துணை வேண்டுதல் உலகியல் வழக்கு. 'நீயே புறவினல்ல லன்றியும் பிறவும்' என்னும் புறப்பாட்டும் 'வள்ளியோர்ப் படர்ந்து' என்னும் புறப்பாட்டும் முதலியன 'துணைவஞ்சி' என்பார்க்கு அவை மேற்செலவின்கண் அடங்காமையிற் பாடாண்டிணையெனப்படு மென்றுரைக்க.

இனி, மேற்செல்வான் மீண்டுவந்து பரிசில் தருமென்றல் வேத்திய லன்றாகலிற் பரிசிலர்க்குக் கொடுத்தலும் படைக்கல முதலியவற்றோடு கூறினார்.

இனி, கடிமரந்தடிதலும் களிறும் மாவுந் துறைப்படிவனவற்றைக் கோறலும் புறஞ்சேரியைச் சுடுதலும் முதலியனவும் 'அடுத்தூர்ந்தட்ட கொற்ற' த்தின்பாற்படும். அவை கருவூரிடைச்சேரமான் யானையை யெறிந்தாற் போல்வன.

இனி, புண்பட்டோரை முன்னர்ச் செய்த படைவலங்கூறி அரசராயினும் உழையராயினும் புகழ்வன போல்வனவுந் தழிஞ்சிப் பாற்படும். இதனை 'முதுமொழி வஞ்சி' என்பர். ஆண்டுக் கொடுத்தல் முற்கூறிய கொடையாம்; இத்தழிஞ்சியை,

> ''அழியுநர் புறக்கொடை அயில்வா ளோச்சக்
> கழிதறு கண்மை''
>
> (பு.வெ. வஞ்சி-20)

எனின்,[25] அஃது ஒருவன் றாங்கிய பெருமைப் பாற்படு மென்றுணர்க.

---

25. போரில் தோற்று ஓடுவார் தரும் முதுகுபுறத்தில் வாள் ஓச்சாத பேராண்மை தழிஞ்சியெனின்.

இச்சூத்திரத்து 'ஆன்' எல்லாம் இடைச்சொல். இது செவ்வெண் உம்மை எண்ணினை இடையிட்டுக் கொண்டது.

இனி ஏனையவற்றிற்கும் ஆன் உருபுகொடுத்து அதற்கேற்பப் பொருள் கூறலும் ஒன்று.

(8)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம்: 8

இயங்கு படையரவம்.........மூன்றே.

கருத்து:- இது வஞ்சித்திணையின் துறைவகையும் அவற்றின் தொகையும் கூறுகின்றது.

பொருள்:- இயங்குபடை யரவம்-போர்மேற் செல்லும் தானையின் ஆர்ப்பும்;

உரவுமண் சுமந்த அரவுத்தலை பனிப்பப்
பொருநர் ஆர்ப்பொடு முரசெழுந் தொலிப்ப
இரவிடங் கெடுத்த நிரைமணி விளக்கின்
விரவுக்கொடி யடுக்கத்து நிரயத் தானை

(சிலப்- கால்கோள். 34-37)

ஏற்றுரி போர்த்த வள்வார் இடிமுர சறைந்த பின்னாட்
காற்றெறி கடலிற் சங்கு முழவமு முரசு மார்ப்பக்
கூற்றுடன் றனைய தானை கொழுநில நெளிய வீண்டிப்
பாற்கடற் பரப்பின் வெள்வாட் சுடரொளி பரந்ததன்றே

(சிந்தா-மண்மகள் இலம், 51)

[முன் வெட்சித்திணைத் துறையாய்க் குறிக்கப்பட்ட நிரை கவர விரையும் படை யியங்கரவத்தின் வேறாய், போர்மேற் செல்லும் தானையின் ஆரவாரம் இதில் கூறப்பட்டது வெட்சியிலாகோள் களவில் நிகழ்வதாகலின், ஆர்த்துமேற் செலவதற்கேற்புடைத்தன்று; அதனாலாங்கு வேந்துவிடு முனைஞரின் கரவியக்கத் தியலரவங் குறிக்கப் படை யியங்கரவம் எனப்பட்டது. வஞ்சித் தானை வெளிப்பட விருதுடன் ஆர்த்துப் போர்க்கெழுமாதலின் படை அரவமெனவும், அது போரார்ப்பின் வேறாதலில் இயங்கு படையரவ மெனவும் விளக்கிய செவ்வி வியத்தற்குரித்து.]

எரிபரந்தெடுத்தல்—வழியில் பகைப்புலகத்தில் தம் செலவைத் தகையும் ஊர்களை நெருப்பிட் டழித்தலும்;

காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத் தஞ்சுவர விறுத்
தரசுபட அமருழக்கி

(மதுரைக்காஞ்சி 125—128)

யாண்டு தலைப்பெயர வேண்டு புலத்திறுத்து
முனையெரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
....
கொடிவிடு குரூஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கின் உருவறக் கெடுத்துத்
தொல்கவி னழிந்த கண்ணகன் வைப்பின்
....நின்
பகைவர் நாடும் கண்டுவந் திசினே.

(பதிற்று—15)

வயங்கல் எய்திய பெருமையானும்—மேற்செல்வோர் வினை விறல்களால் விளங்கிய சிறப்பும்;

நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
ஈர்ங்கா ழன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் கரதலஞ் சிறாஅன்
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்கு நோயெல்லாம் தானா யினனே.

(புறம்—276)

கொடுத்த லெய்திய கொடைமையானும்—தானை மறவர்க் குத் தக்காங்குப் பண்பறிந்து வரிசையின் வழங்கும் கொடைப் பெருமையும்;

....
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே.

(புறம்—287)

'இம்மைச் செய்தது' என்னும் முடமோசியார் புறப்பாட்டு (134)ம் அதுவே.

....
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்

கருங்களிற்று யானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி
(பதிற்று—3ஆம் பத்தின் பதிகம்)

"...
ஈத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பிற்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி"
(பதிற்று—15)

(பாணர் முதலிய இரவலர்க்கு வழங்கும் வள்ளன்மை வேறு; இங்குக் குறிக்கப்படுவது போர் வீரருக்கு மன்னர் வரிசை நோக்கி நாடு முதலிய நல்கும் பரிசேயாகும்.)

அடுத்தூர்ந்தட்ட கொற்றத்தானும்—எதிர்ப்பாரை முன்னேறி பொருதழித்த வெற்றியும்;

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
இன்றி னூங்கோ கேளலம்; திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்தளிர்
....
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடி
....
பொருதும் என்று தன்றலை வந்த
புனைகழல் எழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே.
(புறம்—76)

எருமைக் கடும்பரி ஊர்வோன் உயிர்த்தொகை
ஒருபகல் எல்லையில் உண்ணும் என்ப
தாரிய அரச ரமர்க்களத் தழிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்
(சிலப்;—கால்கோள்; 215—218)

மாராயம் பெற்ற நெடுமொழியானும்—பெற்ற பரிசிற் பெருமிதத் தற்புகழ்ச்சியும்;

(மாராயம் என்பது வரிசையொடு பெற்ற பரிசு சுட்டும் நன்மதிப்பு. நெடுமொழி—தற்புகழ்ச்சி.)

நிலவுக்கதி ரளைந்த நீள்பெருஞ் சென்னி
அலர்மந் தாரமோ டாங்கயல் மலர்ந்த

வேங்கையொடு தொடுத்த விளங்குவிறன் மாலை
மேம்பட மலைதலும் காண்குவம் ஈங்கெனக்
கொடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராய நிலைஇய வஞ்சியும்
....
பூட்கைச் சேனை பொலியச் சூட்டிப்
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சி சூடுதும்.

(சிலப்.—காட்சி. 137-142- 147-149)

பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்—மாற்றாரை மதியாமல் எதிர்ந்து ஊக்கிய மிக்க ஆண்மைத் திறமும்;

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டு
....
குறுந்தொடி கழத்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல்? வாழ்க அவன்கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே, பால்விட்
டயினியும் இன்றயின் றனனே; வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மன்னரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே, அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினு மிலனே.

(புறம்—77)

இப் புறப்பாட்டில், நெஞ்செழியன் இளம் பருவத்தில் பகைமன்னர் எழுவரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தாக்கிப் பொருது வென்ற ஆண்மைத் திறனை இடைக்குன்றூர் கிழார் புகழும் செவ்வி பாராட்டற்பாலது.

வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்—விரைந்து பெருகிவரும் வெள்ளத்தை அசையாமல் நின்று தடுக்கும் கல்லணை போல; எதிர்த்து மேல்வரும் பகைப்படையை அஞ்சாது ஒருவனாய்த் தனி நின்று தகைக்கும் வீறும்;

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவ னாகித்

தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன்.

(புறம்—330)

வல்லோன் தைஇய வரிப்புனை பாவை
முருகு இயன்றன்ன உருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப இடையறுத்
தொன்னா ரோட்டிய செருப்புகல் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் தாள்வலம் வாழ்த்த

(மதுரைக்காஞ்சி—723-27)

பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்—திரளைகளாக விரும்பியாங்கு மிக்க சோற்றைத் (தானையர்க்கு) வழங்கும் தகைமையும்;

....

ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்,
கடுஞ்சின வேந்தே! நின் தழங்குரன் முரசே.

(பதிற்று-30)

....

அரும்படைத் தானை அமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து

....

கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென.

சிலப். கால்கோள் வரி—48-61

இச் செய்யுள்களுள் முன்னதில் பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன் 'செருப்புகன்' மறவர்க்குப் பெருஞ் 'சோறுகுத்த' பரிசு கூறப்படுகின்றது.

மற்றச் சிலப்பதிகாரச் செய்யுளடிகள் செங்குட்டுவன் வஞ்சி சூடி வட வாரியர்மேற் சென்றபொழுது நிகழ்த்திய செய்திகளுள் தன் படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வழங்கிய சிறப்புச் சுட்டுதல் காண்க.

வென்றோர் விளக்கமும்—(சேரும் வழியில் நேரும் போர் களில்) கொற்றம் கொண்டோர் பொலிவும்;

அரும்பவிழ் தார்க்கோதை அரசெறிந்த வெள்வேல்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்பொடு
வண்டாடு பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

(முத்தொள்ளாயிரம்)

தோற்றோர் தேய்வும்—அவரால் அடப்பட்டோர் மெலிவும்;

வாய்வா ளாண்மையின் வண்டமி ழிகழ்ந்த
காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்தன் சினவலைப் படுதலும்,
சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்தர் ஆகி எங்கணும்
ஏந்துவா ளொழியத் தாம்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர.

(சிலப்—கால்கோள்—221-30)

இவ்வடிகளில் செங்குட்டுவனால் முறியடிக்கப்பட் டழிந்தோடிய பகைப்படையின் நலிவு விளக்கப்படுத லறிக.

குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்—குறையாத சீருடைய தம் மன்னர் வெற்றிக்குப் புகழும், மாற்றார் தோல்விக்குப் பரிவும் குறித்து, மகளிர் பாடும் உலக்கைப் பாட்டும்:

வள்ளை என்பது பெண்டிர் பாடும் உலக்கைப் பாட்டு; அதாவது தலைவனை வாழ்த்தி முருகனைப் பரசி உலக்கைக் குற்றோடொத்துப் பெண்டிர் பாடும் பாட்டு; ஆடவர் முருகனைப் பாடும் வள்ளியின் வேறுபட்டது. இது முன் வெட்சித் திணைச் சூத்திரத்தின் கீழ் விளக்கப்பட்டது.

வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவன் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையால்
ஐவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவாம்.
ஐயனை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவா நாம்;
தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தண்
முகையின்மேற் றும்பியிருக்கும், பகையெனிற்

கூற்றம் வரினுந் தொலையான், றன்னட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று;
....

எனவாங்கு,

கூடி யவர்திறம் பாடவென் றோழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
ஆடமை வெற்ப னளித்தக்காற் போன்றே.

(கலி—43.)

2. தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்த்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்

என்பது முதல் மூவரசையும் வாழ்த்திச் சிலப்பதிகார வாழ்த்துக் காதை யிறுதியில் வரும் வள்ளைப் பாட்டு மூன்றும் இத் துறைத்தாம்.

அழிபடை தட்டோர் தழிஞ்சியோடு தொகைஇ—பகைவரின் அழிவுதரும் படைக்கலன்களை எதிர்த்து மார்பேற்றுப் புண்கொண்ட மறவரைத் தழுவுதலுடன் கூட்டி;

[அழிபடை-வினைத் தொகை; அழிக்கும் படையென விரியும். தட்டுதல், எதிர்த்தல் அல்லது மோதலாகும்; எனவே தட்டோர் என்பது பகைவர் படைகள் மோதி மார்பு புண்பட்டவர்.]

..................................மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
....
புடைவீழ் அந்துகில் இடவயிற் றழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை அமைத்த கையன், முகனமர்ந்து
....
சிலரோடு திரிதரும் வேந்தன்.

(நெடுநல்வாடை)

இதில் ''செய்''யென் கிளவி முதனிலைத் தொழிற்பெயர்;

செய்கை எனப் பொருள்படும். இந் நெடுநல்வாடை ஈற்றடிகள் நெடுஞ்செழியன் பாசறையில் பொருது புண்பட்ட தன் படை மறவரை முக மலர்ச்சியுடன் பொருந்தப் பாராட்டித் தமராகத் தழுவும் பரிசு குறிக்கப்படுகின்றது.

இனி, இதை இரட்டுற மொழிதலாகக் கொண்டு, ''தளரும் தம் படையைப் பின் வாங்காது தடுத்தூக்கித் திறன் வியந்து தழுவுதலுடனே கூட்டி'' எனப் பொருள் கொள்ளினும் அமையும்.

இப்பொருளில் இத்துறைக்குச் செய்யுள் வருமாறு:—

....
அவர்படை வருஉங் காலை நும்படைக்
கூழை தாங்கிய அகல்யாற்றுக் குன்று
விலங்கு சிறையின் நின்றனை எனாஅ
அரிதாற் பெருமநின் செவ்வி;
பொருநர்க் குலையாநின் வலன்வா ழியவே.

(புறம்—169)

காரிக்கண்ணனாரின் இப் புறப்பாட்டடிகள் தளரும் தன் படையின் கூழை தாங்கி, வரும் பகைப் படையை வலி தொலைத்த பிட்டனின் பெருமையைக் கூறுகின்றன.

இப்பொருளில் அழிபடை என்பது அழியும் படை என விரியும்; தட்டோர் என்பது தடுத்தோர் எனும் பொருளதாகும்.

அழிந்து புறங்கொடுத் தோடுபவர் மேல் படை தொடத் தறுகண்மை தழிஞ்சி எனப் பிற்காலத்துப் புலவர் சிலர் கொள்வாராயினர். அப்பொருளில் இத்துறையைப் பண்டைச் சான்றோர் பாடாமையானும், இச்சூத்திர அடிக்கு உரைகாரர் ஒருவரும் அப்பொருள் கொள்ளாமையானும், அது ஈண்டுப் பொருந்தாமையறிக.

கழிபெருஞ் சிறப்பிற்றுறை பதின்மூன்றே—மிகப் பெருஞ் சிறப்புடைய வஞ்சித் துறை பதின்மூன்றாகும்.

குறிப்பு:—இதில் 'ஆன்'களும் 'பக்க'மும் இசை நிரப்பு. ஈற்றே காரம், அசை. உம்மைகள் எல்லாம் எண் குறிக்கும். அரவம், எடுத்தல் என்பவற்றின் ஈற்றும்மை தொக்கன.

66. உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி* மரபிற்கு ஆகும் என்ப.

(8)

ஆ. மொ. இல;

Ulinai

64. 'Ulinai' is the 'Puram' of Marutham.''

65. They saw that to besiege a well guarded fort and to have it conquered, is the feauture of the theme 'Ulinai.'

(8)

பி. இ. நூ

இல. வி. புறத் 9

உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுத லரணம் முற்றலும் காத்தலும்
எனஇரு வகையது அதுஎன மொழிப.

இளம்பூரணர்

66. உழிஞை தானே......... ஆகும் என்ப.

இஃது, உழிஞைத்திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உழிஞை மருதத்துப் புறன்—உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனாம். முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும் அனைநெறி மரபிற்று ஆகும் —அது முழுமுதல் அரணம் முற்றுதலும் அழித்தலுமாய்[1] வருந் தன்மைத்தாகிய நெறியை மரபாக உடைத்து.

---

* பாடம்: பன்னெறி

1. அழித்தலும் என்பதற்கு முற்றியோரை அழித்துக் கோடலும் எனக் கொள்க ''புனலுலகாகிய மருதத்துப் புறம் எயில் அழித்தலும் எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் இரண்டு குறி பெறுதலும்'' எனத் தொடக்கத்தில் இளம்பூரணர் கூறியதால் அவ்வாறு கொள்க.

'முதல் அரணம்' என்றதனான், தலையும் இடையும் கடையும் என மூவகைப்படுமவற்றுள் தலையரண். அஃதாவது, அரணிற்குக் கூறுகின்ற இலக்கணம் பலவும் உடைத்தாதல். மருதத்திற்கு இது புறனாயவாறு என்னையெனின், வஞ்சியிற் சென்ற வேந்தனொடு போர்செய்தல் ஆற்றாது உடைந்து மாற்றுவேந்தன் அரண் வலியாகப் போர் செய்யுமாகலானும், அவர் நாட்டகத்தாகலானும்[2] அவ்வழிப் பொருவார்க்கு விடியற் பொழுது காலமாகலானும் அதற்கு இது புறனாயிற்று. நாட்டெல்லையின் அழிப்பு உழிஞையாகுமோ எனின், அது பெரிதாயின் அதன் பாற்படும்; சிறிதாயின் வெட்சியுள் ஓதின ஊர்க் கொலை [புறத்திணை-3] யுள் அடங்கும்.

(8)

64. உழிஞை........... புறனே.

இஃது உழிஞைத்திணை அகத்திணையுண் மருதத்திற்குப் புறனாமென்கின்றது.

இதன் பொருள்:— உழிஞை தானே—உழிஞையென்று கூறப்பட்ட புறத்திணை, மருதத்துப் புறனே—மருதமென்று கூறப்பட்ட அகத்திணைக்குப் புறனாம் என்றவாறு.

இருபெருவேந்தர் தம்முன் மாறுகொண்ட வழி எதிர் செலற் காற்றாது போய் மதிலகத் திருந்த வேந்தன் மதில் பெரும் பான்மையும் மருதத்திடத்த தாதலானும், அம்மதிலை முற்றுவோனும் அந்நிலத்திருத்தலானும், ஒருவன் வாயில் வேண்டத் திறவாது அடைத்திருத்த லொப்புமையானும் உள்ளிருந்தவனும் புறப்பட விரும்புதலானும், மருதம் போல் இதற்கும் பெரும்பொழுது வரைவின்மையானும், சிறு பொழுதினும் விடியற் காலமே போர் செய்தற்குக் காலமாதலானும் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்று. மருதநிலத்து மதிலாதல்

"அகனாடு புக்கவ ரருப்பம் வௌவி"

எனப் பாட்டிற்[3] கூறியவாற்றானும்,

---

2. அவர் நாட்டகத்தாகலானும் என்பதற்கு அவர் நாட்டகத்தது அரண் ஆகலானும் எனவும் அரண் என்பது நாட்டெல்லையில் உள்ள செயற்கைக் காட்டரண் எனவும் கொள்க. காட்டரண் கருதியே நாட்டெல்லையின் அழிப்பு உழிஞையாகுமோ என்று வினவி விடையெழுதினார்.

3. பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியில்.

''பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
றுணங்குகல னாழியிற் றோன்று மோரெயின்
மன்னன்''
(புறம் 338)

என்றதனானும்,

''கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்;
நிலைக்கெளிதா நீர தரண்''[4]
(திருக்குறள்—அரண்—5)

என்றதனானுமுணர்க.

மற்று எதிர்சென்றானை வஞ்சிவேந்தன் என்னுமெனின் அஃது இருவருந் தத்தம் எல்லைக்கண் எதிர்சென்றிருப்ப ரென்றலின் வஞ்சியாகாதாயிற்று.[5]

(9)

நச்சினார்க்கினியர்

65. முழுமுத லரண... மென்ப.

இது மேற்கூறிய உழிஞைத்திணையது பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:— முழுமுதல் அரணம்— வேற்றுவேந்தன் குலத்துக்கெல்லாம் எஞ்சாது முதலாய் வருகின்ற முழு அரணை, முற்றலும் கோடலும்— சென்ற வேந்தன் வளைத்தலும் இருந்த வேந்தன் கைக்கொண்டு காத்தலுமாகிய, அனைநெறி மரபிற்று ஆகும் என்ப— இரண்டு வழியாகிய இலக்கணத்தை உடைத்து அவ்வுழிஞைத்திணை என்று கூறுவர் புலவர் என்றவாறு.

---

4. பகைவரால் கைக்கொளற்கு அரியதாகித் தன்னகத்துள் ளார்க்கு வேண்டிய உணவுப் பொருளுடையதாகி உள் ளிருப்போர் நிலைத்திருக்க எளிதாம் தன்மையது அர ணாகும்.

5. மதில் முற்றியவனை எதிர்க்கச் சென்றவனை வஞ்சி வேந்தன் என்று கூறலாம் எனின் வஞ்சியென்பது இரு பெருவேந்தரும் தம் எல்லை வரை சென்று தங்கு வராதலின் மதிலகத்து வேந்தன் எதிர்செல்வதில்லை யாதலின் வஞ்சியாகாது என்க.

முழு அரணாவது, மலையுங் காடும் நீருமல்லாத அகநாட்டுட் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்து, தோட்டி முண் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து, அதனுள்ளே இயங்கர்[1] முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு[2] புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பொறிகளும் பதணமும்[3] ஏப்புழை ஞாயிலும்[4] ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பு[5] முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற் கோபுரமும் பிறவெந்திரங்களும் பொருந்த இயற்றப் பட்டதாம்.

இனி மலையரணும் நிலவரணுஞ் சென்று சூழ்ந்து நேர்த லில்லா ஆரதர் அமைந்தனவும் இடத்தியற்றிய மதில்போல அடிச் சிலம்பின் அரணமைந்தனவும் மீதிருந்ய கணை சொரியும் இடமும் பிறவெந்திரங்களும் அமைந்தனவாம். இனிக் காட்டரணும் நீரரணும் அவ்வாறே வேண்டுவன யாவும் அமைந்தனவாம். இங்ஙனம் அடைத்திருத்தலும் அவனைச் சூழ்ந் தழித்தலுங் கலியூழி தோறும் பிறந்த சிறப்பில்லா அரசியலாதலின் இவை வஞ்ச முடைத்தாயிற்று.[6]

சிறப்புடை அரசியலாவன:—மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறாதோனையும் மயிர்குலைந்தோனையும் அடிபிறக் கிட்டோனையும் பெண் பெயரோனையும் படையிழந்தோனையும் ஒத்தபடை யெடாதோனையும் பிறவும் இத்தன்மை யுடை யோரையுங் கொல்லாது விடுதலுங் கூறிப் பொருதலும்[7] முதலியன வாம்.

---

1. இடங்கர்—முதலை
2. கிடங்கு—அகழி
3. பதணம்—நெருஞ்சிமுள்
4. ஏப்புழை ஞாயில்—மறைந்து அம்பு செலுத்தும் துளை யுள்ள மதில் உறுப்பு
5. எழு—கணையமரம்; சீப்பு—விசைப்பொறி
6. வஞ்சனை பலவும் உடைய அரணில் அடைத்திருத்தலும், அடைத்திருக்கும் வேந்தனை முற்றுதலும் வீரத்துக்கு இழுக்காதலின் இவ்வாறு எழுதினார்.
7. ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் எனும் புறப்பாடலிற் கூறப்பட்டவாறு அறத்தாறு நுவலும் பூட்கையுடன் பொருதல்.

இனி 'ஆகும்' என்றதனான் எதிர்சென்ற வேந்தன் பொருது தோற்றுச் சென்று அடைத்திருத்தலும் உழிஞையாம். மற்றை வேந்தன் வளையாது மீளின் அவனடைத்தது உழிஞை யாகா தென்றுணர்க.

(10)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் —9

உழிஞை தானே...... புறனே.

கருத்து:— இது, பற்றலர் அரணை முற்றி எறியும் உழிஞைப் புறத்திணை, மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனாம் எனக் கூறுகிறது.

பொருள்:— உழிஞை தானே— உழிஞைத் திணையானது; மருதத்துப் புறனே—மருதம் என்ற அகத்திணைக்குப் புறனாகும்.

குறிப்பு:— தானே என்பதன் ஏகாரம் பிரிநிலை. புறனே என்பதன் ஏகாரம் ஈற்றசை.

மருதத்துக்கும் உழிஞைக்கும் அரணுடைய ஊர்களே நிலைக் களம் ஆதலானும், புலத்தலும் ஊடலும் மருத ஒழுக்கம் ஆதல் போல முற்றிய ஊரரணின் அகப்புறப் படைகள் தம்முள் கலாய்த்து இகலுதலே உழிஞையாதலானும், மருதத்துக்கு உழிஞை புறனாயிற்று.

(9)

சூத்திரம்: 10.

முழுமுத லரணம்........... என்ப,

கருத்து:— இஃது. உழிஞையின் இயல் விளக்குகிறது.

பொருள்:— முழுமுதல் அரணம் முற்றலும்— கெடாத தலை யான காவலுடைய கோட்டையை வளைதலும் கோடலும்—எயில் காவல ரெதிர்ப்பை அழித்து எயிலைக் கைப்பற்றுதலும்; அனை நெறி மரபிற்று ஆகும் என்ப—அம்முறைகளின் தன்மை யுடைத் தாம் உழிஞைத்திணை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:— முன்னைச் சூத்திரத்து 'உழிஞை' என்பது ஈங்கு 'ஆகும்' என்னும் வினைக்குக் கொண்ட பொருள் தொடர்பால் எழுவா யாயிற்று. 'என்ப' என்பதற்கு ஏற்பப் ''புறநூற் புலவர்'' என்னும் வினைமுதல் அவாய் நிலையால் வருவிக்கப்பட்டது.

ஓசை நோக்கி அனைய என்பதன் ஈறுகெட்டு அனை என நின்றது.

ஈங்குக் கோடல் என்பது முற்றியோர் வென்று அரண் கொள்ளுதலையே குறிக்கும். கொள்ளாது முற்றிய கோட்டையை விட்டு விலகுதல் உழிஞை ஆகாமையிற் கோடலும் முற்றலுடன் கூறப்பட்டது. இனி, கோடலை அரண் காவலர் தொழிலாக்கி முற்றலை மட்டும் உழிஞை எனின், முற்றியோர் அரண் கைப் பற்றுதல் உழிஞையில் அடங்காமல், வேறு திணையுமாகாமல், குன்றக் கூறலாய் முடியும்; அன்றியும், முற்றியோர் அரணைப் பற்றாவழி அகப்படை அதனை மீட்டுக் கோடல் இன்மையால், அவரரண் கோடல் உழிஞை என்பது மிகைபடக் கூறலாகும். இன்னும், முற்றியோரை முறிய ஓட்டி அகத்தவர் வெற்றி பெற்ற காலை, அஃது அரண் காத்தலன்றிக் கோடலாமாறில்லை யாதலானும் முற்றியோர் வெற்றியால் அரணைப் பற்றிய பின் தோற்ற காவலர் அவரை முற்றி அரணை மீட்டுக் கோடல் அவ ரளவில் உழிஞையே யாமாதலானும், முற்றியோரும் அரண் காவலரும் கைகலந்து பொருவது உழிஞையின் இடை இயல் நிகழ்ச்சி யாவதன்றித் தன்னளவில் தனித்தொரு திணையாமாறு இல்லையாதலானும், அகத்தவர் எதிர்ப்பை நொச்சியெனத் தனித்தொரு திணையாக்கின் அதற்கு நேராம் அகத்திணை ஒன்று மின்றாதலானும், அகத்தோன் வீழ்ந்த நொச்சியை உழிஞைத் துறை வகைகளுள் ஒன்றாயடக்கிப் பின் சூத்திரம் கூறு வதானும் இங்குக் கோடல் என்பது அகத்தவர்க்கு ஆகாமை ஒரு தலை.

(10)

சிவலிங்கனார்

உழிஞை..................என்ப.

இச்சூத்திரம் உழிஞைத்திணை மருதத்திணைப் புறம் எனவும் அதன் இலக்கணம் இன்னது எனவும் கூறுகின்றது. (இ-ள்) உழிஞைத்திணை மருதத்திணைப்புறம் ஆகும்; வேற்று வேந்த னின் முழு முதல் அரணை முற்றுதலும், முற்றிய அரசனை வீழ்த் தித் தனதாக்கிக் கோடலும் என்னும் அத்தகைய வழியான் அமைந்த இலக்கணத்தையுடையது உழிஞைத்திணை என்ற வாறு.

தலையரண் இடையரண் கடையரண் என இடையிட்டு அரசன் கோயிலைச் சுற்றி அமைக்கப்பட்டவற்றுள் தலையரணே முதல்

அரண் எனப்பட்டது. அது உரையாசிரியர் யாவரும் கூறியவாறு அமைதலே முழுமை எனப்பட்டது.

முற்றுதல் என்பது வளைத்தல். வளைக்கும் வேந்தர் இரு வகையினர். வஞ்சிப்போரில் மண் விரும்பிப் படையெடுத்த வேந்தனே வெற்றி பெற்றானாயின் அவன் தன் நாடு மீளாமல் தொடர்ந்து பகைவேந்தனை அவன் மதிலளவும் ஓட்டிச் செல்ல அவன் தன் மதிலகத்துச் சென்று அடைத்துக்கொள்ள அம்மதிலை வளைத்தல் ஒருவகை. வஞ்சிப்போர் நிகழாமலேயே ஒரு வேந்தன் தன் பகை வேந்தனை வென்று நாடு கொள்ளப் படையெடுத்து வரப் பகைவேந்தன் எதிர்த்தல் இன்றி மதிலகத்து மறைந்திருக்க அம்மதிலை வளைத்தல் மற்றொரு வகை. எனவே உழிஞைப் போர் வஞ்சிப் போரின் தொடர்பாகவும் வஞ்சிப்போர் இன்றியும் நிகழும் என்க.

புறனாயதற்கு உரையாளர் யாவரும் கூறிய காரணம் சிறக்கும். மருதத்துக்கு நிலம் வளவயல் சூழ்ந்த மருத நிலம். சிறுபொழுது காலை. பெருவேந்தனின் அரண்மனை மலையும் காடும் மலையரணாகவும் காட்டரணாகவும் இயற்கையில் அமைய ஊரகத் திருத்தலாலும் போர் செயற்கேற்ற காலம் காலையாதலாலும் முதற்பொருள் காரணமாக ஊழிஞை மருதத்துப் புறனாயிற்று. உழிஞையும் நொச்சியும் மருதக் கருப்பொருள்கள். தலைவன் பரத்தமை காரணமாகத் தலைவி மனையகத்து ஊடியிருத்தல்போல வேற்று வேந்தன் மதிலகத்து அடைத்திருத்தலும் தலைவன் உட்புக விரும்புதல் போல அகமதிலை வளைத்த வேந்தன் உட்புக விரும்புதலும் ஆகிய செயல்களால் உரிப்பொருள் காரணமாக உழிஞை மருதத்துப் புறன் ஆயிற்று.

67. அதுவே தானும் இருநால் வகைத்தே. (9)

ஆ. மொ. இல:

66. This falls into two fours (eight)

இளம்பூரணர்

அதுவே......................இருநால் வகைத்தே.

இஃது உழிஞைத் திணையை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அதுதான் இருநால் வகைத்து—உழிஞைத்துறை தான் எட்டு வகைத்து.

அவையாமாறு முன்னர்க் காணப்படும். ஏகாரமும் உம்மையும் அசைகள். (9)

நச்சினார்க்கினியர்

66. அதுவே தானு............வகைத்தே.

இது முற்கூறிய முற்றலுங் கோடலும் ஒருவன் தொழிலன் றென்பதூஉம் முற்கூறியதுபோல் ஒரு துறை இருவர்க்கு முரிய வாகாது, ஒருவர்க்கு நான்கு நான்காக எட்டாமென்பதூஉங் கூறுகின்றது.

இதன் பொருள் : அதுவே தானும்—அவ்வுழிஞைத் துறை தானும், இருநால் வகைத்து—மதில் முற்றிய வேந்தன் கூறு நான்கும் அகத்தோன் கூறு நான்குமென எட்டு வகைத்து என்றவாறு.

அது மேற்கூறுப. (11)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் 11.

அதுவே தானும்.........வகைத்தே.

கருத்து :- இது உழிஞைத் திணை எட்டு வகைப்படும் என் கின்றது.

பொருள் : வெளிப்படை
ஏகாரம் ஈற்றசை.

(11)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் உழிஞைத் திணையின் வகை கூறுகின்றது.

(இ-ள்) அவ்வுழிஞைத் திணையானது இரண்டு நான்குகளான வகையினையுடையதாகும்.

அதுவே என்பதன் ஏகாரமும் வகைத்தே ஏகாரமும் அசை நிலைகள். தானும் என்பதன் உம்மையும் அசைநிலை. அது தான் என்பது அதுவேதானும் என வந்தது. அதுவே தானும் என்பதில் அது தவிர மற்றையன அசைநிலைகள் எனினுமாம்.

'இரு' என்பது முற்றுவோர் செயலையும் அவரைத் தடுப்போர் செயலையும் குறிக்கும். அவற்றுக்குரிய நான்கு நான்கு வகைகளை அடுத்த சூத்திரத்துக் கூறுகின்றார்.

இளம்பூரணரும் பாரதியாரும் இருநால் வகைத்து என்பதற்கு எட்டுவகைத்து எனக் கூறுவர்.

68. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்லெயிற் றிவர்தலும் தோலது[1] பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி[2] முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறற்பட[3]
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை[4] பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே. (10)

ஆ மொ. இல:

67. The claim of victory over the country which is not yet conquered, the eminence of the king who is capable of accomplishing what he plans to do; having the desire for destroying the old fortress; having shields in large numbers; the wealth of the king who is besieged; the sufferings inflicted upon the king who is besieging; the skill of the king who is inside the fort and who comes out for fighting the enemy; and the great fortress of the king who disregards the siege of the enemy because of its invulnerability' these are the above said (eight) divisions of the theme. in the style of 'Pasi', loving to fight inside the town with bravery; styled 'Pasimaran' the role of one who scaled the walls to fight; the act of having conguered the fort and being crowned; the ceremony of bathing

---

பாடம் 1. தோலின்.
2. அன்றிய.
3. திறப்பட, திறம்பட.
4. வருபடை.

the sword that conquered; and the collection of armies in one place for being rewarded—these are said to be the twelve divisions.

பி. இ. நா.

இல. வி. புற. 10

முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங் கெயில்கொளக் குறித்த உழிஞையும்

இளம்பூரணர்

68. கொள்ளார் தேஎங்[1]...........நாலிரு வகைத்தே.

இதுவும், உழிஞை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் முதலாகச் சொல்லப்பட்டன உழிஞைத் துறையாம்.

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்—பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும்.[2] [கொள்ளார்—தன்னை இறையெனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும்]

உதாரணம்

''ஆனா ஈகை அடுபோர் அண்ணல்நின்
யானையும் மலையின் தோன்றும் பெருமநின்
தானையுங் கடலென முழங்கும் கூர்நுனை
வேலும் மின்னின் விளங்கும் உலகத்து
அரைசுதலை பனிக்கும் ஆற்றலை யாதலின்
புரைதீர்ந்து அன்றது புதுவதோ அன்றே
தண்புனல் பூசல் அல்லது நொந்து
களைக வாழி வளவ என்றுநின்
முனைதரு பூசல் கனவினும் அறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி அரிநர்

1. தேஎம்—தேயெம்—தேயம்—தேசம் என வரும் (சிவ.)
2. இதற்கு நச். உரை பார்க்க.

கீழ்மடைக் கொண்ட, வாளையும் உழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையும் அறைநர்
கரும்பில் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்
மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந
மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்னோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக்
கூற்று வெகுண்டு அன்ன முன்பொடு
மாற்றுஇரு வேந்தர் மண்நோக் கினையே''[3]

(புறம்-42)

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்—நினைத்தது முடிக்கலாகும் வேந்தனது சிறப்பும்.

உதாரணம்

''அடுநை ஆயினும் விடுநை ஆயினும்
நீஅளந்து அறிதி நின் புரைமை வார்கோல்
செறியறிச் சிலம்பில் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்

---

3. அண்ணல், பெரும! நின்தானை கடலென முழங்கும்; யானை மலைபோல் தோன்றும், வேல் மின் என விளங்கும். நீ அரசு தலை வணக்கும் ஆற்றலுடையாய்! தண்ணீர்ப் பூசல் அன்றிப் போர்ப் பூசலைக் கனவிலும் அறியாமல், புலி தன் குட்டியைக் காப்பதுபோல நீ குடிமக்களைக் காத்தலின் புதிய வருவாய் உடையதாகி, வாளை மீன், யாமை, தேன், குவளை முதலியவற்றை குறிஞ்சி முல்லையாகிய வன்னிலத்திருந்து வரும் சுற்றத்தார்க்குக் கொடுக்கும்படியான மருதமும் நெய்தலுமாகிய மென்புலத்தையுடைய நன்னாட்டுப் பொருநனே! கடல் நோக்கி மலையின் இழிதரும் யாறுபோலப் புலவர் எல்லாம் நின்னை நோக்கி வர சோழனாகிய நீ மற்றைச் சேரபாண்டியரின் மண்ணைக்கொள்ள நோக்கினாய். இச்செய்கை குற்றம் தீர்ந்ததேயாம். அன்றியும் இது புதியதும் அன்று.—குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இடைக்காடர் பாடியது.

தண்ஆன் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்
கடிமரந் தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆங்கினிது இருந்த வேந்தனொடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே''[4]

(புறம்-36)

இன்னும் 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்' என்றதனால் அகத்தரசனை அழித்தது கூறலும் கொள்க.

உதாரணம்

'இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கையவெய் துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்
இன்னாது அம்ம ஈங்கினிது இருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்

---

4. பொருள்: கருவூர் முற்றிய கிள்ளிவளவனை நோக்கிக் கூறியது. அரசே! மகளிர்க் கழங்கு கொண்டு மணல் திட்டில் ஆடும் ஆண் பொருநையின் மணல் சிதையுமாறு கொல்லனாற் செய்யப்பட்ட கோடரி வெட்டலின் கிளைகள் தனிப்பட, சோலைதோறும் காவல் மரத்தை வெட்டும் ஓசையானது தன்னூர் மதிலகத்துள்ள அரண் மனையிடத்துக் கேட்பவும் போர்க்கு எழாமல் இனிதாக அடைத்திருக்கும் வேந்தனொடு முரசு கறங்கப் போர் புரிந்தாய் என்பது வெட்கப்படும் தகுதிப்பாடுடைய தாகும். அதனால் நீ கொல்வதாயினும் கொல்லாது விடுவதாயினும் அவற்றால் வழிம் சிறப்பை நீயளந்தறிவாய்; வேண்டியது செய்க.- இப்படிக் கூறியதால் அவன் உள்ளியது முடிக்கும் ஆற்றல் கூறியவாறாம்.—இது குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடியது.

அறவை ஆயின் நினதெனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தகவு உடைத்திது காணுங் காலே''[5]

(புறம்-44)

தொல் எயிற்கு இவர்தலும்-தொல் எயிலின் கண் பரத்தலும்.

உதாரணம்

''புல்லார் புகழொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி-ஒல்லார்
நிறத்திறுத்த வாள்தானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னான்.''

(வெண்பா. உழிஞை-10)

தோலது பெருக்கமும்-தோற்படையினது பெருமையும்.

உதாரணம்

''நின்ற புகழொழிய நில்லா உயிரோம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும்—வென்றொளிரும்
பாண்டில் நிரைதோல் பணியார் பகைஅரணம்
வேண்டில் எளிதென்றான் வேந்து''[6]

(வெண்பா. உழிஞை-12)

அகத்தோன் செல்வமும்—அகத்தரசனது செல்வமும்.

---

5. பொருள்: தோன்றலே! நின் போர் யானைகள் போரில்லாமையால் கைகள் நிலத்தில் புரள இடியென முழங்கவும், பாலின்றிக் குழந்தைகள் அலறவும், பூவின்றிக் கூந்தலை மகளிர் முடிப்பவும் வீடுகளில் நீரும் இல்லாமையால் வறுமைக்குரல் கேட்பவும் நீ மதிலில் அடைத்திருத்தல் கொடியதாகும். அதனால் அறவுணர்வுடையை என்றால் முற்றியிருக்கும் கிள்ளிவளவனிடம் இம்மதில் நின்னதாகும் என்று சொல்லி மதிற்கதவைத் திறக்க. வீரனாயின் போர் செய்து வென்று திறக்க. அறனும் வீரமும் இல்லாமல் இம்மதிலினுள் ஒரு பக்கம் ஒடுங்கியிருத்தல் நாணத்தக்கதாம்.-இப்பாடல் முற்றுகையிட்ட நலங்கிள்ளிக்கு அஞ்சி அடைத்திருந்த நெடுங்கிள்ளியிடம் கோவூர் கிழார் கூறியது.

6. 'நிரைதோல் பகையரணம் வேண்டின் எளிது" என்றதால் தோல் (கிடுகுபடை) பெருக்கம் புலப்படும்.

உதாரணம்

''அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே
வான்கண் அற்றவன் மலையே வானத்து
மீன்கண் அற்றதன் சுனையே ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளில் கொள்ளலிர் வாளில் தாரலன்
யானறி குவனது கொள்ளும் ஆறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரைஒலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே''[7]

(புறம்-109)

அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்—அன்றியும் பகைத்த புறத்தரசன் வருந்திய பக்கமும்.

---

7. இச்செய்யுள் பாரி பறம்பினை முற்றுகையிட்ட மூவேந்தரிடம் கபிலர் கூறியது. ''நீவிர் மூவேந்தரும் கூடி முற்றுகையிடினும் பாரி பறம்பு கொள்ளுதற்கரிதாம். அவன் மலை உழவரால் உழுது விளைவிக்கப்படாத நான்கு பயன் உடையது. ஒன்று மூங்கில் நெல் விளையும். இரண்டாவது பலாப்பழம் முற்றியுள்ளதாம். மூன்றாவது வள்ளிக்கிழங்கு முற்றியிருக்கும். நான்காவது தேன் சொரியும் அவன் மலை வானையளாவியது. அதன் சுனைகள் நாண்மீன்கள் போலும். அதனால் மரங்கள்தோறும் கன்றுகளைக் கட்டினவரானாலும் எங்கும் பரப்பிய தேருடையவரானாலும் போராலும் வாளாலும் அவன் மலையைக் கொள்ளமாட்டீர். கொள்ளும் வழி யான் அறிவேன். அது யாதெனின் விறலியர் பின் தொடர அவனைப் பாடியும் ஆடியும் சென்றால் அப்பாரி தன் நாடு முழுமையும் தருவன். செய்க.

உதாரணம்

"நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த
வேக வெந்திறல் நாகம் புக்கென
விசும்புநீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துரும்எறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅங் கலித்த குண்டுகண் அகழி
இடங்கருங் குட்டத் துடன்தொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்
வம்பணி யானை வேந்தகத்து உண்மையின்
நல்லஎன் னாது சிதைத்தல்
வல்லையால் நெடுந்தகை செருவத் தானே"[8]

(புறம்-37)

திறம்பட ஒரு தான் மண்டிய குறுமையும்[9] வலிபட ஒரு தானாகிச் சென்ற குற்றுழிஞையும்.

உதாரணம்

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மலைந்து

---

8. நெடுந்தகை! செம்பியன் மருக! ஐந்தலை நாகம் மலை விடரகத்துப்புக இடி இடித்தாற்போல, ஊர்க்காவலரின் விளக்குச் சுடரொடு திரியும் முதலையுடைய அகழியும் இலஞ்சியும் உள்ள மூதூரின் மதிலகத்து வேந்து அடைத் திருத்தலின் அம்மூதூரும் மதிலும் நல்லன என்று கருதாது போரில் அழித்தல் வல்லவனாவாய். —இது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நப்பசலையார் பாடியது. அரணும் மூதூரும் நல்ல என்று விட்டுவிடாது போர் புரிதல் வேண்டும் என்றதால் புறத்தோன் அகத்தோன் ஊர் அழிவுக்கு வருந்தியது பெறுதும்.

9. தான் தனித்துச் சென்றமையின் குறுமையாயிற்று. கிண்கிணி களைந்த கால், குடுமி களைந்த நுதல் குறுந்தொடி கழித்த கை என்பனவும், தாலி களைந்தன்று

குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கஅவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
அயினியும் இன்றயின் றனனே வயின் வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழச்
கவிழ்ந்துநிலஞ் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே''

(புறம்-77)

உடன்றோர் வருபவை பேணார் ஆரெயில்—வெகுண்டு வருகின்ற படையைப் பேணார் ஆரெயில் உழிஞையும்.

உதாரணம்

''மயிற்கணத்து அன்னார் மகிழ்தேறல் ஊட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப—எயிற்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றீ அரிதரோ
மாயப்போர் மன்னன் மதில்''[10]

(வெண்பா. உழிஞை. 11)

உளப்பட சொல்லப்பட்ட நாலிரு வகைத்து—உட்படக் கூறப்பட்ட எட்டு வகைத்து.

மிலன் பால்விட்டு உணவும் இன்றுதான் அயின்றனன் என்பன வீரனின் இளமையைப் புலப்படுத்துவன. வம்ப வீரரை வியத்தலும் இழித்தலும் இலன் அவரை அட்டதற்காக மகிழ்தலும் தற்பெருமை கொள்ளலும் இலன் என்பன அவன் வெற்றியும் குணமும் புலப்படுத்துவன—பாண்டியன் நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடிய-

10. மதிற்புறத்தோர் எதிர்ப்பவர் வீயப்போர் செய்தாலும் மயிற்கூட்டம் போலும் மகளிர் கள்ளை ஊட்ட உண்ணும் வீரர்கள் சிவக்குமாறு மதிலகத்து வீரர் புறத்தாரை மதியாது மகிழ்ந்திருக்கவும் மன்னன் மதில் வென்றி கொளல் அரிது.

பதினெட்டு, இருபத்தொன்பது என்பார்[11] மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்துந் தொகை கூறினார். இது கூறியது கூறலன்று; தொகை.[12]

(10)

நச்சினார்க்கினியர்

67. கொள்ளார் தேஎங்...........வகைத்தே.

இது முற்கூறிய நாலிரு துறைக்கும் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

இதன் பொருள் :— கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்—பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயுங் கொண்டான்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றியும் :

தன்னை இகழ்ந்தோரையுந் தான் இகழ்ந்தோரையுங் கொள்ளாரென்ப.

உதாரணம்

''மாற்றுப் புலந்தோறு மண்டில மாக்கள்செல
வேற்றுப் புலவேந்தர் வேல்வேந்தர்க்—கேற்ற
படையொலியிற் பாணொலி பல்கின்றா லொன்னா
ருடையன தாம்பெற் றுவந்து''[1]

(பெரும்பொருள் விளக்கம்: புறத்திரட்டு: 791)

'கழிந்தது பொழிந்தென' என்னும் புறப்பாட்டினுள்'

...............ஒன்னா

---

11. பதினெட்டு இருபத்தொன்று எனத் தொகை கூறினாரும் இருந்தனர் போலும்.

12. தொகை—தொகை கூறிற்று.

1. மாற்றார் இடந்தோறும் தம் துணையாய மண்டில அரசர் செல்லவே வேற்று நாட்டரசர் வேல்வேந்தரிடம் எதிர்ந்தபோது உண்டான படைகளின் ஒலியைவிடப் பாணர் அப்பகைவர் உடைய நாடுகளைப் பெற்று உவந்ததால் உண்டான ஒலி மிக்கது·

ராரெயி லவர்கட் டாகவு நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்'' [2]

(புறம்-203)

என்பதும் அது.

'ஆனாவீகை யடுபோர்' என்னும் புறப்பாட்டும் அது.

இராமன் இலங்கை கொள்வதன்முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது.

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்—அவ்வாறு குறித்த குறிப்பினை முடிக்கின்ற வேந்தனது சிறப்பினை அவன் படைத் தலைவன் முதலியோரும் வேற்று வேந்தன்பால் தூது செல்வோ ரும் எடுத்துரைத்தலும் :

உதாரணம்

''மழுவான் மிளைபோய் மதிலா னகழ்தூர்ந்
தெழுவாளோ னேற்றுண்ட தெல்லா—மிழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சீற்றத்தீ
விட்டெரிய விட்ட மிகை'' [3]

(தகடூர் யாத்திரை. புறத்திரட்டு-எயில் காத்தல்)

என வரும்.

''மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வாளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறை[4]போகலின்''

(பட்டின.—271-273)

என்பதும் அது, மாற்றார் மதிலும் அகழுஞ் சுட்டிக்[5] கூறலின்.

---

2. பகைவர் எயில் அவரிடம் இருக்கவே அவர் நாட்டை நுமது எனப் பாணர்க்குக் கடப்பாடாகக் கொடுக்கும் வள்ளலே.

3. மழுவால் காவற்காடு அழிந்து அழித்த மதிலாலேயே அகழி தூர்ந்து பாழ்பட எழுந்த வாள்வீரன் போரேற்று வெற்றி கொண்டதெல்லாம் மறவேந்தனின் சீற்றமாகிய தீவிட்டு எரிய அத்தீ விட்ட மீகுதியேயாகும்.

4. தான் முன்னியதுறை—தான் நினைத்த போர்த்துறை.

5. பாடலில் மலை மதிலையும் கடல் அகழியையும் சுட்டின.

''அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடுந்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
வாங்கினி திருந்த வேந்தனோ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே''

(புறம்-36)

இது புறத்துழிஞையோன்கண் தூதன் அவன் சிறப்பு எடுத்துரைத்தது.

''வயலைக் கொடியின் வாடிய மருங்கு
லுயவ லூர்திப் பயலைப் பார்ப்பா
னெல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
யேணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே''

(புறம்-305)

இது தூதருரை கேட்ட அகத்துழிஞையோன் திறங் கண்டோர் கூறியது.

தொல் எயிற்கு இவர்தலும்—ஒரு காலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப் பகலுள் அழித்துமென்று கூறி அஃது அழித்தற்கு விருப்பஞ் செய்தலும் :

உதாரணம்

''இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றாரான் போனகங்கைக் கொள்ளானா—
லெற்றாலும்

---

6. பார்ப்பான் பகலில் வந்து தடையின்றிப் புகுந்து தூதுச் சொல்லாகச் சொன்ன சொற்கள் சிலவே; அச்சொற் கொண்டு பகைவரது மதில் ஏணியும் சீப்பும் மாற்றி போரில் சிறக்கும் யானைகளும் தம் மணிகளைக் களைந் தொழிந்தன.

ஆறாத வெம்பசித்தீ யாற வுயிர்பருகி
மாறா மறலி வயிறு''[7]

(புறத்திரட்டு-847)

என வரும்.

''மறனுடை மறவர்க் கேறவிட னின்றி
நெய்யோ டையவி யம்பிவெவ் வாயு
மெந்திரப் பறவை யியற்றின நிறீஇக்
கல்லுங் கவணுங் கடுவிசைப் பொறியும்
வில்லுங் கணையும் பலபடப் பரப்பிப்
பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலு
மென்றிவை பலவுஞ் சென்று சென் றெறியு
முந்தை மகளிரை யியற்றிப் பின்றை
யெய்பெரும் பகழி வாயிற் றூக்கிச்
சுட்டல் போயின் றாயினும் வட்டத்
தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர
நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்குந்
தாக்கருந் தானை யிரும்பொறை
பூக்கோட் டண்ணுமை கேட்டொறுங் கலுழ்ந்தே''[8]

(தகடூர் யாத்திரை)

---

7. இன்று பகலுக்குள் பகைவர் மதிலகம் புகுந்து வென்றன்றி பொற்றேர் அரசன் உணவைக்கையில்தொடான்; ஆதலால் உயிர் கோடலில் காலம் மாறாத எமனின் எதனாலும் அடங்காத தன் வயிற்றின் வெம்பசித் தீயானது போர்க்களத்து உயிர்களைப் பருகி அடங்குவதாக.

8. பார்ப்பவர் மனம் நொந்து கை நடுங்கும்படியான தாக்க அரிய தானையுடைய இரும்பொறையின் மதிற்போர்க்காக உழிஞைப் பூக் கொள்ளுதலை அறிவிக்கும் தண்ணுமையொலி கேட்குந்தோறும் அழுது பகைவர் மதில் வீரர் ஏற இடமின்றி நெய்யும் ஐயவியும் அப்பி எவ்விடத்தும் எந்திரப் பறவை நிறுத்தி, கல் கவண் விசைப்பொறி வில் கணை ஆகியவற்றை நிரப்பிப் பந்தும் பாவையும் புட்டிலும் சென்று சென்று எறியும் பதுமை மகளிரை நிறுத்தி மதில் வாயிலில் அம்புகள் பலவும் தொங்கவிட்டு இப்படியாகப் போர்க்கு ஆயத்த நிலையைச் சுட்டுதல் அமைந்ததாயிருந்தாலும் போரில் தம் கணவர் இறப்பது உறுதி என எண்ணி வட்டமாக அமைக்கும் தீயில் பாய்ந்து உயிர்விட ஆயத்தமாக இருக்கும் வீரர் மனைவியரின் அழகு அழிவதாக.

இப் பொன்முடியார் பாட்டும் அது.

இதனாற் பூச்சூடுதல் பெற்றாம்.

தோலின் பெருக்கமும்—அங்ஙனம் மதின்மேற் சென்றுழி மதிலகத்தோர் அப்புமாரி விலக்குதற்குக் கிடுகுங் கேடகமும் மிடையக்கொண்டு சேறலும்:

உதாரணம்

''இருசுட ரியங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் கடந்த ஞான்றை
யெண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்டை
யெச்சார் மருங்கினு மெயிற்புறத் தண்டை
கடல்சூ ழரணம் போன்ற
துடல்சின வேந்தன் முற்றிய வூரே''[9]

(ஆசிரியமாலை - புறத்திரட்டு; 852)

எனவரும்.

''நின்ற புகழொழிய நில்லா வுயிரோம்பி
யின்றுநாம் வைக லிழிவாகும்—வென்றொளிரும்
பாண்டி னிரைதோற் பணியார் பகையரணம்
வேண்டி லெளிதென்றான் வேந்து.''

(பு. வெ-உழிஞை-12)

இதுவும் அது.

அரணத்தோர் தத்தம் பதணத்து[10] நிற்றலின் தோல் கூறிற்றிலர்.

இந்நான்கும் முற்றுவோர்க்கே உரியவெனக் கொள்க.

அகத்தோன் செல்வமும்—அகதது உழிஞையோன் குறைவில்லாத பெருஞ்செல்வங் கூறுதலும்:

---

9. சினவேந்தன் முற்றுகையிட்ட ஊரானது, இராமன் இலங்கையை முற்றுகையிட்ட காலத்துக் கரடி கூடிய சேனையில் தோல் போர்த்த பல புறமுடைய கிடுகுகளும் மதிலின் எப்பக்கத்திலும் கடல்போல் சூழ்ந்த தன்மையாயது.

10. பதணம்—மறைந்து அம்பெய்யும் இடம்.

அவை படை குடி கூழ் அமைச்சு நட்பும் நீர் நிலையும் ஏமப் பொருண்[11] மேம்படு பண்டங்களும் முதலியனவாம்.

உதாரணம்

''பொருசின மாறாப் புலிப்போத் துறையு
மருவரை கண்டார்போ லஞ்சி—யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றேர்வேந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து''[12]

(தகடூர் யாத்திரை: புறத்திரட்டு: 857)

என வரும்.

''அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவரு ழாதன நான்குபய னுடைத்தே
யொன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பலமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.''

(புறம் 109)

---

11. ஏமப்பொருள்-நெடுங்காலம் வேண்டும் என்று திரட்டி வைக்கும் பொருள்.

12. புலி உறையும் மலை கண்டார் அஞ்சுமாறு அஞ்சி ஒருவரும் உட்செல்ல முடியாத மதிலகத்து வேந்தன் வேண்டியவர்க்கு வேண்டியன எல்லாம் கொடுத்து வீற்றிருந்தான்.

என்னும் புறப்பாட்டும் அது.

அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்-மாறுபட்ட புறத்தோனை அகத்தோன் தன் செல்வத்தான் அன்றிப் போர்த் தொழிலான் வருத்திய கூறலும்:

உதாரணம்

''கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்னா ளினியே
யமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்க ணாடவ
ருருகெழு வெகுளியர் செறுத்தன ரார்ப்ப
மிளைபோ யின்று நாளை நாமே
யுருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமுரு சிரங்க வூர்கொள் குவமே' '[13]

(தகடூர் யாத்திரை)

இது சேரமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன் படைபட்ட தன்மை கூறக் கேட்டோற்கு[14] அவர் கூறியது:

திறப்பட ஒருதான் மண்டிய குறுமையும்—அகத்திருந்தோன் தன்னரணழிவு தோன்றிய வழிப் புறத்துப் போர் செய்யுஞ் சிறுமையும்:

உதாரணம்

''வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப

---

13. வேந்தே! முன்னாளில் குதிரைகளையும் யானைகளையும் வீரர்களையும் பலவாகப் புறங்கண்டனர் நம் படைவீரர். இந்நாளில் மதிலகத்தோரின் படை யானைகளால் நம் வீரர் தலைகள் மூக்கறுபட்ட பனங்காய்கள் போலப் புதர்களில் கிடந்தன. அவ்வீரர்களும் வெகுளியோடு நம் வீரர்களை அழித்தனர். ஆதலின் நாளை நாம் முரசு ஒலிக்க நம் ஊர் செல்வோமாக.

14. கூறக்கேட்டோற்கு—கூறுக எனக் கேட்ட சேரமானுக்கு.

நூலரி மாலை சூடிக் காலிற்
றமியன் வந்த மூதி லாள
னருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
வொருகை யிரும்பிணத் தெயிறு மிறையாகத்
திரிந்த வாய்வா டிருத்தாத் தனக்
கிரிந் [தே] தானை பெயர்புற நகுமே''

(புறம்-284)

என வரும்.

உடன்றோர் வருபகை பேணார் ஆர்எயில் உளப்பட—புறத்தோன் அகத்தோன்மேல் வந்துழி அவன் பகையினைப் போற்றாது அகத்தோன் இகழ்ந்திருத்தற்கு அமைந்த மதிலரண் கூறுதலகப்பட :

உதாரணம்

''மொய்வேற் கையர் முரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்றார் மார்ப
வெவ்வழி யாயினு மல்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
தீண்ட றகாது வெந்துறை யரணே.''[15]

(தகடூர் யாத்திரை)

இஃது அகத்தோன் செல்வம் போற்றுதற்கு ஏதுவாகிய முழுவரண்[16] கூறுதலிற் செல்வத்துள் அடங்காதாயிற்று.

இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறியது.

---

15. தார்மார்ப! வேற்கையராய புறவீரர் ஒய்யென வந்தது எவ்வழி என வினவுகின்றாய்; எவ்வழியாயினும் ஆகுக. அவ்வழியில் தோன்றிப் பகைவீரரைக் கண்டால் அவர் தம் புண்மிக்க உடலில் உரசி அவர் தம் தலையை உதைத்த வலிமிக்க ஆண்தகை மறவர் நிறைந்து பிற பகைவர் தீண்டத் தகாததாய் இருந்தது வலிய பல துறைகளையுடைய நம் அரண்.

16. முழு அரண்—முழுமையான அரணின் வலி.

சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே—மேலிரு நால்வகைத் தென்று சொல்லப்பட்ட இருநான்கு பகுதியதாம் உழிஞைத்திணை என்றவாறு.

முற்கூறிய[17] தொகையே யன்றி ஈண்டுந் தொகை கூறினார், அந்நாலிரண்டுமே யன்றி அவை போல்வனவும் நாலிரண்டுதுறை தோன்றுமென்றற்கு. அவை புறத்து வேந்தன் தன் துணையாகிய அரசனையாயினுந் தன் படைத் தலைவரையாயினும் ஏவி அகத்து வேந்தற்குத் துணையாகிய அரசரது முழு முதலரண் முற்றலும் அவனறான் அதனைக் காவல்கோடலும் நிகழ்ந்த விடத்தும் இவ்விரு நான்கு வகையும் இருவர்க்கு முளவாதலாம்.

உதாரணம் முற்காட்டியவே; வேறுவேறு காட்டினும் அமையும். இத்திணைக்குப் 'படையியங்கரவம்' (63) முதலியனவும் அதிகாரத்தாற் கொள்க.[18] அது[19]

''இலங்குதொடி மருப்பிற் கடாஅம் வார்ந்து
நிலம்புடையூஉ வெழுதரும் வலம்படு குஞ்சர
மெரியவிழ்ந் தன்ன விரியுளை சூட்டிக்
கால்கிளர்ந் தன்ன கடுஞ்செல லிவுளி
கோன்முனைக் கொடியினம் விரவா வல்லோ
னோன்வினை கடுக்குந் தோன்றல பெரிதெழுந்
தருவியி னொலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
கண்வேட் டனவே முரசங் கண்ணுற்றுக்
கதத்தெழு மாதிரங் கல்லென வொலிப்பக்
கறங்கிசை வயிரொடு வலம்புரி யார்ப்ப
நெடுமதி னிரைஞாயிற்
கடிமிளைக் குண்டு கிடங்கின்
மீப்புடை யாரரண் காப்புடைத் தேஎ
நெஞ்சுபுக லழிந்து நிலைதளர் பொரீஇ
யொல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவண் வீங்கிய செலவே.''[20]

(பதிற்றுப்பத்து)

என வரும்.

---

17. முன் கூறிய என்றது முன் சூத்திரத்து 'நாலிரண் டுடைத்தே' எனக் கூறியதை:

18. வஞ்சிக்குரிய படையியங்கரவம் முதலிய துறைகளையும் இத்திணைக்கு அதிகாரத்தால் கொள்க என்றதாம்.

19. துணைவேந்தர் முற்றலும் கோடலுமாகிய அது.

20. வலம்படு குஞ்சரமும், கடுஞ்செல் குதிரையும் வரிபுனை நெடுந்தேரும் முரசம் முழங்க வயிரொடு வலம்புரி ஆர்ப்பப் பரந்துபட்டுச் சென்ற செலவானது, வரிசை

இனித் தேவர்க்குரியவாக உழிஞையிற்றுறைகள் பலருங் கூறுவருளராலெனின், அவை உலகியலாகிய அரசியலாய் என்ஞான்றும் நிகழ்வின்றி ஒருகால் ஒருவர் வேண்டியவாறு செய்வன வாகலின் 'தமிழ்கூறு நல்லுலகத்'தன அல்லவென மறுக்க. இனி முரசவுழிஞை வேண்டுவாருளரெனின், முரச வஞ்சியுங் கோடல் வேண்டுமென மறுக்க.

இனி ஆரெயிலுழிஞை[21] முழுமுதலரணம் என்றதன் கண் அடங்கும்.

இனி இவற்றின் விகற்பிப்பனவெல்லாம் அத்துறைப் பாற் படுத்திக் கொள்க.

(12)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் 12.

கொள்ளார் தேஎம்...... வகைத்தே

கருத்து:—இது, மேல் நாலிரு வகைத்தே எனத் தொகுத்த உழிஞை வகைகளின் பெயரும் இயல்பும் கூறுகிறது.

பொருள்:— 1. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்— பகைவர் நாட்டைக் கொள்ளத் துணியும் வீறும்;

குறிப்பு:— உள்ளின் விரைந்து முடிக்கும் உறுதி பற்றிக் குறித்த கொற்றம் என்றறிந்த காலத்தாற் கூறப்பட்டது.

1. .... ஒன்னார்
ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்!
பூண்கடன் எந்தைநீ இரவலர் புரவே.

(புறம்—203)

'ஆனா ஈகை' எனத் தொடங்கும் இடைக்காடர் புறப் பாட்டில் கீழ்வரும் அடிகளும் இக்கொற்றம் பற்றியது:—

யாக மதில் உறுப்பமைந்த மதிலும் காவற்காடும் அகழியும் மேம்படக் கொண்ட காவலுடைய தேயத் துள்ளாராகிய எல்லா மன்னரும் நெஞ்சம் விருப் பொழிந்து நிலை தளர்ந்து நீங்கி நடுங்குமாறு நன்றா யிருந்தது.

21. பிற்காலத்தார் கூறுவது.

2. மலையி னிழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்னோக் கினரே.
நீயே,
மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே.

(புறம்—42)

2. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்— 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணிய' திறலுடைய வேந்தன் சீரும்:

'ஏற்று வலனுயரிய' எனும் நக்கீரர் புறப்பாட்டில்,

''கூற்றொத் தீயே மாற்றரும் சீற்றம்,
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுநர் அடுநனை,
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்,
ஆங்காங்கு அவரவர் ஒத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ நினக்கே''

(புறம்—56)

என இத்துறை வருதல் காண்க. இன்னும் பட்டினப்பாலையில் திருமாவளவனை,

''.............................. மருங்கற
மலையகழ்க் குவனே, கடல்தூர்க் குவனே,
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான் முன்னிய துறைபோகலின்.''

(பட்டினப்பாலை வரி 270—273)

எனப் பாராட்டுவது மித்துறை யாகும்.

3. தொல் லெயிற்கு இவர்தலும்—பகைவர் முன் பற்றாத பழைமையான மதிலைப் பற்றி முற்றியோர் ஏறுதலும்;

1. ....
மைந்துடை ஆரெயில் புடைபட வளைஇ
வந்துபுறத் திறுக்கும் பசும்பிசிர் ஒள்ளழல்
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர்திகழ்பு
ஒல்லா மயலொடு பாடிமிழ் புழிதரும்
மடங்கல் வண்ணங் கொண்ட கருந்திறற்
றுப்புத்துறை போகிய கொற்ற வேந்தே—

(பதிற்று 62)

2. ''பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடிவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது, வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக''
(பெரும்பாண். 448—454)

4. தோலின் பெருக்கமும்-பகைவர் படைக்கலன் உறாவாறு தடுக்கச் செறித்த கேடகங்களின் பொலிவும்.

வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின் தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்.
(புறம்—16)

5. அகத்தோன் செல்வமும்— (கொளற்கு அரிதாய், உணவு முதலிய கூழும் நன்னீரும் படையும் உலையா தூக்கும் அறை போகாத் தறுகண் மறவர் காவலும் உடைய.) அரண் அகக் காவலன் பரிசு குறித்தலும்;

''அளிதோ தானே பாரியது பறம்பே,
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே,
ஒன்றே, சிறியிலை வெதிரினெல் விளையும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே;
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன் சொரியும்மே
வான்க ணற்றவன் மலையே; வானத்து
மீன்க ணற்றதன் சுனையே; ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர்; வாளிற் றாரலன்.''
(புறம்—109)

6. அன்றி, முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்— அல்லாமலும், முனைந்து அரண் கொள்ள முற்றிய தலைவன் அகத்தவர் எதிர்ப்பால் வருந்தும் பகுதியும்;

(அணங்கு—வருத்தம்.)

"தாக்கற்குப் பேரும் தகர்போல் மதிலகத்து
ஊக்க முடையார் ஒடுங்கியும்— கார்க்கீண்
டிடிபுறப் பட்டாங் கெதிரேற்றார் மாற்றார்
அடிபுறத் தீடும் அரிது."

(பெரும்பொருள் விளக்கம்)

இனி, "முற்றியோன் அகத்தவனை வருத்தும் பரிசும்" எனினுமமையும். முன்னதில் அணங்கு தன்வினை; பின்னதிலது பிறவினை. (முன்னதற்குப் புறத்தோனை அணங்கிய எனக்கொள் ளுதலுமமையும்.)

1. "தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதார் ஊர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு."

(பெரும்பொருள் விளக்கம்)

2. "செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமின் இடிமுர சார்ப்ப— அறவுறழ்ந்து
ஆமா உகளும் அணிவரையின் அப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து."

(முத்தொள்ளாயிரம்)

7. திறப்பட ஒருதான் மண்டிய குறுமையும்—ஊறஞ்சாது உரனுடன் ஒருவனாய் எதிர்த்தேறிப் புரியும் குறும்போரும்: (ஊறத்தால் தனித்தேறி மாற்றலரை நெருங்கி மலையும் தறு கண்மை குறுமை அல்லது குற்றுழிஞை எனப்படும்.)

"சுதையத் தோங்கிய சுவேலத்தின் உச்சியைத் துறந்து
சிதையத் திண்டிறல் இராவணக் குன்றிடைச்
சென்றான்
ததையச் செங்கரம் பரப்பிய தன்பெருந் தாதை
உதயக் குன்றினிற் றுகுகுன்றிற் பாய்ந்தவன்
ஒத்தான்"

எனும் கம்பர் பாட்டில், சுக்கிரீவன் இராவணன் மேல் தனியே பாய்ந்து மலைந்த குறும்போர் வருதல் காண்க.

8. உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில் உளப்பட— வெகுண்டு மேல்வரும் உழிஞைப் பொருநரைப் பொருட்படுத்தா உரனுடையார் காவலால் கொளற்கரிதாம் அரணின் பெருமை உள்ளிட்டு;

"மொய்வேற் கையர் முரசெறிந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
திவ்வழி யென்றி, இயல்தார் மார்ப!
எவ்வழி யாயினும் அவ்வழித் தோன்றித்
திண்கூர் எஃகின் வயவர்க் காணில்
புண்கூர் மெய்யின் உராஅய்ப் பகைவர்
பைந்தலை எறிந்த மைந்துமலி தடக்கை
ஆண்டகை மறவா மலிந்துபிறர்
திண்டற் காகாது வேந்துடை யரணே."

(தகடூர் யாத்திரை)

சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே— முன் சூத்திரத்தில் சுட்டப்பட்ட எட்டு வகைத்தாம் உழிஞைத்திணை.

குறிப்பு:—'நாலிரு வகைத்தே' என முன் சூத்திரத்தில் தொகுத்த உழிஞையின் வகை எட்டும் இங்குக் கூறப்படுதலின் 'சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே' எனக் குறிக்கப்பட்டன. ஈற்றேகாரம் அசை; இசைநிறை எனினுமமையும். நாலிரு வகைத்தே என்னும் முடிவுக்கேற்ப 'உழிஞைத்திணை' என்னும் எழுவாய், கொண்ட பொருள் தொடர்பால் கொள்ளப்பட்டது.

இவை எட்டும், பிறர் கூறுமாறு துறைகளாகா. உழிஞைத் துறை பன்னிரண்டும் அடுத்த சூத்திரம் கூறுதலால், இவ்வெட்டும் உழிஞைத்திணை வகையெனத் தெளிக.

(12)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் உழிஞைத் திணையின் நாலிருவகை யாவை எனக் கூறுகின்றது.

(இ-ள) கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமுதல் ஆரெயில் உளப்படச் சொல்லப்பட்ட நால் இருவகையினை உடைத்து உழிஞைத் திணை என்றவாறு.

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமாவது பகைவர் நாட்டினைக் கொள்வதற்கு முன்னரே வென்று கொள்ளும் உறுதியின் காரணமாக அந்நாட்டினைத் தன்னை வேண்டியார்க்குக் கொடுக்கும் செயலாம். இராமன் வாலியை வென்று கிட்கிந்தையைச் சுக்கிரீவனுக்கு அளிப்பேன் என முன்னதாக வுரைத்ததும், வீடணனுக்கு இராவணனை வென்று இலங்கையை அளிப்பேன் என்றதும் உதாரணங்களால் மதில் முற்றுகையிலும்

வேந்தனே தன் வெற்றியுறுதி நினைந்து முன்னதாக வென்று நாட்டை அளிப்பேன் எனப் பிறர்க்குக் கூறுதலும் கொடுத்தலும் செய்ய இயலும். ஆதலின் இத்துறை முற்றுகையிடும் வேந்த னுக்கே யுரியதாகும். மதிலகத்து அடைத்திருக்கும் வேந்தன் அவ்வாறு கூறுதற்கும் கொடுத்தற்கும் தகுதியுடையவனல்லன்.

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றச்சிறப்பைப் புலவர் எடுத்துக் கூறுதலும் தூதுவர் அகமதிலிடத்து வேந்தனிடம் தம் முற்றுகையிட்ட வேந்தன் சிறப்பெடுத்துக் கூறுதலும் ஆகிய 'வேந்தன் சிறப்பெடுத்துரைத்தல்' எனும் துறையும் முற்றுகை யிடுவோர்க்கே யுரியதாகும்.

தொல்எயிற்கிவர்தல் என்பது மதில் கொள்ளக் கருதி ஏணி சார்த்திப் போர்க்கு ஆயத்தமாதல். தோலின் பெருக்கம் என்பது கிடுகுபடையின் மிகுதி கூறுதல். இவையிரண்டும் முற்று வோர்க்கே யுரியன என்க.

அகத்தோன் செல்வப் பெருக்கைக் கூறுதலும், அகத்தோன் முற்றுகையிட்ட வேந்தனைப் போரில் வருத்தியது கூறலும், தன் மதில் அழிவுகண்டு அகத்தோன் புறம்போந்து தான் ஒருவனே யாகப் போர்புரியும் குற்றுழிஞையும், முற்றிய வேந்தன் தன்மேல் வந்தவிடத்து அவன் பகைமையை மதியாது மதிலகத்திலேயே இருக்கும் ஆரெயில் உழிஞையும் மதிலகத்து வேந்தர்க்கே யுரியன என்பது சொல்லாமலே புலப்படும்.

இவ்வாறு இருபெரு வேந்தர்க்கும் நன்னான்காகக் கொள்ளல் வேண்டும் என்பதற்காகவே ஆசிரியர், முன் சூத்திரத்தில் இரு நால்வகைத்தே என்றதோடு அமையாது இச்சூத்திரத்தும் 'சொல்லப்பட்ட நால் இருவகைத்தே' என்றார். எட்டனையும் இரண்டு நான்குகளாகப் பிரித்தல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தாம்.

முன்னர் உள்ள நான்கும் முற்றுகையிடும் வேந்தர் போர் புரிதற்கு முன்னர் மேற்கொள்வது பற்றியன. பின்னர் உள்ள நான்கும் அகமதிலோனிடம் முற்றுவோன் போர் புரியுங்கால் நிகழ்வது பற்றியன. அதனால் இவை துறை எனப் படாமல் உழிஞையார் முற்றுவோர் மதிலகத் திருப்போர் என இருவகை வேந்தராவார் என்பதும் அவர் இயல்பும் கூறலால் வகை எனப் பட்டன. அடுத்த சூத்திரம் போர்த் துறைகளைக் கூறும்.

69\. குடையும் வாளும் நாள்கோள் அன்றி[1]
மடையமை ஏணிமிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
மதில்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்[2]
இகல்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்
வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்
தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

(11)

ஆ. மொ. இல;

68\. Taking out parasol and sword on an auspicious day; leading the attack, both the parties having stood on the ladder fitted with the board; finishing the battle outside the fort and conquering the siege being completed; the king inside the fort having the defence; the king outside the fort having a new technique; the two forces fighting on the water of ditch.

பி. இ. நூ:

பு. வெ. மா. 6

உழிஞை ஓங்கிய குடைநாட் கோளே
வாணாட் கோளே முரச உழிஞை
கொற்ற உழிஞையொடு அரச உழிஞை
கந்தழி என்றா முற்றுழி ஞையே
காந்தள் புறத்திறை ஆரெயில் உழிஞையொடு
கோள்புறத் துழிஞை பாசி நிலையே
ஏணி நிலையே இலங்கையிற் பாசி
முதுவுழி ஞையே முந்தகத் துழிஞை
முற்று முதிர்வே யானைகைக் கோளே
வேற்றுப்படை வரவே உழுதுவித் திடுதல்

பாடம்: 1 அன்றியும் 2 அகமிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்.

வாண்மண்ணு நிலையே மண்ணுமங் கலமே
மகட்பா லிகலே திறைகொண்டு பெயர்தல்
அடிப்பட இருத்தல் தொகைநிலை யுளப்பட
இழுமென் சீர்த்தி இருபத் தொன்பதும்
உழிஞை என்மனார் உணர்ந்தி சினோரே.

வீர. 103.

வேந்தன் சிறப்பு மதிலேறுதல் வென்றி வாட்சிறப்புக்
காந்தும் படைமிகை நாட்கோ ளொடுகாவ லேமுடி கோள்
ஏந்தும் தொகைநிலை கொற்றம்நீர்ப் போர்ச்செல்வம் ஊர்ச் செருவே
போந்த முதிர்வு குறுமையென் றாமுழி ஞைப் புணர்ப்பே

இல. வி. புற. 11

குடைநாட் கோளும் வாணாட் கோளும்
கடைநாள் பௌவத் ததிர்முர சுழிஞையும்
மற்றவர் மதில்கொளப் பரந்தெழு தானையொடு
கொற்றவன் எழுதரு கொற்ற உழிஞையும்
.............................போர்க்கருங் கிடங்கின்
பற்றல ரொடுபொருஉம் பாசி நிலையும்
தொடுகழல் மறவர் துன்னித் துன்னார்
இடுசூட் டிஞ்சியின் ஏணி சாத்தலும்
ஆடுதல் ஒல்லா அரண்கா வலவர்
ஈடற ஏணியின் இவர் எயில் பாசியும்
....
அகத்தோன் காலை அதிர்முர சியம்பப்
புறத்தோன் வஞ்சினம் புகல்முற்று முதிர்வும்
புண்ணிய நீரில் புரையோர் ஏத்த
மண்ணுதல் புரிந்த வாள்மங் கலமும்
....
அம்மதி லடியின் அடைந்த தொகைநிலையும்......

பு. வெ. மா. 5

நுவலருங் காப்பின் நொச்சி ஏனை
மறனுடைப் பாசி ஊர்ச்செரு என்றா
செருவிடை வீழ்தல் திண்பரி மறனே
எயிலது போரே எயில்தனை அழித்தல்
....
நொச்சித் திணையின் துறையு மாகும்.

இல. வி. புற. 11

தோள்வலிப் படப்பகை தொலைத்த எயிற்போரும்
துணிவுடை அடுபடைத் தொடுகழல் மன்னவன்
அணி மணி எயில்மிசை அழிந்த நொச்சியும்

இளம்பூரணர்

69. குடையும் வாளும்... துறையென மொழிப.

இதுவும் அது

(இ-ள்) குடை நாட்கோள் முதலாகச் சொல்லப்பட்டுள்ள பன்னிரண்டு துறையும் உழிஞைக்குரிய துறை. மேற்சொல்லப் பட்டவற்றின் விரிவும் பன்னிரண்டு உள என்றவாறு.

குடையும் வாளும் நாள் கோள்—குடைநாட்கோள் வாள்நாட் கோள் என வருவனவும்.

உதாரணம்

''நெய்யணிக செவ்வேல் நெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளையா கொல்களிறு பண்விடுக—வையகத்து
முற்றக் கடியரணம் எல்லா முரண்அவிந்த
கொற்றக் குடைநாள் கொள்.''[1]

(வெண்பா. உழிஞை—2)

இது குடைநாட்கோள்.

''வாள்நாள் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடூஉம் பேர்மதில்—பூணார்
அணிகொள் வனமுலையார் ஆடரங்கம் ஏறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து''[2]

(வெண்பா. உழிஞை. 3)

இது வாள்நாட்கோள்.

---

1. குடைநாட்கொள அரணம் எல்லாம் முரண்அவிந்த ஆதலின் வேல் நெய்யணிக; தேர்நிலை புகுக; குதிரையும் களிறும் போர் புனைவு விடுக எனக் கூட்டுக.

2. உழிஞையான் வாள் நாட்கொள்ளவே பேணார்மதிலில் உள்ள மகளிர் ஆடும் அரங்கத்தில் பேய் பெயர்ந்து ஆடும் என்க.

மடை அமை ஏணி மிசை மயக்கமும்—மதிலிடத்து மடுத்தல் அமைந்த ஏணி சார்த்தி அதன்மேல் பொரும் போர் மயக்கமும்.

''சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் எஃகங் கழிய—அடுமுரண்
ஆறினார் அன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினார் ஏணி பலர்.''[3]

(வெண்பா-உழிஞை—19)

கடைஇச் சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்— செலுத்திச் சுற்றமர் ஒழிக என்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்.[4]

உதாரணம்

''காலை முரசம் மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்— மாலை
அடுதும் அடிசிலென்று அம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு.''[5]

(வெண்பா—உழிஞை—23)

முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்-முற்ற அகப்பட்ட அகத்தினுள்ளான் வீழ்ந்த நொச்சியும்.

உதாரணம்

''நீரறவு அறியா நிலமுதற் கலந்த
கருங்குரல் நொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை மகளிர் ஐதகல் அல்குல்
தொடலை யாகவும் கண்டனம் இனியே
வெருவரு குருதியொடு மயங்கி உருவுகரந்து
தொறுவாய்ப் பட்ட தெரியல் ஊன்செத்துப்

---

3. பகைவர் மதிலைச் சுற்றிப் பிரியாராய் வேள்வாள்களைக் கழித்துப் போர் புரிதலால் முரண் ஆறியவர் தவிர மேலும் பலர் மதிலைச் சார்த்திய ஏணி மிசை ஏறினார் என்க.

4. முற்றிய முதிர்வு—முதிர்ந்த முற்றுகை.

5. காலையில் மதில் பக்கம் முரசம் இயம்ப உடனே வெற்றி விரும்பியாகிய வீரன் சினந்து தன் வேலைப் பார்க்கவே, மற்றைவீரர் மாலையில் வெற்றிக் கூழ் சமைப்போம் என்று காலையே கூழடு குடத்தையும் துடுப்பையும் மதிலகத்து இட்டார்.

பருந்துகொண் டுகப்பயாம் கண்டனம்
மறம்புகழ் மைந்தன் மலைந்த மாறே.''[6]
(புறம்—271)

அதன் புறத்தோன் வீழ்ந்த[7] புதுமையும்—நொச்சியின் புறத்தாகிய உழிஞையான் வீழ்ந்த புதுமையும். ['மற்று'என்பது அசை. 'ஆன்' என்பது இடைச்சொல்]

உதாரணம்

''கோடுயர் வெற்பில் நிலங்கண் டிரைகருதுந்
தோடுகொள் புள்ளின் தொகையொப்பக்—கூடார்
முரணகத்துப் பாற முழவுத்தோள் மள்ளர்
அரணகத்துப் பாய்ந்திழிந்தார் ஆர்த்து.''[8]
(வெண்பா—உழிஞை. 20)

நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்— கிடங்கின் உளதாகிய போரின் கண்ணே வீழ்ந்த பாசியும்.[9]

உதாரணம்

''நாவாயும் தோணியும் மேல்கொண்டு நண்ணாதார்
ஓவார் விலங்கி உடலவும்— பூவார்
அகழி பரந்தொழுகும் அங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர்.''[10]
(வெண்பா. உழிஞை—17)

---

6. முன்பு மதிலிடத்துத் தழையை மகளிர் அல்குலிடத்துத் தழையுடையாகக் கண்டோம், இன்று வீரர் சூடியதால் போர்க்களத்துக் குருதி படிந்து நிறம் மாறித் தசை என்று பருந்து கொண்டு பறக்கக் கண்டோம்.

7. வீழ்ந்த—மேலிருந்து உள்ளே பாய்ந்த.

8. மலையிலிருந்து இரையை நிலத்துக் கண்ட பறவை சரேரெனக் கீழ்நோக்கிப் பாய்ந்தது போல மதிலகத்து வீரர் மனத்தில் முரண் ஓடுமாறு மதிற்புற உழிஞை வீரர் மதிலகத்துப் பாய்ந்தார்.

9. கிடங்கில் உளதாகிய பாசி போரில் வீழ்ந்த பாசி என்க. அகழியில் பாசிபோல் பரந்து போர் புரிந்து வீழ்தல் பாசி எனும் துறையாம்.

10. நண்ணாதார் உடலவும் அகழியில் குருதிச் சேற்றில் பகழி வாய் வீழ்ந்தார் பலர் என்க.

அஃது அன்று ஊர்ச்செரு வீழ்ந்த அதன் மறனும்[11]-அஃது ஒழிய ஊர்ச்செருவின் கண் வீழ்ந்த பாசிமறனும் ['மற்று' என்பது அசை]

உதாரணம்

''பாயினார் மாயும் வகையாற் பலகாப்பும்
ஏயினார் ஏய இகல்மறவர்—ஆயினார்
ஒன்றி யவரற ஊர்ப்புறத்துத் தார்தாங்கி
வென்றி அமரர் விருந்து.''[12]

(வெண்பா—நொச்சி—2)

மதில் மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்— மதின்மேற் கோடற்குப் பரந்த மதிலோர் பக்கமும்.

உதாரணம்

''அகத்தன வார்கழல் நோன்தாள் அரணின்
புறத்தன போரெழில் திண்தோள்—உறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னான்.''[13]

(வெண்பா. நொச்சி—7)

இகல் மதில் குடுமி கொண்ட மண்ணும் மங்கலமும்-தம்முடன் இகலிமதில்மேல் நின்றானை அட்டு அவன் முடிக்கலம் கொண்ட மண்ணும் மங்கலமும்.[14]

---

11. அதன் மறன்-பாசி மறன். ஊரில் பரந்து புரியும் போரில் வீழ்தல்.

12. இகல்மறவர் ஊர்ப்புறத்துத் தார் தாங்கி (இறந்து) அமரர் விருந்தினராக ஆயினார் என்க.

13. வீரனின் கால்கள் அகமதிலிடத்தன; தோள்கள் புறமதிலிடத்தன. அத்தோள்களுக்குரிமையுடைய அவன் மகளிர் தோள்களைத் தழுவிப் பாராட்ட அவன் வானுலகன் ஆனான்.

14. மதிற்குடுமி என்பதற்கு மதில்மேல் நின்றானின் முடித்தலை என்றும் மண்ணுமங்கலம் என்பதற்குக் கொள்ளும் நற்செயல் என்றும் பொருள். இத்துறைக்குக் காட்டிய உதாரணத்தில் இப்பொருள் இல்லை. மதிற்குடுமி என்பதற்கு மதிலின் உச்சி என்ற பொருளே உதாரணத்தில் உள்ளது.

உதாரணம்

''எங்கண் மலர எயிற்குமரி கூடிய
மங்கல நாள்யாம் மகிழ்தூங்கக்—கொங்கலர்தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி.''[15]

(வெண்பா—உழிஞை—28)

வென்ற வாளின் மண்ணொடு ஒன்ற—வென்ற வாளின் மண்ணும் மங்கலமும் பொருந்த.

உதாரணம்

''தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்—பேர்த்தும்
இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையார் அறையப் புகழ்.''[16]

(வெண்பா—உழிஞை—27)

தொகைநிலை[17] அம்மதிலழித்தமையான் மற்றுள்ள மதில்கள் வரைப்பில் மாறுபட்ட வேந்தரும் முரண் அவிந்தபடி யடைதல்.

உதாரணம்

''வென்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர்
வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை யாகுமதி எம்மென் றருளிக்
கலம்பிறங்கு வைப்பிற் கடற்றிரை யாத்தநின்
தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயின்
செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயிற்
கோள்வல் முதலைய குண்டுகண் அகழி
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை
ஒன்னாத் தெவ்வர் முனைகெட விலங்கி
நின்னில் தந்த மன்னெயில் அல்லது
முன்னும் பின்னுநின் முன்னோர் ஓம்பிய

---

15. மதிலாகிய குமரியைக் கூடிய மங்கல நாளில் யாம் மகிழ்ச்சி மிக எம் மன்னவன் சேவடிக் கீழ்ப் பகை மன்னர் முடிகள் வைகின என்க.

16. கொடித் தேரான் பக்கத்துள் ளந்திபுகழ மறுபடியும் இம்மதிலிடத்துச் சங்கம் இடியென முழங்க தீர்த்தமும் பூவும் பெய்து திக்கெலாம் விளங்கக் கூரிய வாளை நீராட்டி வேள்வி செய்தான்.

17. தொகை நிலை—தொகையாகப் புகல் வேண்டி நிற்றல்.

எயில்முகப் படுத்தல் யாவது வளையினும்
பிறிதாறு செல்மதி சினங்கெழு குரிசில்
பூஉப்புறந் தழீஇப் பொன்பிணிப் பலகைக்
குழூஉ நிலைப் புதவிற் கதவமே காணில்
தேம்பாய் கடாமொடு காழ்கை நீவி
வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுதல்
ஏந்துகை சுருட்டித் தோட்டி நீவி
மேம்படு வெல்கொடி நுடங்கத்
தாங்கல் ஆகா ஆங்குநின் களிறே''[18]

(பதிற்று-53)

என்னும் துறையொடு தொகைஇ வகை நால்மூன்று என மொழிப என்னும் துறையொடு கூடி உழிஞை வகை பன்னிரண்டு என்று கூறுவர்.

(11)

நச்சினார்க்கினியர்

68. குடையும் வாளு...........மொழிப.

இஃது எய்தாத தெய்துவித்தது; உழிஞைத் திணையுள் இருபெரு வேந்தர்க்கும் ஒன்றாய்ச் சென்று உரியவான துறை இதற்கு முன்னர்க் கூறாமையின்.

---

18. சினம் கெழு குரிசில்! பகைவரை வென்று திறை கவர நினைந்து நீ விரும்பிய இடத்துத் தங்க, நின் பகை எம்மை அருள்க எனத் தம் நாட்டைத் திறையாகக் கொடுப்ப அவர்க்கு இரங்கி நின் மூதூர்க்குச் செல்வை யாயின், வாயிலும் அம்பும் அகழியும் உடைய இதோ காணும் அரணானது நின்னால் தெவ்வரை வென்று வேண்டியவர்க்குக் கொடுத்த மதிலாகும். அன்றியும் அதுவே நின் முன்னோர் காத்த எயிலுமாம். அத்தகைய எயிலின் நேர்முகமாக நீ நின் தானையைச் செலுத்துவது ஏன்? இம்மதில் வளைந்து வளைந்து காணப்படினும் நேராகச் செல்லாமல் வளைந்தே வேறு வழியில் படையைச் செலுத்திச் செல்க. ஏன் எனின் நின் களிறு எயிலின் கதவைக் காணின் தன் போர்ப் பழக்கத்தால் மதத்தொடு தன் கையால் குத்துக்கோலை நீக்கி ஈட்டியையும் நீக்கிக் கதவைத் தாக்க முனையும்போது அதைத் தடுத்தல் ஆகாது. (ஆதலின் யாவரும் நின்னடி பணிதலின் அமைதியாகச் செல்க என்பது கருத்து.)

இதன் பொருள் :—குடையும் வாளும் நாள்கோள் அன்றி—தன் ஆக்கங் கருதிக் குடிபுறங் காத்து ஓம்பற்கெடுத்த குடைநாட் கொள்ளுதலும் அன்றி.

புறத்தோன் புதிதாக அகத்தே புகுதற்குநாட் கொள்ளு மென்க, தன்னாட்டினின்றும் புறப்படுதற்கு நாட்கோடல் உழிஞையெனப் படாதாகலின்.[1] அகத்தோனும் முற்றுவிடல் வேண்டி மற்றொரு வேந்தன் வந்துழித் தானும் புறத்துப் போதரு தற்கு நாட் கொள்ளும். நாள் கொளலாவது நாளும் ஓரையுந் தனக் கேற்பக் கொண்டு செல்வுழி அக்காலத்திற்கு ஓர் இடையூறு தோன்றியவழித் தனக்கு இன்றியமையாதனவற்றை அத்திசை நோக்கி அக்காலத்தே முன்னே செல்லவிடுதல்.

உதாரணம்

''பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
யிகலரணத் துள்ளவ ரெல்லா— மகநலிய
விண்டஞ்சு மென்ன விரிந்த குடைநாட்கோள்
கண்டஞ்சிச் சிம்பிளித்தார் கண்.''[2]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு—எயில் கோடல்)

இது புறத்தோன் குடைநாட்கோள்.

''குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப—வொன்றார்
விளங்குருவப் பல்குடை விண்மீன்போற் றோன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து.''[3]

(தகடூர் யாத்திரை-புறத்திரட்டு-எயில் காத்தல்)

இஃது அகத்தோன் குடைநாட்கோள்.

---

1. வஞ்சியின் பாற்பட்டு விடும்.
2. காண்பார் அகம் மெலியப் பிளந்து அஞ்சும் என்னுமாறு விரிந்த குடைநாட்கோளைப் பகைவர் அரணகத்துள்ளார் எல்லாம் பகற்காலத்தே மதி ஒளி வீசுவது என்கொல் என்று அஞ்சிக் கண்டமாத்திரத்தே தம் கண்கள் சிம்புளித்தார்கள்.
3. மலையில் உயர்ந்த திங்கள்போல் மதில் வாயிலில் கொற்றக் குடையொன்று உயர, பகைவரின் குடைகள் விண்மீன்கள் போல் ஒளியிழந்து அசைந்தன.

"தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
யழுது விழாக்கொள்வ ரன்னோ—முழுதளிப்போன்
வாணாட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணாட்கோ ளென்று நினைந்து."[4]

(பெரும் பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

இது புறத்தோன் வாணாட்கோள்.

"முற்றரண மென்னு முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவா ணாட்கொண்டான்-புற்றிழிந்த
நாகக் குழாம்போ னடுங்கின வென்னாங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து."[5]

(பெரும்பொருள் விளக்கம்-புறத்திரட்டு-எயில்கோடல்)

இஃது அகத்தோன் வாணாட்கோள்.

மடையமை ஏணிமிசை மயக்கமும்—மீதிடு பலகையோடும் மடுத்துச் செய்யப்பட்ட ஏணிமிசை நின்று புறத்தோரும் அகத்தோரும் போர் செய்தலும் :

உதாரணம்

"சேணுயர் ஞாயிற் றிணிதோளா னேற்றவு
மேணி தவிரப்பாய்ந் தேறவும்—பாணியாப்
புள்ளிற் பறந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு."[6]

இது புறத்தோர் ஏணிமயக்கம்.

---

4. உலக முழுது அளிக்கும் வேந்தன் வாள் நாட்கோடலைக் கேட்ட பகைவர் மகளிர் தம் கணவரின் உயிர் கொள்ளும் நாள் என்று நினைந்து தம் கணவர் விழாக்குறைக்காகத் தொழுது பேணிக் கடவுட்கு அழுதுவிழாக் கொள்வர்; ஐயோ பாவம்.

5. தன் அரணம் முற்றுகையிடப்பட்டது என்று கண்டு மேக இடிபோல் ஆரவாரம் தோன்ற வாள்நாட்கோள் கொண்டான் அரசன். இடியோசை கேட்டுப் புற்றினின்றிழிந்த நாகம்போல களிற்றுக் கூட்டமுடைய வேந்தர்கள் நடுங்கினர். அவர் நிலை என் ஆகுமோ?

6. திணிதோள் வீரன் மதிலில் ஏணி ஏற்றவும் அவ்வேணி தவிரும்படியாகப் போர் வீரர் ஏறவும் இப்படியாகப் பறவைபோற் பறந்து மதிலகத்தைச் சார்ந்த காவற் குறும்பில் புகுதலை விரும்பினர் அவர்.

''இடையெழுவிற் போர்விலங்கும் யானையோர் போலு
மடையமை யேணி மயக்கிற்—படையமைந்த
ஞாயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் நகரோர்க்கு
வாயி லெவனாங்கொன் மற்று.''[7]

இஃது அகத்தோர் ஏணிமயக்கம்.

இனி, இரண்டும் ஒருங்கு வருதலுங் கொள்க :

உதாரணம்

''பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ ருடன்றெழுந்த காலை—யிருவரு
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும்.''[8]
(பெரும்பொருள் விளக்கம்—புறத்திரட்டு—எயில்கோடல்)

கடைஇச் சுற்று அமர் ஒழிய வென்று கைக் கொண்டு முற்றிய முதிர்வும்—புறத்தோன் தன் படையைச் செலுத்திப் புறமதிலிற் செய்யும் போரின்றாக அகத்தோன் படையை வென்று அப் புறமதிலைக் கைக்கொண்டு உண்மதிலை வளைத்த வினை முதிர்ச்சியும், அகத்தோன் தன் படையைச் செலுத்திப் புறமதிலிற் செய்யும் போரின்றாகப் புறத்தோன் படையைத் தள்ளி வென்று அப்புறமதிலைக் கைக்கொண்டு வளைத்த வினை முதிர்ச்சியும்:

உதாரணம்

''கடல்பரந்து மேருச்சூழ் காலம்போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்—கடலெதிர்
தோன்றாப் புலிபோ லரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றேரான் மூதூர் வரைப்பு.''[9]

இது புறத்தோன் முற்றிய முதிர்வு.

---

7. கணையமரம் உடைய மதிலிடையில் போரை விலக்கும் யானை வீரர் சார்த்தப்பட்ட ஏணிப் போரில் படைகளமைந்த மதிலில் பிணம் கிடக்குமாறு செய்து வாயிலைத் தூர்த்தார். இனி நகரவர்க்கு வாயில் என்ன வாகும்? (போலும் அசைநிலை)

8. மண்ணொடு சார்த்தி மதில் சார்த்திய ஏணி இருவரையும் விண்ணுக்குச் சார்த்திவிடும் எனக் கொள்க.

9. குதிரைத்தேரான் மூதூர் எல்லையில் கடலானது மேரு மலையைச் சூழும் காலம் போல முற்றுகையிடச் சென்றோர் மதில் காவலரைக் கொல்லவே கடல் எதிர் தோன்றமாட்டாத புலிபோல அரணகத்து வீரர் சேர அடைத்திருந்தார்.

''ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து—போர் மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
றாகஞ்சேர் தோள்கொட்டி யார்த்து.''[10]

இஃது அகத்தோன் முற்றிய முதிர்வு.

அன்றி முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்—புறமதிலி லன்றி உண்மதிற்கட் புறத்தோனால் முற்றப்பட்ட அகத்தோன் விரும்பின மதில்காவலும், அவன் காத்தலின்றித் தான் சூழப்பட்ட இடத்திருந்த புறத்தோன் போர் செய்தலை விரும்பிய உள்ளகத்தைக் காத்தலும்:

நொச்சியாவது காவல்; இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுதலுங் கொள்க. அது மதிலைக் காத்தலும் உள்ளகத்தைக் காத்தலுமென இருவர்க்குமாயிற்று. இக்கருத்தானே 'நொச்சி வேலித் தித்த னுறந்தை'[11] என்றார் சான்றோரும்.

உதாரணம்

''இருகன்றி னென்றிழந்த வீற்றாப்போற் சீறி
யொருதன் பதிசுற் றொழியப்—புரிசையின்
வேற்றரணங் காத்தான் விறல்வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று.''[12]

இஃது அகத்துழிஞையோன் எயில்காத்த நொச்சி.

''தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு

---

10. ஊரைச் சூழ்ந்த மதிலைச் சூழ்ந்து முற்றிய படை மாயு மாறு மேகம் சூழ்ந்த வாயிற்கடையைக் கடந்து அகமதில் வீரர் மேகமே போல் மலைபோலும் தம் தோள்களைக் கொட்டி ஆர்ப்பரித்து எயிலைச் சூழ்ந்தார்.

11. தித்தனது காவற்படையாகிய வேலியுடைய உறந்தை:

12. வெற்றி விரும்பியாகிய வீரன் தன் தலைவருள் ஒருவன் இறந்து படவே இரு கன்றில் ஒன்றிழந்த பசுப்போலச் சீறிச்சினக்கூற்றுவன்போல் மதிலிற் புகுந்து பகைவரைக் கொன்று வேற்றரசால் முற்றப்பட்டதன் அரணைக் காத்தான்.

வெல்படை வேந்தன் விரும்பாதா ரூர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு.''[13]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு-எயில்கோட்டு)

இது புறத்தோன் மனங்காத்த நொச்சி.

''மணிதுணர்ந் தன்ன மாக்குர னொச்சிப்
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காத னன்மர நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
தொடியணி மகளி ரல்குலுங் கிடத்திக்
காப்புடைப் பரிசை புக்குமா றழித்தலி
னூர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே.''[14]

(புறம்-272)

இது சூடின நொச்சியைப் புகழ்ந்தது.

மற்று அதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையானும்—இடைமதிலைக் காக்கின்ற அகத்துழிஞையோன் நின்ற இடத்தினைப் பின்னி அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக் கொண்டி புதுக்கோளும், அங்ஙனம் புறத்தோன் கொண்ட அவ்விடத்தினைப் பின்னை யகத்தோன் தான் விரும்பிக் கொண்ட புதுக்கோளும்.[15]

பிற்பட்ட துறைக்குப் புறத்தோன் அதனையென மாற்றிப் பொருள் கொள்க. முன்னர்ப் புறமதிலின் போர்போல இடைமதிலின் போர் கூறினார்.

---

13. கூர்மை வாய்ந்த வெல்லும் படையுடைய அரசன் பகைவர் ஊரை முற்றி எதிரியின் கொல்லும் படையை அழிக்கும் குறிப்பானது. (அதாவது அகத்தோனுக்குரிய மதிலைப் புறத்தோன் கொள்ளும் குறிப்பானது.) தாய் வாங்கும் மகனைத் தனக்கென்று பேய் வாங்கியது போலும்.

14. நொச்சியே! நீ மலர்விரியும் பல மரங்களுள் சிறந்தனை. ஏன் எனின், நகரில் விளங்கிய மகளிரின் அல்குலில் தழையாகவும் கிடப்பாய், மதிலகத்துப் புக்குப் பகைவரையழித்தலின் ஊர்க்குப் புறங்கொடாத வீரனின் தலையில் சூடும் பூவெனும் உரிமையும் உடையையாய் இருப்பாய்.

15. இது இடைமதிற்போர்.

உதாரணம்

''வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பயக்கா
லஞ்சி யொதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்
வான்றோய் புரிசை பொறியு மடங்கின
வான்றோ ரடக்கம்போ லாங்கு.''[16]

(பெரும் பொருள் விளக்கம் : புறத்திரட்டு-எயில் கோடல்)

இது புறத்தோன் வீழ்ந்த புதுமை.

''தாக்கற்குப் பேருந் தகர்போன் மதிலகத்
தூக்க முடையோ ரொதுங்கியுங்—கார்க்க
ணிடிபுறப் பட்டாங் கெதிரேற்றார் மாற்றா
ரடிபிறக் கீடு மரிது.''[17]

(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு-எயில்காத்தல்)

இஃது அகத்தோன் வீழ்ந்த புதுமை.

நீர்ச் செரு வீழ்ந்த பாசியும்—கொண்ட மதிலகத்தை விட்டுப் போகாத புறத்தோரும் அவரைக் கழியத் தாக்கல் ஆற்றாத அகத்தோரும் எயிற்புறத்து அகழின் இருகரையும் பற்றி நீரிடைப் படர்ந்த நீர்ப்பாசி போன்று அக்கிடங்கின்கட் போரை விரும்பின பாசியும்:

பாசிபோல் நீங்காமல் நிற்றலிற் 'பாசி' யென்றார்.

உதாரணம்

''பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணாய்
நிலந்திடர் பட்டதின் றாயிற்—கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யும் விரகென்னாம் வேன்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோ னின்று.''[18]

---

16. ஆன்றோர் ஒடுக்கம் போல் அடங்காதார் யார்யாவர்? புரிசைப் பொறியும் அடங்கின என்க.

17. தாக்கப் பின்வாங்கும் ஆடுபோல் ஊக்கமுடைய அகத்து வீரர் பின் ஒதுங்கினாராயும் மேகத்தில் இடி புறப்பட்டது போல் ஆர்ப்பரித்துப் புறத்து வீரரை எதிர் ஏற்றார். பகைவீரர் அடிபின்னிடுதலும் அரிதாம். உடன் அழிவர்.

18. இரும்பாற் செய்யப்பட்ட படைக்கருவிகளின் மிகுதியும் போர் பண்ணுதற்கு ஆய்ந்த நிலம் திடராகப்பட்டது இல்லையென்றால் வேல் வீரர்கள் ஆழமான நீரில் பாய் புலிபோல் நின்று போர் செய்யும் ஆற்றல் என்னவாய் முடியும்?

இஃது இருவர்க்கும் ஒக்கும்.

வேறு வேறு வருமெனினுங் காண்க.

அதாஅன்று ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்—அம்மதிற் புறத்தன்றி ஊரகத்துப் போரை விரும்பிய அப்பாசி மறனும்.

'பாசி' யென்றார், நீரிற் பாசிபோல இருவரும் ஒதுங்கியுந் தூர்ந்தும் பொருதலின்.

உதாரணம்

''மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தா—
றெறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோ னீங்காது தங்கோமா
னூர்ச்செரு வுற்றாரைக் கண்டு.''[19]

இது புறத்தோன் பாசிமறம்.

''தாந்தங் கடைதொறுஞ் சாய்ப்பவு மேல்விழுந்த
வேந்தன் படைப்பிணத்து வீழ்தலா—னாங்கு
மதுக்கமழுந் தார்மன்னர்க் குள்ளூர் மறுகிற்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று.''[20]

இஃது அகத்தோன் பாசிமறம்.

அகமிசைக்கு இவர்ந்தோன் பக்கமும்—புறஞ்சேரிமதிலும் ஊரமர் மதிலும் அல்லாத கோயிற் புரிசைகளின்[21] மேலும் ஏறி நின்று போர் செய்தற்குப் பரந்து சென்றோன் கூறுபாடும்:

---

19. தம் கோமானின் ஊரில் நீரிற் செறிந்த பாசிபோல் நீங்காது போர் புரிந்தவர்களைக் கண்டு அவருள் தம் கணவர் வலிமையை அறியும் மகளிர் பிறநாட்டுப் பெண்களுக்காக கைம்பெண்டிர் ஆவரே என மனம் நொந்தார்கள்.

20. மதிற்புறத்து வீரர்தாம் பகைவீரரை மதில் வாயில்தோறும் கொன்று சாய்க்கவும் மதிலகத்து வேந்தன் அப்படைஞரின் பிணத்தின் மேலே பட்டு வீழ்ந்தான். மன்னர்க்கு உள்ளூர் வீதியில் உள்ள கற்குவியலும் பற்று வையாது போலும் (பதுக்கையில் வீழாமை கருதிக் கூறியது).

21. கோயிற்புரிசை—அரண்மனை மதில்.

''வாயிற் கிடங்கொடுக்கி மாற்றினார் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்—ஞாயிற்
கொடுமுடிமேற் குப்புற்றார் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோட னினைந்து.''[22]

இது புறத்தோன் அகமிசைக்கிவர்தல்.

''புற்றுறை பாம்பின் விடநோக்கம் போனோக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்—கொற்றவ
னாரெயின்மேற் றோன்றினா ரந்தரத்துக் கூடாத
பேரெயின்மேல் வாழவுணர் போன்று.''[23]

இஃது அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

இகன் மதிற் குடுமி கொண்ட மண்ணு மங்கலமும்—அங்ஙனம் இகல் செய்த மதிற்கண் ஒருவன் ஒருவனைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியன கொண்டு, பட்ட வேந்தன் பெயரானே முடி புனைந்து நீராடும் மங்கலமும்:

உதாரணம்

''மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போற்
பொழிலேழுங் கைக்கொண்ட போழ்தி—னெழின்முடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினான் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து.''[24]

இது புறத்தோன் மண்ணுமங்கலம்.

---

22. பகைவர் பிணத்தால் ஊர்ப்புற மதில் வாயிலுள்ள அகழியைத் தூர்த்துப் பின் அரண்மனை அகழியை ஒடுக்கி மதிலைக் கொள்ளவந்த வீரர் தம் வேந்தர்க்காக அக மதில் வேந்தன் நெடுமுடியைத் தாம் கொள்ள நினைந்து மதிலுறுப்புகளின் உச்சியில் குப்புறச் சூழ்ந்தார்.

23. கொல்லன் உலைக்களத்து வடித்தல் வாய்த்த வேல் வீரர் பாம்பின் விடப் பார்வை போல் பார்த்து அந்தரத்தில் சேர்தல் இல்லாத மதில்மேல் வாழ் அவுணர்போல அரசனின் அரண்மனை மதிலில் தோன்றினார்.

24. மழுவாளால் மன்னர் படையறுத்த திருமால்போல எழுபெரு வேந்தர் நிலமும் கொண்ட போதில், பாணர்க்குப் பகைவர் நாடெல்லாம் பரிசாகக் கொடுத்துப் பிறர் கொள்ளாத புகழுடைய வேந்தன் அழகிய முடி சூடிக்கொண்டான். (கூடார் நாடு கொடுத்தலால் புறத்தோன்.)

''வென்ற பெறவந்த வேந்தை யிகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு—தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகையென் றார்த்தார் பிறர்.''[25]

இஃது அகத்தோன் மண்ணு மங்கலம்.

வென்ற வாளின் மண்ணொடு ஒன்ற—இருபெருவேந்தருள் ஒருவன் ஒருவனை வென்றுழி வென்ற கொற்றவாளினைக் கொற்றவை மேனிறுத்தி நீராட்டுதலோடே கூட .

உதாரணம்

''செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொன்—
முற்றியோன்
பூவோடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.''[26]

இது புறத்தோன் வாண்மங்கலம்.

''வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து மற்றை
யொருபெரு வேந்தற்கூ ரீந்தர—ளொருவன்வா
ளிவ்வுலகிற் பெற்ற விகற்கலையேற் றூர்தியா
ளவ்வுலகிற் போய்ப்பெறுங்கொ லாங்கு.''[27]

இஃது அகத்தோன் வாண்மங்கலம்.

---

25. வெற்றிபெற வந்த புறவேந்தனை மதிலிடத்துக் கொன்று அவன் முடியைக் கொள்வதைப் பார்த்துப் பிறர் பெருந்தகையாகிய அரசன் வந்த விருந்தினர்க்கு விணணில் விருந்து பெறச் செய்தான் என்று ஆர்ப்பரித் தனர். (விருந்தினர் வந்தார் என்பதால் இது அகத் தோனுக்குரியதாயிற்று).

26. மதிலை முற்றுகையிட்டு வென்ற மன்னன் கடவுளுக்குப் பூ சாந்து புகை அவியுணவு நெய்கள் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்தான். அச்சிறப்புகளையும் பகைவர் செங்குருதி நீராடற்கு வாளைச் சேர்ந்த கொறறவை யானவள் கொள்வாளோ?

27. ஒப்பற்ற வேந்தனின் வாளை இவ்வுலகிற் பெற்ற கலைமான் ஊர்தியுடைய கொற்றவையானவள், முற்றுகையிட்ட புறவேந்தனுக்கு வானுலகு கொடுத்து இந்த வேந்தனுக்கு அவன் ஊரைக் கொடுத்தாள். அவள் வானுக்குப் போய் வாள் பெறுவாளோ?

ஒன்றென முடித்தலான் இருவர் வேற்குஞ் சிறுபான்மை மண்ணுதல் கொள்க.

''பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வோலோ பெருந்தகை யுடைத்தே
யிரும்புற நீறு மாடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கு
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
யின்குர லிரும்பை யாழெடுத் தியம்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் செல்லு
மாஅங், கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னாதே.''[28]

(புறம்-332)

தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ—அவ்வாண் மங்கலம் நிகழ்ந்த பின்னர் இருவருள் ஒருவர் பரந்து பட்ட படைக் கடற்கெல்லாஞ் சிறப்புச் செய்வான் ஒருங்கு வருகெனத் தொகுத்தல் என்னுந் துறையோடு முற்கூறியவற்றைத் தொகுத்து:

உதாரணம்

''கதிர்சுருக்கி யப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
யெதிர் சுருக்கி யேந்தெயில்பா ழாக்கிப்—பதியிற்
பெயர்வான் றொகுத்த படைத்துகளாற் பின்னு
முயர்வான் குறித்த துலகு.''[29]

இது புறத்தோன் தொகை நிலை.

---

28. இவ்வூர் மறவன் வேலானது பிறர்வேல் போலின்றிப் பெருமையுடையதாகும். புறம்பே நீறு பூசப்பட்டுக் கூரைக் குடிசையில் கிடந்தாலும் கிடக்கும், மங்கல மகளிரொடு மாலை சூட்டப்பட்டு யாழ் இயம்ப நீர்ப் படுகையிலும் தெருவிலும் திரிந்து பகை மண்ணிடம் அழுங்கச் சென்றாலும் செல்லும்; மேலும் வேந்தர் யானை முகத்தும் செல்லுதலை ஒழியாது.

29. தன் கதிரைச் சுருக்கி மேற்கில் செல்லும் ஞாயிறுபோல வந்த வேந்தரைச் சுருக்கி எயிலைப் பாழாக்கித் தன் பதிக்குத் திரும்பும் அரசன் திரட்டிய படைகள் எழுப்பிய துகளால் உயர்வானுலகும் வெல்லக் குறித்தது போலிருந்தது.

"தலைவன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க் கொன்று
வலைவன் வலைசுருக்கி யாங்கு—நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தா
னுண்டற்ற சோற்றா ரொழிந்து."[30]

இஃது அகத்தோன் தொகைநிலை.

வகைநால் மூன்றே துறை என மொழிப—அங்ஙனம் ஒன்று இருவகைப்பட வந்து பன்னிரண்டேயாம் உழிஞைத் துறை என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

முற்றலையுங் கோடலையும் இருவகை யென்றார். துறை யென்றதனான் அவற்றின் பகுதியாய் வருவனவும் அத்துறைப் பாற்படுத்துக. உழையரை அழைத்து நாட்கொள்க என்றலும் அவர் அரசர்க்கு உரைப்பனவுங் குடைச் சிறப்புக் கூறுவனவும் முரசு முதலியன நாட்கோடலும் பிறவுங் குடை நாட் கோடலாய் அடங்கும். இது வாணாட் கோடற்கும் ஒக்கும். பொருவார்க்கும் அல்லுழிப் போவார்க்குங் குடை பொதுவாகலின் முற்கூறி மேல் வருகின்ற போர்த்தொழிற்கே சிறத்தலின் வாளினைப் பிற் கூறினார். இவை[31] போர்த்தொழிற்கு ஏதுவாகலின் முற் கூறினார்.[32] எயிலுட் பொருதலும் புட்போல உட்பாய்தலும் ஆண்டுப் பட்டோர் துறக்கம் புகுதலும் பிறவும் பாசிமறத்தின் பாற்படும். ஏறுந் தோட்டியுங் கதவும் முதலியன கோடல் அகமிசைக்கு இவர்ந்தோன் பக்கத்தின் பாற்படும். படிவம் முதலி யன கூறல் குடுமி கொண்ட மண்ணு மங்கலத்தின் பாற்படும். புறத்தோன் இருப்பிற் றொகை நிலைப்பாற்படும். 'துறையென மொழிப' என எல்லாவற்றையுந் துறையென்று கூறுகின்றவர் தொகை நிலையென்னுந் துறையெனத் தொகை நிலையை விதத்

30. மீன் அகப்படுத்திய வலைஞன் தன் வலையைச் சுருக்கி யது போலத் தன் தலைவனின் மதிலைச் சூழ்ந்த வேந்தர்களைக் கொன்று, செஞ்சோற்றுக் கடன்கழித்து இறந்த வீரர் தவிரப் பிற தானைத் தலைவர் ஒன்று கூடி யிருக்க வீற்றிருந்தான் வீரன்.

31. இவை—குடையும் வாளும்.

32. பாசிநிலை முதலியவற்றுக்கு முன் கூறினார்.

தோதினார், அது பலவாகாது இரண்டு துறைப்பட்டு வேறு வேறு துறையாம் என்றற்கு.[33] அது தும்பைத் தொகைநிலை போல் இருபெரு வேந்தரும் உடன் வீழ்தலுஞ் சிறுபான்மை உளதா மென்றுணர்க. எதிர் செல்லா தடைத்திருந்தோன் புறப்பட்டுப் படுதல் சிறுபான்மையாதலின் இதனையும் வேறோர் துறை யாக்கிப் பதின்மூன்றென்னாராயினார்.

உதாரணம்

''அறத்துறைபோ லாரெயில் வேட்ட வரசர்
மறத்துறையு மின்னாது மன்னோ—நிறைச்சுடர்க
ளொன்றி வரப்பகல்வா யொக்க வொளிதேய்ந்தாங்
கின்றிவர வீழ்ந்தா ரெதிர்ந்து.''[34]

இது வேறு வேறு வருதலுஞ் சிறுபான்மை.[35] இன்னுந் துறையென்றதனானே புறத்தோன் கவடிவித்துதலுந் தொகை நிலைப்பாற்பட்டுழி அகத்தோர்க்குச் செல்லாமை கொள்க.[36]

அது, 'மதியேர் வெண்குடை' என்னும் (382) புறப் பாட்டினுள்,

---

33. இரண்டு துறைப்படுதலாவது வீரர்களைத் தொகுத்தல் என ஒரு துறையும் மதிற்போரில் இருபெரு வேந்தருமே இறத்தல் என ஒரு துறையும் ஆக இருவகைப் படுதல். தும்பைத்திணையில் வரும் தொகை நிலை என்பது இரு பெருவேந்தரும் உடன் வீழ்தலாம்.

34. அறத்துறையை விரும்பிச் செய்வது போலவே பகைவர் அரிய எயில் கோடலையும் விரும்பிய அரசரது மறத் துறையும் கொடியதேயாம்; நிறைந்த விண்மீன்கள் சேர்ந்து வந்தாலும் பகலில் ஒளி தேய்ந்ததுபோல இன்று ஒருவரையொருவர் எதிர்த்துப் பட்டு வீழ்ந்தார்.

35. இருவரும் வீழும் தொகை நிலை புறத்தோனுக்கு வேறாகவும் அகத்தோனுக்கு வேறாகவும் தனித்தனி வருதல் சிறுபான்மையாம்.

36. கவடி விதைக்கும் (தொகை நிலைப்படும்) துறை புறத் தோனுக்குரியது; தன் மதிலகத்துக் கவடி விதைத்தல் செய்யான் ஆதலின் அகத்தோனுக்குக் கவடி விதைக்கும் தொகை நிலை இல்லை.

"வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய பெரிதெனச்
சென்றியா னின்றெனனாக"

எனவரும்.

'ஒன்ற' வென்றதனான் அகத்தோன் வாண்மண்ணுதல் சிறுபான்மை என்று கொள்க.

இனி மகண்மறுத்தோன் மதிலை முற்றுதன் மகட்பாற் காஞ்சிக்கண் அடங்கும். யானையும் குதிரையும் மதிற்போர்க்குச் சிறந்தன அண்மையிற் கொள்ளாராயினார். 'ஈரடியிகந்து பிறக்கடி யிடுதலுங் கேடு' என்று உணர்க.

(13)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம்: 13

குடையும், வாளும்...........மொழிப.

கருத்து:- உழிஞைத் திணைவகை மேற்கூறி, இதில் அதன் துறைவகை பன்னிரண்டும் குறிக்கப்படுகின்றன.

பொருள்:- (1, 2) குடையும் வாளும், நாள்கோள்-வேந்தன் கொற்றக் குடையும், வெற்றிப் போர் வாளும், முறையே நன்னாளில் எடுத்துக் கொள்ளுதலும்;

முழுத்தம் ஈங்கிது முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை யேகென் றேத்த,
மீளா வென்றி வேந்தன் கேட்டு—
வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென
....
பிண்ட முண்ணும் பெருங்களிற் றெருத்தின்
மறமிகு வாளும் மாலைவெண் குடையும்,
புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைதீர் வஞ்சி போந்தையிற் றொடுப்போன்
அரைசுவிளங் கவைய முறையிற் புகுதர.

(சிலப்பதிகாரம், கால்கோட் காதை)

அன்றி—அல்லாமலும்;

3. மடையமை ஏணிமிசை மயக்கமும்—தொடையமைந்த ஏணிப் படிகளின்மேல் ஏறுவோரும் எதிர்ப்போரும் தம்முள் கலந்து

மலைதலும்; (மடை—பூட்டு, ஏணிப் பக்கச் சட்டங்களில் பழுக்கள் பூட்டப்படுதலால், மடையமை ஏணி எனப்பட்டது.)

பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ ருடன்றெழுந்தா ராகில்—இருவரும்
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும்.

(பெரும்பொருள் விளக்கம்)

4. கடைஇச் சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்—முற்றியோன் தன் மறவரைச் செலுத்தி எதிர்த்தோரை மலைந்து மதிற்புறப் போர் முடிந்து ஒழியுமாறு வென்று எல்லைக் கைப்பற்றி உள்ளேறி அரணக மறவரைச் சூழும் முனைப்பும்;

ஊர்சூழ் புரிசை உடன்சூழ் படைமாயக்
கார்சூழ் குன்றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல் போன்
றாகஞ்சேர் தோள்கொட்டி ஆர்த்து.

(பழம்பாட்டு)

5. முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்—புறத்தோரால் வளைக்கப் பெற்ற அகப்படைத் தலைவன் அரண் காவல் விரும்பிப் புரியும் அமராம் நொச்சியும்;

(வீழ்தல்—விரும்புதல். நொச்சி—மதில்; அது மதிற்காவற்கு ஆகுபெயர்.)

நீரர் வறியா நிலமுதற் கலந்த
கருங்கா னொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை மகளிர் ஐதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டனம், இனியே
வெருவரு குருதியொடு மயங்கி யுருவுகரந்
தெற்றுவாய்ப் பட்ட தெரியலூ ரன்செத்துப்
பருந்துண் டுவப்பயாங் கண்டனம்
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே.

(புறம்-271)

6. அதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையும்—அவ்வெதிர்ப்பால் வெகுண்டு புகுந்த புறப்படைத் தலைவன் விரும்பும் புதுக்கோளும்;

(எதிர்ப்பாரை அடர்த்து அவர் நிலையிடத்தைப் புதிதாய்க் கொள்ளுதல் புதுமை எனப்பட்டது.)

வெஞ்சின வேந்தன் எயில்கோள் விரும்பியக்கால்
அஞ்சி ஒதுங்காதார் யாவர்? அவர்—மஞ்சுசூழ்
வான்தோய் புரிசைப் பொறியும் அடங்கினவால்,
ஆன்றோர் அடக்கம்போல் ஆங்கு.

(பெரும் பொருள் விளக்கம்)

(மற்று, அசை)

7. நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்—எயிற் புறத்து நீர் நிலையில் (அகற்ற ஒழியாது வந்து விரவும் பாசிபோல) இருதிறப்படையும் தளர்ந்தகலாமல் மேன்மேல் விரும்பிக் கலந்து மலையும் பாசித் துறையும்;

(விட்டு விலகாது விரைந்து விரவும் நீர்ப்பாசி போலக் கலந் திருபடையும் மலைந் திருதலையும் அலையென மோதும் அமரின் பரிசு, பாசி எனப்பட்டது.)

முடிமனர் எழுதறா பரிதி மொய்களி
றுடைதிரை மரக்கலம் ஒளிறு வாட்படை
அடுதிறல் எறிசுறா வாகக் காய்ந்தன
கடலிரண் டெதிர்ந்ததோர் கால மொத்ததே.

(சிந்தாமணி- 2223)

8. அதாஅன்று— அதுவுமன்றி; ஊர்ச்செரு வீழ்ந்த மற்ற தன் மறனும்—அரணகத்து ஊரில் அமர் விரும்பி ஒருவரை ஒருவர் முனைந்து பொரும் அப்பாசிப் போரின் தறுகண்மையும்;

(மற்று, அசை, அதன் மறன் என்பது அண்மைச் சுட்டாய் மேற் பாசி மறனைச் சுட்டும்.)

மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்—

எறிதொறும்போய்

நீர்ச்செறி பாசிபோல் நீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு உற்றாரைக் கண்டு.

(பழம்பாட்டு)

9. மதின்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்— மதின் மேல் ஏறி அகற்றப்படாது ஊன்றிய மறவர் பரிசும்;

"..
நெடுமதில் நிரைப்பதணத்

தண்ணலம் பெருங்கோட் டகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ,

(பதிற்றுப்பத்து-22)

10. இகன்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்—பகை மதிலின் முடியகப்படுத்திய பெருமிதம் கொண்டாடும் நீர் விழவும்.

''..............................பகைவர்
கடிமதில் எறிந்து குடுமிகொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக''

(பெரும்பாண்—வரி-450-4)

(இதில் குடுமியை மதிலுக்கு ஆக்காமல் பிரித்து ஆகுபெயராக்கிப் 'பிறர் குடுமி' எனக் கொண்டு, காவலர் முடிக்கலம் எனப் பிறர் கூறுதல் பொருந்தாமை வெளிப்படை. வேந்தனுக் கல்லா மதில் காக்கும் மறவர்க்கெல்லாம் முடிக்கலம் இன்மையானும், முற்றிய மதின்மேல் முடிவேந்தன் ஏறிப் பறிகொடுத்தல் இராவணற்கன்றிப் பிறமன்னர்க்குச் சான்றோர் செய்யுட்களில் கேட்கப்படா அருநிகழ்ச்சியாதலானும், இங்கு 'மதிற்குடுமி' என நின்றாங்கே நேர்பொருள் கொள்ளுதலே அமையும். முற்றியோர் எயிற்குடுமி கொள்ளுதல், மேற்பெரும்பாண் அடிகளிலும் மற்றும் பல பழஞ்செய்யுள்களிலும், பரக்க வருவதனாலும், இதுவே தொல்காப்பியர் கருத்தாதல் தேற்றமாகும்.)

11. வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற- உழிஞைப் போரின் வென்றோர், வெற்றிதந்த வாளை நீராட்டும் விழவுடன் பொருந்த; (மண்ணுதல்—கழுவுதல்)

''போர்க்கு உரைஇப் புகன்று கழித்தவாள்
உடன்றவர் காப்புடை மதில மிழ்த்தலின்
ஊனுற மூழ்கி உருவிழந் தனவே.''

(புறம்-97)

[இங்கு வாளை வெற்றிதரும் படைக் கலங்களுக்குப் பொதுக் குறியீடாகக் கொள்ளுதல் சால்புடைத்தாகும். வாளைப் போலவே வேலும் பண்டை மறவர் கொண்ட போர்ப் படையாதலின், வென்றபின் வேல்கழுவி விழவெடுத்தலும் இத்துறையே யாகும்.]

''பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
இரும்புற நீறும் ஆடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினும் கிடக்கும்;
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினும் தெருவினும் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினும் செல்லும்; ஆங்
கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினும் செலவா னாதே.''

(புறம்—332)

2. ஒன்ற, தொகைநிலை யென்னும் துறையொடு தொகைஇ—(வென்ற வாளை நீராட்டும் விழவொடு) பொருந்த, தோற்றோர் தொகுதித் தொலைவாம் 'தொகை நிலை' என்னும் துறையொடு கூட்டி;

தொகை நிலைத் துறைக்குச் செய்யுள் :—

1. அடுந்தேர்த் தானை ஆரிய வரசர்
கடும்படை மாக்களைக் கொன்று களங்குவித்து
நெடுந்தேர்க் கொடிஞ்சியும் கடுங்களிற் றெருத்தமும்
விடுபரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட,
எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை
ஒருபக லெல்லையி னுண்ணு மென்ப
தாரிய வரச ரமர்க்களத் தழிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்.

(சிலப்பதி 26. கால்கோள் வரி 211—218)

2. ''....................................
உருள்பூங் கடம்பின் பெருவாயி னன்னனை
நிலைச்செ ருவினால் தலைய றுத்தவன்—
குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்.''

(பதிற்றுப் பத்தில், 4ஆம் பதிகம்)

3. 'பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்

வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே,
மறப்பன் மாதோ நின்விறற் றகைமையே'

(நற்றிணை—செய்—270)

இங்குப் பின்னிரு பாட்டுக்களில் நன்னனை அவன் தானை யொடழித்து, அழிந்தோர் மனைவியர் கூந்தலை அரிந்து, வென்ற வேந்தன் தன் தானைப் போர் யானைக் கயிறாகத் திரித்துக் கொண்ட கொடு மறமும், அப்போரில் தோற்றோர் தொகுதியின் தொலைவும் சுட்டப்படுதலின், இவை 'தொகைநிலை'த் துறை யாதல் காண்க.

மகாள் தொக்க தொகுதியாய்த் 'தொலைவதையே தொல் காப்பியர் காலப் புலவர் 'தொகைநிலை' என வழங்கினர் என்பது, தும்பைத்திணைத் துறை வகையில் தொல்காப்பியர் சுட்டும் தொகைநிலைக் குறிப்பாலினிது விளங்கும். 'ஒருவரு மொழியாத் தொகைநிலை' என்பது ஆங்கவர் தரும் 'தொகை நிலை'க் குறிப்பாகும். உழிஞையிலும் தோற்றோரின் தொகை யழிவே வென்றோர் விழவொடு ஒன்றுவதாகும்.

[இனி, இதில் தொகை நிலைக்கு நச்சினார்க்கினியர் வேறு பொருள் கூறுவர்; 'போர் முடிவில் வென்றோர் வீழாது நின்றோ ரைத் திரட்டி, புண்புறம் பொதிந்தும் தண்மொழி பகர்ந்தும்; அவர் திறம் வியந்தும், தளர்வோரை ஊக்கியும் பாராட்டுவது 'தொகைநிலை' என்பதவர் கருத்து. தொகை கூட்டம் குறிக்கு மாதலின், அவ்வாறு கொண்டார் போலும்.]

வகை நான் மூன்றே துறை என மொழிப—பன்னிரு வகைப் படும் உழிஞைத் துறை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு :— இதில், 'மற்று' எல்லாம் அசை. 'உழிஞைத் துறை' என்பது கொண்ட பொருட்டொடர்பால் பெறப்பட்டது. புறநூற் புலவர் எனும் எழுவாய் அவாய் நிலையாற் கொள்ளப் பட்டது. புதுமையானும் என்பதில் ஆன் அசை.

(13)

70. தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

(12)

ஆ. மொ. இ.

69. 'Thumbai' is the 'puram' of 'Neythal'

70. It is the greatness of destroying a king who comes to fight having the object of exhibiting his might.

பி. இ. நூ:

இல. வி. புற. 12. தொல். சூத்திரமே.

இளம்பூரணர்

70. தும்பை தானே.........சிறப்பிற் றென்ப.

இது. தும்பைத்திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தும்பை நெய்தலது புறன்—தும்பை என்னும் திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாம். மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தலையழிக்கும் சிறப் பிற்று-அதுவலி பொருளாகப் போர் கருதி வந்த அரசன்கண் சென்று அவனைத் தலையழிக்கும் சிறப்பினையுடைத்து.

இதனானே "எதிரூன்றல் காஞ்சி" (பிங்க. அநுபோக. 1474) என்பாரை மறுத்தவாறு அறிக.[1] அதற்கு இது புறனாய வாறு என்னையெனின், இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொரு தலின் அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும் களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுதலா னும், அந்நிலம் கடல்சார்ந்த வழியல்லது இன்மையானும், நெய்தற்கு ஓதிய எற்பாடு போர் தொழிற்கு முடிவாதலானும் நெய்தற்குப் புறனாயிற்று. ['என்ப' அசை]

(12)

---

1. மைந்து பொருளாக வரும் வேந்தனை எதிர்சென்றழித் தல் தும்பை என்றதனால் வஞ்சித்திணையில் மண்ணசை யால் வரும் வேந்தனும் மைந்து பொருளாகவே வருத லின் அவனை எதிர்த்தலும் தும்பையாமேயன்றி வேறன்று. ஆதலின் எதிர் ஊன்றல் காஞ்சி என்பார் கூற்று மறுத்தவாறாம். இது இளம்பூரணர் கூற்று. தொல்காப்பியர்க்குப் பிற்பட்டார் கூற்றைத் தொல் காப்பியர் மறுத்ததுபோல் கூறினார்.

நச்சினார்க்கினியர்

69. தும்பை தானே...........புறனே.

இது தும்பைத்திணை அகத்திணையுள் இன்னதற்குப் புறனா மென்கின்றது. இதுவும் மைந்துபொருளாகப் பொருதலின் மண்ணிடையீடாகப் பொரும் வஞ்சிக்கும் மதிலிடையீடாகப் பொருள் உழிஞைக்கும் பிற்கூறினார்.

இதன் பொருள்:— தும்பைதானே நெய்தலது புறனே— தும்பை யென்னும் புறத்திணை நெய்தலெனப்பட்ட அகத் திணைக்குப் புறனாம் என்றவாறு.

தும்பையென்பது சூடும் பூவினாற் பெற்ற பெயர். நெய்தற் குரிய பெருமணலுலகம் போலக் காடும் மலையுங் கழனியுமல்லாத களரும் மணலும் பொருகளமாக வேண்டுதலானும் பெரும்பொழுது வரைவின்மையானும், எற்பாடு[1] போர்த்தொழில் முடியுங் கால மாதலானும், இரக்கமுந் தலைமகட்கே பெரும்பான்மை உளதாய வாறுபோலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்க மின்மையானும் அவ்வீரக் குறிப்பின் அருள் பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குபவாகலானும், ஒருவரும் ஒழியாமற் பட்டுழிக் கண்டோர் இரங்குபவாகலானும் பிறகாரணங் களானும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று.

(14)

நச்சினிார்க்கினியர்

70. மைந்து பொருளாக.........றென்ப.

இஃது அத்தும்பைக்குப் பொது விலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்:— மைந்து பொருளாக வந்த வேந்தனை— தனது வலியினை உலகம் மீக்கூறுதலே தனக்குப் பெறுபொரு ளாகக் கருதி மேற்சென்ற வேந்தனை, சென்று தலையழிக்குஞ் சிறப்பிற்றென்ப—அங்ஙனம் மாற்று வேந்தனும் அவன் கருதிய மைந்தே தான் பெறு பொருளாக எதிர்சென்று அவனைத் தலைமை தீர்க்குஞ் சிறப்பினையுடைத்து அத்தும்பைத்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

---

1. எற்பாடு—ஞாயிறு மறையும் காலம்.

வரல் செலவாதல் 'செலவினும் வரவினும்' (தொல்-சொல்-கிளவி-28) என்பதன் பொதுவிதியாற் கொள்க.[1] மைந்து பொருளாக என்பதனை வந்த என்பதற்குஞ் சென்று என்பதற்குங் கூட்டுக, அஃது இருவர்க்கும் ஒத்தலின்; எனவே இருவரும் ஒரு களத்தே பொருவாராயிற்று.

இது, வேந்தனைத் தலைமையாற் கூறினாரேனும் ஏனையோர்க்குங் கொள்க, அவரும் அதற்குரியராதலின்.

இதனைச் சிறப்பிற்றென்றதனான் அறத்திற் றிரிந்து வஞ்சனையாற் கொல்வனவும், தேவராற் பெற்ற வரங்களாற் கொல்வனவும் கடையூழிக்கட் டோன்றிய ஆதலிற் சிறப்பிலவாம்; அவையுஞ் சிறுபான்மை கொள்க.

(15)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் 14.

தும்பை தானே...........புறனே.

கருத்து:— இது, தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாகும் எனக் கூறுகிறது.

பொருள் :— வெளிப்படை.

குறிப்பு :— ஏகாரம், முன்னது பிரிநிலை; பின்னது அசை. நெய்தல் போலவே தும்பையும் ஆர்ப்பு, அலைப்பு, இரங்கல் இவற்றிற்கு இடனாதலானும், நெய்தலில் புலம்புறு தலைவியர்

---

1. செலவு வரவு தரவு கொடை எனும் நாற்சொல்லும் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடத்துக்கும் உரிய என்பது அச்சூத்திரப் பொதுவிதி. பின்னர்த் தரவும் வரவும் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய (தொல். சொல் 29) எனவும் செலவும் கொடையும் படர்க்கைக்குரிய (ஷை-30) எனவும் பிரித்துக் கூறுவர். இச்சூத்திரத்தில் வந்த என்ற சொல் படர்க்கைக்கு உரியதாக்கப்பட்டது. எனினும் அதற்குச் சென்ற எனப் பொருள் கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் மைந்து பொருளாச் சென்ற என்னாது வந்த என்றது முதவில் தாம் கூறிய பொது விதியின் பாற்பாடும் என்பது நச்சினார்க்கினியர் விளக்கம்.

இரங்கல் ஓயத் தலைவர் கார் காலத்தே மீளுதல் போலத் தும்பையில் அமரோய்வு கார்காலத்தாதலானும், நெய்தற்குரிய பரந்த மென்னில வரைப்பு போர்க்குச் சிறந்துரியதாதலானும் நெய்தலுக்குத் தும்பை புறனாயிற்று.

(14)

சூத்திரம் 15.

மைந்து பொருளாக...........றென்ப.

கருத்து:- இது, தும்பைத்திணை இயல்பை விளக்குகிறது.

பொருள்:- மைந்து பொருளாக வந்த வேந்தனை—தன் வலியை மதித்து இகலி வந்த வேந்தனை; சென்று தலையழிக்கும் சிறப்பிற்று என்ப—எதிர்த்துப் போய்ப் பொருதடர்க்கும் சீருடைத்துத் தும்பைத்திணை என்பர் புறநூற் புலவர்.

குறிப்பு:- தும்பைத்திணை என்னும் எழுவாய், பொருட்டொடர்பால் முன் சூத்திரத்தினின்றும் பெறப்பட்டது. 'தும்பை' இருபடையும் ஒருங்கு மலையும் போர் குறிப்பதால், வந்த வேந்தனை இருந்த மன்னவன் எதிருன்றிப் பொருதலும், அவ்வாறு தடுத்தெதிர்த்தவனை வந்தோன் அடுத்தமர் தொடுத்தலும் ஆகிய இருதிறமும் அடங்கச் சூத்திரம் அமைந்த செவ்வி கருதற்குரியது.

எதிர்த் திருவர் மலைவதே போராதலின், போர் குறிக்கும் தும்பையின் வேறாக எதிருன்றலைக் காஞ்சி என வேறு திணையாகக் கொள்ளும் பின்னூற் கொள்கை மிகையாதல் வெளிப்படை. அது பற்றியே தொல்காப்பியர் எதிருன்றலைக் காஞ்சியெனக் கூறிற்றிலர்.

(15)

சிவலிங்கனார்

தும்பை..............என்ப

இச்சூத்திரம் தும்பைத் திணை நெய்தல் திணையின் புறம் என்றும் அதன் இலக்கணம் இன்னது என்றும் கூறுகின்றது.

(இ-ள்) தும்பைத் திணையானது நெய்தல் திணையின் புறனாம். அது, தன் வலி மிகுத்துக்காட்டிப் புகழ் பெறுவதையே பொருளாகக் கொண்டு படையெடுத்து வந்த வேந்தனை அவ்வாறே புகழ் பெறுவதையே பொருளாகக் கொண்டு ஒரு

வேந்தன் படையெடுத்துச் சென்று அவன் தலைமையைக் கெடுக்கும் நிலையினையுடையதாகும் என்றவாறு.

குறைவாக உள்ள நிலப் பகுதியை (மண்ணை) நிறைவு செய்யும் காரணமாகவோ (வஞ்சி) நாடு முழுமையும் கொள்ள நினைத்து மதிலை வளைக்கும் காரணமாகவோ (உழிஞை) இன்றித் தன் வலிமையைக் காட்டிப் புகழ் பெறுதலாகிய ஒரே காரணத்துக்காகப் படையெடுத்து வரும் வேந்தனுடன் அதே காரணத்துக்காக எதிர்க்கும் வேந்தன் போர்புரியின் அவ்விருவர் போர்க்கும் தும்பைப் போர் என்றே பெயர். இருவர் சூடும் பூவும் தும்பையேயாம். அதனால் சூடும் பூவால் அன்றி கொடி உடை முதலியவற்றால் வேறுபாடு அறியப்படும். அதாவது இன்ன வேந்தர் அணியினர் இவ்வீரர் என்பது அறியப்படும் என்க.

தலையழித்தன்று என்பதற்குச் செருக்கையழித்தல் என்பது பொருள். தலைவனை அழித்தல் எனின் அது வெற்றியாகும்; வாகையாகிவிடும். எனவே தும்பை என்பது போர்த் திறங்களைக் குறிக்குமேயன்றிப் போர் முடிபினைக் குறியாது.

மைந்து பொருளாகப் புரியும் போரில் வஞ்சனையின்றி அறநெறியே நிகழுமாதலினாலும் இருபெருவேந்தர் படைகளும் பெருக்கமுடையன ஆதலினாலும் போர் நெடுங்காலம் நிகழும். அதனால் இருபெருவேந்தர்க்கும் எதிர் எதிராகப் பாசறை அமையும். அதற்குப் பரந்த நிலப்பரப்பாகவும் பரல்முள் முதலியன இல்லாததாகவும் இடம் அமைதல் வேண்டும். அதனால் அவையுள்ள காட்டிடமோ மேடும் பள்ளமுமாக அடுக்கிய மலையிடமோ, மக்களுக்கு வளந்தந்து புரக்கும் வயலிடமோ தகுதியுடையனவல்ல. மணல் பரந்த நெய்தல் நிலமே தகுதியுடையதாகும். அதனால் நிலமும் போர் தொடங்கி முடியும் காலம் ஏற்பாடு ஆதலின் பொழுதும் காரணமாக முதற் பொருளால் தும்பை நெய்தற்குப் புறனாயிற்று. நெய்தற்கு இரக்கம் உரிப்பொருளானது போல வீரரை இழந்த மனைவியர் இரங்குதலும் கண்டோர் இரங்குதலும் ஆகிய இரக்கம் நிகழ்தலின் உரிப் பொருள் காரணமாகவும் புறன் ஆயிற்று. தும்பைப் போர் பற்றிச் செய்யுட் செய்வார் நெய்தற் கருப்பொருள்களையே மிகுதியும் கூறுதல் வேண்டும்.

71. கணையும் வேலும் துணையுற மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலந் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.

ஆ. மொ. இல;

71. It has the peculiarity of the body being divided into two parts, body and head, the lite being departed, surrounded by arrows and spears so as to support them in the mid-air without being touched by the ground.

பி. இ. நூ:

இல. வி. புற-13

கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலந் தீண்டா வெருவரு நிலையும்

இளம்பூரணர்

71. கணையும் வேலும்......... ஒரு சிறப் பின்றே.

இது தும்பைத்திணையின் சிறப்பியல் உணர்த்துதல் நுதலிற்று.

இது மேலனபோல ஒரு பாற்கு மிகுதலன்றி இருவகையார்க்கும் ஒத்த இயல்பிற்றாம்; ஒருவர் மாட்டும் மிகுதல் இல்லை.

(இ-ள்) கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை—கணையும் வேலும் படைத் துணையாகக் கொண்டு பொருதல் காரணமாகச் சென்ற உயிரின் நின்ற யாக்கை, இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு—நீர் அட்டை காலவயப்பட்டு உடலினின்று உயிர் பிரிக்கப்படுமாறு, இருபால் பட்ட ஒரு சிறப்பின்று—இருபாற் படுக்கப்படும் அற்ற துண்டம் இணைந்தது போன்று ஆடலொத்த பண்பினை யுடையது.

[இருநிலம் தீண்டா அரு—நீருட் கிடக்கும் அட்டை]

(13)

நச்சினார்க்கினியர்

71. கணையும் வேலுந்..................பின்றே.

இது தும்பைக் காவதோர் இலக்கணங் கூறுதலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இதன் பொருள் :—கணையும் வேலுந் துணையுற மொய்த்த லின் பலரும் ஒருவனை அணுகிப் பொருதற்கஞ்சி அகல நின்று அம்பானெய்தும் வேல்கொண்டெறிந்தும் போர் செய்ய அவ்வம் பும் வேலும் ஒன்றோடொன்று துணையாகத் தீண்டுமாறு செறி தலின், சென்ற உயிரின் நின்ற யாக்கை—சிறிதொழியத் தேய்ந்த உயிரானே துளங்காது நிலை நின்ற உடம்பு,[1] இருநிலந் தீண்டா யாக்கை அருநிலை வகையோடு—வாளுந் திகிரியு முதலியவற் றால் ஏறுண்ட தலையேயாயினும் உடலேயாயினும் பெரிய நிலத் தைத் தீண்டாதெழுந்து ஆடும் உடம்பினது பெறற்கரும் நிலை யுடைத்தாகிய கூறுபாட்டோடே கூடி, இருபாற்பட்ட ஒரு சிறப் பின்று—இரண்டு கூறுபட்ட ஒரு சிறப்பிலக்கணத்தை யுடைத்து முற்கூறிய தும்பைத்திணை என்றவாறு.

எனவே, முற்கூறிய மைந்து பொருளாகப் பொருதலினும் நின்ற யாக்கை சிறத்தலும் இருநிலந் தீண்டா யாக்கை[2] அதனிற் சிறத்தலுங் கூறினார். இது திணைச் சிறப்புக் கூறியது. 'மொய்த்தலின்' என்றது யாக்கையற்று ஆடவேண்டுதலிற் கணையும் வேலுமன்றி வாள் முதலியன ஏதுவாகக் கொள்க.[3] பிற் கூறியதற்கு அட்டை அற்றுழியும் ஊருமாறு போல் அலீகனிற அற்றுழியும்[4] உடம்பாடுதலின் அட்டையாடலெனவும் இதனைக் கூறுப.

இனி மேற்றுறை கூறுகின்றது, மைந்து பொருளாக வந்த துஞ் சென்றதுமாகிய பொது இலக்கணத்திற்கே என்றுணர்க. நிரைகொள்ளப்பட்டோன் பொருகளங் குறித்துப் போர் செய்த லும் அவன் களங் குறித்தது பொறாது நிரை கொண்டானுங் களங்குறித்துப் போர் செய்தலும் வெட்சிப் புறத்துத் தும்பையாம். வஞ்சியுள்ளும் விழுப்புண்பட்ட வீரரை நோக்கி வேந்தற்குப் பொறாமை நிகழ்ந்து துறக்கம் வேண்டுழி நிகழ்ந்த தும்பையும்

---

1. குற்றுயிராக நின்ற யாக்கை.
2. உயிர் சென்றும் நிலத்தில் வீழாத யாக்கை.
3. கணையும் வேலும் மொய்த்தலின் என்றது குற்றுயிருடன் நிற்கும் யாக்கைக்கு ஏதுவாயிற்று. உடலற்று வீழ்த லுக்கு அவை ஏதுவாகா. வாளே ஏதுவாகும் என்க.
4. அலீகன் இற அற்றுழியும்—நீர் அட்டைபோல இரண்டு கூறு படைத்தலை அற அற்றவிடத்தும். (அலீகன்— நீர் வாழ் அட்டை)

வஞ்சிப்புறத்துத் தும்பையாம். முற்பட்டோனை முற்றுவிடுத் தற்கு வேறோர் வேந்தன் வந்துழி அவன் புறம்போந்து களங் குறித்துப் போர் செய்யக் கருதுதலும்[அவன் களங்குறித்துழிப் புறத் தோனும் களங்குறித்துப் போர்செய்யக் கருதுதலும் உழிஞைப் புறத்துத் தும்பையாம். இவையெல்லாம் மண்ணசையும் அரண் கோடலுமன்றி மைந்து பொருளாகச் சென்று துறக்கம் வேட்டுப் பொருந் தும்பைச் சிறப்புக் கூறிற்று.

மேற்காட்டுந் துறைகளெல்லாம் இச்சூத்திரத்துக் கூறிய இரண்டற்கு[5]மன்றி மைந்து பொருளாயதற்கேயா மென்றுணர்க.

உதாரணம்

"நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே"[6]

(புறம்-297)

"எய்போற் கிடந்தா னென்னேறு"[7]

(புற. வெ. 176)

என வருவன கணையும் வேலும் மொய்த்து நின்றன.

கிடந்தானென்புழி நிலந் தீண்டா வகையின் நின்ற யாக்கை யாயிற்று.

"வான்றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ
ரென்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தங்குறை—மான்றேர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல."[8]

(பெரும் பொருள் விளக்கம்-புறத்திரட்டு-அமர்)

---

5. இரண்டு—சென்ற உயிரின் நின்ற யாக்கையும் இருநிலம் தீண்டா யாக்கையும்.

6. நெடுவேல்கள் மொய்த்த மார்போடு மடல் உள்ள பனை மரம்போல் நிற்போர்.

7. கணையும் வேலும் மொய்த்தலின் எய் (முள்ளம்பன்றி) போற் கிடந்தான் என் ஏறுபோலும் வீரன். அதாவது கணையும் வேலும் சுற்றித் தைத்திருக்க இடைப்பட்டு நிலம் தீண்டாதபடிக் கிடந்தான் என்க.

8. வாள்வீரர் துறக்கம் விரும்பிப் போர்க்கு எழுந்தார் என் பதற்குச் சான்று சொல்வன போலாயின அவர்தம்

இது வஞ்சிப்புறத்துத் தும்பையாய் இருநிலந் தீண்டா வகை.

''பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்றார்
குருதிவாள் கூறிரண்டு செய்ய—வொருதுணி
கண்ணிமையா முன்னங் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணதே மண்ணதே யென்று''[9]

இஃது உழிஞைபுறத்துத் தும்பையாய் இருநிலந் தீண்டா வகை.

இது திணைக்கெல்லாம் பொது வன்மையிற் றிணையெனவும்படாது; திணைக்கே சிறப்பிலக்கணமாதலிற் றுறையெனவும் படாது; ஆயினுந் துறைப்பொருள் நிகழ்ந்து கழிந்தபிற்[10] கூறியதா மென்றுணர்க.

(16)

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம் 16.

கணையும் வேலும்..............பின்றே

கருத்து:- இது தும்பைத் திணையின் ஒரு சிறப்புணர்த்துகிறது.

பொருள்:- கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் அளவிறந்த அம்பும் வேலும் செறிந்து அடர்தலின்; சென்ற உயிரின் நின்ற யாக்கை (அருநிலை வகை)— பிரிந்த உயிரினின்றும் நீங்கிய பின்னும் வீழாது நின்ற உடலின் அரிய நிலைப்

குறையுடல்கள்; எவ்வாறெனின், காணும் வேந்தன் தலை நடுங்குமாறு உயிர்விட்ட உடல்கள் பலவும் விடாமல் மேல் மேல் பாய்ந்தன, (இதில் எழுந்தார் என்பது படையெடுத்துச் சென்றார் என்பதால் வஞ்சிக்குரிய தும்பையாயிற்று.)

9. மன்னர் பலரும் காணுமாறு பகைவர் வாள் ஒருவன் உடலை இரு கூறாகச் செய்ய ஒரு கூறான தலையானது உடல் மண்ணிடத்ததோ மண்ணிடத்ததோ என்று கூறிக்கொண்டே கண் இமையா முன்னம் மதிலில் போய் வீழ்ந்தது. (மதில் கூறினமையின் உழிஞையாயிற்று.)

10. அடுத்த சூத்திரத்து வரும் துறைப் பொருள் எல்லாம் கழிந்த பின் கூறப்பட்டதாகும் இது எனக் கொள்க.

பரிசு; இருநிலந் தீண்டா அருநிலை வகையோடு— (அறுபட்ட தலை முதலிய உறுப்புகள்) பெருநிலம் படியாது முறுகிய இகல் முனைப்பால் துடித்தியங்கும் அரிய நிலைமையாகிய பரிசுடன்; இருபாற் பட்ட ஒரு சிறப்பின்றே—இவ்விரண்டு கூறுபட்ட ஒப்பற்ற சிறப்பினையுடைத்துத் தும்பைத் திணை.

குறிப்பு:- ஈற்றேகாரம் அசை; 'இன்'—உருபிரண்டில் முன்னது ஏதுப் பொருளிலும், பின்னது நீங்கற் பொருளிலும் வந்தன.

முறுகிய தறுகண் முனைப்பால் உயிரிழந்த உடல் வீழாது நிற்றலும், துணிக்கப்பட்ட தலை முதலிய உறுப்புக்கள் நிலந் தோயாமல் துடித்தியங்கலும், ஆகிய இருவகை அரிய நிலையைச் சிறப்பாக உடையது தும்பைத்திணை.

இருநிலந் தீண்டாததிது எனக் குறியாமை. சிறப்பாகத் தலை துடிப்பத்துடன் இற்ற உறுப்பெதுவும் துடிக்கும் இயல்பிற்றாகலின் சுட்டிக் கூறல் வேண்டாமை பற்றி அமைந்தது.

அன்றியும் 'சென்ற உயிரினின்ற யாக்கை' எனப் பிரித்து, ''இருநிலந் தீண்டா அருநிலை வகையோடு, இருபாற்பட்ட ஒரு சிறப்பின்று'' எனக் கூட்டியதால், யாக்கையும் அதன் அறுபட்ட உறுப்பும் தனித்தனிச் சுட்டுங் கருத்துத் தெளியப்படும். [இங்கு, 'அரு' என்பதை அட்டை எனக் கொண்டு, அதன் பின்வரும் 'இருபாற்பட்ட' எனுந் தொடரை அவ்வட்டைக்கு அடையாக்கி, இருகூறுபட்ட அட்டைப் பகுதிகள் தனித்தனி ஊர்ந்து இயங்குவது போலத் துணிக்கப்பட்ட தலையும் உடலும் தனித் தனித் துடிக்கும் எனப் பொருள் கூறுவர் பழைய உரைகாரர். இரண்டின் மேற்பட வெட்டுண்ட அட்டைத் துண்டுகளும் துடிப்ப தியல்பாதலால், இருபாற்பட்ட என்பது பொருளற்ற தாகும். அன்றியும் ஊர்ந்து செல்லுதல் நிலமிசையே யாமாதலால் அது இருநிலந் தீண்டா அருநிலை எனற்குமமையாது, அதனால், இருபாற்பட்ட எனுந் தொடர் அதையடுத்துவரும் 'ஒரு சிறப் புக்கே' அடையாதல் தேற்றம்.] நின்ற யாக்கை, நிலந் தீண்டா உறுப்பு அருநிலை, என முறையே இரு திறப்பட்ட ஒரு சிறப்பாதல் காண்க.

வெற்றுடலும் அற்றதலையும் நிலந்தீண்டா நிலைக்குச் செய்யுள்:

''....................................

வருபடை தாங்கிய கிளர்தா ரகல

மருங்கட னிறுமார் வயவ ரெறிய
உடம்புந் தோன்றா வுயிர்கெட் டன்றே,
மலையுநர் மடங்கி மாறெதிர் கழிய......
முலையா நிலையி னுடல்நின் றன்றே''

(புறநானூறு)

இது சென்ற உயிரின் நின்ற யாக்கை இருநிலந் தீண்டா அருநிலை குறிப்பது.

இனி ''கொடுமணம் பட்ட'' எனும் பதிற்றுப்பத்துப் பாட்டில்,

''தலைதுமிந் தெஞ்சிய வாண்மலி யூபமொ
டுருவில் பேய்மகள் கவலை கவற்ற

(பதிற்று-67)

என்பதும்,

சிலப்பதிகாரக் கால்கோட் காதையில்,

''தாரும் தாருந் தாமிடை மயங்கத்
தோளும் தலையுந் துணிந்து வேறாகிய
சிலைத்தோள் மறவ ருடற்பொறை யடுக்கத்
தெறிபிண மிடறிய குறையுடற் கவந்தம்
பறைக்கட் பேய்மகள் பாணிக் காட''

எனவரு மடிகளும், இருநிலம் தீண்டாத் துணியுறுப் பருநிலை குறிப்பன.

(16)

சிவலிங்கனார்

இச்சூத்திரம் தும்பைத் திணையின் சிறப்புக் கூறுகின்றது.

(இ-ள்) இருபெரு வேந்தரின் அம்புடை வீரரும் வேலுடை வீரரும் சேர்ந்து மொய்த்துப் பொருதலால் சென்ற உயிருடன் நின்ற யாக்கை வகையும், வீரர் எய்த அம்புகளும் எறிந்த வேல்களும் சேர்ந்து தன் உடம்பில் மொய்த்திருப்பதால் பெரிய நிலத்திற் சாயாது அப்படியே நின்ற யாக்கை வகையும் ஆகிய இரு பகுதிப்பட்ட ஒப்பு அற்ற சிறப்பினையுடையதாகும் அத்தும்பைத் திணை என்றவாறு.

கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை வகை யெனவும், கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் இருநிலந் தீண்டா அருநிலை வகை யெனவும் கூட்டுக. இவ்விருவகை யாக்கைகளே தும்பைப் போரின் மைந்து பொருளைச் சிறப்பிப்பன ஆதலின் ஒரு சிறப் பின்று என்றார்.

துணையுற என்பது சேர்ந்து என்றவாறு. சென்ற உயிரின் நின்ற யாக்கை என்றது உயிர் சென்ற அணிமைக்கண் உயிர்த் துடிப்புடன் நின்ற யாக்கையை.

இருநிலம் தீண்டாமைக்குக் காரணம் கணையும் வேலும் துணையுற மொய்த்தமையாகும். பாரதப் போரில் வீடுமன் தான் இறக்கும் நிலையில் தன் உடல் எங்கும் அம்பெய்து தன் உடல் நிலத்தில் வீழாமல் அம்புப் படுக்கையமைக்குமாறு அருச் சுனனிடம் வேண்டிப் பெற்று அவ்வாறே அம்புப் படுக்கையில் வீழ்ந்தது இதற்கு நல்லதோர் உதாரணமாம்.

வகை என்ற மிகையானே சென்ற உயிரின் நின்ற யாக்கை வீர உணர்வு குன்றாமல் ஆடுதலும் அட்டை எனும் உயிர்ப் பொருள் உடல் அறுபட்டவுடன் நில்லாமல் நிலத்தில் ஊர்வது போல யாக்கை அறுபட்ட உறுப்புகள் துடித்தலும் தலையறுபட்ட யாக்கை அந்நேரத்து வீழாமல் ஆடுதலும் பிறவும் கொள்க. இதனை அட்டையாடுதல் என்பர்.

72. தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய பெருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறெறிந்து எதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ
ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்

பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

(14)

ஆ.மொ. இல;

72. The infantry, the elephantry and the cavalry being feared by the enemies; 'tharnilai' where a king armed with pears being surrounded by enemies is being freed by a warrior of his own; the scene of the death of the leaders of two parties; 'erumai' (buffaloe) where a commander enters in to his army which is in disorder and resists the attack of the cnemy fearlessly; destroying the armies being in possession of the field; the renoun of those who have killed the elephants of the foes; the uproar of the warriors of the king who killed the enemy-king with his elephant; 'thokai nalai' where none has escaped, the two kings with their allies having fought with their swords and died; 'nallisai', where a warrior on the fall of his king has got angry and fought fiercely; 'nulil' where the warrior lashing his sword has killed all who have turned back in disorder-these are the twelve divisions of 'Thumbai.'

பி.இ.நூ.

பு. வே. மா. 7

துன்னருங் கடும்போர்த் தும்பை தும்பையரவம்
தன்னிகர் இல்லாத் தானை மறமே
யானை மறத்தொடு குதிரை மறமே
தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே
இருவருந் தபுநிலை எருமை மறமே
ஏம எருமை நூழில் என்றா
நூழி லாட்டே முன்தேர்க் குரவை
பின்தேர்க் குரவை பேய்க்குர வையே
களிற்றுடன் நிலையே ஒள்வாள் அமலை
தானை நிலையே வெருவரு நிலையே

சிருங்கார நிலையே உவகைக் கலுழ்ச்சி
தன்னை வேட்டல் தொகைநிலை உளப்பட
நன்பொருள் தெரிந்தோர் நாலிரு மூன்றும்
வண்பூந் தும்பை வகையென மொழிப.

வீர. 105

நிலைபாழி கோளொடு வாளாட் டுடைபடை
நீள்களிற்றின்
தொலையார் மலைவிவை தும்பைவி கற்பங்கள்

இல.வி.புற. 13

....
தாம்செருப் புரியாத் தன்மையால் அவரை
ஓம்படுத் துயர்த்திய தானை மறமும்
....
யானை மறத்தொடு குதிரை மறமும்
....
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண் டெறிந்த மற்றதன் பகுதியும்
....
இருவர் தலைவர் தபுதிக் கண்ணும்
பொருபடை அகலாப் போர்புரி நிலையும்
குருதிவேல் ஒருவன் கூழை தாங்கி
இரிபடை பின்னின்ற எருமை மறமும்
நேரலர் பனிப்ப நெஞ்சிடைக் குளித்த
கூரயில் பறித்துக் கைக்கொண்ட நூழிலும்
மால்திரு வேந்தன் வயப்படை உடைய
வேல்திரிந் தாடிய நூழி லாட்டும்
....
இருபெரு வேந்தரும் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலை.

இளம்பூரணர்

72. தானை யானை........... துறைத்தே.

இது, தும்பைத்திணை பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நோனார் உட்கும் தானை யானை குதிரை என்ற மூவகை நிலையும்—பகைவரால உட்கப்படுகின்ற தானையும் யானையும் குதிரையுமாகிய மூவகைப்பட்டவற்றினது நிலையும்.

தானை நிலை வருமாறு :

''வெண்குடை மதியம் மேல்நிலாத் திகழ்தரக்
கண்கூடு இறுத்த கடன்மருள் பாசறைக்
குமரிப்படை தழீஇய கூற்றுவினை ஆடவர்
தமர்பிறர் அறியா அமர்மயங்கு அழுவத்து
இறையும் பெயருந் தோற்றின் நுமருள்
நாண்முறை தபுத்தீர் வம்மின் ஈங்கெனப்
போர்மலைந்து ஒருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
நிரைதார் மார்பினின் கேள்வினைப் பிறரே.''[1]

(புறம்-294)

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.''

(குறள்-774)

''நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்காழ் அன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பால் சில்லுறை போலப்
படைக்குநோய் எல்லாந் தானா யினனே.''[2]

(புறம்-276)

---

1. வீரமகளே! கூற்றுவன் தொழில் போலும் தொழிலுடைய வீரர் தமரோ பிறரோ என அறிய முடியாத போர்க்களத்தில் நின் கணவன் எதிரி வீரரைப் பார்த்து நும் அரசன் புகழ் நும் புகழ் முடித்து வாழ்நாளையும் கெடுத்தவர்களே என்னோடு போர்புரிய வம்மின் என்று கூவிப் போர்புரிந்து வென்று ஒரு பக்கமாக நின்றனை, பாம்பு உமிழ்ந்த மணியை யாரும் அணுகாதது போலப் பிறவீரர் யாரும் அணுகாராயினர்.

2. முதுபெண்டின் சிறுவன் (வீரன்) ஆய்க்குல மகன் தன் விரல் நகத்தால் தெறித்த உறை (புரை) யானது ஒரு குடம்பாலைத் திரித்தாற்போல படைவீரர் யாவர்க்கும் தான் நோய் போன்றவனானான்.

''தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்கு
ஒற்கத்து உலந்தானும் ஆகுமால் பின்பின்
பலர்புகழ் செல்வம் தரூஉம்பற் பலர்தொழ
வானக வாழ்க்கையும் ஈயுமால் அன்னதோர்
மேன்மை இழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகும் உயிர்க்கு.''[3]

இஃது ஓர் வீரன் கூற்று.

யானை நிலை வருமாறு:

''கையொடு கையோடு ஒரு துணி கோட்டது
மொய்யிலைவேல் மன்னர் முடித்தலை—பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே அங்கோர்
வயவெம்போர் மாண்ட களிறு.''[4]

குதிரை நிலை வருமாறு:

''நிலம்பிறக் கிடுவது போற்குளம்பு கடையூஉ
உள்ளம் ஒழிக்குங் கொட்பின் மான்மேல்
எள்ளுநர்ச் செகுக்குங் காளை கூர்த்த
வெந்திறல் எஃகம் நெஞ்சுவடு விளைப்ப
ஆட்டிக் காணிய வருமே நெருநை
உரைசால் சிறப்பின் வேந்தன் முன்னர்க்
கரைபொரு முந்நீர்த் திமிலிற் போழ்ந்தவர்
கயல்தலை மடப்பிடி புலம்ப
இருமருப்பு யானை எறிந்த எற்கே.''[5]

(புறம்-303)

---

3. தன்னை வீரனாகக் கொண்ட வேந்தனுக்காக அவன் தளர்வெய்திய காலத்தில் தன்னை அழித்துக் கொள்வானும் ஆவான். பலர் புகழும் செல்வம் தருவதான வான வாழ்க்கையையும் பாரும் புகழ எதிர்த்தோர்க்குத் தருவான் இப்படிப்பட்ட மேன்மையிழக்குமாறு தானே போகக்கூடிய தன் உயிர்க்குப் பழிவரும் செயல்களைச் செய்வரோ.

4. போரில் மாட்சிப்பட்ட களிறானது தன் கொம்பிடத்தாகிய மன்னர் முடித்தலையைப் பொய்கை நீராட்டிச் செல்லும்.

5. நேற்று வேந்தர் முன்னிலையில் கடல்கிழித்தோடும் நாவாய் போல எதிர்ப்படை கிழித்துச் சென்று பெண் யானை தனிமையுற்றுப் புலம்புமாறு ஆண்யானையைக்

வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டு எறிந்த தார் நிலையும்—வேல்வென்றி மிகலையே கண்ணோக் குடையனாய்க் களத்து முகப்பிற் சென்ற வேந்தனை மாற்றார் சூழ்ந்த இடத்து வேந்தன் பாலினனாய மற்றோர் தலைவன் தன் நிலை விட்டுத் தன் வேந்துமாட்டு அடுத்துத் துணையாய் மாற்றாரை எறிந்த தார்நிலையும்.

உதாரணம்

''நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண்நோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்.''[6]

(புறம்-180)

எனப் பாணன் அது தோன்றப் புகழ்ந்தவாறு காண்க.

அன்றி இருவர் தலைவர் தபுதி பக்கமும்—அஃதல்லாமல் படை நின்று பொராநின்ற இருவரும் தம்முள் பொருது படுதலும்.

உதாரணம்

''காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர—ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையும் நீங்கா இகல்.''[7]

(வெண்பா. தும்பை-12)

கொன்ற என்னிடம், இன்று மண்ணிடம் பின்னிடக் குளம் பூன்றிக் காண்பார் அஞ்சப்பாயும் குதிரைமேல்எதிர்ப்பார் உள்ளத்தை அழிக்கும் காளையானவன் தன் வேலைப் பிறர் நெஞ்சுவடுக்கென ஆட்டிக்காட்டி என் போர்த் திறனைக் காணவருவான்; வருக.—ஒரு போர்வீரன் கூற்று.

6. பாணர் பசிப் பகைவனாகிய தோயன்மாறன் இறையுறு விழுமம் தாங்கினான் என்றது நார் நிலைக் குரியது.

7. வேந்தர் இருவரும் விண்பட இகல் நீங்கா என்றது இருவர் தலைவர் தபுதிப் பக்கமாம்.

ஒருவன் ஒருவனை உடை படை புக்கு கூழை தாங்கிய பெருமையும்—ஒருவன் ஒருவனைக் கெடுபடையின் கண்புக்குக் கூழை தாங்கிய பெருமையும்.

உதாரணம்

''கோட்டங் கண்ணியும் கொடுந்திரை ஆடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ இவற்கே செற்றிய
திணைநிலை அலறக் கூழை போழ்ந்துதன்
வடிமாண் எஃகம் கடிமுகத்து ஏந்தி
ஓம்புமின் ஓம்புமின் இவணென ஓம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத்து எதிர்ந்ததன் தோழற்கு வருமே.''[8]

(புறம்-275)

படை அறுத்துப் பாழிகொள்ளும் ஏமமும்[9]—கருவியை அறுத்து மல்லினால் கொள்ளும் ஏமமும். [அத்தும் ஆனும் சாரியை]

உதாரணம்

''நீலக் கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேல்துரந்து இனியே
தன்னுந் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க்கொண் டனனே.''[10]

(புறம்-274)

---

8. போரில் எதிர்ந்த தன் தோழற்கு உதவும் பொருட்டு, கூழைப்படையைப் பிளந்து சென்று பிறவீரர் இவனைத் தடுமின் எனவும் தடைபடாமல் இறந்தோர் குடர் தன் காலைத் தொடர வருவான் ஆனான். இவ்வீரன் மாலை சூடல் ஆடையுடுத்தல் அரசன் விரும்பியதைத் தான் விரும்பிக் கூறல் ஆகியவற்றால் தன் தோழனோடு ஒத்தவன்.

9. ஏமத்தானம் என்பதில் அத்தும் ஆனும் அசைநிலை. ஏமம்—காப்பு.

10. மறவன் களிற்றொடு வேல் துரந்தது தன் படையறுத்த தாம். தன் கையினால் பகைவர் வேலை வாங்கித் தன் மெய்க் கொண்டனன்; ஆதலின் தன்னையும் துறக்கு வான் போலும் என்றது மல்லினாற் பொருதலாம்.

களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்[11] - களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்.

உதாரணம்

''ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
குன்றத்து அன்ன களிற்றொடு பட்டோன்
வம்பலன் போலத் தோன்றும் உதுக்காண்
வேனல் வரியணில் வாலத்து அன்ன
கான ஊகின் கழன்றுகு முதுவீ
அரியல் வான்குழல் சுரியல் தங்க
நீரும் புல்லும் ஈயாது உமணர்
யாரும்இல் ஒருசிறை முடத்தொடு துறந்த
வாழா வான்பகடு ஏய்ப்பத் தெறுவர்
பேருயிர் கொள்ளும் மாதோ அதுகண்டு
வெஞ்சின யானை வேந்தனும் இக்களத்து
எஞ்சலிற் சிறந்தது பிறிதொன்று இல்லெனப்
புணர்கொளற்கு அருமை நோக்கி
நெஞ்சற வீழ்ந்த புரைமை யோனே.''[12]

(புறம்-307)

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்—களிற்றுடன் போந்து மலைந்துபட்ட இறைவனை மிக்க வேந்தன் படையாளர் நெருங்கி மற்றவனைப் பாடும் பாட்டும்.

அமல்—நெருங்கல், அதனாலாய பாட்டுக்கு ஏற்படைத் தாயிற்று.

உதாரணம்

''விழவுவீற் றிருந்த வியலூர் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன் வாழ்கவன் கண்ணி
வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்து

---

11. பாடு-படுதல், இறத்தல்.

12. எமக்குப் பற்றுக்கோடாகிய தலைவன் களிற்றொடு பட்டான் எங்குள்ளானோ? புண்பட்ட காரணத்தால் யாரோ புதியவன் போலத் தோன்றுகின்றான் என்றது களிற்றொடு பட்டதைக் குறிக்கும்.

இலங்கு பூணன் பொலங்கொடி உழிஞையன்
மடம்பெரு மையின் உடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்களத் தாடுங் கோவே.''[13]

(பதிற்று-56)

வாள் வாய்த்து இருபெரு வேந்தர் சுற்றமும் ஒருவரும் ஒழியா தொகை நிலையும்[14] வாள்தொழில் முற்றி இருபெருவேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாமல் பட்ட பாடும் ['கண்' என்பது இடைச் சொல்]

உதாரணம்

''வருதார் தாங்கி அமர்மிகல் யாவது
பொருதாண்டு ஒழிந்த மைந்தர்புண் தொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி
நிறங்கிளர் உருவில் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி அனந்தல் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந்து உற்ற தானையொடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட ஈண்டிய வியன்கண் பாசறைக்
களங்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவி னோரும் ஆற்ற
அரும்பெறல் உலகம் நிறைய
விருந்துபெற் றனரால் பொலிகநும் புகேழ.''[15]

(புறம்-62)

---

13. போர்க்களத்து ஆடும்கோ விழவுடைய வியனூரில் கோடியர் (பாணர்) முழவின் ஓசை முன்னர் ஆட வல்லவன் அல்லன் என முடிக்க.

14. தொகை நிலைக்கண்ணும் என்பதில் கண் அசைநிலை.

15. அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் தாம் மாய்ந் தனர். பாசறைக்களம் கொளக்குரியோர் இன்றி உடன்

செரு அகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்—பொருகளத்துத் தன்வேந்தன் பட அது கண்டு கறுத்தெழுந்து படைத்தலைவன் வீரனொருவனை நெருங்கிப் பொருத ஒரு நற்புகழ் நிலைமையும்.

உதாரணம்

''வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத்—தேன்இமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
ஒள்ளழலுள் வேட்டான் உயிர்.''

(வெண்பா. தும்பை-26)

பலபடை ஒருவற்கு உடைதலின் அவன் ஒள்வாள் வீசிய நூழிலும்—பலபடை ஒருவற்குக் கெடுதலின் அவன் ஒள்ளிய வாள் வீசிய நூழிலும்.

அது பலரைக் கொல்லுதல் ['மற்று' அசை]

உதாரணம்

''ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்றிவ் வுலகத்து இயற்கை
இன்றின் ஊங்கோ கேளலம் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒவியல் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் தெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூண் செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத்து அடலே.''[16]

(புறம்-76)

எனவும்,

வீழ்ந்தன்றால் அமர் என இயைத்துத் துறைப்பொருள் காண்க. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் பெருவிறற்கிள்ளியும் பொருது பட்டதைக் கழாத்தலையார் பாடியது.

16. ஒருவன் ஒருவனை வெல்லுதலும் ஒருவன் ஒருவற்குத் தோற்றலும் புதுமையில்லை. உலகத்தியற்கை. ஆனால் செழியன் எழுவர் நல்வலம் அடங்கத் தான் ஒருவனே யாகிப் போர்க்களத்துக் கொல்லுதல் என்பதை இதற்கு முன் கேட்டறியோம் என முடிக்க. இடைக்குன்றூர் கிழார் பாடியது.

''வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழில் ஆட்டு.''

(மதுரைக்காஞ்சி 255-7)

எனவும் பல உயிரை ஒருவன் கொன்றதனை நூழில் என்றவாறு அறிக.

உளப்பட புல்லி தோன்றும் பன்னிரு துறைத்து—உட்படப் பொருந்தித் தோன்றும் பன்னிரு துறைகளை யுடைத்து. [ஏகாரம் ஈற்றசை.]

(14)

நச்சினார்க்கினியர்

72. தானை யானை...........துறைத்தே.

இது மைந்து பொருளாகிய தும்பைத்திணைக்குத் துறை இணைத்தென்கின்றது.

இதன் பொருள்:- தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும்— தானை நிலை யானை நிலை குதிரை நிலை என்று சொல்லப்பட்ட போர் செய்தற்கு ஆற்றா அரசர் தலை பனிக்கும் மூன்று கூறுபாட்டின் கண்ணும்,

நோனார் உட்குவரெனவே நோன்றார் உட்காது நிற்பா ராயிற்று. அவர் போர்கண்டு சிறப்புச் செய்யுந் தேவரும் பிணந்தின் பெண்டிரும் படையாளர் தாயரும் அவர் மனைவியருங் கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியருங் கண்டோரும் பிறருமென்று கொள்க.

துறக்கம் புகு வேட்கை யுடைமையிற் காலாளை முற்கூறி, அதன் பின்னர் மதத்தாற் கதஞ்சிறந்து தானும் போர் செய்யும் யானையைக்கூறி, மதஞ்சிறவாமையிற் கதஞ்சிறவாத குதிரையை அதன்பிற் கூறினார். குதிரையானன்றித் தேர் தானே செல்லா மையிற் றேர்க்கு மறமின்றென்று அது கூறாராயினார்.

நிலையென்னாது 'வகை' யென்றதனான் அம்மூன்று நிலையுந்தாமே மறஞ்சிறப்பப் பொருது வீழ்தலும், அரச னேவலிற்றானை பொருது வீழ்தலும், யானையுங் குதிரையும் ஊர்ந்தாரேவலிற் பொருதலும், படையாளர் ஒருவரொருவர் நிலை கூறலும் அவர்க்கு உதவலுமென இப்பகுதி யெல்லாங் கொள்க.

இனி, இவைதாமே கறுவுகொண்டு பொருவுழித் தானை மறம் யானை மறங் குதிரைமறமென்று வெவ்வேறு பெயர் பெறுமென்று கொள்க.[1]

இனித் தாயர் கூறுவன மூதின் முல்லையாம்; மனைவியர் கூறுவன இல்லாண் முல்லையாம்; கண்டோர் கூறுவன வல்லாண் முல்லையாம்; பாணர் கூறுவன பாண்பாட்டாம் என்க.

இவை கூறி ஏனைக் கூத்தர் முதலியோர் கூறுவன கூறார்; மனஞெகிழ்ந்து போவாருமுளர். அவை ஓரோர் துறையாக முதனூற்கண் வழங்காமையினானும் அவற்றிற்கு வரையறை யின்மையானும் இவர் தானை நிலையென அடக்கினார். இச் சிறப்பான் இதனை முற்கூறினார். அத்தானை சூடிய பூக்கூற லும், அதனெழுச்சியும், அரவமும், அதற்கரசன் செய்யுஞ் சிறப்பும், அதனைக்கண்டு இடை நின்றோர் போரை விலக்கலும், அவர் அதற்குடம்படாமைப் போர் துணிதலும், அத்தானையுள் ஒன்றற்கிரங்கலும், அதற்குத் தலைவரை வகுத்தலும், வேந்தன் சுற்றத்தாரையுந் துணைவந்த அரசரையும் ஏத்துவனவும், நும்போர் ஏனைநாட்டென்றலும், இருபெருவேந்தரும் இன்ன வாறு பொருதுமென்று கையெறிதலும் போல்வனவெல்லாம் இத்துறைப்பாற்படும்.

உதாரணம்

''கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலனனைப்பப்—போர்கருதித்
துப்புடைத் தும்பை மலைத்தான் றுகளறுசீர்
வெப்புடைத் தானையெம் வேந்து''[2]

(பு-வெ. தும்பை-1)

---

1. அரசன் ஏவலின் தம்மை ஊர்ந்தோர் ஏவலிற் போர் செய்தலால் தானை நிலை, யானை நிலை, குதிரை நிலை எனப் பெயர் பெறுதலும் தாமே கறுவிப் போர் செய்தலின் தானை மறம், யானை மறம், குதிரை மறம் எனப் பெயர் பெறுதலும் அறிக.

2. குற்றமற் சீருடைய வெவ்விய சேனையுடைய எம் வேந்தன், கார்போல அதிரும் முரசுடையவன் குருதி சூழ்ந்து நிலம் நனைப்பப் போர் நினைந்து தும்பையை மலைந்தான்.

இது பூக் கூறியது.

இதனைத் திணைப்பாட்டு மென்ப.[3]

''வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்
கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான்—பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு.''[4]

(பு-வெ-தும்பை-2)

இது சிறப்புச் செய்தது.

''வயிர்மேல் வளைநரல வைவேலும் வாளுந்
செயிற்மேற் கனல்விழிப்பச் சீறி—யுயிர்மேற்
பலகழியு மேனும் பரிமான்றேர் மன்னர்க்
குலகழியு மோர்த்துச் செயின்.''[5]

(பு-வெ-தும்பை-4)

இது விலக்கவும் போர் துணிந்தது.[6]

''மின்னார் சினஞ்சொரிவேன் மீளிக் கடற்றானை
யொன்னார் நடுங்க வுலாய்நிமிரி—னென்னாங்கொ
லாழித்தேர் வெல்புரவி யண்ணன் மதயானைப்
பாழித்தோண் மன்னர் படை.''[7]

(பு-வெ-தும்பை-5)

---

3. துறைக்குரிய பாட்டாகாது திணைக்குரிய பொதுப்பாட்டு என்ப.

4. பன்மணிப் பூணானாய அரசன் பலபடைஞர்க்கும் வெல்லும் எந்திரமும் நாடும் முதலிய யாவும் கொடுத்தான், பகைவர் தலை நடுங்குமாறு.

5. பரிமான்தேர் மன்னர்க்கு ஆய்ந்து போர் புரியின் ஊது கொம்பும் சங்கும் ஒலிக்க வேலும் வாளும்கனலைப் பரப்பச் சீறிப் பொருதால் உயிர்கள் பல கழியுமாயினும் உலகும் அழிந்துபடும்.

6. உயிர் பல கழியும் என்று விலக்கவும் போர்துணிந்தது என்க.

7. மீனி போலும் தானைக்கடல் பகைவர் நடுங்க உலவி வரின் எதிர் மன்னர்களின் புரவி மதயானைப் படைகள் என்ன ஆகுமோ!

இஃது இரண்டனுள் ஒன்றற்கு இறங்கியது.[8]

''கங்கை சிறுவனுங் காய்கதிரோன் செம்மலு
மிங்கிருவர் வேண்டா வெனவெண்ணிக்—கங்கை
சிறுவன் படைக்காவல் பூண்டான் செயிர்த்தார்
மறுவந்தார் தத்த மனம்.''[9]

இது பெருந்தேவனார் பாட்டு: (பாரதம்-புறத்திரட்டு அமர்-10) குருக்கள்[10] தமக்குப் படைத் தலைவரை வகுத்தது.

இனி, போர்த் தொழிலாற் றானைநிலை வருமாறு:-

''குழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி யுவகைய
ராண்மை யுள்ளங் கேண்மையிற் றுரத்தலி
னழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரு
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய விசையிற் சிதர்ந்துநிலம் படுநருந்
தகருந் தகருந் தாக்கிய தாக்கின்
முகமுகஞ் சிதர முட்டு வோரு
முட்டியின் முறைமுறை குத்து வோருங்
கட்டிய கையொடு காறட் குநருங்
கிட்டினர் கையறத் தொட்டுநிற் போருஞ்
சுட்டிய பெயரற விட்டழிப் போருஞ்
சக்கரம் போலச் சங்குவிட் டெறிநருஞ்
சிலைப்புடை முரசிற் றலைப்படைக் குநரு
மல்லிற் பிடித்தும் வில்லி னெற்றியு
மூக்கியு முரப்பியு நோக்கியு நுவன்றும்
போக்கியும் புழுங்கியு நாக்கடை கவ்வியு
மெயிறுடன் றிருகியுங் கயிறுபல வீசியு
மினைய செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையுஞ் சிறப்புஞ் செய்கையு
மரசறி பெருமையு முரைசெல் லாண்மையு

---

8. பொரும் இருபடைக்குள் ஒரு படைக்கு இரங்கியது.

9. இப்போர்க்குத் தலைவராகக் கங்கை மகன் வீடுமனும் சூரியன் மகன் கன்னனும் ஆகிய இருவர் தேவையில்லை என்று எண்ணிக் கங்கை மகன் வீடுமன் மட்டும் படைக் காவல் பூண்டான்; இனிப் பகைவர் தத்தம் மனம் மயங்கினார்.

10. குருக்கள் என்றது துரோணர் முதலியவரை.

முடையோ ராகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகு முலக மொன்றே யாதலி
னொன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையுந் தீர்ந்துதம் மனைவியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தோரே.''[11]

(புறத்திரட்டு-அமர்-10)

''சென்ற வுயிர்போலத் தோன்றா துடல்சிதைந்தோ
னின்ற வடிபெயரா நின்றவை—மன்ற
லரமகளிர் மங்கலத்திற் காங்காங்கு வைத்த
மரவடியே போன்றன வந்து.''[12]

''வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
கண்கூ டிறுத்த கடன்மருள் பாசறைக்
குமரிப் படைத்தழீஇக் கூற்றுவினை யாடவர்
தமர்பிற ரறியா வமர்மயங் கழுவத்
திறமையும் பெயருந் தோற்றி னுமரு
ணாண்முறை தபுத்தீர் வம்மி னீங்கெனப்
போர்மலைந் தொருசிறை நிற்ப யாவரு

---

11. களம்படுநரும் நிலம்படுநரும் முட்டுவோரும் குத்துவோரும் கை அறத்தொட்டு நிற்போரும் அழிப்போரும் சங்கு விட்டெறிவோரும் முரசு புடைப்போரும் மல்லிற் பிடித்தல் முதல் கயிறு வீசுதல் வரையுமான இனைய செய்திகளால் போரில் மயங்குவோரும் ஆகிய பிறப்பு பெருமை சிறப்பு அரசறி பெருமை ஆண்மை ஆகியவை உடையவருமாகிய படையாளர் யாவரும் சென்று சேரும் உலகம் ஒன்றேயாம். ஆதலின் ஒன்றுபட்ட மனத்தோடு செஞ்சோற்றுக் கடனும் தீர்ந்து தம் மனைவியர் தம் பிணத்தைத் தழுவி நொந்து வருந்தவும் புதுவதாகத் துறக்கத்தில் வந்த மகளிர்க்கு மணமாலை சூட்டவும் துறக்கம் படர்ந்தார்கள்.

12. உயிர் சென்றதுபோல் தோன்றால் அப்படியே நின்ற வீரரின் அடிபெயராது நின்ற உடல்கள், தேவமகளிரின் திருமணத்திற்குச் செல்வதற்காக ஆங்காங்கே வைத்த மரப்படிகள் போன்றனவாம்.

மரவுமிழ் மணியிற் குறுகார்
நிரைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே.''

(புறம்-294)

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.''

(குறள்-படைச்-4)

''நறுவிரை துறந்த நரைவெண் கூந்த
லிரங்கா ழன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாந் தானா யினனே.''

(புறம்-276)

''தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்
கொற்கத் துதவினா னாருமாற் பிற்பிற்
பலர்புகழ் செல்வந் தருமாற் பலர்தொழ
வானக வாழ்க்கையு மீயுமா லன்னதோர்
மேன்மை யிழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகு முயிர்க்கு.''

(தகடூர் யாத்திரை. புறத்திரட்டு-படைச்செருக்கு-9)

''கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலு
மொத்தன்று மாதோ விவற்கே செற்றிய
திணைதிலை யலறக் கூழை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் கடிமுகத் தேந்தி
யோம்புமி னோம்புமி னிவணென வோம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்ததன் றோழற்கு வருமே.''

(புறம்-275)

இஃது உதவியது.

இனி யானை நிலைக்குங் குதிரை நிலைக்குந் துறைப்பகுதி யாய் வருவனவுங் கொள்க. அஃது அரசர் மேலும் படைத் தலைவர் மேலும் ஏனையோர் மேலும் யானைசேறலும், களிற்றின் மேலுந் தேரின் மேலுங் குதிரை சேறலும், தன் மேலிருந்து பட்டோருடலை மோந்து நிற்றலும் பிறவுமாம்.

உதாரணம்

''மாயத்தாற் றாக்கு மலையு மலையும்போற்
காயத்து றஞ்சாக் களிற்றொடும்போய்ச்—சாயுந்
தொலைவறியா வாடவருந் தோன்றினார் வான்மேன்
மலையுறையுந் தெய்வம்போல் வந்து.''[13]

(பெரும் பொருள் விளக்கம்: புறத்திரட்டு-யானைமறம்-14)

''கையது கையோ டொருதுணி கோட்டது
மொய்யிலைவேன் மன்னர் முடித்தலை—பைய
வுயர் பொய்கை நீராட்டிச் செல்லுமே யெங்கோன்
வயவெம்போர் மாறன் களிறு.''

இவை யானைநிலை.

''பல்லுருவக் காலின் பரியுருவத் தாக்கித்தன்
றொல்லை யுருவிழந்த தோற்றம்போ—லெல்லா
மொருகணத்துத் தாக்கி யுருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புரண்டு.''[14]

''மாவா ராதே மாவா ராதே
எல்லா மாவும் வந்தன வெம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே
யிருபேர் யாற்ற வொருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
வுலந்தின்று கொல்லவன் மலைந்த மாவே.''[15]

(புறம்-273)

---

13. மலையொடுமலை மாயத்தால் தாக்குதல் போலக் காயத்தினால் வரும் துன்பத்துக்கஞ்சாமல் தாக்கும் களிறுகளோடு வீரர் மலையுறையும் தெய்வம்போல வந்து போர்க்களத்தில் தோன்றினார்.

14. பாயும் குதிரைகள் பொருகளத்தில் பலவான அச்சம் வருப்படியான விரைவுடைய காலால் தாக்கித் தன் பழைய வடிவத்தையிழந்தமை போல எல்லாவற்றையும் ஒருகணப்போதில் தாக்கி வீழ்ந்து புரண்டு தம் வடிவை யிழந்தன.

15. புதல்வனைப் பயந்த என் செல்வனாகிய கணவன் ஊர்ந்து சென்ற குதிரை இன்னும் வரவில்லை. எல்லாக் குதிரைகளும் போர்க்களத்தினின்றும் வந்துவிட்டன. ஒருவேளை இரண்டு ஆறுகள் கூடுமிடத்திலுள்ள குறுக்கிட்டு நிற்கும் மரம் சாய்வதுபோலப் போரில் மலைந்த அக்குதிரை வீழ்ந்து விட்டதுவோ?

''பருத்தி வேலிச் சீறூர் மன்ன
னுழுத்தத ருண்ட வோய்நடைப் புரவி
கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி யருந்திய கொய்சுவ லெருத்திற்
றண்ணடை மன்னர் தாருடைக் கலிமா
வணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிரி னிகழ்ந்துநின் றவ்வே.''[16]

(புறம்-279)

இவை குதிரை நிலை.

'நிலம் பிறக் கிடுவதுபோல' என்னும் (303) புறப்பாட்டும் அது.

இவை தனித்து வாராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும்; அவை தகடூர் யாத்திரையினும் பாரதத்தினுங் காண்க. புறநானூற்றுள் தனித்து வருவனவுங் கொள்க.

வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை—தன் படை போர் செய்கின்றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னே சென்று வேலாற் போர் செய்து வென்றி மிகுகின்ற வேந்தனை மாற்றோர் சூழ்ந்துழி அதுகண்டு வேறோரிடத்தே பொருகின்ற தன்றானைத் தலைவனாயினும் தனக்குத் துணை வந்த அரசனாயினும் போரைக் கைவிட்டு வந்து வேந்தனோடு பொருகின்றாரை எறிந்த தார்நிலைக் கண்ணும்:

'தார்' என்பது முந்துற்றுப் பொரும் படையாதலின் இது தார்நிலையாயிற்று.

உதாரணம்

''வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோ னொளிதிகழுஞ் செம்மற்றே—கையகன்று

---

16. சீறூர் மன்னரின் உளுந்துத் தோலையுண்ட குதிரைகள் கடல் நீரைத் தோணி பிளந்து செல்வதுபோலப் பகைப் படையைப் பிளந்து செல்ல, நெய்ச்சோற்றையுண்ட கொய்யப்பட்ட பிடரி மயிருடைய மருதநில வேந்தரது குதிரைகளைக் கண்டு அவற்றை முருகன் கோயிலில் உள்ள கலங்களைத் தொடுதற்குரிய தூய்மையில்லாத மகளிரைப் போல எண்ணிப் போரிடாமல் இகழ்ந்து நின்றன.

போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
றார்தாங்கி நின்ற தகை.' '[17]

(பெரும் பொருள் விளக்கம்-புறத்திரட்டு-
தானைமறம்-4)

'நிரப்பாது கொடுக்கும்' என்னும் (180) புறப்பாட்டினுள் 'இறையுறு விழுமந் தாங்கி' என்பதும் அது.

''இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போ
ரினக்களிற் றியானை யியறேர்க் குரிசி
லுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
யெடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்ச
னடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனு
முறைப்புழி யோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே.' '[18]

(புறம்-290)

இதுவும் அதன்பாற்படும்.

அன்றியும் இருவர் தலைவர் தபுதிப்பக்கமும்—இருபெரு வேந்தர் தானைத்தலைவருந் தத்தம் வேந்தர்க்காகித் தார்தாங்கு தலே யன்றி அத்தலைவரிருவருந் தம்மிற்பொருது வீழ்தற் கண்ணும்:

'பக்கம்' என்றதனான் அவருளொருவரொருவர் வீழ்தலுங் கொள்க.

---

17. செயலற்றுப் போரைத் தடுக்கும் தன் அரசன் முன்னே புகழை விரும்பிய வீரன் முந்துற்றுப் பொரும் தார்ப்படையைத் தடுத்து நிற்கும் நிலையானது, சூரியன் எழுமுன் மிக்க இருள் நீங்க அவன் ஒளி விளங்கும் தன்மை போலாம்.

18. பெரும! குரிசிலே! முதலில் இவ்வீரனுக்குக் கொடுத்துப் பின் உண்க கள்ளை; ஏன் எனின், நின் தந்தைக்குத் தந்தைக்கு இவனின் தந்தைக்குத் தந்தை போரில் இமையாமல் தச்சன் எறியும் பட்டறைபோலத் தாங்கி நின்று பட்டான். இவனும் மழைத்துளியில் தாங்கும் ஓலைக்குடைபோல நின்னைக் குறித்துப் பகைவரால் எறிப்பட்டு வரும் வேலைத் தாங்குவான்.

''ஆதி சான்ற மேதகு வேட்கையி
னாளுங் கோளு மயங்கிய ஞாட்பின்
மதியமு ஞாயிறும் பொருவன போல
வொருத்தி வேட்கையி னுடன்வயிற் றிருவர்
செருக்கூர் தண்டி னெருக்கின ரெனவு
மரவணி கொடியோற் கிளையோன் சிறுவனும்
பெருவிறல் வீமற் கிளையோன் சிறுவனு
முடன்றமர் தொடங்கிய காலை யடங்கா
ருடங்குவருஞ் சீற்றத்துக் கைப்படை வழங்கி
யிழந்தவை கொடாஅர் கிடந்தன வாங்கித்
தேர்மிசைத் தமியர் தோன்றார் பார்மிசை
நின்றுசுடர் நோக்கியு மொன்றுபடத் திருகியு ந்
தும்பியடி பிணங்கு மண்ணிற் றோற்றமொடு
கொடி கொடி பிணங்கி வீழ்வன போல
வொருவயின் வீழ்ந்தடு காலை
யிருபெரு வேந்தரும் பெரிதுவந் தனரே.''[19]

இப் பாரதப்பாட்டினுள் அவ்வாறாதல் கண்டு கொள்க.

இனித் தலைவரேயன்றிப் பிறரும் அவ்வாறு பொரினும் அதன்பாற் படுத்துக.

உடைபடை ஒருவன் புக்கு ஒருவனைக் கூழைதாங்கிய எருமையும்—தனது உடைந்த படைக்கண்ணே ஒரு படைத் தலைவன் சென்று அங்ஙனங் கெடுத்த மாற்றுவேந்தன் படைத் தலைவனை அவர் எதிர்கொண்டு நின்ற பின்னணியோடே தாங்கின கடாப்போலச் சிறக்கணித்து நிற்குநிலைமைக் கண்ணும்:

ஒருவனொருவனைத் தாங்கின எருமையென முடிக்க.

---

19. நாளும் கோளும் மாறுபட்டு மயங்கிய காலத்துத் திங்களும் ஞாயிறும் பொருவது போலவும், திலோத்தமை பால் விருப்புற்று உடன் பிறந்தாரான சுந்தன் உப சுந்தன் இருவரும் பொருதது போலவும் துரியோதனன் தம்பி துச்சாதனன் மகனும் வீமன் தம்பி அருச்சுனன் மகனும் போர்புரிந்த காலத்துத் தத்தம் படைகளை வழங்கித் தேர்மீது தோன்றாமல் நிலமீது வந்து கொடி யொடு கொடி சிக்கி விழுவது போல இருவரும் பிணைந்து ஒருவரை யொருவர் அட்டபோது இருபக்க வேந்தரும் மிக மகிழ்ந்தனர்.

உதாரணம்

"சீற்றங் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கா
லேற்றெருமை போன்றா னிகல்வெய்யோன் மாற்றான்
படைவரவு காத்துத்தன் பல்படையைப் பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்."[20]

படையறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும்—கைப்படையைப் போக்கி மெய்யாற் போர் செய்யும் மயக்கத்தின் கண்ணும்:

பாழி—வலி; இஃது ஆகுபெயர்.[21]

உதாரணம்

"கொல்லேறு பாய்ந்தழிந்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கொண்
டாறாத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தா
ரேறாட லாய ரென."[22]

(பாரதம்)

"நீலக் கச்சைப் பூந்துவ ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னல
ரெஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே."

(புறம்-274)

என்பதும் அது.

---

20. மாறுபாட்டை விரும்பும் வீரன் சீற்றம் கனலைச் செய்யச் சிறக்கணித்துச் செல்லும்போது எருமை போல் நின்றான்; மாற்றான் படைமுன்னே வருவதைத் தடுத்துப் பின் தன் பல படைகளையும் காத்துப் படை நடுவே வரும்போது அவன் பின்வருவார் யார்?

21. பாழி—வலி—வலியுள்ள உடம்புக்கு ஆதலின் ஆகுபெயர்.

22. கொல்லேற்றிற் பாய்ந்ததனால் குறைந்த கொம்பு போலத் தன் கதையைக் குறைத்து வீங்கிய தோளுடைய வீமன் மாமனாகிய சகுனியை ஏறுதழுவும் ஆயர் போலத் தழுவி அடங்காத போரில் மலைந்த அவ்விடத்து அதனை அரசர் கண்டு ஆரவாரித்தார்

களிறெறிந் தெதிர்ந்தோர் பாடும்—மாற்றுவேந்தன் ஊர்ந்து வந்த களிற்றைக் கையறிந்தானுங் கடுக்கொண்டெதிர்ந்தானும்[23] விலக்கி யவனையும் அக்களிற்றையும் போர்செய்தோர் பெருமைக் கண்ணும்:

உதாரணம்

''இடியா னிருண்முகிலு மேறுண்ணு மென்னும்
படியாற் பகடொன்று மீட்டு—வடிவே
லெறிந்தார்த்தார் மள்ள ரிமையாத கண்கொண்
டறிந்தார்த்தார் வானோரு மாங்கு.''[24]

''வானவர் போரிற் றானவர்க் கடந்த
மான வேந்தன் யானையிற் றெனாஅது
பல்படை நெரிவ தொல்லான் வீமன்
பிறக்கிடங் கொடானதன் முகத்தெறிந் தார்த்துத்
தானெதிர் மலைந்த காலை யாங்கதன்
கோடுழக் கிழிந்த மார்பொடு நிலஞ்சேர்ந்து
போர்க்கோள் வளாகந் தேர்த்துக ளனைத்தினு
மிடைகொள லின்றிப் புடைபெயர்ந்து புரண்டு
வருந்தா வுள்ளமொடு பெயர்ந்தனன்
பெருந்தகை யாண்மையொடு பெயர்த்தலோ வரிதே.[25]

இப் பாரதபாட்டும் இதன் பாற்படும்.

---

23. கையெறிந்தானும் — கையால் தாக்கியாவது. கடுக்கொண்டு எறிந்தானும்—கூரிய படைகொண்டு எறிந்தாவது. கடி — கூர்மை; அதனையுடையது கடு ஆயிற்று.

24. கரிய மேகமும் இடியால் தாக்கப்படும் என்று சொல்லும் படியாக மள்ளர் வடிவேல் எறிந்து களிறு ஒன்றை மீட்டு ஆர்த்தார்கள். வானோரும் தம் இடத்திலிருந்து இமையாத கண்கொண்டு பார்த்து ஆர்த்தார்கள்.

25. தேவர் அசுரர் போரில் அசுரரை வென்று வேந்தனின் யானையால் தன் படைகுலைவதைக் கண்ட வீமன் பின்னிடாது அதனை எதிர்த்துப் போர்புரிந்த காலத்து அதன் கொம்புபடக் கிழந்த மார்பொடு நிலம் சேர்ந்து புரண்டு பெயர்ந்தனன். இனி அவ்வேந்தன் மீளல் அரிதாகும்.

இது களிறெறிந்தான் பெருமை கூறுதலின் யானை நிலையுள் அடங்காதாயிற்று.

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்—அங்ஙனம் நின்று களிற்றொடுபட்ட வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர் வியந்து பட்டோனைச் சூழ்ந்துநின்று ஆடுந்திரட்சிக்கண்ணும்:

அமலுதல் நெருங்குதலாதலின், அமலை யென்பதூஉம் அப்பொருட்டாயிற்று:

உதாரணம்

''ஆளுங் குரிசி லுவகைக் களவென்னாங்
கேளன்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
யாடினா ரார்த்தா ரடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து.''26

''நான்மருப் பில்லாக் கானவில் யானை
வீமன் வீழ்த்திய துடன்றெதிர்ந் தாங்கு
மாமுது மதுரை மணிநிறப் பாகனோ
டாடமர் தொலைத்த லாற்றான் றேரொடு
மைத்துனன் பணியின் வலமுறை வந்து
கைத்தலங் கதிர்முடி யேற்றி நிற்றந்
திறைஞ்சின னைவர்க் கிடையோ னதுகண்டு
மறந்தீர் மன்னனு மிறைஞ்சித் தனாது
வேழம் விலக்கி வினைமடிந் திருப்பச்
சூர்மருங் கறுத்த நெடுவேள் போல
மலைபுரை யானையுந் தலைவனுங் கவிழிய
வாளுகு களத்து வாள்பல வீசி
யொன்னா மன்னரு மாடினர் துவன்றி
பின்னா வின்ப மெய்தித்
தன்னமர் கேளிரு முன்னார்த் தனரே.''27

---

26 போரில் வீழ்ந்த வீரனைச் சூழ்ந்து உறவில்லாமல் கொன்ற பகைவரே உறவாகி வாள் ஓச்சி ஆடினார் ஆர்த்தார் அவ்வீரன் காலடிபட்ட மண் எடுத்துத் தலைமேல் சூடினார். ஆளும் அரசனின் உவகைக்கு அளவேது?

27. பசுதத்தன் தன் யானையை வீமன் வீழ்த்தியது கண்டு அதற்குச் சினந்து மாறுபட்டெழுந்து தேர்ப்பாகனாகிய கண்ணனொடு அருச்சுனனையும் வீழ்த்த ஆற்றாதவனாகித் துரியோதனனைச் சென்று வணங்கி

இப் பாரதப்பாட்டும் அது.

வாள்வாய்த்து இருபெருவேந்தர் தாமுஞ் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகை நிலைக்கண்ணும்—இருபெரு வேந்தர் தாமும் அவர்க்குத் துணையாகிய வேந்தரும் தானைத் தலைவருந் தானையும் வாட்டொழின்முற்றி ஒருவரும் ஒழியாமற் களத்து வீழ்ந்த தொகைநிலைக் கண்ணும்:

உதாரணம்

''வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர்புண் டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்த னீட்டி
நிறங்கிள ருருவிற் பேஎய்ப் பெண்டி
ரெடுத்தெறி யனந்தர்ப் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்து
மறத்தின் மண்டிய விறற்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
யுரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞில
மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
வுடன்வீழ்ந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
வரும்பெற லுலக நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே.''

(புறம்-62)

செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்—போரிடத்தே தன் வேந்தன் வஞ்சத்தாற் பட்டானாகச் சினங்கொண்ட மனத்தனாய்ப் பெரும்

நிற்க, அவன் சென்றது கண்டு தருமனும் போர் தவிர்ந்து நிற்க அதுகண்ட ஐவர்க்கு இடைப்பட்ட அருச்சுனன் அப்பசுதத்தனும் யானையும் விழுமாறு முருகன் மலையையும் அவுணனையும் எறிந்தது போல அம்பெய்து வீழ்த்தப் பகை மன்னரும் பிறரும் கூடி ஆடினர்.

படைத்தலைவன் தலைமயங்கிப் பொருத நல்ல புகழைப் பெற்ற நிலைமைக்கண்ணும்.

அது குருகுல வேந்தனைக்[28] குறங்கறுத்த ஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும் பஞ்சவர் மக்களைவரையுங் கொன்று வென்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த் தொழில் போல்வன. தன்னரசன் அறப்போரிடத்துப் படாது வஞ்சனையாற் படுதலின் அவனுக்குச் சினஞ்சிறந்தது. இச்சிறப்பில்லாத தும்பையும் இக்கலியூழிக்கா மென்பது 'சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற்று' (தொல்-பொருள்-புற-15) என்புழிக் கூறிற்று.

உதாரணம்

''மறங்கெழு வேந்தன் குறங்கறுத் திட்டபி
னருமறை யாசா னொருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கீண்டெறி சீற்றமோ
டிரவூ ரறியாது துவரை வேந்தொடு
மாதுலன் றன்னை வாயிலி னிறீஇக்
காவல் பூட்டி யூர்ப்புறக் காவியி
னைவகை வேந்தரோ டரும்பெறற் றம்பியைக்
கைவயிற் கொண்டு கரியோன் காத்தலிற்
றொக்குடம் பிரீஇத் துறக்க மெய்திய
தந்தையைத் தலையற வெறிந்தவ னிவனெனத்
துஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி
வடாது பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழத் திருகிப் பறித்த காலைக்
கோயிற் கம்பலை யூர்முழு துணர்த்தலிற்
றம்பியர் மூவரு மைம்பான் மருகரு
முடன்சமர் தொடங்கி யொருங்கு களத்தவிய
வாள்வாய்த்துப் பெயர்ந்த காலை யான்வினைக்
கின்னோ ரினிப்பிற ரில்லென வொராங்குத்
தன்முதற் றாதையொடு கோன்முத லமரர்
வியந்தனர் நயந்த விசும்பி
னியன்றலை யுலகமு மறிந்ததா லதுவே.''[29]

இப் பாரதப்பாட்டினுள் அவ்வாறாதல் காண்க.

---

28. துரியோதனன். அவனை வீமன் தொடையில் குத்தி இறக்கச் செய்தான். (குறங்கு—தொடை)

29. வீமன் துரியோதனனின் துடையை யறுத்து வீழ்த்திய பின்னர் துரோணர் மகன் அசுவத்தாமன் வெகுண்டு பாண்டவரை வேரொடு அழிக்க எண்ணிச் சீற்றமொடு

ஒருவற்குப் பல்படை உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும்—அங்ஙனம் நல்லிசை எய்திய ஒருவற்கு வஞ்சத்தாற் கொன்ற வேந்தன் பல்படை புறங்கொடுத்தலின் அவரைக் கோறல் புரிதல் அறனன்றென்று கருதாது அவன் வாளாற்றடிந்து கொன்று குவித்தற்கண்ணும்:

வஞ்சத்தாற் கொன்ற வேந்தனைக் கொன்றமை பற்றித் தனக்குக் கெட்டோரையும்[30] அடங்கக் கோறற்கு உரியானை நல்லிசை முன்னர்ப் பெற்றோனென்றார். நூழிலாவது கொன்று குவித்தல்.

> ''வள்ளை நீக்கி வயமீன் முகந்து
> கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
> வேழப் பழனத்து நூழி லாட்டு.''[31]
>
> (மதுரை-255-257)

என்றாற் போல.

உதாரணம்

> ''அறத்திற் பிறழ வரசெறியுந் தானை
> மறத்திற் புறங்கண்டு மாறான்—குறைத்தடுக்கிச்
> செல்லுங்காற் காட்டுத்தீச் சென்றாங்குத் தோன்றுமே
> பல்படையார்ப் பட்ட படி.''[32]

இரவில் ஊர் அறியாதபடி பலராமனொடு தன் மாமனையும் வாயில் காவலராக நிறுத்தி, வெளியே கண்ணன் பாண்டவரைக் காக்கத் தன் தந்தையாகிய துரோணரைக் கொன்றவன் இவன் எனத் திட்டத்துய்மனைக் கழுத்தைத் திருகிக் கொன்ற காலத்துப் பேரொலி எங்கும் எழ அவனின் தம்பியர் மூவரையும் பாண்டவர் மக்கள் ஐவரையும் கொன்று திரும்பியபோது தேவர் வியந்தனர். உலகமும் வியந்தது.

30. கெட்டார்—தோற்றோடியவர்

31. வள்ளைக் கொடியை விலக்கி பெரிய மீன்களை வாரி வந்து விலைக்கு விற்ற வலைஞர் மீளவும் கரும்பு நடு வயலில் மீன்களைக் கொன்று குவித்து—இது நூழில் என்பது கொன்று குவித்தல் என்னும் பொருளில் வந்ததற்கு உதாரணம்.

32. அறத்துக்கு மாறுபடத் தன் அரசனை எறிந்து கொன்ற சேனையைத் தன் வீரத்தாற் புறங்கண்டும் சினம் மாறானாகி மேலும் பல படைஞரைக் கொன்றபடியே அப்படையைக் குறைத்துத் தன் வீரத்தை அடுக்கிச் செல்லும்போது அவ்வீரன் காட்டுத் தீப்பாவிச் சென்றது போல் தோன்றுவான்.

புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே—பொருந்தித் தோன்றும் பன்னிரு துறையினையுடைத்துத் தும்பைத்திணை என்றவாறு.

இன்னும் உளப்படப் புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்து எனவுங் கூட்டிப் பன்னிரண்டன் கண்ணும் முற்கூறிய வெட்சித் திணை முதலியவற்றான் நிகழுந் தும்பையும் வந்துகூடப் பின் அவற்றிற்கு முரியவாய்ப் பொருந்தித் தோன்றும் பன்னிரு துறை யினையுடைத்துத் தும்பைத்திணை என்றும் பொருள் கொள்க. பொருள்[33] இடமாகத் துறை இடத்தியல் பொருளாங்கால் ஏனைத் திணைக்கட் கூறினாற்போல ஒன்று நிகழ்ந்த பின் ஒன்று நிகழாது இரண்டு படைக்கும் பொருந்த ஒரு காலத்து இத்திணை நிகழுமென்றற்குப் 'புல்லித் தோன்றும்' என்றார்.[34] பல்பெருங் காதமாகிய நெடுநெறியிடைத் துணிந்த இடத்தையும் உலகந் துறையென்பது போல இச்சூத்திரத்துத் துறையைத் தொகுதி யுடன் அறுதிகாட்டிற்றென்றுணர்க. இவ்விலக்கணம் மேல் வருகின்ற திணைகட்கும் ஒக்கும்.[35]

(17)

---

33. பொருள்—திணை.

34. வெட்சி முதலிய திணைகளின் துறைகள் (நிகழ்ச்சிகள்) ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வன. அதாவது மாறுபட்ட இருபெரு வேந்தரின் போர் நிகழ்ச்சிகள் ஒன்றனை யடுத்து ஒன்றாகப் படிமுறையில் நிகழ்வன. தும்பைத் திணையில் அவ்வாறின்றி இரு பெருவேந்தர்க்கும் ஒருவர்க்குப் பின் ஒருவர்க்கு என்பதின்றி ஒக்க நிகழ்வன என்பதற்காகப் 'புல்லித் தோன்றும்' என்றார் ஆசிரியர்.

35. நீண்ட நெடுவழியை இடையிடையே அறுக்கும் இடத் தைத் துறை என்பது வழக்கு. அதுபோலத் தும்பைத் திணையின் நீண்ட ஒழுகலாற்றைத் தானை நிலை முதலியவாகத் தனித் தனிக் கூறிக் கூறித் துறைப்படுத் தினார். இவ்வாறே பின்வரும் வாகை முதலியவற்றுக் கும் கொள்ளல் வேண்டும். தும்பை முதலிய திணைகளில் வரும் துறைகளுள் ஒன்று முடிந்தாலும் அதுவே திணை முடிவும் ஆகும். ஆனால் வெட்சி முதலியவற்றின் துறை களுள் ஒன்று மட்டும் முடியின் திணை முடிவு பெறாது. அதனால் ஆற்றொழுக்கில் உள்ள துறைகளுள் ஒரு

சோமசுந்தர பாரதியார்

சூத்திரம்: 17.

தானை யானை..................துறைத்தே.

கருத்து:- இது, தும்பைத் திணையின் துறைவகையும் இயல்பும் கூறுகிறது.

பொருள்:- (1,—3); தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும்— பகைவரை அஞ்சப் பண்ணும் ஆட்படை வகுப்பு, யானை நிரை, குதிரையணி எனும் முத்திற நிலைகளும்;

''பகைபெரு மையிற் றெய்வம் செப்ப
ஆரிறை யஞ்சா, வெருவரு கட்டூர்ப்
பல்கொடி நுடங்கு முன்பிற் செறுநர்
செல்சமந் தொலைத்த வினைநவில் யானை
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
வண்டுபடு சென்னிய பிடிபுணர்ந் தியல,
மறவர் மறல, மாப்படை யுறுப்ப.''

(பதிற்று-82)

இதில், யானை—தானை குதிரை (மா) என்ற மூவகை நிலையு மொருங்கு வருதலறிக. இனி, இவை தனித்தனியே வருதல் பெருவழக்கு.

1. முடிமன ரெழுதரு பரிதி மொய்களி
றுடைதிரை மரக்கல மொளிறு வாட்படை
யடுதிற லெறிசுறா வாகக் காய்ந்தன
கடலிரண் டெதிர்ந்ததோர் கால மொத்ததே.

(சிந்தாமணி-2223)

துறையளவில் ஆறு முடிவு பெறுதலில்லாமையாலும் நெடுவழித் துறைகளுள் ஒரு துறையளவிலும் அவ்வழி ஒராற்றால் முடிவு பெறுதல் உண்மையாலும் நச்சினார்க்கினியர் வெட்சித் திணை முதலியவற்றின் துறைகளை ஆற்றுத் துறைகளாகவும் தும்பை முதலியவற்றின் துறைகளை நெடுவழித்துறைகளாகவும் கொண்டார். இந்நுட்பம் சிறந்ததாம்.

இது தானை மறம் விளக்கும் சிந்தாமணிப் பாட்டு. சிலப்பதிகாரக் கால்கோட் காதை—வரிகள் 194:204-ம் இத்துறையாம்.

2. அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவம் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே
யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு.
(புறத்திரட்டு—முத்தொள்-1389)

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லாம் எமதென் றெழுதுமே
மெய்யிலைவேல் மாறன் களிறு.
(புறத்திரட்டு-முத்தொள்-1390)

இவை யானை மறங் குறிக்கும் புறத்துறைப் பாட்டுக்கள்.

3. நிலம் பிறக்கிடுவது போர்க்குளம்பு கடையூஉ
வுள்ள மொழிக்குங் கொட்பின் மான்மே
லெள்ளுநர்ச் செருக்குங் காளை கூர்த்த
வெந்திற லெஃகு நெஞ்சுவடு விளைப்ப
வாட்டிக் காணிய வருமே நெருநை
யுரைசால் சிறப்பின் வேந்தர் முன்னர்க்
கரைபொரு முந்நீர்த் திமிலிற் போழ்ந்தவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப
விலங்கு மருப்பியானை யெறிந்த வெற்கே.
(புறம்-303)

மாவா ராதே, மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன, எம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே,
இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
வுலந்தின்று கொல்லவன் மலைந்த மாவே,
(புறம்-273)

இவை குதிரைமறந் துலக்கும் பாட்டுக்கள்.

4. வேன் மிகு வேந்தனை மொய்த்தவழி, ஒருவன் தான் மீண்டெறிந்த தார்நிலை, அன்றியும்—வேன்மறத்தால் வீறு பெற்ற வேந்தனைச் (பகை மறவர்) சூழ்ந்து நெருக்கிய விடத்து, அவன் தானைத் தலைவன் தான் ஒருவனாய்ப் பகைவர் முன்னணியை மறித்து முறித்த தும்பைத் தார்நிலையும், அல்லாமலும்;

''இவற்கீத் துண்மதி கள்ளே; சின்ப்போ
ரினக்களிற் றியானை யியறேர்க் குரிசில்!
நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சன்
அடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே;
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே.''

(புறம்-290)

இது தார்நிலை.

வெய்யோ னெழாமுன்னம் வீங்கிராக் கையகலச்
செய்யோ னொளிவழங்குஞ் செம்மற்றே—கையகன்று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கி நின்ற தகை.

(புறத்திரட்டு-1362)

இதுவும் தார்நிலை.

5. இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்—எதிர்த்து மலையும் இருபடைத் தலைவரும் தம்முள் பொருது கெடும் பரிசும் :

[தபுதி—இழிவு அல்லது கேடு. இது கெடுதல் குறிக்கும் தபு என்னும் முதனிலை யடியாகப் பிறந்த தொழிற் பெயர்.]

6. ஒருவன், ஒருவனை உடைபடை புக்குக் கூழை தாங்கிய எருமையும்—ஒரு மறவன் தன் தலைவனை அவன் உடைபடை யுட்புகுந்து (அதன் பின்னணியைத் தாக்கும் பகைவரைத் தகைந்து) எம்முறக்காக்கும் தளராத் தறுகண்மையாகிய எருமை மறமும்;

[கூழை—பின்னணி, தாங்கல்—தடுத்தல் அல்லது பேணுதலாம். இதில் தாங்கல் வினையை ஒருவனுக்கும் கூழைக்கும் தனித்தனிப் பிரித்துக் கூட்டுக. முறியுந் தம் படையின் பின்னணியைப் பகைவர் தாக்காது காத்தலும், அப்படை முறிய அடர்த்த பகைவரை எதிர்த்துத் தடுத்து நிறுத்தலும் ஒருவன் அருந் திறலாவதானும், அத்திறலுடை மறவன் (எதிர் வரும் எதற்கும் அஞ்சாது அசையாது நிலைத்து நிற்கும் எருமை போல) தான் ஒருவனாய்த் தளராது எதிர்த்து வரும் படையைத் தாங்கும் தறுகண்மை வியத்தற்குரியதாதலானும் அவன் திறம் எருமை மறமெனப்பட்டது. உடையும் படையின் பின்னணி தாங்கித்

தொடரும் பகைவுரைத் தாக்கித் தகையும் தறுகண்மை எருமை மறம் எனப்படும்.]

7. படை யறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும்—மேல் வரும் பகைப் படைக் கலங்களை அழித்து மதுகை கொள்ளும் பாதுகாவலானும். [பாழி—மதுகை, வலி பெருமையுமாம்.]

நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே.

(புறம்-274)

8. களிறெறிந்து எதிர்ந்தோர் பாடும்—மேல்வரும் பகைவர் யானையை எதிர்த்தேறும் மறவர் பெருமையும்.

கட்டி யன்ன காரி மேலோன்
தொட்டது கழலே கையது மேலே
சுட்டி யதுவும் களிறே யொட்டிய
தானை முழுதுடன் விடுத்துநம்
யானை காமினவன் பிறிதெறி யலனே.

(தகடூர் யாத்திரை-புறத்திரட்டு-1372)

9. களிற்றொடுபட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்—ஊர்ந்த யானையொடு கெட்டழிந்த மன்னனை, வென்று கொன்ற மன்னனின் வாள் மறவர் சூழ்ந்தாடும் ஆர்ப்பும்;

[அமலுதல்—நெருங்குதல், ஈண்டு அமலை பலர் நெருங்கி ஆர்க்கும் ஆரவாரத்திற்கு ஆகுபெயராயிற்று.]

ஆளுங் குரிசி லுவகைக் களவென்னாம்
கேளின்றிக் கொன்றாரே கேளாகி—வாள்வீசி
ஆடினா ரார்த்தார் அடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து.

(புறம்-1348)

10. வாள் வாய்த்து இருபெரு வேந்தரும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்—வாட்புண் பெற்று

இகலும் பெருவேந்தர் இருவர் தாமும் தமக்குத் துணையாம் தமரும் ஒருவருந் தப்பாமல் மாய்ந்தழியும் தொகைநிலை என்னும் துறையும்; [இதில் வரும் தும்பைத் தொகைநிலை, முன் சுட்டப் பட்ட உழிஞைத் துறையான தோற்றோர் தொலைவு குறிக்கும் தொகைநிலையின் வேறுபட்டுப் பொருமிருதிறத்தார் தொலைவும் தெரிப்பதாதலின் ஈண்டு வேறு கூறப்பட்டது.]

தொகைநிலைக்குச் செய்யுள்:-

வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர் புண்டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி
நிறங்கிளர் உருவிற் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்
தறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே, குடைதுளங் கினவே,
உரைசால் சிறப்பின் முரசொழிந் தனவே,
பன்னூ றடுக்கிய வேறுபடு பஞிலம்
இடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றா லமரே, பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே,
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
அரும்பெற லுலகம் நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே.

(புறம்-62)

11. செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்—போர்க்களத்தில் தன் வேந்தன் பட்டுவிழ வெகுண்டு அவன் படை மறவன் ஒருவன் அவனை வீழ்த்தியவரை அடர்த்தழிக்கும் தூய புகழ்ப் பரிசும்,

மறங்கெழு வேந்தன் குறங்கறுத் திட்டபின்
அருமறை ஆசான் ஒருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கீண்டெறி சீற்றமொடு
இரவூர் அறியாது துவரை வேந்தொடு

மாதுலன் தன்னை வாயிலின் நிறீஇக்
காவல் பூட்டி ஊர்ப்புறக் காவயின்
ஐவகை வேந்தரோடு அரும்பெறற் றம்பியைக்
கைவயிற் கொண்டு கரியோன் காத்தலிற்
றொக்குடம் பிரீஇத் துறக்க மெய்திய
தந்தையைத் தலையற வெறிந்தவ னிவனெனத்
துஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி
வடாது பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழுந் திருகிப் பறித்த காலைக்
கோயிற் கம்பலை யூர்முழு துணர்த்தலிற்
றம்பியர் மூவரும் ஐம்பான் மருகரும்
உடன்சமர் தொடங்கி யொருங்கு களத்தவிய
வாள்வாய்த்துப் பெயர்ந்த காலை யாள்வினைக்
கின்னோ ரினிப்பிற ரில்லென வொராங்குத்
தன்முதற் றாதையொடு கோன்முத லமரர்
வியந்தனர் நயந்த விசும்பி
னகன்றலை யுலகமு மறிந்ததா லதுவே

(பெருந்தேவனார் பாரதப் பாட்டு)

12. பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும், உளப்பட—பலவேறாய பகைப் படையனைத்தும் ஒருவனுக்குடைந்து கெட்டழிந்தவிடத்து அவ்வாறு வென்றவன் வீறு கொண்டு புகழ்க்குரிய தன் வெற்றிவாளை வீசிக் கொன்று குவிக்கும் நூழில் என்னும் துறையும், கூட்ட, [ஒருவன் பலரைக் கொன்று குவிக்கும் தறுகண்மை நூழில் எனவும், நூழிலாட்டு எனவும் பெயர் பெறும். அது குவிதலையும் கொல்லுதலையும் குறிக்கும் சொல்லாகும்.]

ஒருவனை யொருவ னடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
இன்றி னூங்கோ கேளலம்; திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய்க் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலும் அறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த

புனைகழ லெழுவர் நல்வல மடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே.

(புறம்-76)

புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே—பொருந்தி விளங்கும் பன்னிரண்டு துறைகளையுடையது தும்பைத் திணை. [ஏற்றேகாரம் அசை. உம்மைகள் எண் குறிப்பன. பொருட் டொடர்பால் தும்பைத்திணை என்னும் எழுவாய் பெறப்பட்டது.]

(17)

—: o :—

சூத்திர முதற் குறிப்பகராதி

	பக்க எண்
அகத்திணை மருங்கின்	9
அதுவே தானும்	169
இயங்குபடை அரவம்	125
உழிஞை தானே	163
கணையும் வேலும்	224
குடையும் வாளும்	194
கொள்ளார் தேஎங்	171
தானை யானை	231
தும்பை தானே	219
படையியங்கு அரவம்	29
மறங்கடைக் கூட்டிய	56
வஞ்சி தானே	116
வெறியறி சிறப்பின்	64
வேந்துவிடு முனைஞர்	21

சொல்லகராதி

(எண்—பாடல் எண்)

அ

அகத்திணை 59
அகத்தோன் 68, 69
அரவம் 61, 65

ஆ

ஆ 60, 63
ஆகோள் 30

இ

இயங்கு படை 65
இலக்கணம் 59
இறைவன் 72

உ

உயிரின் 71

ஏ

ஏணி மிசை 69

க

கணை 71
கரந்தை 63
களிறு 72
கற்சிறை 65

கா

காட்சி 63
காந்தள் 63
கால்கோள் 63

கு

குடிநிலை 62
குடை 69
குதிரை 72
குறிஞ்சி 59

கூ

கூழை

கொ

கொடைமை 65
கொற்றவள்ளை 65
கொற்றவை 62

தா

தானை 72

தி

திணை 62

து

தும்பை 70
துறை 59, 63, 65, 69, 72

நா

நாள்கோள் 69

நீ

நீர்ப்படை 63

நெ

நெடுமொழி 63, 65
நெய்தல் 70

நொ

நொச்சி 69

ப

படை 61

பு

புறத்திணை 59
புறத்தோன் 68, 69

பூ

பூசல் 30
பூவை நிலை 63

பெ

பெரும்படை 63

ம

மரபு 63

மா

மாயோன் 63

மு

முல்லை 64
முனைஞர் 60

யா

யாக்கை 71
யானை 72

வ

வஞ்சி 64
வயவர் 63

வா

வாடா வள்ளி 63
வாள் 63, 69, 72

வி

விரிச்சி 61

வெ

வெட்சி 59
வெறியாட்டு 63

வே

வேந்தர் 60, 63, 64, 68, 70, 72
வேம்பு 63
வேல் 71, 72
வேலன் 63

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி அஞ்சல், சென்னை-600 113

புதிய வெளியீடுகள்

Silver Jubilee Special Lectures	60	00
Collected Papers of Thaninayagam Adigal	100	00
திருமுறை இலக்கியம்	50	00
அழகியல் சிந்தனைகள்	30	00
இலக்கியத்தின் நோக்கமும் பயனும் தொகுதி—1	65	00
இலக்கியத்தின் நோக்கமும் பயனும் தொகுதி—2	60	00
பெ. நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள்	75	00
முத்தாரம்மன் கதை	85	00
சந்திரபதன் கதை	40	00
கன்னிவாடி நரசிங்க நாயக்கர் வளமடல்	20	00
கருணை அம்மன் அந்தாதி	22	00
ஒப்பிலக்கியம் . கொள்கைகளும் செயல்முறைகளும்	15	00
விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள்	30	00
தமிழர் காசு இயல்	45	00
தமிழ் நாடக மலர்	60	00
ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்	85	00
Mysticism of Love in Saiva Tirumurais	50	00
எண்பத்து மூன்றில் தமிழ்-பகுதி—2	30	00
தொல்காப்பியம்-பொருளதிகாரம்-களவியல்	85	00
The Contributions of the Tamils to Indian Culture Vol-IV- Religion & Philosophy	80	00
Vol. III-Socio - Cultural Aspects	90	00
Vol. II - Art & Architecture	80	00
Vol. I- Language & Literature	18	00
எண்பத்து மூன்றில் தமிழ்-பகுதி—1	47	00
சிவகிரி குமர சதகம்	39	00
புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை	27	00
தேரையர் அந்தாதி	33	00
குசலவர் சுவாமி கதை	36	00
குணவாகடம்	40	00
தோட்டுக்காரி கதை	28	00
சங்கத் தமிழரின் மனிதநேய மணி நெறிகள்	24	09